டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்

திருப்பு முனைகள்

TURNING POINTS

சவால்களின் ஊடே ஒரு பயணம்

['அக்னி சிறகுகள்' இரண்டாம் பாகம்]

Tamil PDF World



சுவர்ணபூமி பதிப்பகம்

திருப்பு முனைகள்

(Turning Point)

ஆ.ப.ஜெ.அப்துல் கலாம்

தமிழில்: சிவதர்ஷினி

கண்ணதாசன் பதிப்பகம்

23, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600017.
தொலைபேசி: 24332682
மதுரை ❖ கோவை ❖ பாண்டி ❖ வேலூர்

முதற் பதிப்பு : அக்டோபர், 2012
நான்காம் பதிப்பு : பிப்ரவரி, 2015
ஐந்தாம் பதிப்பு : ஆகஸ்டு, 2015

Copyright © 2012 A.P.J.Abdul Kalam. All Rights Reserved.

E-mail: sales@kannadasan.co.in
Our Web Site: www.kannadasan.co.in

பதிப்பாசிரியர்: காந்தி கண்ணதாசன்

எச்சரிக்கை

காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

-காந்தி கண்ணதாசன் பி.ஏ., பி.எல்.,

No Part of this book may be reproduced or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieval system without permission in writting from Gandhi Kannadhasan, B.A., B.L., Chennai.

Published in arrangement with Harper Collins Pubishers India.

Price Rs: 130/-

"THIRUPUMUNAIGAL" -
Savalgalin Oode Ouru Payanam - Tamil
The Autobiography of Dr. Kalam Sequal to "WINGS OF FIRE"

- ❖ Written By : **A.P.J.ABDUL KALAM**
- ❖ Translated by : **Sivadharshini**
- ❖ Fifth Edition : August, 2015
- ❖ Publishing Editor : **Gandhi Kannadhasan**
- ❖ Published By : **Kannadhasan Pathippagam**
  23, Kannadhasan Salai,
  Thiyagaraya Nagar, Chennai - 600 017.
  Ph: 044-24332682 / 8712

ISBN: 978-81-8402-706-8

- Our Branches :
  - No: 1212, Range Gowder Street, **Coimbatore** - 641001 ☎: 0422 - 2479774
  - 1, Annai Complex, III Street, Vasantha Nagar, **Madurai**-625 003. ☎: 0452 - 2373793
  - 37, Bharathy Street, **Puducherry** - 605 001. ☎: 0413 - 2221241
  - No: 32&33, Old Bus Stand, Municipal New Shopping Complex, 1st Floor, **Vellore** - 632004. ☎: 0416 - 2223312
- Our Bankers : State Bank of India, T.Nagar, Chennai-17.

Printed at : **NOVENA OFFSET PRINTING CO.**, Chennai - 5 ✆ 28446166, 28446891

பொருளடக்கம்

திருப்பு முனைகள் 5

முகவுரை 7

நன்றியுரை 9

1 நான் இந்தியாவின் வெற்றி கீதத்தை இசைப்பது எப்போது? . 11

2 அண்ணா பல்கலைக் கழகத்தில் எனது
ஒன்பதாவது விரிவுரை 20

3 எனது வாழ்வில் ஏற்பட்ட ஏழு திருப்புமுனைகள் 30

4 கலந்துறவாடும் ஜனாதிபதி 46

5 நாட்டிற்கு நான் எதை அளிக்க முடியும்? 67

6 பிறரிடமிருந்து கற்றுக் கொள்ளுதல் 84

7 போட்டியிடும் தேசமாக முன்னேறுகிறது 105

8 மெழுகுவர்த்தியும் விட்டில் பூச்சிகளும்! 123

9 எனது குஜராத் பயணம் 128

10 எனது தாயகத்து அயலுறவுகள் 134

11 இந்தியாவின் இதயத்துக்கு இளமையூட்டல் 151

12 தோட்டத்தினுள்ளே... 162

13 சர்ச்சைக்குரிய முடிவுகள்! 171

14 ஜனாதிபதி பதவிக்குப் பின்னர் 187

முடிவுரை 200

பின்னுரை 214

நேர்காணல் 216

பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் 233

திட்ட நிர்வாகத்திற்கான நிறுவனக் கட்டமைப்பு 234

திருப்பு முனைகள்

ஆவுல் பக்கீர் ஜெய்னுலாபுதீன் அப்துல் கலாம் இந்தியாவின் பதினோராவது ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர். பத்மபூஷண், பத்மவிபூஷண் மற்றும் தேசத்தின் உயரிய பாரதரத்னா விருதையும் பெற்றவர்.

டாக்டர் கலாம் தமிழ்நாட்டிலுள்ள ராமேஸ்வரத்தில் 1931 ஆம் ஆண்டு பிறந்தார். மெட்ராஸ் இன்ஸ்ட்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜியில் (MIT) வானூர்திப் பொறியியல் (Aeronautical Engineering) படித்து முடித்தார்.

SLV 3 என்ற இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் செலுத்து வாகனத்தை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றினார். அதன் உதவியுடன் 1980-ஆம் ஆண்டு ரோஷிணி செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட்டதும் இந்தியா விண்வெளி ஆய்வுகள் நடத்தும் நாடுகள் வரிசையில் ஒன்றாக மாறவிட்டது. ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த ஏவுகணைகளை உருவாக்கவும், இயக்கவும்வல்ல திறமையை இந்தியா பெற்றது. 1998 ஆம் ஆண்டு அணுகுண்டு வெடிப்புச் சோதனைகளையும் இந்தியா மேற்கொண்டது.

தகவல் தொழில்நுட்பம், எதிர்கால நிகழ்வுகளின் சாத்தியக் கூறுகளை எடுத்துரைத்தல், மதிப்பீடு செய்தல் போன்ற காரியங்களுக்காக அமைக்கப்பட்ட TIFAC என்ற ஆலோசனை அவையின் தலைவராக டாக்டர் கலாம் பணியாற்றினார். புகழ்பெற்ற விஞ்ஞானியான அவர் 500 பல்துறை வல்லுனர்களின் துணையுடன் தொழில்நுட்பத் தொலை நோக்கு 2020 என்ற குறிக்கோளுடன் செயல்பட்டார்.

இந்தியாவை ஒரு வல்லரசாக, முன்னேறிய நாடாக மாற்றுவதற்கான பயணப் பாதையை நிர்மாணித்தார். அப்பாதையில் தேசம் பயணித்துக் கொண்டிருக்கிறது.

ராஜீய நிர்வாகத் திறனாற்றல் பெற்ற (Statesman) முதியவரான அவர் வழிகாட்டுதல், மற்றும் ஆலோசனைகளை வழங்கிவருகிறார். மதவேறுபாடு, சமூகப் பிரிவினைகளை அகற்றி மக்களுக்கு இடையே உறவுப் பாலத்தை ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள சமூக ஆர்வலராக அவரை மக்கள் மதித்துப் போற்றுகிறார்கள்.

2020-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை முன்னேறிய நாடாக மாற்றிவிடவேண்டும் என்ற முனைப்புடன் அவர் செயல்பட்டு வருகிறார். அதற்காக நாடெங்கும் பிரயாணம் செய்கிறார். IIT,IIM நிறுவனங்களில் மாணவர் சந்திப்பு மாநாடுகளுக்கு ஏற்பாடு செய்து அவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகிறார்.

முகவுரை

என்னுடைய அக்னிச் சிறகுகள் புத்தகம்.1992-ஆம் ஆண்டுவரையிலான எனது வாழ்க்கைச் சம்பவங்களை விவரிக்கிறது.

1999 ஆம் ஆண்டு புத்தகம் வெளியானது முதல் இன்றுவரை அதற்குக் கிடைத்துவரும் வரவேற்பு பிரமிக்க வைப்பதாக இருந்து வருகிறது. விற்பனை பத்து லட்சம் பிரதிகளைத் தாண்டிவிட்டது. அது ஆயிரக்கணக்கானவர்களுக்குத் தன்னம்பிக்கை அளித்து உற்சாகமூட்டி வருகிறது. தங்கள் வாழ்வை மேம்படுத்திக்கொள்ள உதவி செய்கிறது.

நான் **திருப்புமுனைகள்** என்ற இந்தப் புத்தகத்தை எழுதும்போது எதற்காக எழுதுகிறேன் என்ற ஒரு சிந்தனை எனக்குள் எழுந்தது. இந்தியர்களின் எண்ணங்களையும், கவலைகளையும், விருப்பங்களையும் என் கதை எதிரொலிப்பதாகச் சிலர் சொல்லக்கூடும். நானும் அவர்களைப் போலவே வாழ்க்கை ஏணியின் கீழ்மட்டப் படியிலிருந்து ஏறத்துவங்கினேன். படிப்படியாக உயர்ந்து பொறுப்பான பதவிகளைப் பெற்றேன். கடைசியாக இந்தியாவின் ஜனாதிபதி என்ற பொறுப்பையும் ஏற்றுக்கொண்டேன்.

கடந்த பத்தாண்டுகளில் எனது வாழ்வில் நிறையச் சம்பவங்கள் நடந்துவிட்டன. அவற்றை எல்லாம் மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. அவை நெஞ்சில் நிலைத்த அனுபவங்களாகவும் இருக்கலாம் என்றும் சிலர் சொல்லக்கூடும். எப்படியிருந்த போதிலும் நான் இந்த

திருப்புமுனைகளை எழுதுவதற்கான காரணம் சற்றே வேறுபட்டதாகும்.

அக்னிச் சிறகுகள் ஏற்படுத்திய அமோக ஆதரவைக் கவனித்த நான், இந்த புத்தகமும் அவ்வாறே மேலும் சிலருக்கு உதவவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அப்போதுதான் என் முயற்சி பலன் பெற்றதாக அர்த்தம். இந்த புத்தகத்திலிருந்த கிடைத்த ஏதாவது ஒரு விஷயம் ஒரு தனி மனிதரையோ அல்லது ஒற்றைக் குடும்பத்தையோ மேம்படுத்தியிருந்தாலும் போதும். அதுவே எனக்கு நிறைவளிப்பதாக அமைந்துவிடும்.

எனவே அன்பான வாசகரே, இந்தப் புத்தகம் உங்களுக்காகவே எழுதப்பட்டிருக்கிறது.

ஆ.ப.ஜெ.அப்துல் கலாம்

மே 30, 2012

புதுடில்லி

நன்றியுரை

அன்பான நண்பர்களே! எனக்கு எண்பது வயதாகிறது. எனது இருபத்தோராவது புத்தகத்தை இப்போது எழுதி முடித்திருக்கிறேன். அதுதான் இந்த **திருப்புமுனைகள்** என்ற புத்தகமாகும்.

புதுடெல்லி ராஜாஜி மார்க்கிலுள்ள எனது பத்தாம் எண் இல்லத்தில் ஒரு குளிர்நிறைந்த காலை வேளையில் புத்தகத்திற்கான பணிகள் துவங்கின. நானும் எனது தனிச் செயலாளர் ஹெச்.ஷெரிடனும் என்னுடைய நாட்குறிப்பேடுகளைப் பார்வையிட்டோம். என் வாழ்வில் ஏழு திருப்பு முனைகள் அல்லது சவால்கள் ஏற்பட்டிருந்ததைக் கண்டறிந்தோம்.

நான் ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறியதையும் சேர்த்துக்கொண்டால் அந்த எண்ணிக்கை எட்டாக உயர்கிறது. அந்த திருப்புமுனைகள் என்னை வழிநடத்தின. வாழ்வில் வெற்றிபெற வைத்தன.

என்மீது காலமெல்லாம் அன்பும் பரிவும் காட்டிய மனிதர்களுக்கு நான் நிறைய நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். மேலும் யார் யாரெல்லாம் தங்களது அறைகூவல்களையும், ஆனந்தத்தையும் என்னுடன் பகிர்ந்து கொண்டார்களோ அவர்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக நான் ஒருவருக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைக் கூறியாகவேண்டும். அவர்தான் மேஜர் ஜெனரல் ஆர்.சுவாமிநாதன். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அவர்

என்னுடன் இருந்துவருகிறார். எனது பல வெற்றிகள், சில தோல்விகளின் போதும் உடனிருந்திருக்கிறார். எனது நண்பர், குரு, வழிகாட்டி, எல்லாம் அவரே!

திருப்புமுனைகள் என்ற இந்தப் புத்தகத்திற்கான அவரது பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதிலுள்ள தகவல்களின் துல்லியத்தன்மையை உறுதிப்படுத்த அவர் பெருந்துணை புரிந்துள்ளார். புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியைத் தயாரிக்கும் பணியில் தன் ஷியாம் சர்மா, விஷால் ரஸ்தோகி ஆகிய இருவரும் அர்ப்பணிப்பு உணர்வுடனும், சலிப்பின்றியும் உழைத்தார்கள். அவர்களின் ஒத்துழைப்பு இல்லாது போயிருந்தால் இந்தப் புத்தகம் வெளிவந்திருக்க இயலாது.

நாராயணமூர்த்தியும், வி.பொன்ராஜும் வழங்கிய உள்ளீடுகள் மதிப்புமிக்கவை. ஹார்ப்பர் காலின்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த கிரீஷன் சோப்ரா கையெழுத்துப் பிரதியை மறுஆய்வு செய்தார். என்னுடன் இணைந்து செயல்பட்டுப் புத்தகத்தை வடிவடைத்தார். மிகுந்த கவனத்துடன் திருத்தங்கள் (Editing) செய்து கொடுத்தார்.

நான் ராஜிந்தர் கஞ்ஜுவுக்கும் நன்றி கூறியாக வேண்டும் கையெழுத்துப் பிரதி முழுவதையும் அவர் குறுகிய நேரத்தில் டைப் செட்டிங் செய்து கொடுத்து புத்தகம் அச்சேறுவதற்குத் துணை நின்றார்.

1

நான் இந்தியாவின் வெற்றி கீதத்தை இசைப்பது எப்போது?

இயற்கையை நேசியுங்கள். அதன் ஆசீர்வாதங்களின் மீது அக்கறை காட்டுங்கள். பிறகு பார்த்தால், எங்கும் தெய்வீகம் மிளிர்வதை நீங்கள் காண முடியும்!

- 2007 ஜூலை 24-ம் தேதி

நான் ஜனாதிபதி பதவியில் இருக்கப்போகும் கடைசி நாள். நான் செய்துமுடிக்க வேண்டிய பணிகள் நிறைய இருந்தன.

காலை வேளையில் என் சொந்த வேலைகளைக் கவனித்தேன். மாலை 3.25 மணிக்கு பாக்கியிருந்த பணிகள் ஆரம்பமாயின. CNN-IBN தொலைக்காட்சி நிறுவனத்திற்காக ராஜ்தீப் சர்தேசாயும், திலீப் வெங்கட்ராமனும் என்னிடம் நேர்காணல் நடத்தினர். அதையடுத்து சத்திஸ்கர் மாநில ஆளுநர் இ.எஸ்.எல்.நரசிம்மனுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். பின்னர் உத்ரகாண்ட் மாநில சுகாதார குடும்பநலத்துறை மற்றும் விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறை அமைச்சராக இருந்த டாக்டர் ரமேஷ் பொக்காரியால் 'நிஷாங்' அவர்களைச் சந்திக்க வேண்டியிருந்தது.

இவை எல்லாம் முடிந்த பிறகு Ms கரிஷ்மா தங்கப்பன் என்ற டெல்லி இந்துக்கல்லூரி மாணவியைச் சந்தித்தேன். அவள் தனது பெற்றோருடன் மேலும் ஐவரை அழைத்து வந்திருந்தாள். மாலை 4.00 மணிக்கு வெளியுறவு அமைச்சகத்தைச்

சேர்ந்தவரும், அரசு விழாக்களின் நடைமுறை மரபுகளை நிர்வகிக்கும் தலைமை அதிகாரியுமான (Chife of Protocol) சுனில் லால், அவரது மனைவி கீதாஞ்சலி, அவர்களின் மகள் நிதிகா ஆகியோரைச் சந்தித்துப் பேசினேன்.

பதவிக்காலம் முடிந்து விடைபெற்றுச் செல்லும் என்னை வழியனுப்பி வைக்க இதுபோல் பலர் வந்தவண்ணம் இருந்தனர். அச்சந்திப்புகள் இரவு எட்டு மணிவரை நீடித்தன. அதன் பின்னர் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் அவரது அமைச்சரவைச் சகாக்கள் போன்றோருக்கு நான் விருந்தளித்து உபசரித்தேன்.

வழியனுப்பவும், சந்திப்புகளில் கலந்து கொள்ளவும் வந்தவர்கள் நண்பர்களுடன் பேசியபடியே கட்டிவைக்கப் பட்டிருந்த எனது மூட்டை முடிச்சுகளின்மீது பார்வையை ஓடவிட்டனர். அவை இரண்டு சூட்கேஸ்களுக்குள் அடங்கிவிட்டன. நான் என்னுடன் எடுத்துச் செல்பவை இவ்வளவுதான் என்று கூறினேன். அங்கே ஒரு கனத்த மௌனம் நிலவியது.

என்னைச் சந்தித்துப் பேசியவர்கள் எல்லோருடைய மனதிலும் ஒரு கேள்விதான் பிரதானமாகத் தலைதூக்கி நின்றது.

"அடுத்து நான் இனி என்ன செய்யப்போகிறேன்? அதை நான் முடிவு செய்துவிட்டேனா? மீண்டும் ஆசிரியர் பணிக்குத் திரும்பப் போகிறேனா? பொது வாழ்விலிருந்து ஓய்வு பெற்றுவிட விரும்புகிறேனா? என்னைப்பற்றி நன்கு அறிந்தவர்கள் இந்தக் கடைசிக் கேள்வியைக் கேட்க மாட்டார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளாக ராஷ்ட்ரபதி பவன் நினைவுகள் என் மனதில் ஆழமாகப் பதிந்து போய்விட்டன.

தலையசைத்து வரவேற்கும் மொகல் தோட்டத்து மலர்கள், உஸ்தாத் பிஸ்மில்லாகான் பல்வேறு கலைஞர்களுடன் சேர்ந்து கடைசியாக இசை விருந்தளித்த இடம், மூலிகைத் தோட்டத்தின் இனிய மணம், நடனமிடும் மயில்கள், தகிக்கும்

கோடையிலும் நடுங்கவைக்கும் குளிரிலும் எச்சரிக்கையோடு நிற்கும் காவலர்கள் என்று இவை எல்லாம் எனது தினசரி வாழ்வின் ஒரு அங்கமாகவே மாறிவிட்டன. இந்த ஐந்து ஆண்டுகளில் எத்தனை மறக்கமுடியாத அனுபவங்கள்!

வாழ்வின் அனைத்துத் தரப்பு மக்களும் தேசத்தின் முன்னேற்றத்திற்கான தங்களின் கருத்துகளை என்னிடம் கொண்டுவந்து கொட்டுகிறார்கள். ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் எளிய பங்களிப்பை என்னிடம் தருகிறார்கள். அரசியல்வாதிகள் தங்கள் தொகுதி மேம்பாட்டிற்கான தொலைநோக்குத் திட்டங்களை ஒவ்வொரு நிலையிலும் என்னுடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.

சிரமப்படுத்தும் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வேட்கை விஞ்ஞானிகளிடம் இருக்கிறது. கலைஞர்களும், எழுத்தாளர்களும் தங்களின் தேசபக்தியைத் திறமையாக வெளிப்படுத்துகிறார்கள். சமயத் தலைவர்கள் ஒரே மேடையில் நின்றுகொண்டு மத ஒற்றுமை பற்றிப் பேசுகிறார்கள். பல்துறை வல்லுனர்கள் அறிவான ஒரு சமுதாயத்தை உருவாக்கத் தங்கள் கருத்துகளைத் தந்து உதவுகிறார்கள். சட்டம், நீதித்துறை சார்ந்த சமூகத்தினர் பொதுமக்களை மரியாதையுடன் நடத்துவது, வழக்குகளை விரைவாகத் தீர்ப்பது, மின்-நீதித்துறை (E-Judiciary) பயன்பாடு பற்றியெல்லாம் தங்கள் அபிப்பிராயங்களைக் கூறுகிறார்கள்.

அயல்நாடு வாழ் இந்தியர்கள் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் தங்களைப் பெற்றெடுத்த இந்த மண் எப்படியாவது வளர்ச்சியும், மேம்பாடும் அடைவதைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு நான் செல்லும் போதெல்லாம் சிறப்பான அனுபவங்கள் ஏற்படுகின்றன. அவை மக்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. பலர் செய்த நற்பணிகளைப் பார்க்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக இளைஞர்களின் ஆற்றல் மனதைத் தொடுகிறது.

மருத்துவத்துறை சார்ந்த சங்கங்களுடனான எனது தொடர்பு விரிவானது. கிராமப்புற மக்களுக்குக் கட்டுப்படியான விலையில் மருத்துவ வசதிகள் கிடைக்க வேண்டும். அதற்குச் சம்பந்தப்பட்ட அமைப்புகள், முயற்சி செய்யவேண்டும். மருத்துவ ஆய்வுப் பணிகளுக்கு ஊக்கம் தரப்பட வேண்டும். மக்கள் வாழ்க்கை எளிதாக சிரமமற்று இருக்கவேண்டும். முதியவர்கள்மீது அக்கறை காட்டப்படவேண்டும். வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப உடல்நலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்க வேண்டும் என்பன போன்ற நோக்கங்களுடன் சங்கங்கள் செயல்படுகின்றன.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் என்னைச் சந்திக்கும் மருத்துவச் செவிலியர்கள் உயர்தரமான சேவைகள் வழங்கும் மையங்களை நிறுவித் தன்னார்வத் தொண்டாற்ற ஆசைப்படுவதை என்னிடம் தெரிவிக்கிறார்கள். குறிப்பாக கிராம மக்களுக்கு இந்த வசதிகள் கிடைக்க வேண்டும் என்கிறார்கள்.

பருத்தி பயிரிட்டு அல்லலுற்றவர்களை உள்ளடக்கிய விவசாயிகளுடனான எனது தொடர்பு வாயிலாக நான் அவர்களின் பிரச்சினைகளையும், அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த சவால்களையும் புரிந்து கொண்டேன். வேளாண் விஞ்ஞானிகளுக்கு எனது திட்டங்களை வடிவமைத்துக் கொடுக்க இத்தொடர்புகள் உதவி செய்தன.

தபால்காரர்களை நான் சந்தித்துப் பேசியபோது கல்வியறிவுள்ள ஒரு சமுதாயம் உருவாவதற்கு தபால் இலாகா ஒரு முக்கிய பங்களிப்பை வழங்கமுடியுமென்ற எண்ணம் என்னுள் எழுந்தது. தபால்காரர்களை அறிவூட்டும் அதிகாரிகளாகப் பயன்படுத்திக்கொள்ள இயலுமென்று தோன்றியது.

காவல்துறையைச் சேர்ந்தவர்களிடம் பேசியபோது அவர்கள் காவல்துறையைச் சீர்திருத்துவது, காவல்

நிலையங்களின் உட்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்வது, காவல்துறைச் செயல்பாடுகளுக்குத் தகவல் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்திக்கொள்வது பற்றியெல்லாம் தங்கள் கருத்துகளை என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள். காவல்துறையைச் சீரமைப்பு செய்வதற்காக நிறுவப்பட்ட சபையிடம் இக்கருத்துகளை நான் முன்வைத்தேன்.

ஊராட்சி மன்றத் தலைவர்கள்-குறிப்பாக பெண் தலைவர்கள்-கிராம அபிவிருத்திக்கான தங்கள் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து என்னிடம் விளக்கிக்கூறினார்கள். அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த இடையூறுகள் குறித்தும் பேசினார்கள்.

நான் எந்த இடத்திற்குச் சென்றாலும் அங்குள்ள ஆசிரியப் பெருமக்கள், தேச நிர்மாணப் பணிக்கு இளைஞர்களைத் தயார் படுத்தும் குறிக்கோளுடன் சிறந்த முறையில் செயல்பட்டு வருவதாக என்னிடம் கூறினார்கள். சமூகத்தில் இளைஞர்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தால், அவர்களை அறிவார்ந்த குடிமக்களாக மாற்றிவிடலாம் என்று தெரிவித்தார்கள்.

செழுமையான இந்த அனுபவங்கள் சத்தியப் பிரமாணங்களை வடிவமைத்துக் கொள்ளும் உச்சநிலைக்கு செல்ல உதவிகள் செய்தன. சமூகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றித் திட்டமிட இவை துணை புரிந்தன. அந்த சமூகப்பிரிவுகள் குழந்தைகள், பெற்றோர், ஆசிரியர்கள், சேவைத்துறையினர், நிர்வாகிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் அல்லது வேறு துறை சார்ந்தவைகளாகவும் அமைந்திருந்தன.

உறுதிமொழி எடுத்துக் கொள்வதன் மூலம் பல்வேறு பிரிவுகளும் ஒன்றிணைந்து செயல்பட வாய்ப்புக் கிடைத்தது. பொதுவாக அந்த உறுதிமொழிகள் குறிப்பிட்ட அந்த சமூகப் பிரிவுக்குப் பொருத்தமான அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தன. அந்த அம்சங்களின் எண்ணிக்கை ஐந்து, ஏழு,

அல்லது பத்து என்ற அளவு கொண்டதாக வரையறுக்கப் பட்டன.

இதுபோன்ற விழாக்களில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கை அதிகமானதாகவே இருந்தது. உறுதிமொழி எடுத்துக்கொள்ளும்போது ஒரு பொது நோக்கத்திற்காக சபையினர் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆதரவுக்கரம் நீட்டினார்கள். காலமெல்லாம் இச்செய்தியை எல்லோரிடமும் கொண்டு சேர்ப்போம் என்று சபதம் மேற்கொண்டனர்.

நான் ஜனாதிபதியாக இருந்தபோது வந்து குவிந்த கடிதங்கள், மின்னஞ்சல்கள், மற்ற வகையிலான தகவல் தொடர்புகளின் எண்ணிக்கையை நினைத்துப் பார்த்தால் அது வியப்பூட்டும் ஒன்றாக அமைந்திருந்தது என்பதை என்னால் ஒருபோதும் மறக்க இயலாது. குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள், ஆசிரியர்கள், விஞ்ஞானிகள் என்று அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் கடிதங்கள் வந்தன. நம்பமுடியாத அளவுக்கு தினமும் பல்லாயிரம் கடிதங்கள் வந்து குவிந்தன.

கடிதங்கள் மூலம் அவர்கள் கேட்கும் உதவிகளைச் செய்யவோ, அவர்களின் வினாக்களுக்கு பதிலளிப்பதோ சாத்தியமில்லாத ஒன்று என்றாலும் நாங்கள் முடிந்தவரை ஒத்துழைப்பு வழங்கினோம். பல கடிதங்களை மேல் நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தோம். மருத்துவ உதவி தேவைப்பட்டவர் களுக்குப் பொருத்தமான மருத்துவமனைகளைப் பரிந்துரை செய்தோம். வேறு சில சந்தர்ப்பங்களில் பொருத்தமான அறிவுரை மற்றும் ஆலோசனைகளை நாங்களே வழங்கினோம். சில நேரங்களில் சிறிய அளவில் பண உதவியும் செய்தோம்.

பரந்து விரிந்து கிடக்கும் நமது தேசத்தின் மக்கள் சிரமத்திலும் வேதனையிலும், ஆதரவற்றுத் தவிக்கும் வேளையிலும் அவர்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை, விசுவாசம், திடசித்தம் போன்றவை அவர்கள் அனுப்பும் கடிதங்கள் வாயிலாக வெளிப்பட்டு என்னை ஆச்சரியப்பட வைக்கிறது.

கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்த இளம் பெண் ஒருத்தி எழுதியிருந்த கடிதம் என் மனதைத் தொட்டுவிட்டது. மனவருத்தமளிக்கும் அந்த கடிதத்தின் ஏதோ ஒரு இடத்தில், அந்த பெண் தனது வாழ்க்கைப் போக்கை மாற்றியமைத்துக் கொள்ளும் திறமையும், வேகமும் பெற்றவளாக இருக்கிறாள் என்பதை உணர்ந்தேன்.

அவளுக்கு உதவக்கூடியவர் என்று நாங்கள் கருதிய ஒருவருக்கு அவளது கடிதத்தை அனுப்பிவைத்தோம். வியப்பூட்டும் வகையில் உடனே ஆதரவு கிடைத்தது.

''எனது குடும்பம் கஷ்டத்தில் இருக்கிறது. கடந்த 23 வருடங்களாகக் குடும்பம் சிரமத்தை அனுபவித்து வருகிறது. எந்த ஒரு நாளிலும் ஒரு கணமாவது நானும் எனது குடும்பத்தினரும் மகிழ்ச்சியோடு இருந்தது கிடையாது. நான் நன்றாகப் படித்துக் கொண்டிருந்தேன். ஐந்தாம் வகுப்பிலிருந்து எங்கள் பள்ளியில் நான்தான் முதல் 'ரேங்க்' எடுத்து வந்தேன். நான் மருத்துவராக வேண்டுமென்று விரும்பினேன். குடும்பத்தில் ஏற்பட்ட கஷ்டநிலை காரணமாக என்னால் முதல் ரேங்க் வாங்கமுடியவில்லை. இரண்டு அல்லது மூன்றாவது இடம்தான் கிடைக்கிறது. நான் B.A வில் 50 சதவீதம் மதிப்பெண்களே பெற்றேன். மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டதால் என்னால் மருத்துவக் கல்லூரியில் சேரமுடியவில்லை. கடந்த 14 வருடங்களாக இந்த மனஅழுத்தத்தில் சிரமப்பட்டு வருகிறேன்...''

இது போன்ற கடிதங்கள் ஏராளமாக வருகின்றன. ஜனாதிபதி அலுவலகம் தங்களுக்கு உதவி செய்யும் என்று நம்பும் அவர்களின் சூதுவாதற்ற குணமும், விசுவாசமும் என் மனதைத் தொட்டுவிட்டது. இதிலிருந்து மாறுபட்ட வகையில் அமைந்த கடிதங்கள் பல நிறுவனங்களிடமிருந்தும், கழகங்களிடமிருந்தும் வருவதுண்டு.

''மதிப்பிற்குரிய ஜனாதிபதி கலாம் அவர்களுக்கு,

நாங்கள் மேம்படுத்தப்பட்ட நானோ தொழில்நுட்ப (Nanotechnology) மாநாடு (அல்லது பயோடைவர்சிடி, கார்பன் கூட்டுக்கலவைகள், ராக்கெட் உந்துவிசைத் தொழில் நுட்பம், இதய அறுவைச் சிகிச்சை, தொற்றுநோய்கள், நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கிக்கிடப்பதைக் குறைக்கும் வழிமுறைகள், மின்-நிர்வாகம் போன்ற ஏதாவது ஒரு சிறப்பு மாநாடு அழைப்பாகவும் இருக்கலாம்) ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். தாங்கள் அதில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்ற வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம்...''

இது போன்ற கடிதங்களுக்கு பதில் தருவது சற்று எளிது என்றே கூறலாம். எனக்கு அந்த துறை குறித்த அறிவு இருக்கவேண்டும், விழாவிற்கு ஒப்புதல் அளிக்கத் தேதிகள் ஒத்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதான் விஷயம்!

நல்ல ஒரு சந்தர்ப்பத்திற்காக அந்த பாதிக்கப்பட்ட பெண் காத்திருப்பதும், ஆர்வத்தைக் கிளர்ந்தெழச் செய்யும் இந்த அதிநவீன தொழில்நுட்ப (cutting edge Technology) மாநாடும் இந்தியா 2020 என்ற விஷயத்தின் இரண்டு பக்கங்களாகும். இவை இரண்டையும் கவனித்தாக வேண்டும்!

இவ்வாறான எண்ணங்கள் மனதில் ஓடியதால், அடுத்து என்ன செய்யலாம் என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். நடந்து முடிந்த பழைய சம்பவங்களை எல்லாம் மறந்து தலைமுழுகிவிடலாமா அல்லது நான் செய்யக் கூடியவை ஏதாவது அதில் உள்ளதா? முடிவெடுப்பது எளிதான காரியமாக இருக்கவில்லை. பதவிக்காலம் முடிந்து விடை பெற்றுச் செல்லும் நான் நாட்டு மக்களின் பிரிவுபசார விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்கான சொற் பொழிவைத் தயாரிக்க வேண்டியிருந்தது. அந்தப் பணியில் ஈடுபட்டுத் தற்காலிகமாக மனக்குழப்பத்திலிருந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்.

நான் எனது உரையில் மக்களுக்கு நன்றி தெரிவிக்கவும், நாட்டின் முன்னேற்றம் பற்றி எடுத்துரைக்கவும் முடிவு

செய்தேன். அவர்களின் ஒத்துழைப்பு மூலம் நாடும், மக்களும் கடந்த ஐந்தாண்டுகளில் நல்ல வளர்ச்சி கண்டிருந்ததைச் சுட்டிக்காட்ட விரும்பினேன்.

முத்தாய்ப்பாக நான் அவர்களிடம் பேசும்போது 'அன்பான குடிமக்களே! தேசம் செழிப்புடனும் ஆரோக்கியமாகவும், அமைதியாகவும், பாதுகாப்புடனும், ஆனந்தமாக இருப்பதற்கு நாம் எல்லோரும் பாடுபட வேண்டும்! தேசம் நிலையான வளர்ச்சிப் பாதையில் நடைபோடவேண்டும் கிராமம், நகரங்களுக்கு இடையே உள்ள இடைவெளி மிகவும் குறையவேண்டும். அதற்கு நிர்வாகம் பொறுப்புணர்ச்சி நிறைந்ததாகவும், ஒளிவுமறைவற்றதாகவும், ஊழலற்றதாகவும் இருப்பது அவசியம்' என்றேன்.

இந்தியா முன்னேறிய நாடாக மாறுவதற்கு உதவும் வகையில் நான் உருவாக்கிய பத்து அம்சத்திட்டத்தில் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளத்தக்க சில திட்டங்களும் உள்ளன. பின்னர் நான் அவற்றை இந்தப் புத்தகத்தில் கூறவிருக்கிறேன்.

இனி என் வாழ்வின் லட்சியம் இதுதான்: பல்வேறு கலாச்சாரங்கள் ஒன்றிணைந்தது நமது தேசம். கோடிக் கணக்கான மக்களின் மனதையும் இதயங்களையும் ஒன்றிணைக்க வேண்டும். முன்னேற்றம் என்ற பத்து தூண்களின் உதவியுடன் அதைச் செயல்படுத்த வேண்டும். ''என்னால் முடியும்'' என்ற தன்னம்பிக்கையை மக்கள் மனதில் பதியவைக்க வேண்டும். நான் எப்போதும் உங்களுடன் இணைந்து நிற்பேன்.

அன்பான குடிமக்களே! 2020 ஆண்டிற்குள் இந்தியாவை முன்னேறிய தேசமாக மாற்றிக்காட்டுவோம்!

நடந்து முடிந்த சில சம்பவங்கள் எனது தொடுவான இலக்கை வெளிச்சமிட்டுக் காட்டின; எனது உதடுகளில் புன் முறுவலை ஏற்படுத்தின; எனக்குப் பாடம் புகட்டின; நேசத்தோடு நாட்டு மக்களுடன் என்னை இணைத்து வைத்தன.

2

அண்ணா பல்கலைக் கழகத்தில் எனது ஒன்பதாவது விரிவுரை

உத்வேக மூட்டப்பட்ட இளைஞர்களின்
மனம்தான் உலகிலேயே சக்தி நிறைந்த ஆதாரவளமாகும்.
ஆகாயம் தொடங்கி பாதாளம் வரை
இதுவே சக்தி செறிந்ததாகும்.

நாவல் மரத்தில் அமர்ந்துகொண்டு இனிய குரலெழுப்பும் அந்த மஞ்சள்நிறப் பறவையைப் பார்க்கும்போது எனது காலைநேர நடைப்பயிற்சி மகிழ்ச்சியளிப்பதாக மாறி விடுவதுண்டு.

எனது தோட்டத்தில் பெரிய அலகுடன்கூடிய இரண்டு ஹார்ன்பில் (Hornbill) பறவைகள் சிலசமயம் அலைந்து திரிவதை நான் காண்பேன். ராஷ்ட்ரபதி பவனிலிருந்து வெளியே வந்துவிட்ட எனக்கு அதன் பின்னர் ராஜாஜி மார்க்கிலுள்ள பத்தாம் எண் இல்லமே குடியிருப்பாக மாறியது. புதுடெல்லியை வடிவமைத்த கட்டிடக்கலை வல்லுனரான எட்வின் லூட்யென்ஸ் அந்த வீட்டில்தான் தங்கியிருந்தார் என்று என்னிடம் சொல்லியிருந்தார்கள்.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆராய்ச்சி செய்வது, வகுப்புகள் எடுப்பதுமாக எனது நாட்கள் வேகமாக ஓடின. வகுப்பில் ஆர்வமும், மனஉறுதியும் நிறைந்த இளைஞர்களின் முகங்களைப் பார்க்கும்போது எனக்கும் சக்தி பிறந்துவிடும். இந்தியநாடு வளர்ச்சியடைவதற்கும், தனது குறிக்கோளை

எட்டுவதற்கும் தங்களால் இயன்றதைச் செய்யும் விருப்பம் மக்களிடையே கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருவது சந்தோஷம் தருவதாக உள்ளது.

எனது ஜனாதிபதி பதவிக்காலத்து நாட்களை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து புரட்டிப் பார்க்கும்போது சில முக்கியமான சம்பவங்கள் மனதில் புரள்கின்றன. பலவகையான கலாச்சாரங்கள் கொண்ட ஒரு தேசத்தின் பெருமைமிக்க கடந்தகாலமும், சவால்கள் நிறைந்த எதிர்காலமும் புதிய பாதையில் திரும்புகின்றன. அதிலுள்ள ஒரு செய்தி தெளிவாக இருக்கிறது. 2020-ஆம் ஆண்டில் இந்தியா ஒரு முன்னேறிய நாடாக மாறிவிடும் என்பதே அச்செய்தியாகும்.

2002 ஆம் ஆண்டு ஜூன் 10-ம் தேதி அழகிய சூழலில் அமைந்திருந்த அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் எல்லா நாட்களையும் போலவேதான் எனக்கு அன்றைய காலைப்பொழுதும் விடிந்தது. நான் 2001-ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து அங்கே பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

அமைதி நிறைந்த விசாலமான வளாகம். நான் பேராசிரியர்களுடனும், ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்த ஆர்வம் நிறைந்த மாணவர்களுடனும் இணைந்து பணிபுரிந்தேன். எனது பாட வகுப்பில் உள்ள மாணவர்களின் அதிகாரப்பூர்வமான எண்ணிக்கை அறுபதாகும். ஆனால் நான் விரிவுரையாற்றும்போது வகுப்புக்குள் முன்னூற்று ஐம்பதிற்கும் அதிகமானவர்கள் உள்ளே வந்துவிடுவார்கள். அப்படி வரும் மாணவர்களைக் கட்டுப்படுத்த வழியில்லை. இளைஞர்களின் அபிலாஷைகள் பற்றித் தெரிந்துகொள்ள நான் விரும்பினேன்.

தேசியத்தொலைநோக்குத் திட்டங்கள் பலவற்றில் பங்கேற்று அனுபவம் பெற்றிருந்த நான் அவற்றைப் பகிர்ந்துகொள்ள ஆசைப்பட்டேன். சமூக மேம்பாட்டுப் பணிகளுக்கு உதவும் வகையில்தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது எப்படி

யென்று முதுநிலைப்பட்டதாரிகளுக்கு நான் பத்து விரிவுரைகள் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தேன்.

நான் தேசியக் குறிக்கோள் என்று குறிப்பிடுவது எவை என்று தெரியுமா? இந்தியா தனது SLV3 என்ற செயற்கைகோள் ஏவுகலத்தை உருவாக்கியது, ஒருங்கிணைப்புப் பணிகளின் உதவியுடன் வானில் வழி நடத்தப்படும் ஏவுகணை மேம்பாட்டுத் திட்டம் (IGMDP), 1998 ஆம் நடத்தப்பட்ட அணுகுண்டு வெடிப்புச் சோதனைகள், தகவல் தொழில் நுட்பம், எதிர்கால நிகழ்வுகளின் சாத்தியக்கூறுகளை எடுத்துரைத்தல், மதிப்பிடுதல் போன்ற காரியங்களுக்காக உருவாக்கப்பட்ட அவை (TIFAC) அளித்த அறிக்கையின் உதவியுடன் தொலைநோக்கு இந்தியா 2020 என்னும் கனவை உருவாக்கியது போன்ற செயல்களையே நான் தேசியக் குறிக்கோள் என்று கூறுகிறேன்.

இப்பணிகள் எல்லாம் தேசத்தின் முன்னேற்றம், வளர்ச்சிப் பாதையின் பாதையில் பயணித்தல் போன்ற காரியங்களுக்குத் துணை நின்றன. குறிப்பிட்டுச் சொல்லும்படியான தாக்கங்களையும் ஏற்படுத்தின. SLV3 எவுகலத்திட்டத்தின் நோக்கம் 40 கிலோ எடை கொண்ட ரோஹிணி என்ற செயற்கைக்கோளை வானில் பூமியின் சுற்றுப்பாதைக்கு அருகில் நிலை நிறுத்துவதாகும். இக்கோள் அயன மண்டலப் பகுதிகளை மதிப்பீடு செய்யப் பயன்படுத்தப்பட்டது.

IGMDP ஏவுகணைத் திட்டம் நாட்டின் பாதுகாப்பிற்கான ராணுவத்தேவைகளை நிறைவு செய்வதற்கு உருவாக்கப் பட்டது. போர்த்தந்திர ஏவுகணை மற்றும் எதிரி இலக்கைத் தாக்கும் ஏவுகணை (Tactical and Strategic missile system) என்ற பன்முகப் பயன்பாட்டை மனதில் கொண்டு அது வடிவமைக்கப்பட்டிருந்தது. அக்னி V இதன் சமீபத்திய வெற்றிச் சாதனையாகும்.

1998ஆம் ஆண்டு மே மாதம் 11, 13 ம் தேதிகளில் இந்தியா அணுகுண்டு வெடிப்புச் சோதனைகள் நடத்தியது. இதன் மூலம்

அணுகுண்டு தயாரிக்கும் ஆற்றலுள்ள நாடாக மாறியது. TIFAC என்ற அமைப்பு உருவாக்கித்தந்த தொலைநோக்கு இந்தியா 2020 என்ற பயணப் பாதையில் நாடு நடைபோட்டதன் விளைவாகவே இக்காரியங்கள் எல்லாம் நடந்தேறின.

என்னுடைய ஒன்பதாவது விரிவுரைக்குக் 'குறிக்கோளை நோக்கிய பயணம்' என்று பெயரிடப்பட்டிருந்தது. பல ஆய்வறிக்கைகளும் அதில் உள்ளடங்கி இருந்தன. விரிவுரையை நான் முடித்தபோது ஏராளனமான கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியதாயிற்று. வகுப்பெடுக்கும் நேரம் ஒரு மணியிலிருந்து இரண்டு மணி நேரமாக அதிகரித்தது. அவற்றைமுடித்துக்கொண்டு எனது அலுவலக அறைக்குத் திரும்பினேன். வழக்கம் போலவே அன்றும் சில ஆராய்ச்சி மாணவர்களுடன் மதியஉணவு அருந்தினேன். வாய்நிறையச் சிரித்தபடியே சமையற்காரர் பிரகாசம் சுவையான உணவைப் பரிமாறினார். உணவு அருந்திய பின்னர் அடுத்த பாடவகுப்புக்குத் தேவையான குறிப்புகளைத் தயார் செய்தேன். வகுப்பு நடத்திவிட்டு மாலை அலுவலகம் திரும்பினேன்.

நான் நடந்து வந்து கொண்டிருந்தபோது என்னுடன் அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ.கலாநிதியும் சேர்ந்துகொண்டார். நான் அறையில் இல்லாத சமயத்தில் எனது அலுவலகத்திற்குப் பலதடவை தொலைபேசி அழைப்பு வந்ததாகவும், யாரோ ஒருவர் என்னுடன் அவசரமாகப் பேசவிரும்பியதாகவும் துணைவேந்தர் தெரிவித்தார்.

நான் எனது அறையை அடைந்தபோது தொலைபேசி மணி அடித்துக்கொண்டிருப்பதைக் கேட்டேன். தொலைபேசியின் எதிர்முனையில் பேசியவர் ''பிரதமமந்திரி உங்களுடன் பேச விரும்புகிறார்'' என்று கூறினார். பிரதமருடன் இணைப்பு கிடைப்பதற்கு நான் காத்திருந்தபோது என் அலைபேசி ஒலித்தது. அப்போதைய ஆந்திர முதல்வராக இருந்த சந்திரபாபு

நாயுடு பேசினார். பிரதமரிடமிருந்து முக்கியமான ஒரு அழைப்பை எதிர்பார்க்கும்படி என்னிடம் சொன்னார். ''அந்த அழைப்பை வேண்டாம் என்று தயவு செய்து மறுத்துவிடாதீர்கள்'' என்றும் கேட்டுக்கொண்டார்.

நான் நாயுடுவுடன் பேசிக்கொண்டிருந்தபோது தொலைபேசியில் அடல் பிகாரி வாஜ்பாயின் இணைப்பு கிடைத்துவிட்டது. ''கலாம்! உங்கள் கல்விப் பணி எப்படிப் போகிறது?'' என்று அவர் என்னிடம் கேட்டார்.

''அற்புதமாக இருக்கிறது!'' என்று நான் பதிலளித்தேன்.

வாஜ்பாய் தொடர்ந்து பேசினார்:

''மிக முக்கியமான செய்தி ஒன்றை நாங்கள் உங்களிடம் தெரிவிக்க இருக்கிறோம். அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்ட சிறப்புக் கூட்டம் ஒன்றில் பங்கெடுத்துக் கொண்டு இப்போதுதான் திரும்பி வந்தேன். இந்த நாட்டின் ஜனாதிபதி பதவியை நீங்கள் ஏற்கவேண்டும் என்று நாங்கள் எல்லோரும் முழுமனதுடன் முடிவு செய்திருக்கிறோம். இந்த அறிவிப்பை நான் இன்றிரவு வெளியிடவேண்டும்.

அதற்கு உங்கள் ஒத்துழைப்புத் தேவை. சரி என்று சம்மதிக்க வேண்டும். முடியாது என்று கூறக்கூடாது.

வாய்பாய் அப்போது தேசிய ஜனநாயகக் கூட்டணிக் (NDA) கட்சிகளின் தலைவராக இருந்துவந்தார். சுமார் இரண்டு டஜன் கட்சிகள் அங்கம் வகித்த அந்தக் கூட்டணியிடமிருந்து அபிப்பிராய பேதமற்ற கருத்தொற்றுமையை ஏற்படுத்தியது எளிதான காரியமாக இருந்திருக்காது.

அறைக்குள் நுழைந்த எனக்கு உட்காரவும் நேரமிருக்க வில்லை. எதிர்காலம் குறித்த பலவிதமான பிம்பங்கள் மனதில் தோன்றின. என்னைச் சுற்றி மாணவர்களும், ஆசிரியர்களும் நின்றிருப்பது போன்ற பிம்பம் அவற்றில் ஒன்று. மற்றொரு பிம்பம் தேசத்தின் எதிர்காலத்தை மனதில் வைத்துக்கொண்டு

நான் பாராளுமன்றத்தில் பேசுவதுபோல் எழுந்தது. என் மனதில் ஒரு முடிவு உருப்பெறலாயிற்று.

நான் ''வாஜ்பாய்ஜி! (அவரை நான் அப்படித்தான் கூப்பிடுவது வழக்கம்) எனக்கு முடிவெடுக்க இரண்டு மணிநேரம் அவகாசம் தருவீர்களா? என்னை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.''

''நீங்கள் சம்மதம் கொடுங்கள். ஒப்புதல் பெறுவதற்கு ஆவனம் செய்கிறோம்'' என்றார் வாஜ்பாய்.

அடுத்த இரண்டு மணிநேரத்தில் நான் எனது முப்பது நெருங்கிய நண்பர்களுடன் தொலைபேசியில் பேசினேன். அவர்கள் கல்வித்துறையிலும், குடிமுறை அரசுப்பணியிலும் (Civil service) இருப்பவர்கள். சில அரசியல்வாதிகளும் இதில் அடங்குவார்கள். நான் கல்விப் பணியை நேசிக்கிறேன். அதன் மீது பிரேமை கொண்டிருக்கிறேன். எனவே அதற்கு இடையூறு ஏற்படுத்திக்கொள்ளவேண்டாம் என்பது ஒரு குழுவின் வாதம். அடுத்த குழு, இது ஒரு நல்ல வாய்ப்பு என்று கூறியது. இந்தியா 2020 என்ற குறிக்கோளை தேசம், மற்றும் பாராளுமன்றத்தின் முன் வைக்க இப்பதவி துணை நிற்கும் என்பதால் துணிந்து இறங்குங்கள் என்றது.

சரியாக இரண்டு மணிநேரத்திற்குப் பிறகு பிரதமர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டேன்.

''வாஜ்பாய்ஜி! இது முக்கியமான விஷயம் என்பதால் அனைத்து கட்சியின் சார்பாக நிறுத்தப்படும் வேட்பாளராக நான் இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்'' என்றேன்.

அவர், ''நன்றி! அதற்கான முயற்சிகளில் இறங்குகிறோம்'' என்றார்.

செய்தி வேகமாக எங்கும் பரவியது. அடுத்த பதினைந்தாவது நிமிடம் நான் ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்ட செய்தி நாடெங்கும் பரவியது. உடனடியாக,

கட்டுக்கடங்காத அளவு தொலைபேசி அழைப்புகள் வந்து குவியலாயின. எனது பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. நிறையப் பார்வையாளர்கள் என் அறைவாசலில் குவிந்தனர்.

அன்றைய தினமே வாஜ்பாய் திருமதி சோனியா காந்தியிடம் ஆலோசனை நடத்தினார். எதிர்கட்சித் தலைவியான அவரிடம் ஜனாதிபதி வேட்பாளர் தேர்வு குறித்துக் கருத்துக் கேட்கப்பட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தீர்மானம் இறுதி செய்யப்பட்டு விட்டதா என்று சோனியா வினவினார். அவ்வாறு இறுதி செய்யப்பட்டால் அதற்கு சம்மதம் அளிக்க அவர் தயாராக இருந்தார்.

தனது கட்சி உறுப்பினர்களுடனும், தோழமைக் கட்சியினருடனும் கலந்து ஆலோசித்த பின்னர் 2002 ஜூன் 17-ம் தேதி என்னை ஜனாதிபதி வேட்பாளராக இந்திய தேசியக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவையும் பெற்றுவிட நான் ஆசைப்பட்டேன். ஆனால் தங்களது சொந்த வேட்பாளரை நிறுத்த அவர்கள் முடிவு செய்திருந்தார்கள்.

பத்திரிகைகளில் என்னைப் பற்றிய செய்திகள் வெளியானவண்ணமிருந்தன. ஊடகங்கள் நிறையக் கேள்விகளை எழுப்பின. அரசியல் தொடர்பில்லாத ஒருவர் -குறிப்பாக ஒரு விஞ்ஞானி ஜனாதிபதியாகவிடமுடியுமா என்பதே அக்கேள்விகளின் சாரமாக இருந்து வந்தது.

ஜூன் 18-ஆம் தேதி எனது முதலாவது பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. எனது வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட மறுநாள் இது நடந்தது. குஜராத் பிரச்சினை பற்றி பத்திரிகையாளர்கள் நிறையக் கேள்விகள் கேட்டனர். (கலவரங்கள் காரணமாக மாநிலம் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.)

அயோத்தியா (ராமஜென்ம பூமி எப்போதும் பரபரப்பான செய்தியாகவே இருந்து வந்தது) மற்றும் அணுகுண்டுச்

சோதனைகள் பற்றியெல்லாம் கேட்டனர். ஜனாதிபதியான பிறகு என்ன செய்யலாம் என்று திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்று வினவினர். கல்வியறிவு படைத்த அரசியல்வாதிகள் கூட்டமொன்று நாட்டில் உருவாக வேண்டுமென்று நான் அவர்களிடம் கூறினேன். முடிவெடுக்கும் விஷயத்திற்கு அவர்கள் அடிக்கல்லாக இருந்து உதவமுடியுமென்று சொன்னேன்.

அயோத்தியா பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கல்வியறிவு, பொருளாதார மேம்பாடு, ஒருவரை ஒருவர் மதித்து நடக்கக் கற்றுக்கொள்ளுதல் போன்றவை அவசியம் என்றேன். பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்போது சமூக ஏற்றத் தாழ்வுகள் குறைய ஆரம்பிக்கும். டாம்பீகமும், ஆடம்பரமும் நிறைந்த ராஷ்ட்ரபதி பவனில் நான் எளிமையைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்தேன்.

சிக்கலான பிரச்சினைகளுக்கு முடிவெடுக்க வேண்டிய சமயங்களில் அரசியல் சாசன நிபுணர்களின் ஆலோசனை பெற்று நடந்து கொள்வேன் என்று கூறினேன். மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்துவதற்கு ஆணை பிறப்பிக்கும் நேரங்களில் ஒரு சிலரின் ஆசைகளைத் திருப்திப் படுத்துவதற்குப் பதிலாக, பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்யவே விரும்புவேன் என்று தெரிவித்தேன்.

ஜூலை 10-ம் தேதி நான் சென்னையிலிருந்து கிளம்பி டெல்லி ஆசியாட் கிராமத்திலுள்ள எனது ஃபிளாட்டில் சென்று தங்கினேன். வேலைகள் மும்முரமாக நடக்கலாயின. பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த பிரமோத் மகாஜன் என்னுடைய தேர்தல் ஏஜண்டாகச் செயல்பட்டார். என்னுடைய ஃபிளாட்டில் தேர்தல் முகாம் அலுவலகத்தை நிறுவினேன். அது பெரிய ஃபிளாட் அல்ல என்றாலும் ஓரளவு இடவசதி இருக்கவே செய்தது. அதில் பார்வையாளர் சந்திப்பு அறை ஒன்றை உருவாக்கினேன். ஆலோசனைக் கூடம் செயல்படத் தொடங்கியது. அதன் பின்னர் மின்னணு

முறையில் செயல்படும் முகாம் அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டது. எல்லா தகவல்களும் மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கோரும் கடிதம் ஒன்று தயாரிக்கப்பட்டது. லோக்சபா, ராஜ்ய சபாவைச் சேர்ந்த சுமார் 800 பேருக்கு அக்கடித நகல்கள் அனுப்பி வைக்கப் பட்டன. நான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் என் தொலைநோக்கு எப்படியிருக்கும் என்பதை அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். எனக்கு வாக்களித்து ஆதரவு தரவேண்டும் என்றும் கேட்டிருந்தேன்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் சென்று பாராளுமன்ற உறுப்பினர்களை நேரில் சந்தித்து ஆதரவு கேட்பதற்குப் பதிலாக இவ்வாறு கடிதம் வாயிலாகத் தொடர்பு கொள்ளலாம் என்று மகாஜன் ஆலோசனை கூறினார். ஜூலை 18-ம் தேதி நான் நிறைய வாக்கு வித்தியாசங்களுடன் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டதாக அறிவிப்பு வெளியாயிற்று.

நான் பலரையும் சந்தித்துப் பேசவேண்டியிருந்ததால் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பார்வையாளர்கள் கூட்டம் வெள்ளம்போல நாளெல்லாம் வந்த வண்ணமிருந்தது. எனது பயணம் மற்றும் தனிப்பட்ட தொடர்புகளுக்கு மத்தியில் ஊடகங்களுக்கும் பேட்டி அளிக்க வேண்டியிருந்தது.

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் குழந்தைகளுடன் கலந்துறவாட விரும்புவேன். பல்வேறு விஷயங்கள் பற்றி அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து கொள்ளவும் செய்வேன். ஏசியாட் கிராமத்தில் இருந்த 833-ம் எண் ஃபிளாட் சுறுசுறுப்பான தேன் கூடாக மாறிவிட்டது. ஜூலை 25-ம் தேதி நடைபெறவிருந்த பதவியேற்பு விழாவில் கலந்துகொள்ளும் விருந்தினர்களின் பெயர் பட்டியலைத் தயாரிப்பதும் ஒரு முக்கியமான பணியாக அமைந்திருந்தது.

பாராளுமன்ற மைய மண்டபத்தில் ஆயிரம் பேர்தான் அமரமுடியும். பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்த்து இரு

சபைகளையும் சேர்ந்த அலுவலகப் பணியாளர்கள், உள்துறை மற்றும் பிற அமைச்சகங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், பதவியிலிருந்து விடைபெற்றுச் செல்லும் கே.ஆர்.நாராயணனின் உறவினர்கள் என்ற அளவில் 100 விருந்தினர்கள் தேறுவார்கள். அந்த எண்ணிக்கை 150-க்கு உயர்ந்தபோது சிக்கலாகிவிட்டது.

எனது குடும்ப உறவினர்கள் மட்டுமே முப்பத்துமூன்று பேர் இருந்தார்கள். அது தவிர என் முன்னாள் இயற்பியல் ஆசிரியர் பேராசிரியர் சின்னதுரை, MIT பேராசிரியர் கே.வி.பண்டாலை, ராமேஸ்வரம் கோவிலின் தலைமை குருக்களான பஷி வேங்கட சுப்பிரமணியம் சாஸ்திரிகள், ராமேஸ்வரம் மசூதியின் இமாம் நூருல் குதா, ராமேஸ்வரம் கிறிஸ்தவ தேவாலயத்தின் பாதிரியார் ரெவரண்ட் ஏ.ஜி.லியோனார்டு, அரவிந்தர் கண் மருத்துவ நிறுவனத்தை உருவாக்கிய சிறப்புக் கண்மருத்துவர் டாக்டர்.ஜி.வேங்கடசாமி போன்றவர்களும் வந்திருந்தனர்.

அத்துடன் விருந்தினர் பட்டியலில் நடனமணி சோனல் மான்சிங், பல்வேறு தொழிலதிபர்கள், பத்திரிகையாளர்கள், எனது நெருங்கிய சினேகிதர்கள் என்று பலரும் இருந்தனர். நாட்டின் அனைத்து மாநிலங்களில் இருந்தும் வந்திருந்த 100 சிறுவர் சிறுமிகளும் இதில் அடக்கம். அவர்களுக்கென்று தனி இடவசதி செய்யப்பட்டிருந்தது. அவர்கள் முதுநிலை உதவியாளர் ஒருவரின் பொறுப்பில் விடப்பட்டனர்.

அது **வெப்பமான** ஒரு நாளாக இருந்தாலும் எல்லோரும் சம்பிரதாய முறைப்படி ஆடை அணிந்துகொண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க மைய மண்டபத்தில் குழுமினார்கள்.

களங்கமற்ற குணமும், அறிவாற்றலும் கொண்ட என் தேசத்து மக்கள் இந்த உலகை சமாதானம், செழுமை நோக்கிய பாதைக்கு அழைத்துச் செல்வார்கள் என்ற நம்பிக்கையை எனக்கு எப்போதும் தந்துகொண்டே இருக்கிறார்கள்.

★ ★ ★

3

எனது வாழ்வில் ஏற்பட்ட ஏழு திருப்புமுனைகள்

பிரச்சினைகளை எதிர்த்து நிற்கும் போர்ப்படைத் தலைவராக நீங்கள் மாறமுடியும். பிரச்சினைகளைத் தோற்கடித்து வெற்றி வாகை சூடுங்கள்!

கற்றுக்கொடுப்பதையும், ஆராய்ச்சி செய்வதையும் நான் நேசிக்கிறேன். கல்வியோடு சம்பந்தப்பட்ட வாழ்க்கை முறைதான் எனது உத்வேகத்திற்கும், சிந்தனைகளுக்கும் ஆதார சுருதியாக இருந்து வருகிறது என்று சொல்லிக்கொள்ள நான் சலிப்பதே இல்லை.

இளைஞர்களோடும், அவர்களது ஆசிரியர்களோடும் கலந்துரையாடுவது என் ஆன்மாவுக்கு உணவாக அமைகிறது. நான் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைக்கே திரும்ப வந்துவிடுவ தென்று உறுதியான முடிவெடுத்து வைத்திருந்தேன். சட்டென்று நிகழ்ந்துவிட்ட சம்பவங்கள் என்னை ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொள்ளும்படி செய்துவிட்டன என்று முன்பே கூறியிருக்கிறேன்.

நான் கல்விப்பணிக்குத் திரும்பி வருவதற்குத் தகுந்தபடி என்னை முழுவீச்சில் தயார்படுத்தி வைத்திருந்தேன். அது எனக்கு எனது வாழ்வில் நடந்த ஆறு திருப்புமுனைகளை நினைவுக்குக் கொண்டுவந்துவிட்டது. ஜனாதிபதி பதவிக் காலத்திற்குப் பிறகு நான் மீண்டும் கல்வித்துறையில் நுழைவதைச் சிலர் புதிய இடப்பெயர்ச்சி என்றும் சொல்லக்கூடும்.

எனது வாழ்வின் முதல் திருப்பம் 1961-ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அப்போது நான் விமான வடிவமைப்பு வளர்ச்சி அமைப்பில் (ADE) முதுநிலை விஞ்ஞான உதவியாளராக இருந்து வந்தது இன்றும் ஞாபகம் இருக்கிறது. நிலத்திலும், நீரிலும் அந்தரத்தில் மிதந்தபடி வேகமாகப் பயணிக்கும் மிதவை வாகனம் (Hovercraft) ஒன்றைத் தயாரிக்கும் பணியில் நான் தலைமை வடிவமைப்பாளராகப் பணிபுரிந்துவந்தேன். அந்த வாகனத்திற்கு நந்தி என்று பெயரிடப்பட்டிருந்தது.

காரியம் வெற்றிகரமாக முடிந்து நாங்கள் அதைப் பலரிடம் இயக்கிக்காட்டிக்கொண்டிருந்தோம். அது எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்துவிட்டது. விமான வடிவமைப்பு வளர்ச்சி அமைப்பின் இயக்குனராக இருந்த டாக்டர்.கோபிநாத் மேதிரத்தா பார்வையாளர் ஒருவரை அழைத்து வந்தார். உயரமாக, தாடி வைத்துக்கொண்டு, அழகான தோற்றத்துடன் அந்த புதியவர் காணப்பட்டார்.

அவர் என்னிடம் இயந்திரம் குறித்துப் பல கேள்விகள் கேட்டார். அவரது சிந்தனைத்தெளிவு என்னைக் கவர்ந்து விட்டது. ''இந்த இயந்திரத்தில் என்னை உட்காரவைத்து ஓட்டிக் காட்டுவீர்களா?'' என்று வினவினார்.

நாங்கள் பத்து நிமிடம் அந்த மிதவை வாகனத்தில் பறந்தோம். நந்தி என்ற பெயருக்கேற்றபடி அது தரையிலிருந்து சில சென்டிமீட்டர் உயரம் மேலே எழுந்து நின்று அழகாகக் காற்றில் மிதந்து பறந்தது. அதை நான் ஓட்டியதைக் கண்ட அவர் வியப்படைந்தார்.

என்னைப் பற்றியும் சில கேள்விகள் கேட்டுத் தெரிந்து கொண்டார். வாகனத்தில் பயணம் செய்ததற்கு நன்றி கூறிவிட்டு அவர் சென்று விட்டார். அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும்வரை அவர்தான் டாடா அடிப்படை ஆய்வு நிறுவனத்தின் (Tata Institute of Fundamental Research) இயக்குனர் பேராசிரியர் எம்.ஜி.கே.மேனன் என்று எனக்குத் தெரியவில்லை.

ஒரு வாரம் கழித்து எனக்கு இந்திய விண்வெளி ஆய்வுக் குழுவிடமிருந்து Indian committe for space Research (ICSR) ஒரு கடிதம் வந்தது. ராக்கெட் என்ஜினியர் பதவிக்கான நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள என்னை அழைத்திருந்தார்கள். (ICSR என்ற அந்த அமைப்பு பின்னர் 'இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம்' (ISRO) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது)

நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள நான் பம்பாய் சென்றேன். விண்வெளி ஆய்வுக் குழுவின் தலைவராக இருந்த பேராசிரியர். விக்ரம் சாராபாயும், பேராசிரியர் மேனனும் தேர்வுக்குழுவில் இருப்பதைக் கண்டு வியந்து போனேன். அவர்களுடன் அணுசக்திக் கமிஷனின் (AEC) துணைச் செயலாளராக இருந்த சராஃபும் அமர்ந்திருந்தார்.

விக்ரம் சாராபாய் காட்டிய பரிவு மனதுக்கு இதமளிப்பதாக இருந்தது. என் அறிவாற்றலையும், திறமைகளையும் தோண்டித் துருவிப் பார்க்க அவர் முயற்சி செய்யவில்லை. என்னிடம் பொதிந்துள்ள சாத்தியக் கூறுகளை ஆராயும் விதமாகவே கேள்விகள் அமைந்திருந்தன. அந்தச் சம்பவம் மாபெரும் கனவுகளுடன் இருந்த ஒரு பெருந்தகையாளர் என் கனவையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டுவிட்டார் என்ற உண்மையை எனக்கு உணர்த்தியது.

மறுநாள் மாலையில் நான் தேர்வில் வெற்றி பெற்று விட்டதாகத் தெரிவித்தார்கள். 1962-ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட 'இஸ்ரோ' வில் என்னை ராக்கெட் என்ஜினியராக நியமித்தார்கள். இந்த இடத்தில்தான் எனது வாழ்வில் ஒரு பெரிய நிகழ்வு நடந்தேறியது. பேராசிரியர் சதீஷ் தவன் இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் ஏவுகலத்தை உருவாக்கும் திட்டத்தின் இயக்குனராக இருந்து அதை வழிநடத்தும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார்.

என் வாழ்வின் இரண்டாவது திருப்புமுனை 1982-ஆம் ஆண்டு நான் இந்திய ஏவுகணைத்திட்டப் பணியில் நுழைந்தபோது ஏற்பட்டது.

முசௌரியில் இருந்த பாதுகாப்புப் பணி ஆய்வு நிலையத்தில் (DIWS) டாக்டர்.ராஜா ராமண்ணாவைச் சந்தித்துப் பேசினேன். (அந்த நிலையம் தற்போது தொழில்நுட்ப நிர்வாக நிலையம் (ITM) என்று மறுபெயர் சூட்டப்பட்டுவிட்டது.)

பாதுகாப்புத் துறையில் பணிபுரியும் நிர்வாக அதிகாரிகளுக்கு அங்கே பயிற்சி தரப்படுகிறது. நான் SLV-3ன் திட்ட இயக்குனராக இருந்தபோது அங்கே சில தொடர் சொற்பொழிவுகள் நடத்தவேண்டும் என்று கேட்டார்கள். இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் ஏவுகலம் எவ்வாறு பூமியின் சுற்றுப் பாதையில் ரோஹிணி செயற்கைக் கோளை நிலைநிறுத்தியது என்று விளக்கிப் பேசினேன்.

ராஜா ராமண்ணா 1974-ஆம் ஆண்டு தான் எப்படி இந்தியாவின் அணுவெடிப்புச் சோதனையில் வெற்றி பெற்றார் என்பதை எடுத்துரைத்தார். எங்கள் சொற்பொழிவுகள் முடிந்த பிறகு இருவரும் சேர்ந்து டேராடூனுக்கு புறப்பட்டோம். அங்கேயிருந்த சில விஞ்ஞானிகளுடன் தேனீர் விருந்தில் கலந்து கொண்டோம்.

ராஜா ராமண்ணா எனக்கு ஹைதராபாத்தில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆய்வுக்கூடத்தின் இயக்குனர் பதவியை அளிக்க முன்வந்தார். அது ஏவுகணைகளை மேம்படுத்துவதற்கான தாய் நிறுவனம் போன்றதாகும். மேலும் அது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் (Defence Research and Development organization) கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது என்பதால் உடனே நான் அவரது அழைப்பை ஏற்றுக்கொண்டேன். விண்வெளி ராக்கெட்டிலுள்ள தொழில்நுட்பங்களை ராணுவ ஏவுகணைக்கும் பயன்படுத்த வேண்டும் என்பது என் நெடுநாளைய விருப்பமாகும்.

நான் புதிய பணியில் சேர்ந்து பயணத்தைத் தொடர்வதற்கு இஸ்ரோவில் என் மேலதிகாரியாக இருந்த இயக்குனர் பேராசிரியர் தவன் அனுமதி தந்தாகவேண்டியிருந்தது.

மாதங்கள் பல ஓடின. நிறையக் கடிதப்போக்குவரத்துகள் நடத்தப்பட்டன. பாதுகாப்பு அமைப்புகளுக்கான அமைச்சகமும், விண்வெளித் துறையும் பலதடவை பேச்சு வார்த்தைகள் நடத்தின. இணக்கமான முறையில் காரியங்கள் நடந்தேற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

பாதுகாப்பு அமைச்சரின் விஞ்ஞான ஆலோசகராக இருந்த டாக்டர் வி.எஸ்.அருணாச்சலம் அமைச்சரும், தவனும் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடு செய்தார். இவரே ஆர்.வெங்கட்ராமனுக்கும் ஆலோசகராக இருந்தார். அமைச்சரும், தவனும் சந்தித்துப் பேசிய பிறகு என்னை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆய்வுக்கூடத்தின் இயக்குனராக நியமனம் செய்தார்கள். இந்த நியமனம் 1982-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சருக்கும், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையின் செயலாளருக்கும் விஞ்ஞான ஆலோசகராக டாக்டர் அருணாச்சலம் பணியாற்றி வந்தார். 1992-ஆம் ஆண்டு நான் அவரது அந்த விஞ்ஞான ஆலோசகர் பதவியில் அமர்ந்தேன். அது எனது வாழ்வின் மூன்றாவது திருப்புமுனையாகும்.

1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆளுநராக இருந்த டாக்டர் சென்னா ரெட்டி என்னை அழைத்து, சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். அப்போது எனக்கு அறுபத்து இரண்டு வயது நடந்துகொண்டிருந்ததால், அப்பதவியை ஏற்றுக் கொள்வதற்கு அரசின் அனுமதியைக் கோரினேன்.

அந்த நேரத்தில் நாட்டின் பிரதம மந்திரியாகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த பி.வி.நரசிம்மராவ் அவர்கள் என்னைத் தொடர்ந்து விஞ்ஞான ஆலோசகர் பதவியிலேயே இருக்குமாறு கேட்டுக்கொண்டார். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல திட்டங்களுடன், நான் சம்பந்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

பல ஆண்டுகள் நரசிம்மராவுடன் நான் பணியாற்றியிருக் கிறேன். அவர் நாட்டின் பாதுகாப்பு விஷயங்களில் அதிக அக்கறை காட்டினார். சிறப்பான தற்காப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டுமென்று விரும்பினார். நீடித்த பலன் தரக்கூடிய பாதுகாப்புச் செயல்பாடுகள் குறித்த தொலைநோக்குப் பார்வை அவரிடம் இருப்பதைக் கண்டேன். அதனால் நான் எனது எழுபதாவது வயதுவரை பாதுகாப்பு அமைச்சரின் விஞ்ஞான ஆலோசகராக இருந்துவந்தேன்.

1998 ஆம் நடத்தப்பட்ட அணுவெடிப்புச் சோதனை எனது வாழ்வின் நான்காவது திருப்புமுனை. இதற்குப் பின்னால் ஒரு சுவாரஸ்யமான கதை இருக்கிறது. நாம் 1996-ஆம் ஆண்டுக்கு கொஞ்சம் திரும்பிச் செல்வோம்

அந்த ஆண்டில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. முடிவுகள் அறிவிக்கப்படுவதற்குச் சில நாட்கள் முன்பாக நான் நரசிம்மராவைச் சந்தித்தேன்.

"கலாம்! அணுகுண்டு சோதனைகள் நடத்துவதற்கு உங்கள் குழுவினருடன் தயாராக இருங்கள். நான் திருப்பதி செல்கிறேன். எனது அதிகாரப்பூர்வமான உத்தரவுக்காக காத்திருங்கள். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிலையமும் (DRDO) அணுசக்தி துறையின் (DAE) குழுவினரும் செயல்படத் தயார் நிலையில் இருக்கவேண்டும்" என்றார்.

காரியம் நல்லவிதமாக நடந்தேற வேண்டும் என்று பிரார்த்தனை செய்துகொள்ளவே அவர் திருப்பதி சென்றார். ஆனால் 1996-ஆம் ஆண்டு தேர்தல் முடிவு அவர் எதிர்பார்த்ததற்கு மாறாகப் போய்விட்டது. காங்கிரஸ் கட்சியின் வெற்றி பெற்ற உறுப்பினர் எண்ணிக்கை 136 மட்டுமே இருந்தது. வாஜ்பாய் தலைமையிலான பிஜேபியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் ஆட்சியைப் பிடித்தன. ஆனால் அது சில வாரங்கள் மட்டுமே நிலைத்திருந்தது. மூன்றாம் அணியைச் சேர்ந்த ஹெச்.டி.தேவகவுடா பிரதமமந்திரி பதவியைப் பிடித்தார். ஆனாலும் இரண்டு வாரங்கள்

வாஜ்பாய் அரசு ஆட்சியைக் கைப்பற்றியிருந்த சமயத்தில் அணுகுண்டுச் சோதனைகள் நடத்துவதற்கு பெரும் முயற்சிகள் எடுத்துக்கொண்டது.

அப்போது இரவு ஒன்பது மணி.

7, ரேஸ்கோர்ஸ் சாலையிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் உடனே புறப்பட்டுச் சென்று புதிய பிரதமரையும், ராவையும் சந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அணுசக்தித் திட்டம் பற்றி வாஜ்பாயிடம் சுருக்கமாக எடுத்துக்கூறும்படி ராவ் என்னிடம் கூறினார். அதனால் விஷயம் சிரமமின்றிக் கைமாறியது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த காரியத்தை புதிய அரசாங்கம் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது.

இரண்டு ஆண்டுகள் கழித்து வாஜ்பாய் பிரதமர் பொறுப்புக்குத் திரும்பி வந்தார். 1998 ஆம் ஆண்டு மார்ச் 15-ம் தேதி நள்ளிரவு வேளையில் எனக்கு வாஜ்பாயிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. பதவியேற்றுக் கொள்ளும் மந்திரிகளின் பெயர் பட்டியலை அவர் தயாரித்து விட்டதாகவும், மந்திரிசபையில் என்னையும் சேர்த்துக்கொள்ள விரும்புவதாகவும் கூறினார். இதுபற்றி யோசிக்க சிறிது அவகாசம் தரவேண்டும் என்று நான் அவரிடம் கேட்டுக் கொண்டேன்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு தன்னிடம் வந்து முடிவைத் தெரிவிக்கும்படி அவர் கூறினார். அந்த நள்ளிரவில் நான் எனது நண்பர்கள் சிலரை வரவழைத்தேன். அதிகாலை 3 மணிவரை விவாதித்தோம். மந்திரி சபையில் நான் சேர்ந்து கொள்ளலாமா? நான் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு முக்கியப் பணிகளில் ஈடுபட்டு இருக்கிறேன். அவை இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டன. விரைவில் நல்ல பலன் தரவிருக்கின்றன. அவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டு நான் அரசியலில் நுழைவது சரியில்லை என்பதே நண்பர்களின் பொதுவான அபிப்பிராயமாக இருந்தது.

மறுநாள் காலையில் நான் சஃப்தர்ஜங் சாலையில் இருந்த ஏழாம் எண் இல்லத்திற்குச் சென்றேன். அங்கேதான் பிரதமர் தங்கியிருந்தார். என்னை வரவேற்பு அறையில் உட்கார வைத்து வீட்டில் தயாரிக்கப்பட்ட இனிப்புகளைப் பிரதமர் வழங்கி உபசரித்தார்.

நான் அவரிடம், ''என்னுடைய குழுவினரும் நானும் இரண்டு முக்கியமான திட்டப்பணிகளில் ஈடுபட்டு வருகிறோம். ஒன்று, அக்னி ஏவுகணையை உருவாக்குவது. அடுத்தது, அணுசக்தித்துறையுடன் (DAE) சேர்ந்து அணுவெடிப்புச் சோதனைகள் பலவற்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் கிட்டத்தட்ட நிறைவுபெறும் நிலையில் உள்ளன. இந்த இரண்டு திட்டங்களுடனும் என்னை முழுமையாக இணைத்துக்கொள்ள விரும்புகிறேன். நாட்டிற்கு என் பங்களிப்பை வழங்கவேண்டும். தயவு செய்து என் பணியைத் தொடர அனுமதியுங்கள்!'' என்று கேட்டுக்கொண்டேன்.

''நான் உங்கள் கருத்தை மதிக்கிறேன். உங்கள் பணியைத் தொடருங்கள். கடவுளின் அனுக்கிரகம் உங்களுக்குக் கிடைக்கட்டும்'' என்று வாஜ்பாய் பதிலளித்தார். அதன் பின்னர் பல விஷயங்கள் நடந்தேறின. அக்னி ஏவுகணை வானில் பறப்பதற்குத் தயாராயிற்று. தொடர்ச்சியாக ஐந்து அணுச்சோதனைகள் நடத்தப்பட்டன. இந்தியா அணு ஆற்றல் பெற்ற தேசமாக மாறியது!

மந்திரி சபையில் நான் அங்கம் வகிக்க மறுத்தது என்னை இரண்டு தேசியமுக்கியத்துவம் வாய்ந்த செயல்களில் பங்கு பெறும்வாய்ப்பை அளித்தது. அதன் மூலம் தேசம் நற்பலன் பெற்றது!

என்னுடைய ஐந்தாவது திருப்புமுனை 1999 ஆம் ஆண்டு இறுதியில் நிகழ்ந்தது. அப்போது நான் இந்திய அரசின் தலைமை விஞ்ஞான ஆலோசகராக (Principal scientific adviser - PSA) இருந்து வந்தேன். அது மத்திய அமைச்சர் பதவிக்கு நிகரானதாகும்.

என்னுடைய குழுவில் டாக்டர். ஒய்.எஸ்.ராஜன், மற்றும் டாக்டர்.எம்.எஸ். விஜயராகவனும் இருந்தார்கள். இவர் மின்னணு மற்றும் தகவல் அறிவியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். அத்துடன் நான் தலைவராக இருந்த தகவல் தொழில்நுட்பம், எதிர்கால நிகழ்வுகளை எடுத்துரைத்தல், சாத்தியக்கூறுகளை மதிப்பீடுதல் போன்ற காரியங்களில் ஈடுபட்ட Technology Information, Forecasting and Assesment council (TIFAC) என்ற அவையிலும் என்னுடன் சேர்ந்து பணியாற்றியிருந்தார்.

எனது தனிச் செயலாளர் ஹெச்.ஷெரிடன் நான் தலைமை விஞ்ஞான ஆலோசகராக இருந்தபோது ஸ்டாஃப் ஆபீசராகவும் செயல்பட்டார். நான் பணியில் சேர்ந்தபோது எங்களுக்கென்று தனி அலுவலகம் எதுவும் இல்லாதிருந்தது. அதை நாங்கள் கட்டிக்கொண்டோம். அதற்காக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்புக்கு நன்றி தெரிவித்தாக வேண்டும். குறிப்பாக அந்த அமைப்பைச் சேர்ந்த, படைத்துறை சாராத பணிகள் மற்றும் உடைமைகள் பிரிவின் தலைமை நிர்வாகி கே.என்.ராய் அவர்களின் சலிப்பில்லாத முயற்சியை மறக்க இயலாது. அவருடன் சேர்ந்து மேஜர் ஜெனரல் ஆர்.சுவாமிநாதனும் துணை நின்றார். இவர் ஆய்வு மற்றும் வளர்ச்சித் துறையின் (Research &Development) தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருந்துவந்தார். இந்தியத் தொலைநோக்கு 2020 என்ற குறிக்கோளை அரசு ஏற்றுக்கொண்டதால், எனது எண்ணங்களைச் செயல் சார்ந்த திட்டங்களாக மாற்றுவதற்கு தலைமை விஞ்ஞான ஆலோசகர் பதவி நல்ல மேடையாக அமைந்திருந்தது.

இந்த தொலைநோக்கு திட்டம் முதலில் தேவகவுடா அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதையடுத்து ஐ.கே.குஜ்ரால் பிரதம மந்திரியாகப் பதவியேற்றார். 1998-ஆம் ஆண்டு மீண்டும் வாஜ்பாய் பதவிக்கு வந்தார். இந்த மூன்று அரசாங்கங்களும் தொலைநோக்கு குறித்த ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு அவற்றைச் செயல்படுத்த முனைந்தன.

விஞ்ஞான் பவனுடன் இணைந்திருந்த கட்டிடங்களில் ஒன்றில் எங்கள் அலுவலகத்திற்கு இடம் கிடைத்தது. அது பெரிய அளவிலான கட்டிடம். விசாரணைகளுக்கு பதிலளிக்கும் பல்வேறு வகையான அலுவலகங்கள் அங்கே இருந்தன. சில அரசுத்துறை சார்ந்த அலுவலகங்களும் செயல்பட்டு வந்தன. ஆனாலும் அது சந்தடியற்ற அமைதியான இடம்.

விஞ்ஞான் பவனுடன் இணைந்துள்ள கட்டிடம் தேசிய, சர்வதேசக் கருத்தரங்கங்கள் நடக்கும் பிரபலமான சந்திப்பு மையமாக விளங்கிவந்தது. துணை ஜனாதிபதியின் இல்லத்திற்கு அருகே கட்டிடம் அமைந்திருந்ததால் நிம்மதியாக வேலை பார்க்க முடிந்தது. வடக்கு தெற்கு பிளாக்குகளில் காணப்படும் பரபரப்பும், சந்தடியும் அங்கே கிடையாது.

பல இடங்களுக்குப் பயணம் செய்வது எப்போதும் என் பணிகளில் ஒன்றாக இருந்து வந்தது. 2001 செப்டம்பர் முப்பதாம் தேதி நேர்ந்த ஹெலிகாப்டர் விபத்தில் மயிரிழையில் உயிர் தப்பினேன். ஜார்கண்டில் உள்ள பொகாரோ உருக்கு ஆலையில் ஹெலிகாப்டர் கீழே இறங்கும்போது அந்த விபத்து நிகழ்ந்தது. அன்று நான் உயிர் தப்பியது அதிசயம் என்றே கூறலாம்.

ஹெலிகாப்டரிலிருந்து கீழே குதித்து இறங்கிய நான் விமானி மற்றும் துணை விமானிகளிடம் வேகமாகச் சென்றேன். ''என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி. கடவுள் உங்களை ஆசீர்வதிக்கட்டும்'' என்றேன். அதைக் கேட்டதும் அவர்களுக்குக் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.

''நடந்தது நடந்ததாக இருக்கட்டும். விபத்துக்கு என்ன காரணம் என்று கண்டறிந்து பழுதைச் சரி செய்வதுதான் இனி நாம் அடுத்து செய்யவேண்டிய காரியம்'' என்று சொன்னேன். அன்று மாலை நான் ஐந்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். உருக்கு ஆலையின் அதிகாரிகள், பொறியாளர்கள், பணியாளர்கள் உட்பட பல்வேறு பார்வையாளர்கள்

கலந்துகொண்ட விழாவில் நான் பேசினேன். பொகாரோவில் இருந்த பள்ளிக் குழந்தைகளும் அதில் கலந்து கொண்டனர்.

விமான விபத்து பற்றிய செய்தி வேகமாகப் பரவிவிட்டது. தேசிய தொலைக்காட்சிச் செய்திகளிலும் அது வெளியாயிற்று. நான் குழந்தைகளைச் சந்தித்தபோது அவர்கள் அதிர்ச்சியுடன் இருப்பதைக் கண்டேன். அவர்களிடம் கைகுலுக்கிய நான் துணிவின் சிறப்பைக் கூறும் ஒரு பாடலை எடுத்துக்காட்டிப் பேசினேன். அது அவர்களை மகிழ்ச்சி கொள்ள வைத்தது. எளிமையான ஒரு அறிவுரையாக அமைந்தது.

துணிவு

வித்தியாசமாகச் சிந்திக்கும் துணிவு
புதியன கண்டறியும் துணிவு
புதியபாதைகளில் பயணிக்கும் துணிவு
முடியாததை முடித்துக் காட்டும் துணிவு
இவையெல்லாம் இளமையின்
சிறப்பு அடையாளங்கள்!
இத்தேசத்தின் இளைஞனான நான்
துணிவுடன் தொடர்ந்து உழைப்பேன்.
அனைத்து குறிக்கோள்களையும் சாதித்து
வென்று காட்டுவேன்.

அதே நாளில் நடைபெற்ற ஒரு சோகமான விமான விபத்தில் மாதவராவ் சிந்தியாவும், அவருடன் சென்ற பத்திரிகையாளர்கள், பணியாளர்கள், விமான சிப்பந்திகள் மற்ற ஆறுபேரும் மரணமடைந்தார்கள். இந்த இரண்டு விமான விபத்துச் செய்திகளையும் ராமேஸ்வரத்திலுள்ள எனது உறவினர்களும், இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் உள்ள எனது நண்பர்களும் கேட்டனர்.

நான் எப்படியிருக்கிறேன் என்று தெரிந்துகொள்ளும் பதட்டம் அவர்களிடம் தோன்றியது. பத்திரிகைகளில்

வெளியான செய்திகளின் மூலம் என் சகோதரர் சமாதானம் அடைந்துவிடவில்லை. நான் அவருடன் தொலைபேசியில் பேசி எனக்கு எதுவும் நேரவில்லை என்று குடும்ப உறுப்பினர்களை நம்பவைக்க வேண்டியிருந்தது.

அன்று மாலை நான் டெல்லி திரும்பியபோது பிரதமமந்திரியின் அலுவலகத்திலிருந்து வந்த செய்தி ஒன்று காத்திருந்தது. நான் வாஜ்பாயைச் சந்தித்துப் பேசவேண்டும் என்று கேட்டிருந்தார்கள். வாஜ்பாய் என்னை வரவேற்று விமானவிபத்து பற்றிகேட்டறிந்தார். நான் காயமின்றி உயிர் தப்பியது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

என்னுடைய தொலைநோக்கு இந்தியா 2020 என்ற திட்டம் பற்றி பிரபல தொழிலதிபர்களிடமும், மத்திய அமைச்சர்களுடனும் விவாதித்தாக அவர் கூறினார். இதற்கான அடுத்த நடவடிக்கையில் இறங்கலாம் என்று பாராளுமன்றத்தில் அறிவித்துவிட்டதாகவும் சொன்னார். அதைச் செயல்படுத்தும் போது சில இடையூறுகள் ஏற்படலாம் என்று நான் தெரிவித்தேன். அது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்றேன்.

அந்த விமானவிபத்து மூலம் இரண்டு காரியங்கள் நடந்தேறின. Ignited Minds புத்தகத்திற்கான கரு மனதில் தோன்றியது. அதை புத்தகமாக வெளியிட்டேன். 'என்னால் முடியும்' என்ற உணர்வை இளைஞர்களின் மனதில் விதைக்கவேண்டும் என்று அதை எழுதினேன்.

இரண்டாவது காரியம் நான் ராஞ்சியிலிருந்து கொல்லம் நோக்கிச் சென்று மாதா அமிர்தானந்தமாயி அவர்களைச் சந்தித்ததாகும். எனது ஆன்மீக உணர்வுகளைப் பலப்படுத்திக்கொள்ள அங்கு சென்றேன்.

Ignited Minds* புத்தகம் நான் ஜனாதிபதியாவதற்குச் சில நாட்களுக்கு முன்பு வெளியாயிற்று. புத்தகத்தின் தலைப்பு

★ எழுச்சி தீபங்கள் என்ற பெயரில் கண்ணதாசன் பதிப்பகம் வெளியிட்டு இருக்கிறது.

செய்தி ஊடகங்களுக்குப் பிடித்துப்போய்விட்டது. நான் பதவியேற்ற நேரத்தில் இந்த வார்த்தையை உபயோகித்தே என்னை அடையாளப்படுத்தினார்கள். அந்த புத்தகம் வியப்பூட்டும் வியாபார வெற்றியை அடைந்தது. இன்றுவரை அது நன்றாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

அம்மா ஒரு புனிதமான ஆத்மா. சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். ஆதரவற்றவர்கள், அநாதைகளுக் கெல்லாம் உதவுகிறார். கல்வி மற்றும் சுகாதார வசதிகள் செய்து தருகிறார். நான் எனது நண்பர்கள் சிலருடன் அங்கே சென்றிருந்தேன். எனது முதன்மை அறிவியல் ஆலோசகர் பதவியிலிருந்து விலகிவிட நான் முடிவெடுத்திருப்பது பற்றி நண்பர்களுடன் விவாதித்தேன். இறுதியாக எனது ராஜினாமா கடிதத்தைப் பிரதம மந்திரிக்கு அனுப்பி வைத்தேன்.

அதன் பிறகு நான் எவ்வித பதட்டமும் இல்லாமல் அம்மாவைச் சந்தித்துப் பேசினேன். அவரிடம் அறிவுபூர்வமான கல்விமுறை, தொலைநோக்கு இந்தியா 2020 பற்றியெல்லாம் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டேன். அது 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம். தலைமை விஞ்ஞான ஆலோசகராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்து முடித்திருந்தேன். எனது கடிதத்தில் மீண்டும் நான் கல்விப் பணிக்குத் திரும்பிச் செல்ல விரும்புவதாகக் கூறியிருந்தேன்.

உண்மையான காரணம் அதைவிட ஆழமானது. நகர்ப்புற வசதிகளை கிராமங்களுக்கும் வழங்குதல் (Providing Urban Amenities in Rural Areas-PURA) மற்றும் இந்தியா 2020 குறித்த நிர்வாகம் என்ற இரண்டு திட்டங்களையும் நான்தான் கவனித்து வந்தேன். அவற்றுக்கு அரசு போதுமான முக்கியத்துவம் அளிக்கவில்லை.

பிரச்சினை இதில் எங்கே எழுகிறது? முடிந்தவரை நான் ஒவ்வொரு குறிக்கோளையும் திட்டமிட்ட காலவரை யறைக்குள் நிறைவேற்ற விரும்புவேன். நிதிவசதி, சம்பந்தப்பட்ட உதவிகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டு

மென்று எதிர்பார்ப்பேன். பலதரப்பட்ட அமைச்சகங்களும், துறைகளும் தத்தம் இலக்குகளையும் திட்டங்களையும் கவனத்தில் கொண்டு செயல்படுகின்றன. இந்த சூழ்நிலையில் அரசாங்கம் என்ற முழு அமைப்பும் தனது குறிக்கோள் இலக்கை முழுமையாக எட்டுவது சிரமமாகிவிடுகிறது.

உதாரணத்திற்கு வேளாண்துறையை எடுத்துக் கொள்வோம்.

வருடத்திற்கு நான்கு சதவீதம் வேளாண் உற்பத்தியில் வளர்ச்சி காண்பதென்று ஒருவர் இலக்கு நிர்ணயம் செய்து கொண்டால், அவருக்கு கீழ்க்கண்ட அமைச்சகங்களான நீர்வள ஆதாரம், மின்சாரம், உரம், ரசாயனம், கிராமமேம்பாடு, பஞ்சாயத்து ராஜ், ரயில்வே (உரங்களைக் கொண்டு செல்ல) போன்றவற்றின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. இதில் அனைத்து அமைப்புகளுக்கும் தெளிவான பொது இலக்கு இருக்க வழியில்லை.

முதன்மை அறிவியல் ஆலோசகர் என்பவர் ஒருங்கிணைப்பு ஆலோசனைகள் தருவது என்ற அளவுடன் நின்றுவிடுகிறார். அவருக்கு நேரடியான அதிகாரம் எதுவும் கிடையாது. குறிக்கோளை எட்டுவதற்கு இது பாதகமான அம்சமாக இருந்து வருகிறது. எனவே இது என்னை சமூக மறுமலர்ச்சிக்கான தொழில்நுட்பப் பேராசிரியராக அண்ணா பல்கலைக்கழகத்தில் பணியாற்ற வைத்தது. இது என் வாழ்வில் நடந்த ஆறாவது திருப்புமுனையாகும்.

நான் ஜனாதிபதியாக பதவி வகித்த கடைசி மூன்றாவது மாதத்தில் மீண்டும் என்னை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு கேட்டார்கள். ஆனால் நான் கல்விப்பணிக்குத் திரும்பிச் சென்று இந்தியாவை 2020 ஆண்டுக்கு வழிநடத்தும் வேலையில் ஈடுபடுவது என்று ஏற்கனவே முடிவு செய்து வைத்து விட்டேன்.

ஜூலை மாதவாக்கில் ஆளும் காங்கிரஸ் கட்சி சில வேட்பாளர்களின் பெயரை அறிவித்தது. எதிர்க்கட்சிகளின் கருத்து வேறுவிதமாக இருந்தது. அரசியல் பரபரப்பு தேசம் முழுவதும் பரவிக்கிடந்தது. பல்வேறு கட்சித் தலைவர்கள் அணி அணியாக வந்து என்னைச் சந்தித்தார்கள். நான் மறுபடியும் ஜனாதிபதி தேர்தலில் நிற்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள்.

பொதுமக்கள், புகழ்பெற்ற பெரிய மனிதர்கள், இளைஞர்கள் போன்ற பலரும் என்னுடன் தொடர்பு கொண்டார்கள். நான் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டுமென்று நேரடியாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் வேண்டுகோள் விடுத்தார்கள். வேட்பு மனு தாக்கல் செய்யும் நாள் நெருங்கிக்கொண்டிருந்த போது அரசியல் கட்சித் தலைவர்கள் குழு ஒன்று என்னைச் சந்தித்தது.

நான் தேர்தலில் நிற்க ஒப்புக்கொண்டால் ஆளும்கட்சி உட்பட அனைத்துக் கட்சியினரின் ஆதரவையும் பெற்றுவிடத் தங்களால் முடியுமென்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். பெரும்பாலான கட்சிகள் சம்மதம் தெரிவித்தால் நான் தேர்தலில் நிற்பது பற்றிப் பரிசீலனை செய்யத் தயார் என்றேன்.

மறுபடியும் வந்த அந்த தலைவர்கள் என்னை ஜனாதிபதி வேட்பாளராக ஏற்றுக்கொள்ள ஆளும் கட்சி மறுத்துவிட்டது என்று தெரிவித்தனர். ஆனால் அவர்கள் எல்லோருக்கும் நான் வெற்றி பெற்றுவிடுவேன் என்ற நம்பிக்கை இருப்பதால் என்னைத் தேர்தலில் நிற்கச்சொல்லி வற்புறுத்தினார்கள். நான் சிறிதும் தயக்கமில்லாமல், ராஷ்ட்ரபதி பவனுக்குள் அரசியலை நுழைப்பது முறையல்ல என்பதால் என்னால் தேர்தலில் நிற்க இயலாது என்று மறுத்துவிட்டேன். வேண்டாவெறுப்பாக அதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

நான் ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்கவில்லை என்று பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று. நான் கல்வி மற்றும்

ஆய்வுப் பணிகளுக்குத் திரும்பிச் சென்று ஈடுபடுவதென்றும், 2020-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடாக மாற்றவேண்டும் என்ற என் கனவை நிஜமாக்கப் பாடுபடுவதென்றும் உறுதியாக முடிவெடுத்தேன்.

கோழைகளால் எப்போதும் வரலாறு படைக்க முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். தைரியமும், அறிவும் நிறைந்தவர்களால்தான் சரித்திரத்தை உருவாக்க முடியும். தைரியம் என்பது தனித்துவமான குணமாகும். அறிவு என்பது அனுபவத்தில் வாயிலாக ஏற்படுகிறது.

4

கலந்துறவாடும் ஜனாதிபதி

பதவி என்பது உங்களுக்குள் இருக்கிறது. ஆண்டவனைத் தவிர வேறு யாரும் அதை உங்களுக்குத் தரமுடியாது.

ஜனாதிபதி பதவி எனக்கு சவால் நிறைந்ததாக அமைந்திருந்தது. இந்தியாவை 2020-ஆம் ஆண்டுக்கு அழைத்துச் செல்லும் மேடையாக அந்த பதவி இருந்தது. இந்த நாட்டின் அனைத்து குடிமக்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், கலைஞர்களும் எழுத்தாளர்களும், பொதுமக்களும் ஒன்று சேர்ந்து செயல்பட்டால்தான் அதை சாதிக்க முடியுமென்று நான் நம்புகிறேன்.

இந்த குறிக்கோளுடன் சம்பந்தப்பட்ட மற்றவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு அவர்களுடன் நேருக்குநேர் கலந்துபேசி முடிவெடுக்க வேண்டும். இது மற்றவர்களின் சிந்தனை, அவர்களின் கண்ணோட்டம் போன்றவற்றைப் புரிந்து கொள்ளவும் உதவி செய்யும்.

ஜனாதிபதி பதவி எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியிருந்தது. என்னால் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருடனும் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடிந்தது. இதில் இளைஞர்களும் அரசியல்வாதிகளும் முக்கியமானவர்கள். தேசம் குறித்து ஒரு குறிக்கோளை உருவாக்கிக்கொண்டு அவர்கள் அதற்காகப் பாடுபட வேண்டும்.

இந்த எண்ணம் எனது ஜனாதிபதி பதவிக்கு கூடுதல் பொறுப்பு ஒன்றையும் உருவாக்கியது. ஜனாதிபதி பொறுப்பில்

இருப்பவர், அரசாங்கமும் அதன் சட்டமன்ற உறுப்பினர்களும் செய்யும் காரியங்கள் அரசியல் சாசன விதிமுறைகளுக்கு உட்பட்டிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இது ஜனாதிபதியின் கடமையாகும்.

இந்திய ஜனாதிபதியின் சார்பில் அரசாங்கம் அனைத்துக் காரியங்களையும் செய்கிறது. மசோதாக்களும், ராணுவத் தளவாடங்களுக்கான ஒதுக்கீடுகளும் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படுகின்றன. அதன் பிறகு அரசாங்கம் அதற்கு ஜனாதிபதியிடம் ஒப்புதல் கேட்கிறது. இந்தக் காரியங்கள் எல்லாம் நாட்டு மக்களின் நலனைப் பிரதான நோக்கமாகக் கொண்டே செய்யப்படுகின்றன என்பதை ஜனாதிபதி உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். எவ்வித ஒருதலைப் பட்சமான எண்ணத்துடனும் அவை மேற்கொள்ளப் படவில்லை என்பதையும் கண்டறிய வேண்டும்.

ஜனாதிபதி பதவி என்ற அமைப்பு உருவாக்கி வைத்திருக்கும் விதிமுறைகளையும், நடவடிக்கைகளையும் நான் முழுமையாகக் கடைப்பிடித்தேன் என்று சொல்ல முடியாது. இந்த விதிமுறைகள் இந்திய அரசியல் சாசனம், தேசத்தின் பாரம்பரியம், எச்சரிக்கையுணர்வு போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் தலைவர் என்று பெயரளவுக்கு உட்கார வைக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதியின் பங்களிப்பு நாட்டிற்கு மிகவும் குறைவாகவே இருப்பதாக நான் கருதுகிறேன்.

முன்னேற்றப் பாதையில் நாட்டைக் கொண்டு செல்ல விரும்பும் ஒருவருக்கு ஜனாதிபதி பதவி பல விதங்களில் காரிய முயற்சிக்கான சாத்தியங்களை வழங்குகிறது. சமூகத்தின் பலதரப்பட்ட பிரிவுகளுடன் அவர் தொடர்பு வைத்துக் கொள்வதன் வாயிலாக முயற்சிகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கலாம். அரசியல் ரீதியாகப் பார்த்தால், ஆட்சியில் உள்ள கட்சி அல்லது கூட்டணியின் பலத்தை தனிப்பட்ட முறையில் எடைபோட்டு உணரலாம்.

போதுமான உறுப்பினர்களின் ஆதரவு அவர்களுக்கு இல்லாமல் இருந்தால் அவர்கள் முடிவெடுக்கும் சக்தியற்றவர்களாகி விடுகிறார்கள் என்பதைக் கண்டு கொள்ளமுடியும். மாநில ஆளுநர்களுக்கு அறிவுபூர்வமான முறையில் ஜனாதிபதி ஆலோசனைகள் வழங்கமுடியும். முப்படைகளின் தலைமைத்தளபதி என்ற முறையில் வீரர்களை உற்சாகப்படுத்தி உதாரண புருஷர்களாக நடந்துகொள்ள வைக்கலாம்.

மேலும், ஜனாதிபதி என்ற பதவியின் உதவியுடன் மக்களின் கவனத்தை ஒருகுறிப்பிட்ட திசையில் ஒருமுகப்படுத்த முடியும். எனது நோக்கம் என்னவென்றால், ராஷ்ட்ரபதி பவன் என்பது மக்கள் பலன் பெறுவதற்கான ஒரு பாதையாக இருக்க வேண்டும் என்பதேயாகும். பலன்கள் மக்களுக்கு முறையாகச் சென்று சேரவும் வேண்டும். தேசத்தின் வளர்ச்சியிலும், செழிப்பிலும் அவர்களுக்கும் பங்கு இருக்கிறது. அதில் அவர்களும் அங்கம் வகிக்கிறார்கள் என்று உணரச் செய்ய வேண்டும் என்பதே எனது பாதையாகும். ஆட்சியில் அவர்களும் பங்கு கொள்ள உதவவேண்டும்.

எனவே நான் ஜனாதிபதியாக இருந்துகொண்டே மக்கள் வாழ்வில் ஒரு அங்கமாகவும் செயல்பட முனைந்தேன். ஜனாதிபதி பதவி என்ற அமைப்பு மக்களுடன் கலந்துறவாடக் கூடிய ஒன்றாக மாறியது. ராஷ்ட்ரபதி பவனில் நான் செய்த முதல் காரியம் அதை மின் நிர்வாக மயமாக்கியதாகும். அங்கே ஏற்கனவே கணினிகள் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் அவற்றின் செயல்பாட்டை மேலும் நவீனப்படுத்தினோம்.

ஜனாதிபதியின் செயலகத்திற்கு வரும் கோப்புகள், ஆவணங்கள், கடிதங்கள் அனைத்தையும் டிஜிட்டல் வடிவங்களாக மாற்றி 'பார்கோடு' முறையில் அவற்றை வகைப்படுத்தினோம். அதன் பின்னர் அந்த காகிதக் கோப்புகள் ஆவணங்களாகப் பாதுகாத்து வைக்கப்பட்டன. அரசு அதிகாரிகள், இயக்குனர்கள், செயலாளர்கள்

பார்வைக்குச் செல்லும் கோப்புகள் எல்லாம் மின்னணு முறையிலேயே அனுப்பிவைக்கப்பட்டன. முக்கியத்துவம் நிறைந்த கோப்பாக இருந்தால் ஜனாதிபதிக்கும் அது அவ்விதமே அனுப்பி வைக்கப்படுவது வழக்கமாயிற்று.

ராஷ்ட்ரபதி பவன், பிரதமமந்திரியின் அலுவலகம், மாநில ஆளுநர்களின் அலுவலகங்கள், மற்றும் அமைச்சர்கள் ஆகிய அனைவரும் ஒரு பாதுகாக்கப்பட்ட தகவல் தொடர்பு அமைப்பு மூலம் சீராக ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்று நான் விரும்பினேன். டிஜிட்டல் கையெழுத்து முறையைப் பயன்படுத்தி G2G மின்-நிர்வாகத்தை நடத்தலாம்.

அதை பரிசோதனை ரீதியில் பயன்படுத்திப் பார்த்தோம். பின்னர் செயல்பாட்டிற்குத் தயராயிற்று. ஒருநாள் என்னுடைய இக்கனவு நிஜமாகும் என்று நம்புகிறேன். ஜனாதிபதியின் செயலகத்திலுள்ள ஒன்பது பிரிவுகளில் அத்திட்டம் நடைமுறைப்படுத்திப் பார்க்கப்பட்டது. அது பயனுள்ள வகையில் சிறப்பாக இருக்கிறதா என்று சோதித்தோம்.

பொதுமக்களிடமிருந்து வரக்கூடிய மனுக்கள் எல்லாம் பொதுமக்கள் பிரிவு I என்ற அலுவலகத்திற்குச் செல்லும். இங்கே இருபது மனுக்களின் மீது முடிவெடுக்க ஏழு நாட்கள் பிடிக்கும். ஆனால் மின்-நிர்வாகத்தை ஏற்படுத்திய பிறகு நாற்பது மனுக்களை ஐந்து மணிநேரத்தில் பரிசீலித்து முடிவெடுத்துவிட முடிந்தது. பல மாநில, மத்திய அரசு அலுவலகங்களில் அந்த மின் நிர்வாக முறை செயல்படப் போவதை பலரும் பார்க்கத்தான் போகிறார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை ராஷ்ட்ரபதி பவனுக்கு அழைத்து காலை நேர விருந்தளிப்பது நான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஆரம்ப நாட்களில் எனது முக்கியமான பணியாக இருந்து வந்தது.

அந்தந்த மாநிலங்களின் தற்போதைய நிலையைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது. 2003-ஆம் ஆண்டு மார்ச் 11 தேதி தொடங்கி, மே மாதம் 6-ம் தேதி வரை மூன்று மாதகாலம் இச்சந்திப்புகள் நடைபெற்றன. அவை மறக்கமுடியாதபடி என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன.

பல வாரங்கள் முயற்சி செய்து தேவையான ஏற்பாடுகளை நானும், எனது குழுவினரும் தயார் செய்து வைத்துக் கொள்வோம். ஒவ்வொரு மாநிலத்திலும் அமைந்துள்ள வசதி வாய்ப்புகள், அவர்கள் முன்னேற்றத்திற்குத் தேவைப்படும் உதவிகள் பற்றியெல்லாம் ஆய்வுகள் செய்து தகவல்கள் திரட்டிக் கொள்வோம். தேவையான தகவல்களை அரசுத்துறையைச் சேர்ந்த திட்டக் கமிஷனிடம் இருந்து பெறுவோம். மத்திய, மாநிலத்திட்டக் குழுக்கள் இரண்டிடமிருந்தும் தகவல் பெறுவோம். அந்த மாநிலம் குறித்த உள்நாட்டு, அயல்நாட்டு மதிப்பீடுகள், அது சார்ந்த ஆவணங்கள் போன்றவை சேகரிக்கப்படும்.

அந்த தகவல்கள் ஆராயப்பட்டு வரைபடங்களாகவும், ஒலி, ஒளிக்காட்சிகளாகவும் மாற்றப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பு நிகழும் போது இந்த பவர்பாய்ண்ட் தகவல்கள் அவர்களிடம் காண்பிக்கப்பட்டன. அவற்றின் நோக்கம் மூன்று பிரதான பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தன.

1. நாடு முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளை உருவாக்குதல்.
2. குறிப்பிட்ட மாநிலத்தின் பாரம்பரியச் சிறப்பை வெளிக் காட்டுதல்.
3. மாநிலங்களின் ஆதார வளங்கள், வசதி வாய்ப்புகளைச் சுட்டிக்காட்டுதல்.

நாடு முன்னேற்றம் பெறவேண்டும் என்ற உணர்வைத் தூண்டுவதற்காகவே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு தனித்துறையும் வளர்ச்சி கண்டாக வேண்டும் என்பது மிகவும் முக்கியம். நான்காவதாக இன்னொன்றும் எடுத்துக் காட்டப்பட்டது. ஒவ்வொரு வளர்ச்சி நிலையையும்

எடுத்துக்காட்டும் அடையாளங்கள் (Indicator) தயாரிக்கப்பட்டிருந்தன.

நான் தகவல் சேகரிப்புப் பணியில் இறங்கியபோது பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பு மூலமும் நிறையத் தெரிந்து கொண்டேன். நாட்டின் பல்வேறு பகுதிகளின் தனிச்சிறப்பை நான் புரிந்து கொண்டேன். பீகாரிலிருந்து வந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்களைத்தான் முதலில் சந்தித்துப் பேசினேன். தேசத்தின் வளர்ச்சித்திட்டத்தில் பீகார் மாநிலமும் இணைந்திருப்பதைக் கண்ட அவர்கள் நான் தயாரித்திருந்த தகவல் தொகுப்பை ஆர்வத்துடன் வரவேற்றனர். என் முயற்சிக்கு ஊக்கம் தந்தனர்.

அந்த மாநிலத்தின் ஆதார வளங்களைச் சுட்டிக் காட்டியிருந்தேன். அதை முன்னேற்ற நிலைக்கு கொண்டு செல்வதற்கான வழிவகைகளையும் விளக்கிக் கூறியிருந்தேன். எங்கள் சந்திப்பு குறைந்த நேரத்தில் முடிந்துவிட்டதே என்று வருத்தம் தெரிவித்தார்கள். எனவே காலை விருந்து சந்திப்புக்கான நேரம் அரைமணி என்று இருந்ததை முக்கால் மணி நேரமாக அதிகரித்தோம்.

சந்திப்பு நிறைவு பெற்ற பிறகும் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடந்தன. கேள்வி பதில் நேரம் முடிந்த பின்னரும் பல உறுப்பினர்கள் தங்கள் மாநிலம் குறித்த விஷயங்களில் ஆர்வம் காட்டினார்கள். அந்த சந்திப்பு ஒளிப்படக் காட்சிகளாகப் பதிவு செய்யப்பட்டது. தனியே ஆவணமாகவும் தயாரிக்கப்பட்டது.

தனிப்பட்ட முறையில் அந்த சந்திப்புகள் மூலம் நான் சந்தோஷம் அடைந்தேன். ஒவ்வொரு மாநிலத்திற்கும் என்னென்ன தேவைப்படுகின்றன என்பதை எனக்கு அவர்கள் பாடமாகவே போதித்துவிட்டனர். அந்த விரிவான தகவல்கள் தங்களுக்கு மிகவும் பயனுள்ளவைகளாக இருந்தன என்று பல உறுப்பினர்கள் கூறினர். அந்த வகையிலான விவாதங்கள், தகவல் பரிமாற்றங்கள் மூலம் ஒரு பலமான தொடர்பு

எனக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் உருவாயிற்று. எனது ஜனாதிபதி பதவிக்கு அப்பாலும் அந்த உறவு நீடித்தது. இப்போது நாங்கள் சந்தித்துக் கொண்டாலும் எங்கள் பேச்சும், விவாதமும் தேசத்தின் வளர்ச்சி பற்றியதாகவே இருக்கிறது.

இந்தியா 2020 என்ற வளர்ச்சித் திட்டத்திற்கு பல நிபுணர்கள் ஏராளமான தகவல்களை வழங்கினார்கள். சமூக மறுமலர்ச்சியின் பல்வேறு அம்சங்களின் பக்கம் அவை எனது பார்வையைத் திசை திருப்பியிருக்கின்றன. காலை நேர விருந்தின்போது மாநிலங்களின் நிலை குறித்து நடைபெற்ற விவாதங்கள் நாம் முன்னேறிச் செல்ல வேண்டிய பாதை எது என்பதை ஊர்ஜிதப்படுத்தி வழிகாட்டுகின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்கள் எனக்குப் பல பயனுள்ள யோசனைகளைக் கூறினர். நான் இந்தியா 2020 என்றும் குறிக்கோள் பற்றி குறைந்தது ஒன்பது தடவையாவது பாராளுமன்றத்தில் பேசியிருப்பேன். பன்னிரண்டு மாநில சட்டமன்றங்களில் அந்தந்த மாநிலங்களின் வளர்ச்சிப் பாதை குறித்து உரையாற்றியிருக்கிறேன். காலை விருந்து சந்திப்பு நிகழ்ச்சிகளில் என்னிடம் கேட்கப்பட்ட கேள்விகள் நான் பெற்றுக்கொண்ட ஆலோசனைகள் போன்றவை அந்த மாநிலத்தின் தேவைகளைப் புரிந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்க உதவிகரமாக இருந்தன.

நீர்வழிகளை மேம்படுத்துதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், கிராமப் பகுதிகளை ஒன்றிணைத்தல் பொது சுகாதார மையங்களை நன்கு செயல்பட வைத்தல், எனது தகவல் தளத்தில் உள்ள கல்வி முறைகளைச் செழுமைப் படுத்துதல் போன்ற காரியங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டேன்.

இந்த தகவல் தளத்தில் நான் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கிய தகவல்கள் உள்ளன. நான் மைய, மாநில வர்த்தகக் கழகங்கள், நிர்வாகக் கழகங்கள்,

தொழில்நுட்ப நிலையங்கள் போன்றவற்றில் உரையாற்றும் போது இந்தியாவை 2020-ஆம் ஆண்டுக்கு எடுத்துச்செல்லும் குறிக்கோள் பற்றி விளக்குவேன். அதற்கு இந்த தகவல் தளத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்வேன்.

பின்னர் தர்க்கரீதியான முறையில் இந்த பத்து தூண்களும் வெற்றிக் குறிக்கோளின் ஒரு அங்கமாக மாறிவிடுகின்றன. இன்று நான் தொழில்முறைப் பணியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்துறைத் தலைவர்கள் மத்தியில் சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறேன். இந்த பத்து வெற்றித் தூண்களை உருவாக்க எவ்வாறு அவர்கள் ஆக்கபூர்வமான யோசனைகளை வழங்க முடியும் என்று விளக்கிக் கூறுகிறேன்.

அந்த பத்து தூண்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன.

1. நாட்டில் கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையே உள்ள வித்தியாச இடைவெளி மிகவும் குறைவாக இருக்கவேண்டும்.
2. நாட்டில் தடையற்ற மின்சார வினியோகமும், தேவையான அளவு மின்சாரம் மற்றும் தூய்மையான குடிநீரை மக்கள் தடையின்றிப் பெறுவதற்கான வசதிகள் அமைந்திருக்க வேண்டும்.
3. நாட்டின் விவசாயம், தொழில்துறை, சேவைப் பணிகள் போன்றவை ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.
4. நாட்டின் எந்த ஒரு மனிதருக்கும் அவரது சமூக ஏற்றத்தாழ்வு காரணமாகத் தரமான கல்வி கிடைப்பது மறுக்கப்படக்கூடாது.
5. நாட்டிலுள்ள திறமையான கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், கண்டுபிடிப்பாளர்களுக்குச் சிறந்த பதவிகள் வழங்கப்பட வேண்டும்.
6. நாட்டின் சிறந்த சுகாதார சேவைகள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்.
7. நாட்டிலுள்ள அரசு நிர்வாகம் பொறுப்பு மிக்கதாகவும், வெளிப்படையானதாகவும் ஊழலற்றதாகவும் அமைந்திருக்க வேண்டும்.
8. நாட்டில் வறுமை முழுமையாக அகற்றப்பட வேண்டும். கல்வியறிவின்மை துடைத்தெறியப்பட வேண்டும்.

பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் எதிரான குற்றங்கள் தடுத்து திறுத்தப்படவேண்டும். சமூகத்தில் யாரும் தனிமைப்பட்டுப் போனதாக உணரக்கூடாது.

9. நாட்டில் செழுமை, ஆரோக்கியம், பாதுகாப்பு அமைதி, மகிழ்ச்சி போன்றவை நிறைந்திருந்தால் மட்டுமே அந்த நாடு சீரான வளர்ச்சிப் பாதையில் செல்லும்.
10. மக்கள் அமைதியாக வாழும் சிறந்த இடமாக நாடு அமைந்திருக்க வேண்டும். அதன் தலைமைத்துவம் பெருமைப்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

தலைவர்கள் கட்சி பேதமற்று நாட்டின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவி செய்ய முடியும் என்பதை காலை விருந்து சமயங்களில் நடைபெற்ற விவாதங்களில் எடுத்துக் கூறப்பட்டன. ராஷ்ட்ரபதி பவனில் மட்டுமே கட்சி வேறுபாடுகள் மறைந்து போகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்வதால் தேசம் ஒன்றுபட்டதாகக் காட்சியளிக்கிறது.

ராஷ்ட்ரபதி பவனில் நான் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தது மட்டுமின்றி இரு சபைகளிலும் பத்து முறைக்கும் அதிகமாக உரைநிகழ்த்தியிருக்கிறேன். அந்த பேச்சை புனிதச் சடங்கில் கலந்துகொள்ளும் பாவனையில் எல்லோரும் கவனத்துடன் கேட்டார்கள். பாராளுமன்ற மைய மண்டபம் நிறைந்து வழிந்த அந்த நேரத்திலும் குண்டூசி கீழே விழுந்தாலும் தெளிவாகக் கேட்கக்கூடிய அமைதி நிலவியது.

நான் பாராளுமன்றத்துடன் இருவிதங்களில் தொடர்பு வைத்திருந்தேன். ஒன்று, முழுவதுமாக அரசின் செயல்பாட்டின் படி நடத்தப்படும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதாகும். உதாரணமாக, நான் ஐந்து பட்ஜெட் உரைகள் நிகழ்த்தியிருக்கிறேன்.

அடுத்தது, எனது எனது எண்ணம், சிந்தனைகளை ஒட்டிய உரைகளையும் நிகழ்த்தியிருக்கிறேன். அரசு முறையிலான விவாதங்களின் போதும் நான் சொல்ல விரும்பும்

விஷயங்களைச் சேர்த்துக் கொண்டுவிடுவேன். வாஜ்பாய் மற்றும் டாக்டர் சிங் இருவருக்கும் எனது கருத்தைத் தெரிவிப்பதுண்டு.

நான் அந்த சொற்பொழிவு மேடையைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் மனதைக் கவர்வதற்குப் பயன்படுத்திக் கொள்வேன். தேசத்திற்கான அவர்களது கடமை மற்றும் பொறுப்புகளை அந்த சமயத்தில் நான் நினைவூட்டுவேன். 2007 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நான் பேசினேன். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் 150வது ஆண்டு தினத்தைக் கொண்டாடும் அந்த நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தங்கள் நாடு, மாநிலம் மற்றும் சொந்தத் தொகுதிகளின் மீதுள்ள பொறுப்புகளை எடுத்துக்கூறி உரை நிகழ்த்தினேன்.

அப்போது நான், ''பரிபூரண சுதந்திரம் வேண்டி நாம் தொடங்கிய அந்த போராட்டம் இன்னும் முடிவு பெறவில்லை. அந்தக் கதை இன்னும் முடிவு பெறாமல்தான் இருந்து வருகிறது. நமது பாராளுமன்றம், சட்டமன்றம் போன்றவற்றிற்கு அதற்கான நேரம் வந்துவிட்டது. புதிய குறிக்கோளும், தலைமையும் வெளிப்பட்டுக் கிளம்ப வேண்டும். ஒளி நிறைந்த கட்டுக்கோப்பான நல்லிணக்கமான, செழுமையும், வளமும் நிறைந்த சூழல் உருவானால் மட்டும் போதாது. அனைத்திற்கும் மேலாக, இது பாதுகாப்பு நிறைந்த தேசமாக, எதிரிகளின் படையெடுப்பால் பாதிக்கப்படாததாக, எல்லைப்புற ஊடுவல்கள் அற்ற நாடாக மாறவேண்டும்...

தேசிய தலைமைத்துவம் நமது மக்களின் தன்னம்பிக்கை அதிகரிக்க உதவ வேண்டும். புதியதேசிய குறிக்கோள்களை வடிவமைத்து, மேம்படுத்தி அவற்றைத் துணிவுடன் செயல்படுத்த வேண்டும். காலக்கெடுவுடன் கூடிய இலக்குகளை உருவாக்கிக் கொள்ளவேண்டும். கடந்த அறுபது ஆண்டுகளில் சாதிக்கப்பட்டுள்ள பொருளாதார, சமூக, அரசியல் சாதனைகளுக்காக இந்தியா பெருமைப்படலாம்.

ஆனால் அந்த பழைய சாதனைகள் மட்டும் போதுமென்று ஓய்ந்து கிடந்துவிடக்கூடாது. தொழில்நுட்பம், விவசாயம், தொழில்துறை போன்றவற்றில் ஏற்பட்டுள்ள நவீன மாற்றங்களை அலட்சியம் செய்யக்கூடாது. பல சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

பல கட்சிக் கூட்டணிக்குப் பதிலாக இரு கட்சி ஆட்சி முறை மூலம்தான் ஸதிரமான ஆட்சியை ஏற்படுத்த முடியும். உலகளாவிய தீவிரவாதம், புதுவடிவம் பெற்றுள்ள சட்டம் ஒழுங்குப் பிரச்சினை போன்றவற்றை எதிர்கொள்ள உள்நாட்டுப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும். தேசிய செழுமைக் குறியீட்டில் உள்நாட்டு மொத்த உற்பத்தி விகிதாச்சாரம் குறையும்போது பொருளாதரச் சமநிலையின்மை அதிகரிக்கிறது.

உலக எண்ணெய் வளம் வேகமாகக் குறைந்து வருகிறது. மாற்றுத் திட்டங்கள் மூலம் அந்த சிக்கலை நாம் எதிர்கொள்ள வேண்டும். ஆற்றல் தடையின்றிக் கிடைக்க வழி செய்ய வேண்டும். நமது எல்லைப்புறப் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களைச் சமாளிக்கப் புதிய போர்முறைகளை உருவாக்க வேண்டும்...'' என்றேன்.

நான் மேலும் தொடர்ந்து பேசும்போது இவ்வாறு கூறினேன்:

''மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களே-குறிப்பாக இளைஞர்களே - நான் உங்களைப் பார்க்கும்போது உங்களுக்குள் மகாத்மா காந்தி, டாக்டர் ராஜேந்திர பிரசாத், பண்டித ஜவஹர்லால் நேரு, சர்தார் பட்டேல், சுபாஷ் சந்திரபோஸ், டாக்டர்.அம்பேத்கார், அபுல்கலாம் ஆஸாத், ராஜாஜி போன்ற ஆதர்ஷ புருஷர்களின் ஆன்மாவைப் பார்க்கிறேன்.

நாட்டை உயர்த்தும் குறிக்கோள் நிறைந்த தலைவராக நீங்கள் மாறமுடியாதா? தேசத்தின் பெருந்தலைவர்களில்

ஒருவராக நீங்கள் மாறமுடியாதா? உங்களால் முடியும்! உங்கள் தலைமை மூலம் பாராளுமன்றத்திற்கு பலமூட்டி 2020 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை பொருளாதாரச் செழுமை, மகிழ்ச்சி, வலிமை, பாதுகாப்பு நிறைந்த தேசமாக மாற்றும் குறிக்கோளை நிறைவேற்றும்போது நீங்கள் தலைவராக உயரமுடியும்!

அவ்வாறு நடக்க வேண்டுமென்றால் நீங்கள் குறிக்கோளுடன் இருக்க வேண்டும். அதற்காக நீங்கள் பாராளுமன்றத்திலும், வெளியிலும் உழைக்க வேண்டும். சிறிய துண்டுபட்ட செயல்பாடுகளிலிருந்து உயர்ந்த துணிவான விரைந்த பயணத்தின் மூலம் நாட்டை குறிப்பிட்ட இலக்குநோக்கி அழைத்துச் சென்று அதை எட்ட வைக்கும்போது, வரலாறு உங்களை நினைவில் வைத்துக்கொள்ளும்!

நான் தொடர்ந்து பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் களுடன் இணைந்து இந்தியா 2020 என்ற குறிக்கோளுக்காக உழைத்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், ஆளுநர்களின் அதிகாரத்தையும் அதற்குப் பயன்படுத்திக் கொள்வது அரசியலமைப்பு சட்டம் சார்ந்த இன்னொரு முக்கியமான பணியாகவும் அமைந்திருந்தது. இந்த அடிப்படையில் 2003 ஆம் ஆண்டு முதல் 2005 வரை ராஷ்ட்ரபதி பவனில் நடைபெற்ற ஆளுநர்களின் மாநாடுகள் மிகவும் முக்கியத்துவம் பெற்றவை.

2003-ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாடு, பிரதமமந்திரி வாஜ்பாய் கடந்த ஆண்டு டெல்லி செங்கோட்டையிலும், பாராளுமன்றத்திலும் ஆற்றியிருந்த உரைகள் சம்பந்தப்பட்டதாக அமைந்திருந்தது. 2020-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றிவிட வேண்டும் என்று அவர் விருப்பம் தெரிவித்திருந்தார்.

2005-ஆம் ஆண்டு நடந்த மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும்

அந்த முயற்சிக்குத் தனது அரசாங்கம் ஒத்துழைப்புத் தந்து பாடுபடும் என்று அறிவித்தார். மாநாடுகளில் பேசப்பட்ட அந்த உள்ளம் கவர்ந்த பேச்சுகள் எல்லாவற்றையும் அவர்கள் மறந்து விட்டனர்.

ஆனாலும் அப்பேச்சுகளுக்கு நான் அதிகமுக்கியத்துவம் அளித்தேன். நாட்டின் வேகமான வளர்ச்சிக்கு முழுமூச்சுடன் காரியங்களில் இறங்கி அதை மனதில் வைத்துக் கொண்டிருந்தேன். நாட்டிலுள்ள ஒவ்வொரு நிர்வாக அமைப்பும் வளர்ச்சியின் தேவையை உணர்ந்து அதை ஏற்றுக் கொள்ளவேண்டும், அவ்வாறு செய்தால்தான் விரைவாக நமது குறிக்கோளை எட்டமுடியும் என்று வாஜ்பாய் கூறினார். அதை நான் பாராட்டினாலும், குறிப்பிட்ட நோக்கத்திற்காக பல்வேறு துறைகளும் சேர்ந்து பணியாற்றும்போது சில சிக்கல்கள் எழுவதையும் நான் கண்டேன். மாநாட்டில் கலந்துகொண்ட ஆளுநர்கள் தங்கள் உள்ளக் கருத்துகளை மனந்திறந்து கூறுவதற்கு அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர். காரியத்தில் பங்குகொள்ளும் ஒவ்வொருவரும் தங்களின் பிரச்சினைகளையும், தீர்வுகளையும் பற்றி விவாதித்து முடிவு எடுக்கலாம் என்ற சூழல் உருவாயிற்று.

நாட்டின் கல்வி வளர்ச்சி, தீவிரவாத எதிர்ப்பு, பெருந்துயர் மீட்பு மேலாண்மை (Disaster management) மற்றும் மதிப்புக்கூட்டுவரிச் சீர்திருத்தம் போன்றவை குறித்து விவாதிக்க 2005-ஆம் ஆண்டு மன்மோகன்சிங் தமது அமைச்சரவைச் சகாக்களுடன் வந்து ஆலோசனை நடத்தினார். பல துறைகளின் வளர்ச்சிக்கு ஆளுநர்கள் வழங்கிய பங்களிப்பை அவர் பாராட்டினார். ஜனாதிபதி காட்டிய பாதையில் உத்வேகத்துடன் சென்று வெற்றி பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவோம் என்று கூறினார்.

எனது மனதுக்கினிய செல்லத் திட்டத்திற்கு (Pet project) ஜனாதிபதியின் அலுவலகம் எவ்வாறு பயனுள்ள மேடையாக மாறியது என்பதைச் சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன்.

விசாரணை நீதி மன்றங்கள், உயர்நீதி மன்றங்கள், மற்றும் உச்ச நீதிமன்றத்திலும் இந்தியாவில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் எண்ணிக்கை வியப்பூட்டும் வகையில் மிக அதிகமாக இருக்கிறது. புதிய வழக்குகளைத் தொடர்ந்து பதிவு செய்ய அனுமதிக்கும்போது அவற்றின் எண்ணிக்கை மில்லியன் கணக்கில் அதிகரித்து விடுகிறது. இந்த விசாரணைகளின் போது பெருமளவு காலவிரயம், பொருள் இழப்பு உடல் ரீதியான சிரமங்களும் ஏற்படுகின்றன.

அனைத்திந்திய சட்டச் சீர்திருத்தக் கருத்தரங்கில் 2005 ஆம் ஆண்டு உரையாற்றும் வாய்ப்பை நான் பெற்றேன். தேங்கிக் கிடக்கும் வழக்குகளைத் தீர்க்க தேசிய குறிக்கோள் ஒன்றை உருவாக்கவேண்டும் என்று அப்போது குறிப்பிட்டேன். வழக்குகள் விரைவில் தீர்க்கப்படாமல் தேங்கி நிற்க என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்தேன்.

அதற்கான காரணங்கள்:

1. நீதிமன்றங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை.
2. நீதித்துறையில் அதிகாரிகள் பற்றாக்குறை நிலவுகிறது.
3. நுட்பமான வழக்குகளைக் கையாளப் போதுமான சிறப்புச் சட்ட நுணுங்களை அவர்கள் பெற்றிருக்கவில்லை.
4. வழக்காடுபவர்களும், அவர்களின் வழக்கறிஞர்களும் அடிக்கடி வாய்தா வாங்குகிறார்கள், வழக்கு விசாரணைக்குத் தேவையான ஆவணங்களைச் சரியான நேரத்தில் சமர்ப்பிப்பதில்லை.
5. வழக்குகள் தேங்கிக்கிடக்க நீதிமன்றப் பணியாளர்களும் ஒரு காரணமாக அமைகின்றனர்.

இந்த ஆய்வுகளின் அடிப்படையில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை மனிதநேய அடிப்படையில் தீர்த்து வைக்கலாம் என்று கூறினேன். அதற்கு லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றங்களை வலுப்படுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்கினேன், தேங்கிய வழக்குகளைத் தீர்க்க தேசிய குறிக்கோள் ஏற்படுத்தப்படவேண்டும் என்றேன்; மாற்று

வழிகளில் நடுவர் தீர்ப்பு முறைகளைப் பயன்படுத்தி வழக்கை முடிக்கலாம், விரைவு நீதிமன்றங்களை அமைக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தேன்.

மின்-நீதித்துறைக்கான (e-judiciary initiative) தொடக்கப் பணிகளை ஆரம்பிப்பது எனது பிரதானமான ஆலோசனையாக அமைந்திருந்தது. வயதை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்து பார்த்து வழக்குகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நடப்பில் உள்ள வழக்குகளைக் கணினி மயப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் எண்ணிக்கை நிச்சயம் குறையும் என்பது எனது பரிந்துரைகளில் ஒரு அம்சமாக இருந்தது.

இதற்கு நமக்கு கணினித் தகவல்தளம் தேவை. வழக்குப்பதிவு செய்யப்பட்டது தொடங்கி, வழங்கப்பட்ட தீர்ப்பு வரையிலான அனைத்து விபரங்களையும் இதில் நாம் பெறமுடியும். இந்த மின்னியல் பாதை எளிதான தேடல், வகைப்படுத்தல், சரிபார்த்தல், தகவல் தெரிவித்தல், நீதிமன்ற ஆவணச் செயல்பாட்டுப் பணிகள், வழக்கை முடிவுக்கு கொண்டு வருதல் போன்ற காரியங்களை ஒளிவுமறைவற்ற முறையில் நடத்த உதவி செய்யும். வேலைகள் விரைவாகவும் நடந்தேறும்.

வழக்குத் தொடுத்தவர் தனது வழக்கு எந்த நிலையில் இருக்கிறது என்பதை எப்போது வேண்டுமானாலும் பார்த்தறிந்து கொள்ளலாம். விசாரணை எந்த நீதிமன்றத்தில் எப்போது நடைபெறவுள்ளது என்பதையும் தெரிந்து கொள்ளலாம். வழக்கின் எந்தெந்த அம்சங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதையும் தெரிந்து கொள்ளலாம். அவர் வழக்கைச் சந்திக்க முழுமையாகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள இயலும்.

முதல்கட்ட விசாரணையிலிருந்து அனைத்தும் ஒளிவு மறைவற்று இருப்பதால் வழக்குகளின் முன்னேற்றம் பற்றி நீதிபதிகள் உணர்ந்து கொள்ள முடியும். எத்தனை முறை வழக்கு

ஒத்திவைக்கப்பட்டது (Adjournment) என்பதையும் கண்டு கொள்ளலாம். ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணங்கள் மேம்போக்கானவையா, அல்லது முறையானவையா என்று தெரிந்து கொள்வதுடன் இன்னும் பல்வேறு விஷயங்களையும் நீதிபதிகள் தெரிந்து கொள்ளலாம். அவை நீதி வழங்குவதற்கு உதவிகரமாக இருக்கும்.

மேலும், காணொலிக்காட்சி (Video conferencing) வாயிலாகவும் நல்ல பயன் பெறலாம். பெரிய அளவில் ஏற்படக்கூடிய பொருட் செலவை இது குறைக்கும். விசாரிக்கப்பட வேண்டியவர்களுடன் காவல்துறைப் பணியாளர்கள் அலைந்து திரிய வேண்டியது இருக்காது. ஒரு வழக்கில் பலபேர் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் இந்த காணொலிக்காட்சி முறை சிறந்த பலனைத் தரும்.

சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் கண்டறிதல், குற்ற நிகழ்வுப் பகுதிகளை ஆராய்ந்து ஸ்தாபிப்பது போன்ற காரியங்களுக்கு, தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பங் களைப் (Information and communication Technology-ICT) பயன் படுத்திப் பெருமளவு பலன் பெறலாம். பல்வேறு மேலை நாடுகளில், உதாரணம் சொல்ல வேண்டுமானால் சிங்கப்பூர், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இணையதள நீதிமன்றங்கள் பரிசோதனை முறையில் செயல்படுத்திப் பார்க்கப்படுகின்றன. சட்ட ஆலோசனை சேவையும் தேவையானவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

வழக்கிற்குத் தேவையான சரியான விபரங்களைத் தந்து உதவுகிறார்கள். தேவையானவர்கள் பெற்றுக்கொள்ளலாம். ICT முறை வழக்குகள் வேகமாக பைசலாவதற்கு உதவிகரமாக இருக்கின்றன. ஏமாற்று வேலைகள் செய்வது தவிர்க்கப் படுகிறது. நமது நாட்டில் வழக்குகள் தேங்கிக் கிடப்பதைச் சீர் செய்வதற்கு இந்த வழிமுறை பயனுள்ளதாக இருக்கும்.

கடைசியாக நான் ஒன்பது ஆலோசனைகளை முன் வைத்தேன். நமது குடிமக்களுக்கு விரைவாக நீதிகிடைக்க அவை உதவிபுரியும் என்று நம்புகிறேன்.

1. ஒரு வழக்கு எத்தனை முறை ஒத்தி வைக்கப்படலாம் என்பதை நீதிபதிகளும், நீதிமன்ற உறுப்பினர்களும் வரையறுத்துக் கொள்ள வேண்டும்.
2. நமது நீதிமன்றங்களில் மின்-நீதித்துறை செயல்பட வேண்டும்.
3. வழக்கு சம்பந்தப்பட்ட விஷயங்கள் மற்றும் சட்ட விதிமுறைகளையொட்டி வழக்குகளைத் தரம்பிரித்து வகைப்படுத்த வேண்டும்.
4. ராணுவச் சட்டம், சேவை சார்ந்த விஷயங்கள், வரிவிதிப்பு, சைபர் கிரைம் போன்ற துறை சார்ந்த வல்லுனர்களையும் நீதிபதிகளாக நியமிக்க வேண்டும்.
5. சட்டக்கல்லூரி போன்ற அமைப்பில் நாட்டில் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் சட்டக்கல்வி வழங்கப்படுவது மேம்படுத்தப்பட வேண்டும்.
6. தேவையில்லாமல் வழக்கை ஒத்திவைப்பவர்களுக்கும், அற்ப காரணங்களுக்காக வழக்குத் தொடர்பவர்களுக்கும் அபராதம் விதித்து மற்றவர்களை எச்சரிக்கை செய்ய வேண்டும்.
7. உயர்நீதி மன்ற நீதிபதிகளும், மாவட்ட நீதிபதிகளும் உச்ச நீதிமன்றத்தின் முன்னோடித் திட்ட ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும். விசாரிக்கும் வழக்குகளின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டு தன்னார்வத்துடன் பணிநாட்களிலும், சனிக்கிழமைகளிலும் கூடுதல் நேரம் பணியாற்ற வேண்டும்.
8. வரையறுக்கப்பட்ட காலக்கெடுவுடன் கூடிய பல அமர்வுகள் (Multisessions) நீதிமன்றங்களில் பின்பற்றப்பட வேண்டும். கூடுதல் மனித ஆற்றல், பலப்படுத்தப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு முறைகள் மூலம் நீதிமன்றங்களின் திறனை அதிகரிக்கச் செய்யவேண்டும்.
9. தேங்கிய வழக்குகளைத் தீர்த்துவைக்க தேசிய இயக்கம் ஒன்றை இரண்டு வருட காலத்துக்குச் செயல்படுத்த வேண்டும். காலக்கெடு வைத்துக்கொண்டு வழக்குகளைத் தீர்த்து வைக்கவேண்டும்.

எனது ஆலோசனைகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு அவற்றைச் செயல்படுத்த நீதித்துறை முயற்சி செய்தது என்று

அறிந்தேன். உதாரணமாக காணொலிக் காட்சி மூலம் நீண்ட காலம் தேங்கிக் கிடந்த விவாகரத்து வழக்கு தீர்த்து வைக்கப்பட்டது. அந்த மனைவி அமெரிக்காவிலும், கணவன் இந்தியாவிலும் இருந்துகொண்டே காணொலிக்காட்சியின் துணையுடன் வழக்கு தீர்த்து வைக்கப்பட்டது.

உலகின் தலைசிறந்த ராணுவ வீரர்களைப் பெற்ற நாடாக இந்தியா இருந்து வருகிறது. விசுவாசமான, தைரியமான, கட்டுக்கோப்பான படை அது.

முப்படைகளின் தலைமைத் தளபதியாக ஜனாதிபதி இருந்து வருகிறார். இந்த தகுதியின் அடிப்படையில் நான் ராணுவ வீரர்கள் எத்தகைய சூழ்நிலைகளில் பணியாற்றுகிறார்கள், அவர்களின் தயார்நிலை, மற்றும் அவர்களின் பிரச்சினைகள், எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள விரும்பினேன்.

அந்த பயணங்களின் ஒரு பகுதியாக ராணுவம், கடற்படை, விமானப் படைப்பிரிவுகள் பலவற்றைச் சென்று பார்த்தேன். அங்கிருந்த ராணுவ ஜவான்கள், அதிகாரிகளுடன் கலந்துரையாடினேன். துன்பம் நிறைந்த பிரதேசங்களில் உள்ள படைப்பிரிவுகளைப் பார்வையிட்டேன்.

அவ்வாறு சென்று பார்க்க நான் சியாச்சின் பனிப்பிர தேசத்திலுள்ள கூமர் படை முகாமைத் தேர்வு செய்தேன். உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள போர்முனை அது. கடும் குளிரைத்தாங்கிக்கொண்டு நமது படைவீரர்கள் அங்கே பணிபுரிகிறார்கள்.

நான் விசாகப்பட்டினத்தில் இருந்து நீர்மூழ்கிக் கப்பலில் நீருக்கு அடியில் பயணம் செய்தேன். ஒலியைவிட இரண்டு மடங்கு வேகத்தில் பறந்து செல்லும் சுகாய் 30 MKI போர் விமானத்திலும் பறந்து சென்றேன். அந்த விந்தை அனுபவங் களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

2004-ஆம் ஆண்டு ஏப்ரல் 2-ம் தேதி நான் சியாச்சின் பனிப்பிரதேசத்திலுள்ள கூமர் முகாமில் சென்று இறங்கினேன். கடல் மட்டத்திலிருந்து ஏழாயிரம் மீட்டர் உயரத்தில் அந்த இடம் அமைந்திருக்கிறது. அங்கே பனி பொழிந்து கொண்டிருந்தது. மைனஸ் 30 டிகிரி செல்ஷியஸ் குளிர் நடுங்க வைத்துக் கொண்டிருந்தது. காற்றின் வேகமும் கடுமையாக இருந்தது.

நான் அந்த முகாமை அடைந்தபோது கர்நாடகாவைச் சேர்ந்த நாயக்கும், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த வில்லியம்ஸும், உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த சலீமும் என்னைக் கைகுலுக்கி வரவேற்றார்கள். அவர்கள் கரங்களின் கதகதப்பு அங்கேயிருந்த குளிரை விரட்டியது. சிரமமான சூழ்நிலையில் இருந்தாலும் அவர்களின் கைகளில் நாடு பாதுகாப்பாக உள்ளது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. இவ்வாறான துன்பம் தரும் சூழ்நிலைகளில் தங்கியிருக்கும் வீரர்களின் உள்ளத்தில் தன்னம்பிக்கையை உருவாக்க அசாதாரணமான தலைமைப் பண்புகள் தேவைப்படுகின்றன.

2006 ஆம் ஆண்டு இரண்டாவது மாதம், 13-ம் தேதி நான் INS 'சிந்துரக்ஷக்' என்ற கடற்படை நீர்மூழ்கிக்கப்பலில் பயணம் செய்யும் அனுபவத்தைப் பெற்றேன். கப்பல் தண்ணீருக்குள் முப்பது மீட்டர் ஆழம் உள்ளே மூழ்கிய நிலையிலேயே தனது பயணத்தைத் துவங்கியது. நான் கப்பலின் கட்டுப்பாட்டு அறைக்குச் சென்றேன். அதன் நுட்பமான அமைப்புகள், பாதுகாப்பு அமைப்புகள் பற்றி எனக்கு ஆர்வத்துடன் விளக்கிக்கூறினார்கள்.

கடற்படைத் தலைவர் அட்மிரல் அருண் பிரகாஷ் கடற்படையின் இளம் வீரர்கள், அதிகாரிகளுடன் நான் பயணம் செய்தது சிலிர்ப்பூட்டும் அனுபவமாக இருந்தது. தண்ணீருக்கு அடியில் தொடர்பு கொள்ளும் முறைகள், இலக்கை அடையாளம் காணுதல், தாக்குதல் இயக்கம் போன்றவை பற்றி எல்லாம் என்னிடம் கூறினார்கள். நமது

ஆழ்கடல் படையின் போர்த்திறனைக் காட்டும் விதமாக எதிரியின் கப்பலைத் தாக்கும் கடலடி ஏவுகணையை (Torpedo) இயக்கிக் காட்டினார்கள். சிறப்பான முறையில் அது இலக்கைத் தாக்கியது. ஆழ்கடல் யுத்தத்தில் பல அம்சங்கள் ஒன்றிணைந்து செயல்படுகின்றன என்பதை நான் புரிந்துகொண்டேன்.

அந்தக் கப்பலில் பணிபுரிந்த தொண்ணூறு அதிகாரி களையும், படைவீரர்களையும் சந்தித்துப் பேசினேன். ஒவ்வொருவரும் தத்தம் கடமையில் சுறுசுறுப்பாக இருந்தார்கள். அது எளிய பணியல்ல. சவால் நிறைந்த பயணத்தை அவர்கள் பெருமை மிக்கதாகக் கருதினார்கள். எனக்கு அங்கே சுவையான சைவ உணவு மதியவேளையில் வழங்கப்பட்டது. கடற்படை நீர்மூழ்கிக்கப்பல்கள் அடுத்து வரும் முப்பது வருடங்களில் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் பற்றியும் என்னிடம் எடுத்துரைத்தார்கள். மூன்று மணி நேரம் கடலுக்கு அடியில் பயணம் செய்த பிறகு மேலே வந்து கரைக்குத் திரும்பினோம். எல்லா வகையிலும் அது மறக்கமுடியாத ஒரு பயணமாகும்.

நான் 2006-ஆம் ஆண்டு ஜூன் எட்டாம் தேதி சுகாய் 30 போர் விமானத்தில் பறந்து ஒரு வித்தியாசமான பயண அனுபவத்தைப் பெற்றேன். முதல் நாள் இரவு விங் கமாண்டர் அஜய் ரத்தோர் எப்படிப் பறப்பதென்று சொல்லித் தந்தார். அவர் விமானத்தை ஓட்டவும், ஆயுதக் கட்டுப்பாட்டுக் கருவிகளை இயக்கவும் கற்றுக்கொடுத்தார். நான் 1958-ஆம் ஆண்டு பொறியாளரானது முதல் ஆசைப்பட்டுக் கொண்டிருந்த விஷயம் அது!

நாங்கள் உள்ளே அமர்ந்து இருக்கையுடன் பிணைத்துக் கொண்ட பிறகு சுகாய் வானில் எழுந்து ஏழாயிரத்து ஐநூறு மீட்டர் 25,000 அடி உயரத்தில், மணிக்கு 1,200 கிலோமீட்டருக்கும் அதிகமான வேகத்தில் சீறிக்கொண்டு பறக்கலாயிற்று. வானில் சர்ரென்று திரும்புவது போன்ற வேறு

சில வித்தைகளையும் விங் கமாண்டர் செய்து காட்டினார். போர் விமானத்தில் பறப்பது ஒரு தீவிரமான விஷயம்.

புவியீர்ப்பு விசையின் மூன்று மடங்குத்தாக்கம் (Three Gs) ஏற்படுத்திய அனுபவத்தை நான் உணர்ந்தேன். அதிலிருந்து உடலைப் பாதுகாத்துக்கொள்ள G-suit என்ற விசேஷமான பாதுகாப்பு ஆடை அணிந்திருந்தோம். நான் அந்த விந்தைப் பயணத்தில் ஈடுபட்டிருந்தபோது இந்திய விஞ்ஞானிகள் வடிவமைத்து அந்த விமானத்தில் பொருத்தியிருந்த பல்வேறு கருவி அமைப்புகள் பற்றித் தெரிந்துகொள்ள முயன்றேன்.

பயணத்தை வழி நடத்தும் கம்ப்யூட்டர்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டிருந்தன. ராடார் எச்சரிக்கைக் கருவிகள், டிஸ்பிளே பிராசசர்கள் போன்ற மற்றும் பல கருவிகளும் இவ்விதமே தயாரானவைகளாக இருந்தன. Synthetic Aperture Radar கருவியின் உதவியுடன் வானிலும், நிலத்திலுமுள்ள ஒரு இலக்கை எவ்வாறு குறிவைப்பது என்று என்னிடம் விளக்கிக் காட்டப்பட்டது.

அந்த விமானப் பயணம் முப்பத்தாறு நிமிடங்கள் நீடித்தது. எனது நீண்டகாலக் கனவு அதன் மூலம் நிறைவேறிய திருப்தி ஏற்பட்டது. நான் நமது துணை ராணுவப் படையினர், மத்திய மாநில காவல்துறைப்பணியாளர்கள் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்புப் படையினருடனும் கலந்து பழகியிருக்கிறேன். அவர்களின் துணிவு அர்ப்பணிப்பு உணர்வு போன்றவை என் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின.

> *நான் ஜனாதிபதியாக இருந்ததால் சமூகத்தின் முழுமையான உள்ளமைப்பு பற்றிக் கண்டறியும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தக் கலந்துறவாடலை மக்களைப் பற்றித் தெரிந்துகொள்ள உபயோகித்துக் கொண்டேன். அவர்களின் விருப்பங்கள், எதிர்கொள்ளும் சவால்கள் போன்றவை புலப்பட்டன. தேசத்தின் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டுமானால் அதற்கு மக்களையும் ஒன்று திரட்டி ஒருங்கிணைப்பது அவசியம்.*

5

நாட்டிற்கு நான் எதை அளிக்க முடியும்?

தொலைநோக்குப் பார்வை தேசத்தை உயர்த்துகிறது.

நாட்டிற்கு நான் எதை அளிக்க முடியும்?

பிற நாடுகளின் கௌரவத்தையும், மரியாதையும் பெற்றுத் தரலாம். நூறு கோடி மக்களின் முகங்களில் புன்னகையை வரவழைக்கலாம். இதை எல்லாம் கல்வி, மற்றும் பொருளாதார முன்னேற்றத்தின் மூலமாக மட்டுமே சாதிக்க முடியும்.

மேன்மையடைவதற்கு கல்வி பிரதானமான ஒன்றாக இருக்கிறது. தியாக உணர்வுடன் செயற்படும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் மக்களை முன்னேற்றம் என்ற பிரதான நீரோட்டத்துடன் கலந்துகொள்ள வைத்துவிட முடியும்.

நாட்டின் சுதந்திர தின, குடியரசு தின விழாக்களின்போது நாட்டு மக்களுக்கு உரையாற்றும் உரிமையை ஜனாதிபதி பெற்றிருக்கிறார். அந்த இரண்டு தருணங்களிலும் அவர் இதுவரை ஏற்பட்டுள்ள வளர்ச்சி, இனி எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் பற்றியெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கிறார். அந்த சொற்பொழிவு ஆங்கிலத்திலும் அதைத்தொடர்ந்து இந்தியிலும் நடைபெறும். ஆனால் நான் வித்தியாசமாக ஆரம்பத்தில் எனது வாழ்த்தையும், இறுதியில் சொற் பொழிவின் சுருக்கத்தையும் இந்தியில் கூறுவேன்.

நான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற நேரத்தில் எனது இந்தி மொழியறிவு ஆரம்ப கட்டத்தில்தான் இருந்து வந்தது. அந்த குறைந்தளவு இந்தியே எனது சொற்பொழிவின் சாரத்தை அப்பெருங்கூட்டத்தினருக்கு எடுத்துச்சென்றுவிடும் என்று நான் நம்பினேன். குடியரசு தினத்தன்று நிகழ்த்தும் சொற்பொழிவுக்கு எப்போதும் ஒரு மையக்கருத்து உருவாக்கிக் கொள்ளப்படுவது வழக்கம். உரைக்கான ஆயத்தங்களை முன்னரே செய்து தயார்படுத்திக்கொள்வார்கள். நாங்கள் ஒரு கருப்பொருளைத் தேர்வு செய்வோம். அதற்குத் தேவையான தகவல்களை பல்வேறு துறைகளிலிருந்தும், சர்வதேச நடப்புகளில் இருந்தும் பெற்றுக்கொள்வோம்.

இது குறித்த கேள்வித்தாள்கள் நிபுணர்களிடம் அனுப்பி வைக்கப்படும். பிறகு அதிலிருந்து தகவல்களைத் திரட்டிக் கொள்வோம். சொற்பொழிவு கணக்கற்ற அளவில் நிறைய வரைவுகளாக (Draft) மாறும். பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வரைவுகள் தயாரிக்கப்படுவது சகஜமான ஒரு நிகழ்ச்சி.

2004-ஆம் ஆண்டின் குடியரசு தினக்கருப்பொருளான 'கோடி முகங்களில் புன்னகை' என்ற சொற்பொழிவுக்கு பத்து வரைவுகள் தயார் செய்யப்பட்டன. சிறப்பானவை தேர்வு செய்யப்பட்டன. 2005 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14-ம் தேதிக்கான கருப்பொருள் 'எரிசக்தி தன்னிறைவு என்பதாகும். அதற்கான சொற்பொழிவுக்கு பதினைந்து வரைவுகள் தயாரிக்கப்பட்டன. 2007-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ம் தேதி நான் ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் பேசுவதற்காகத் தயாரிக்கப்பட்ட வரைவுகளின் எண்ணிக்கை முப்பத்தொன்றாகும். எனது சொற்பொழிவுக்காக உருவாக்கப்பட்ட அதிகபட்ச வரைவு எண்ணிக்கை இதுவேயாகும்.

நான் எனது பதவிக்காலத்தில் பத்து தேசிய சொற் பொழிவுகள் நிகழ்த்தியுள்ளேன். இந்த சொற்பொழிவுகளின் கருப்பொருட்கள் முக்கியத்துவம் நிறைந்தவை. குறிக்கோளைப் பயணமாக மாற்றும் திட்டத்தை இவை அடிப்படையாகக் கொண்டிருந்தன. நாம் நினைவில் கொள்ளவேண்டிய

விஷயங்கள் பற்றியதாக அவ்வுரைகள் அமைந்திருந்தன. மனித வாழ்வின் மேன்மைக்கு கல்வியின் அவசியம், வேலை வாய்ப்புகளை உருவாக்க ஒரு செயல்திட்டம் தேவை, எரிசக்தி தன்னிறைவு, ஒரு கோடி மக்கள், ஒருமித்த குறிக்கோள், தேசிய விழிப்புணர்வு, நாட்டிற்கு நான் என்ன செய்ய முடியும் போன்ற பல தலைப்புகள் உருவாக்கப்பட்டன.

இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றவேண்டும் என்ற கருத்தை அடிப்படையாக வைத்தே இந்த சொற்பொழிவுகள் தயாரிக்கப்பட்டன. இந்த செய்திகள் நாட்டு மக்களிடமும் தொழில்முறைப் பணியாளர்களிடமும் தத்தம் பகுதிகளில் சென்று சேர்ந்து செயலாகவும், விவாதங்களாகவும் மாறின. உதாரணமாக நான் காட்டாமணக்கு (Jatropha) பயிரிடுவது பற்றிப் பேசியதும் பல மாநிலங்கள் அதை ஒரு குறிக் கோளாகவே எடுத்துக் கொண்டுவிட்டன. காட்டாமணக்கு விவசாயத்திற்கென்று லட்சக்கணக்கான ஹெக்டேர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

காட்டாமணக்கு விவசாய நிபுணர்கள் நமது நாட்டு விவசாயிகளின் உதவியுடன் ஆப்பிரிக்க நாடுகளிலும் இதைப் பயிரிட அங்குள்ளவர்களுக்குப் பயிற்சியளித்தார்கள். 'பயோடீசல்' தயாரிக்க அவர்கள் அந்த தாவரத்தைப் பயன்படுத்திக் கொள்ள இயலும். காட்டாமணக்கு தரிசு நிலங்களிலும் வளரக்கூடியது.

ஒருமுறை பயிரிட்டுவிட்டால் அது ஐம்பது ஆண்டுகள் உயிர் வாழக்கூடியது. ஒவ்வொரு வருடமும் அது பழங்களைத் தரும். அந்த பழங்களின் விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயை டீசலுடன் கலந்து வாகனங்களுக்குப் பயன்படுத்தலாம்.

கல்வித் துறையில் மாணவர்களைத் தேர்வுகள் மூலம் பயப்படுத்தாமல் வேறு விதமாக மதிப்பாய்வு செய்வதற்காக பல்வேறு முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. CBSC கல்வி முறையில், மதிப்பெண்களுக்குப் பதிலாக கிரேடு சிஸ்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மாணவர்கள் மதிப்பெண்

பெறுவதில் அதிக ஆர்வம் காட்டுவதை அது வெகுவாகக் குறைத்து ஆரோக்கியமான போட்டி அமைப்பாக மாறியது.

மின்சக்தியில் தன்னிறைவு பெறவேண்டும் என்றால் சூரியசக்தி மூலம் 55,000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் பல நிலையங்கள் நிறுவப்படவேண்டும். 2030 ஆம் ஆண்டிற்குள் இந்த இலக்கை எட்டப் பாடுபடவேண்டும் என்று பரிந்துரை செய்தேன். இந்திய எரிசக்தி விஷயத்தின் மீது ஒருங்கிணைக்கப்பட்ட பார்வை தேவைப்படுகிறது.

இந்தியாவின் தேவைக்கு எண்பது சதவீதம் அளவுக்கே நிலக்கரி கிடைக்கிறது. மின்சாரத்தின் தேவை ஆண்டுக்கு ஐந்து சதவீதம் அதிகரித்துக்கொண்டே போகிறது. நிலக்கரி உற்பத்தி வெறும் ஒரு சதவீதம்தான் அதிகரித்துள்ளது. நாட்டின் பல மாநிலங்களில் நாளொன்றுக்கு எட்டுமணி நேரம்வரை மின்சார வெட்டு அமுல்படுத்தப்படுகிறது. எனவே மாற்று எரிசக்தி வளத்தை மேம்படுத்துவது அவசியமாகும்.

அது மட்டுமின்றி, நாம் சுற்றுச் சூழலையும் பாதுகாத்தாக வேண்டும். நிலக்கரி, எண்ணெய், எரிவாயு போன்றவற்றின் துணையோடு மின்சாரம் உற்பத்தி செய்வதைப் பெரிதும் சார்ந்திருக்கலாகாது. அதைக் குறைத்துக்கொண்டு சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் சூரிய சக்தி, காற்றாலை, அணுசக்தி, நீர்மின்சக்தி போன்றவற்றின் உதவியுடன் நமது மின்தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டும்.

சூரிய சக்தியைப் பயன்படுத்தி 20,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்திசெய்யும் திட்டக்குறிக்கோள் ஒன்றை அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது. 2020-ம் ஆண்டுக்குள் இந்த உற்பத்தி இலக்கு எட்டப்படும். சூரியசக்தியைப் பயன்படுத்துவதுடன் சம்பந்தப்பட்டுள்ள வேறு அம்சங்களும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்க உதவும் ஃபோட்டோ வோல்டிக் பாட்டரிகளின் செயல்திறனை 15 சதவீதத்திலிருந்து ஐம்பது சதவீதத்திற்கு உயர்த்துவதற்குத்

தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அதற்கேற்ற வேறு வகையான பாட்டரி கீழ் அடுக்குகளை (Substrates) உருவாக்க வேண்டும்.

பகலில் சூரிய சக்தி மின்சாரத்தையும், இரவில் பயோடீசல் இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்தையும் பயன்படுத்துவதற்கேற்ற வழிகளை மேம்படுத்தினால் நமக்கு தடையில்லாமல் தொடர்ந்து மின்சாரம் கிடைக்கும். குஜராத் மாநிலத்தில் தனியார்துறையுடன் கூட்டாகச் சேர்ந்து 600 மெகாவாட் சூரியசக்தி மின்சாரம் தயாரிக்கும் நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. தினமும் மூன்று மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மாநில அரசு ஒரு யூனிட்டுக்கு 15 ரூபாய் என்ற கணக்கில் அந்த மின்சாரத்தை வாங்கிக்கொள்கிறது.

இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றவேண்டும் என்பதில் மாநில அரசுகளும், மத்திய அரசும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன. இந்த எண்ணம் பரந்து விரிந்து கிடக்கும் நாட்டிலுள்ள எல்லா குடிமக்கள் மனதிலும் பொங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த உதாரணங்களின் துணையோடு பார்க்கும்போது ஜனாதிபதி நாட்டிலுள்ள குடிமக்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளும் அதிகாரம் படைத்தவராக இருப்பதை எவர் ஒருவரும் உணர்ந்து கொள்ளமுடியும். தேசத்திற்கு நன்மை பயக்கும் விஷயங்கள் பற்றி மக்களின் மனதில் பெரிய தாக்கத்தை அவரால் ஏற்படுத்த இயலும் என்பதையும் புரிந்து கொண்டுவிடலாம்.

நாட்டு மக்களுக்காக உரையாற்றுவதுடன் கூடவே நான் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காகவும் பேசியிருக்கிறேன்.

சிறந்து விளங்கிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விருது வழங்கும் விழாக்கள் 1999,2000,2001, 2002 மற்றும்

2005 மார்ச் 21-ம் தேதி போன்ற நிகழ்ச்சிகளில் சில முக்கிய செய்தி கருத்துகளை எடுத்துரைத்தேன்.

அப்போது நான் ''சுதந்திரமும், ஜனநாயகமும் இந்திய கலாச்சாரத்தின் ஒரு அங்கமாக இருந்து வருகின்றன. பழங்காலத்தில் நமது கிராமங்களில் சபா, சமிதி என்ற மதிப்பு மிக்க அமைப்புகள் செயல்பட்டு வந்ததை வரலாற்று ஆதாரங்களிலிருந்து அறியமுடிகிறது. இன்று நம்மிடம் நடைமுறையிலுள்ள பிரபலமான மக்கள் பிரதிநிதித்துவ அமைப்பு போன்றே அவை அமைந்திருந்தன.

ஜனநாயக அரசியல் ஆட்சி முறை தேவை என்று கூறி நாம் சுதந்திரப் போராட்டம் நடத்தினோம். அது நமது மரபு சார்ந்த ஒரு தன்னிச்சை நிகழ்வாகும். ஜனநாயகம் என்பது எப்போதும் நமது பண்பாட்டுடன் கலந்தே இருக்கிறது. நமது நாடு பல மதங்கள், பல மொழிகள், பல்வேறு கலாச்சாரங்களை உள்ளடக்கியதாக இருந்தாலும், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற இணையற்ற பெருமை பெற்றுள்ளதை நினைத்து நாம் பெருமிதம் கொள்ளலாம்.

தேர்தலில் வாக்களிக்கும் இந்திய மக்களிடம் காணப்படும் மனமுதிர்ச்சியும், விவேகமும் மற்ற நாட்டினரை வியக்க வைக்கின்றன. மக்கள் எப்போதும் தங்கள் கடமையைச் சரியாக மனச்சாட்சிக்கு விரோதமில்லாது செய்கிறார்கள். நமது அரசியலமைப்புச் சட்டத்தைப் போலவே மக்களும் முன்யோசனை உள்ளவர்களாகவே இருக்கிறார்கள். நாட்டின் இறையாண்மையும், அதிகாரமும் அவர்களிடம் இருந்துதான் வெளிப்படுகின்றன. மக்கள் வளர்ச்சிபெற்ற இந்தியாவில் வாழ்வதற்கான உரிமை பெற்றிருக்கிறார்கள். எனவே முன்னேற்றத்திற்கான அரசியல் நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

அரசியல் என்பது இரண்டு பரிமாணங்கள் கொண்டது. ஒன்று, நமக்கு அறிமுகமான கட்சி சார்ந்த அரசியல் உலகம்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் அப்படிப்பட்ட ஒரு அமைப்பு தேவையாக இருந்தது என்பதை நாம் அறிவோம். ஆனாலும் இன்று இந்தியாவுக்கு என்ன தேவை?

260 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டுக் கீழே வாழ்கிறார்கள். மக்களில் 24 சதவீதம் பேர் கல்வியறிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். 36 மில்லியன் மக்கள் வேலை தேடி அலைகிறார்கள். வறுமை, கல்வியறிவின்மை, வேலை வாய்ப்பின்மை போன்ற குறைகள் இல்லாத நாடாக இந்தியாவை மாற்றுவதே நமது குறிக்கோளாகும். இந்த சூழ்நிலையில் முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய அரசியல் நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

அரசியல் கட்சிகள் தங்களுடைய தேர்தல் அறிக்கைகளில் போட்டி போட்டுக்கொண்டு முன்னேற்ற அரசியல் முயற்சிகளை அறிவிப்பதைப் படம் பிடித்துக் காட்ட விரும்புகிறேன்.

1. A என்ற அரசியல் கட்சி, 'நாங்கள் பதினைந்து ஆண்டுகளில் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றிக் காட்டுவோம்; அத்துடன் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய வளர்ச்சித் திட்டம் ஒன்றை அறிவித்து அதை நடைமுறைப்படுத்தவும் செய்வோம் என்று கூறுகிறது.

   B என்ற அரசியல் கட்சி, நாங்கள் திட்டமிட்டுச் செயல்பட்டு பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்றுவோம்' என்கிறது.

   C என்ற அரசியல் கட்சி, நாட்டின் வளர்ச்சிக்கான ஒரு வித்தியாசமான திட்டத்தை முன்வைத்தார்கள். வளர்ச்சி விகிதத்தை வெளிக்காட்டச் சுட்டளவிகளும் (Indicators) அதில் இருந்தன. உலக அரங்கில் நமது இடத்தை எட்டுவதற்கான யோசனைகளும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தன. X வருட காலக்கெடுவுக்குள் ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவும் ஒரு நிரந்தர உறுப்பு நாடாக மாறுவதற்கான வழிகாட்டி முறைகளும் உருவாக்கப்பட்டிருந்தன.

2 A. நான் காட்டும் இரண்டாவது காட்சியில் A கட்சி, வேலையில்லாத் திண்டாட்டம் அகற்றப்பட்ட ஒரு சமுதாயத்தை நாங்கள் உருவாக்குவோம் என்று கூறியதுடன், வேலை வாய்ப்புகள் உருவாக்கும் திட்டம் ஒன்றையும் பரிந்துரைத்தார்கள். வேலை தேடுவோரை விடவும். அதிகமான அளவு பணியாளர்களுக்கு வாய்ப்புத்தரும் வகையில் அத்திட்டம் அமைந்திருந்தது.

B கட்சி, நீதிமன்றத்தில் வழக்குகள் தேங்கி நிற்காமலும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் குறைந்த அளவே ஏற்பட்டு மக்கள் நல்லிணக்கத்துடன் வாழக்கூடிய சூழல் அமைந்திருக்கும்படியான செயல் திட்டத்தை அறிவித்தார்கள்.

C கட்சி, எந்த ஒரு இந்தியனும் பட்டினியோடு இரவு படுக்கைக்குச் செல்லும் நிலை ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வழி செய்யப்படும். இந்த உலகத்தை அமைதி நிறைந்த, நிலையான, அழகான வசிப்பிடமாக மாற்றுவதற்கான தலைமைத்துவம் இந்தியாவிடம் தான் இருப்பதாக மற்ற உலக நாடுகள் நம்மை எதிர்பார்க்கும் நிலையை உருவாக்குவதே எங்கள் குறிக்கோள். உலக அமைதியே இந்தியாவின் லட்சியம், என்று தெரிவித்தது.

3. மூன்றாவது காட்சியில், A கட்சி, நமது அண்டை நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள எல்லைப்புறத் தகராறுகளைப் பத்து ஆண்டுகளுக்குள் முடிவுக்குக் கொண்டு வந்து தீர்வு கண்டு விடுவோம், என்றது. B கட்சி, எல்லைப்புறத் தகராறுகளை ஐந்து ஆண்டுகளில் தீர்த்துவிடுவதுடன் அந்த நாடுகளுடன் இணக்கமான நல்லுறவையும் வளர்த்துக் கொள்வோம் என்று கூறியது. C கட்சி, எல்லைப்புற வர்த்தகம் தடையற்ற முறையில் இருக்க வேண்டும். வியாபாரம் செழிப்பை உருவாக்குகிறது. செழுமை அமைதியைக் கொண்டு வருகிறது. என்று கூறியது.

ஏதாவது ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு மக்கள், அது தனது திட்டங்களைச் செயல்படுத்தும் வாய்ப்பை வழங்கினால், மற்ற உறுப்பினர்களின் துணையுடன் அந்தத் திட்டங்கள் நிஜங்களாக மலரும். பாராளுமன்ற உறுப்பினர்களின் பணிக்காக நாடும், மக்களும் அவர்களை வாழ்த்துவார்கள். தேசத்தின்

குறிக்கோளை நிறைவேற்ற ஆணோ, பெண்ணோ யார் ஒருவருக்கும் ஜனநாயகம் வாய்ப்பளிக்கிறது.

வறுமையை நாட்டிலிருந்து முற்றிலும் அகற்ற வேண்டும். கடுமையான போட்டிகள் நிறைந்த, அறிவு சார்ந்த உலகில் எல்லோருக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். சிக்கல் நிறைந்த கால கட்டத்தில் உலகம் இருந்து கொண்டிருக்கிறது. தேசத்திற்கும், மக்களுக்கும் பாதுகாப்புத் தர வேண்டியது அவசியமாகும். இந்த பலதரப்பட்ட தேவைகள் நம்மை கட்சி அரசியலுக்குப் பதிலாக, தேச முன்னேற்றத் திற்கான அரசியல் பற்றித் தெரிந்து கொள்ள வைக்கின்றன.

கட்சிக் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டும் பாராளுமன்றம் செய்து முடிக்க வேண்டிய பல விஷயங்கள் உள்ளன. முன்னேற்றத்தை நோக்கித் தேசத்தை நடைபோட வைத்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீர், வசதிகள் அளித்தல், தடையற்ற மின்சாரம், சுகாதார வசதிகள், ஒவ்வொரு குடிமகனுக்கும் குடியிருப்பு வசதி, தகவல் தொடர்பு, கணினிப் பயன்பாட்டை அதிகரித்தல், மற்றும் தேசப் பாதுகாப்பு போன்ற விஷயங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

இந்த உடன்பாட்டு நிகழ்வு கலந்துரையாடல் மற்றும் விவாதங்களின் மூலம் உருவாக்கப்படலாம். இவ்விதமான பாராளுமன்ற நடைமுறைகள் நாட்டை வளர்ச்சி பெற்ற நிலைக்கு விரைவாக அழைத்துச் சென்றுவிடும். எனவே தேசத்தின் விரைவான முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் பாராளுமன்றம் தனது ஆற்றலை ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையுடன் செயல்படுத்த வேண்டும்.

எனவே பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை முக்கியத்துவம் நிறைந்தது என்பது உறுதியாகிறது. தான் எதற்காக அப்பதவிக்கு மக்களால் தேர்வு செய்யப்பட்டோம் என்பதை மனதில் வைத்துக் கொண்டு அவர்கள் பணியாற்ற வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களைப் பற்றிப் பேசும்போது சில வெளிப்படையான உண்மைகளையும் நாம்

அறிந்துதான் இருக்கின்றோம். ஆனால் அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்துவிடுகிறோம்.

அது பற்றி உங்களிடம் பேசுவதற்கு எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை. காரணம், நானும் உங்களில் ஒரு அங்கம். உங்களைப் போலவே நானும் பாராளுமன்றத்தின் ஒரு அங்கமாக இருக்கிறேன். நமது பாராளுமன்றத்தின் வெற்றியில் நானும் உங்களைப் போலவே சம்பந்தப்பட்டிருக்கிறேன்.

நமது வாக்களிப்பு நடைமுறைகள் கடந்த காலங்களில் மோசமான அளவில் களங்கப்பட்டுக் கிடந்தன. நாம் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். வாக்கு எண்ணிக்கையில் குளறுபடி செய்தல், சில சட்டமன்ற இடங்களை சட்டவிரோதமாகக் கைமாற்றுதல் போன்ற காரியங்கள் மூலமாகவும் சில ஜனநாயகத்திற்கு முரணான வெற்றிகள் சம்பவித்து விடுகின்றன. இதன் காரணமாக மக்கள் மனதில் ஜனநாயக அமைப்பின் மீதே சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது.

தரமற்ற அரசியல் செயல்பாடுகள் தேசத்தை துன்பப் பாதையில் வழிநடத்திச் சென்று தவிர்க்க முடியாத பெருந்துயரிலும், அழிவிலும் தள்ளிவிடும். அது போன்ற காரியங்களில் நாம் இறங்கலாகாது. நமது அரசியல் சாசனத்தை உருவாக்கிய முன்னோர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் விதத்தில் நாம் ஊக்கத்துடனும், நம்பிக்கையுடனும் நடந்து கொள்கிறோமா என்று நம்மை நாமே சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய தருணம் இது. இந்தியா ஒரு முதிர்ச்சி பெற்ற, ஆரோக்கியமான, துடிப்பு நிறைந்த ஜனநாயக தேசமாகத் தன்னை நிலை நிறுத்தி கொண்டிருக்கிறது.

தனித்துவமான பாரம்பரியக் கலாச்சாரம் கொண்ட நமது மக்கள் புதிய வாழ்க்கை முறைகள் மீது விருப்பம் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். நமது பாராளுமன்றம் தேவையான அரசியல், சட்டம் மற்றும் சமூக விதிமுறைகளை உருவாக்கி அவர்களின் முகங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியும். கொள்கைகள், நடைமுறைகள்மீது நாம் அவநம்பிக்கை

கொண்டவர்களாகவே செயல்பட்டு வருகிறோம். அதன் விளைவாக ஊக்குவித்தல், பொறுப்புகள் வழங்குதல் போன்ற காரியங்கள் தடுத்து ஒடுக்கப்படுகின்றன. நம்பிக்கையும், பணி வாய்ப்பும் கிடைத்தால் இந்திய மக்கள் பெரும் சாதனைகள் புரியக் கூடிய திறமை பெற்றிருக்கிறார்கள்.

நமது பாராளுமன்றம் சிக்கலான பழைய சட்டங்களையும், நடத்தை விதிமுறைகளையும் கண்டறிந்து அகற்றுவதற்கென்று ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு அவை தடையாக உள்ளன. இவ்வாறு அகற்றுவது நேர்மையான, பெரும்பகுதி மக்களின் செழுமைக்கும், மலர்ச்சிக்கும், நல்ல வாய்ப்பையும், நம்பிக்கையையும் நிச்சயம் தரும்.

நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு செயலாற்றும் அமைப்பாக இந்தியா மாற வேண்டும். கண்ணியம் நிறைந்த இந்த பாராளுமன்றத்தின் உறுப்பினர்களால் மட்டுமே அந்த மாற்றத்தை உருவாக்க இயலும். அதற்கான செயலில் இறங்கும்படி அவர்களைத் தூண்டுதல் செய்தேன்.

நமது குறிக்கோளில் வெற்றிபெற வேண்டுமானால் இந்தியாவின் ஐந்து முக்கியமான பிரிவுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அவை:

1. விவசாயம் மற்றும் உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல், 2) கல்வி மற்றும் சுகாதார நலம், 3) தரமான சாலைகள், மின்சார வசதி போன்ற நாடு தழுவிய உள்கட்டமைப்பு வசதிகள், 4) தகவல் மற்றும் தொலைத் தொடர்பு வசதிகள், 5) சிக்கலான தொழில் நுட்பங்களில் தன்னிறைவு பெறுதல்.

இந்த ஐந்து பிரிவுகளும் ஒன்றை ஒன்று சார்ந்து நின்று இணக்கத்துடன் செயல்பட்டு முன்னேறினால், உணவு, பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு போன்றவற்றில் நாம் வளர்ச்சி நிலையை எட்டலாம். இந்த ஐந்து பிரிவுகளில் அடங்கியுள்ள பிரதான குறிக்கோள்களில் ஒன்று, நகரத்தின் வசதிகளை கிராமங்களுக்கும் வழங்குதல் (Providing urban

Amenities in Rural Areas - PURA) என்ற அடிப்படையில் கிராமப் புறத்தின் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதாகும். உடல் நலம், மின்னணுத்துறை, அறிவுசார்ந்த விஷயங்கள் என்ற மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படும்போது அதன் மூலம் பொருளாதாரத் தொடர்பும் இணைந்து கொண்டு விடும். நாடு முழுவதற்கும் 7000 PURA ஒருங்கிணைப்புத் தொகுப்புகள் தேவைப்படும் என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள்.

நமது பொருளாதாரம் ஏறுமுகமாக இருக்கிறது என்று தெரியும்போது நாம் மகிழ்ச்சி கொள்கிறோம். நமது உள்நாட்டு மொத்த உற்பத்தி (GDP) ஆண்டுக்கு ஒன்பது சதவீதம் உயர்ந்து வருகிறது. நமது நாட்டின் பெரும்பாலான மக்களின், குறிப்பாக கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை இது முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை என்பது வெளிப்படையான விஷயம்.

எனவே நாங்கள் நாட்டின் செழுமைக் குறியீடு அட்டவணை (National Prosperity Index) இது மூலம் கீழ்கண்ட தகவல்கள் பெறலாம்.

a) உள்நாட்டு மொத்த உற்பத்தியின் வருடாந்திர வளர்ச்சி விகிதத்தை அறியலாம்.

B) மக்களின் வாழ்க்கைத் தரத்தை குறிப்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் முன்னேற்றத்தை மதிப்பிடலாம்.

C) கலாச்சாரப் பாரம்பரியம் பெற்ற மக்களின் சகல பிரிவினரிடமிருந்தும் ஒரு மதிப்பீட்டு அமைப்பை உருவாக்குவது சிறப்பானதாகும்.

NPI = a + b + c என்று அமைகிறது. குறிப்பாக B என்பது வீட்டு வசதி பெறுதல், சுத்தமான குடிநீர், சத்தான உணவு, முறையான சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், தரமான கல்வி, உடலாரோக்கியம் பேணுதல், வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துதல் போன்றவற்றைக் குறிக்கிறது.

C என்பது கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறைக்கு ஆதரவளித்தல், இணைந்து பணியாற்றும் உணர்வைத் தோற்றுவித்தல், சரியான வாழ்க்கை முறைக்கு அழைத்துச் செல்லுதல், சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக சச்சரவற்ற நல்லிணக்கமான சமுதாயத்தை உருவாக்குதல்.

இது குடும்பத்திலும், சமூகத்திலும் உள்ள அமைதியைச் சுட்டிக் காட்டும். ஊழல் அளவு குறைவதை, நீதி மன்றங்களில் வழக்குகள் குறைவதை, பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிரான குற்றங்கள் குறைவதை, மக்கள் சமுதாயத்தின் இடையே ஏற்படும் பதட்டம் விலகுவதை, இது எடுத்துக் காட்டும்.

வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை குறைய வேண்டும். 2020ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை பூஜ்ஜியமாக மாற வேண்டும். நமது பொருளாதாரச் செயல்பாடுகளை மேம்படுத்த நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் எல்லாம் தேசிய செழுமைக் குறியீட்டின் அடிப்படையில், குறிப்பிட்ட கால அளவிற்குள் நிறைவேறும் வகையில் வழி நடத்தப்பட வேண்டும்.

நமது குறிக்கோளை எவ்வாறு நிறைவேற்றுவது? அதற்காக நாம் உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்னென்ன?

நான் உங்களைப் போன்ற பலருடன் கலந்து பழகியிருக்கிறேன். மத்திய, மாநில அரசுகளின் பல திட்டங்கள் பற்றியும் எனக்குத் தெரியும். தனியார் மற்றும் அரசு சாராத நிறுவனங்கள் பூர்வாங்க நடவடிக்கைகளில் இறங்கிவிட்டன. முன்னேற்றப் பணியில் கலந்துகொள்ள நாட்டின் குடிமக்கள் காட்டும் சளைக்காத ஆர்வம் குறிக்கோளுக்காக உழைக்க நமது சமுதாயம் தயராகிவிட்டது என்ற நம்பிக்கையை எனக்குத் தந்து விட்டது.

நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இரண்டு பிரதானமான முயற்சிகளில் இறங்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறேன்.

1) மின் ஆற்றலில் தன்னிறைவு பெறுவதற்கான சட்ட வரைவு (Bill) ஒன்றை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் ஆற்றல் உற்பத்தி செய்யப்படுவதற்காக முப்பரிமாண அணுகுமுறையை உருவாக்க வேண்டும்.

2) குறிக்கோள் 2020: தேசிய செழுமைக் குறியீட்டை (NPI) அடிப்படையாகக் கொண்ட பாதுகாப்பான, வளமான, மகிழ்ச்சியும், பொருளாதார மேம்பாடும் நிறைந்த தேசமாக இந்தியாவை 2020 ஆம் ஆண்டுக்குள் மாற்ற வேண்டும் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள்.

குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் குறிக்கோளை எட்டுவதற்கு இந்தச் சட்ட வரைவு அவசியம் என்று நான் கூறுவதை நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள். இந்த விஷயங்கள் எல்லாம் மிகவும் முக்கியத்துவம் நிறைந்தவை என்று நான் நினைப்பதால் பின்னர் புத்தகத்தில் இவற்றைப் பற்றி கொஞ்சம் விரிவாக எடுத்துரைக்க இருக்கிறேன்.

எனக்கு ராஷ்ட்ரபதி பவனில் ஒரு மறக்க முடியாத அனுபவம் ஏற்பட்டது. ஏதாவது ஒரு மாநிலம் பற்றிய தகவலோ, தேதியோ அல்லது ஏதாவது ஒரு நிறுவனம் குறித்த விபரங்களோ தேவைப்பட்டால், சம்பந்தப்பட்ட அமைச்சகமோ அல்லது அந்த மாநிலமோ, திட்டக் குழுவோ, மத்திய அரசோ அந்தத் தகவலைத் தேடியெடுத்து எனக்கு அளித்துவிடும்.

ஜனாதிபதியின் செயலாளர் இதற்காக யாரையும் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமிருக்காது. தானே காரியம் நடந்துவிடும். இவ்வாறு பெறப்படும் தகவல்கள் எனக்கு மிகவும் உதவிகரமாக இருந்தன. நாட்டு மக்களுக்கு உரையாற்றவும், பாராளுமன்றத்தில் பேசவும், பல்வேறு

மாவட்ட சட்ட மன்றங்களில் சொற்பொழிவு நிகழ்த்தவும், பொதுத்துறை, தனியார்துறை, மற்றும் பல்கலைக்கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும் அந்த தகவல்கள் பயன்பட்டன. உபயோகம் நிறைந்த அந்த வசதியை இதற்கு முன்னர் யாரும் இவ்வாறு பயன்படுத்திக் கொள்ளவில்லை.

ராஷ்ட்ரபதி பவனில் நாங்கள் உருவாக்கிய மற்றொரு வசதி காணொலிக் காட்சிகள் மூலம் கருத்தரங்குகள், மாநாடுகள் நடத்துவதாகும். தொலைதூரப் பகுதிகளில் உள்ள பல்வேறு துறை அறிஞர்களுடன் இதன் மூலம் உரையாடிச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பணிகள் நடைபெற்றன. நான் ராஷ்ட்ரபதி பவனில் தங்கியிருந்த காலத்தில் பன்னிரண்டு மாநில சட்டமன்றங்களில் பேசி அவர்களின் மாநில முன்னேற்றத்திற்கும் செழிப்புக்கும் திட்டங்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறேன்.

இதற்கான தகவல் சேகரிப்பு, மதிப்பீடு, நிபுணர்களின் கருத்துகளைச் சேர்த்துக் கொள்வது, அனைத்தையும் ஒருங்கிணைப்பது போன்ற காரியங்களுக்கு காணொலிக் காட்சி மூலம் தீர்வு காணும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பதினைந்து நாட்கள் தொடங்கி ஒரு மாதத்தில் திட்டங்கள் உருப்பெற்றன. ராஷ்ட்ரபதி பவனில் உள்ள பல்லூடகப் (Multimedia) பிரிவு காலை எட்டுமணி தொடங்கி நள்ளிரவு வரையிலும் அதற்கான தயாரிப்புப் பணிகளுக்காகப் பாடுபட்டது. எப்போது அந்த அறிஞர்களிடம் தொடர்பு கொள்ள முடிந்தாலும் அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள் இத்திட்டத்தில் அடங்கிய மாநிலங்கள், ஜம்மு காஷ்மீர், ஹிமாச்சலப் பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், கோவா, கர்நாடகா, கேரளா, ஆந்திரப்பிரதேசம், மிஜோராம், மேகாலயா, சிக்கிம், பாண்டிச்சேரி போன்றவைகளாகும்.

குறிப்பிட்ட மாநிலங்களில் ஒருவருடைய சராசரி வருமானம், கல்வி நிலை, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களின் எண்ணிக்கை, வேலையில்லாதோரின்

எண்ணிக்கை, குழந்தை இறப்பு விகிதம், பெண்களின் பேறுகால மரணம், மற்றும் அந்த மாநிலத்தின் விவசாய, தொழில்துறை, சேவைப் பிரிவுகளின் நிலை போன்ற சமூகப் பொருளாதார வடிவங்களை வைத்துக் குறிக்கோளின் அளவுகோல்கள் உருவாக்கப்பட்டன.

உதாரணமாக, பீகார் மாநிலத்தின் அளவுகோலை நிர்ணயிக்க பின்வரும் விஷயங்கள் கணக்கில் கொள்ளப் பட்டன.

1) மாநிலத்தின் விவசாயம், பண்ணை உற்பத்திப் பொருட்களின் விலைத்தரம், 2) கல்வி மற்றும் தொழில் முனைவோரின் அளவு, 3)மனித வளம், 4)நாளந்தா பல்கலைக் கழகம், 5) மக்களின் சுகாதாரத் திட்டங்கள், 6)வெள்ளப் பெருக்கின்போது மேற்கொள்ளப்படும் நிர்வாக நடவடிக் கைகள், 7) சுற்றுலாத் துறை, 8)மாநில உள்கட்டமைப்பு வசதிகள், 9) சிறப்புப் பொருளாதார மண்டலம், 10) மின் -நிர்வாகம்.

பீகார் மக்களின் சராசரி தனி நபர் வருமானம் 2005-06ஆம் ஆண்டுகளில் ரூ.6,300 இருந்து வந்தது. இதை 2010-ஆம் ஆண்டிற்குள் ரூ.35,000 அளவுக்கு உயர்த்துவதற்கு எட்டு திட்டங்கள் தீட்டப்பட்டன. அது மட்டுமின்றி பெரிய அளவில் பத்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் தரக்கூடிய தொழில் திட்டங்களில் முதலீடு செய்வதற்கேற்ற சுமுகமான சூழலை அங்கே உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பீகார் மாநிலம் 2015ஆம் ஆண்டிற்குள் 100 சதவீதம் கல்வியறிவு பெற்ற, வேலையில்லாதவர்கள் யாரும் இல்லை என்ற நிலையை எட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அரசாங்கம் அதற்காக பல திட்டங்களைச் செயல்படுத்தியது. நாட்டில் வேகமாக முன்னேற்றம் கண்டு வரும் மாநிலமாக பீகார் இருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். வேலைதேடி வெளியே போவோரின் அளவு பெருமளவு

குறைந்திருக்கிறது. நிறைய வேலை வாய்ப்புகள் கிடைக்கும் நிலை பீகாரில் ஏற்பட்டுவிட்டதையே இது காட்டுகிறது.

மாநிலங்களின் சட்ட மன்ற உறுப்பினர்களும் சிறப்பான முறையில் ஒத்துழைப்பு அளித்தார்கள். மாநிலங்களின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. சட்டமன்றத்தில் உரையாற்றிய பின்னர் நான் அந்த மாநிலங்களின் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மத்தியிலும் பேசினேன். வர்த்தகக் கழகக் கூட்டங்களிலும் இதே கருத்தை எடுத்துரைத்தேன்.

கேரளாவில் மலையாள மனோரமா பத்திரிகை வளர்ச்சித் திட்டத்தை மலையாள மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டது. மாவட்ட அளவில் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன. எந்தெந்த முறையில் திட்டத்தை நடத்தினால் வெற்றி காணலாம் என்று நிபுணர்களிடமிருந்து கருத்துகள் கேட்டறியப்பட்டன.

அவற்றுடன் தேவையான பரிந்துரைகளையும் இணைத்து சட்டமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. மற்ற மாநிலங்களிலும் இதுபோன்ற முன்னேற்றத் திட்டங்களுக்கு ஊடகங்கள் முக்கியத்துவம் தந்து செய்திகள் வெளியிட்டன. இது குறித்து மாநில அமைப்புகள் அளித்த பல்வேறு கருத்துகளும் எனக்கு வந்து சேர்ந்தன.

கலாச்சாரம் மற்றும் மதிப்பீடுகள் என்ற நூலிழையில் நூறு கோடி மக்களையும் இணைக்க வேண்டும் என்பது என் கனவாகும். நம்முடைய மாபெரும் இதிகாசங்கள் கடந்த காலங்களின் பெருமையை நினைவூட்டுகின்றன. அதில் சிறப்பான எதிர் காலத்திற்கான நம்பிக்கை பொதிந்திருக்கிறது.

6

பிறரிடமிருந்து கற்றுக் கொள்ளுதல்

யாருமற்றவர்களுக்கு
நான் பாதுகாவலாக இருப்பேன்
பயணங்களுக்கு
வழிகாட்டுவேன்
(தண்ணீரைக்) கடக்கவரும் எல்லோருக்கும்
நான் பாலமாக, படகாக, கப்பலாக
இருப்பேன்

-ஆச்சாரிய சாந்திதேவா
7ம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்த துறவி

முன்னேற்றத்தின் பொருட்டு மனங்கள் ஒன்றுபடும் விதம் கண்டு நான் எப்போதும் வியப்படைந்து போகிறேன். அவ்வாறு மனங்களை ஒன்றுபட வைப்பது எளிதான காரியமல்ல. சாதனை முயற்சிகள் கை நழுவிப் போவதற்கு கூட்டத்திலுள்ள பலரது வித்தியாசமான கண்ணோட்டமே காரணம் என்றும் சொல்கிறார்கள்.

ராக்கெட் மற்றும் ஏவுகணைகளை மேம்படுத்துவதற்குப் பலருடைய கூட்டு முயற்சி தேவையாக இருந்தது. மனிதர்களின் சிந்தனை முறைகளை நான் கூர்ந்து கவனித்து அதிலிருந்து நிறையக் கற்றுக் கொண்டேன். இந்தியா 2020 என்ற கூட்டு முயற்சி சார்ந்த குறிக்கோளில் இறங்கியபோது இந்த குணம் மேலும் தீவிரப்பட்டது.

நான் ஜனாதிபதியாக இருந்த சமயத்திலும் அதற்குப் பின்னரும் பிறருடைய அனுபவப்பூர்வமான, மற்றும் அனுபவமற்ற கருத்துகள், யோசனைகள், விமர்சனங்களில்

இருந்து நிறைய ஆதாயம் பெறும் வாய்ப்பைப் பெற்றேன். பலவிதமான அபிப்பிராயங்களும், கேள்விகளும் அறிவை வளர்த்து மனித மேம்பாட்டுக்கு உதவி புரிகின்றன.

நான் பல்லாயிரம் பேரிடம் கலந்து பழகியதில் என்னிடம் தனிப்பட்ட முறையில் தாக்கத்தை ஏற்படுத்திய சில சம்பவங்களை இங்கே உதாரணம் காட்டியிருக்கிறேன்.

பரிசுப் பொருட்கள் குறித்து

இந்த சம்பவத்தை நான் பல இடங்களில் நிறையத் தடவை சொல்லியிருப்பதால் இப்போது சுருக்கமாகவே தருகிறேன்.

என் தந்தையார் ஜனாப் ஆவுல் பக்கீர் ஜெய்னுலாபுதீன் நான் சிறுவனாக இருந்தபோது எனக்கு ஒரு சிறந்த பாடத்தைக் கற்றுக் கொடுத்தார். 1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்று சிறிது காலம் கடந்திருந்த நேரமது. ராமேஸ்வரம் தீவில் பஞ்சாயத்துத் தேர்தல் நடந்து எனது தந்தையார் கிராமசபையின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

அவர் ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்தவர் என்பதாலோ, அவரது பொருளாதார நிலையை வைத்தோ தலைவராகத் தேர்வு செய்யப்படவில்லை. அவர் களங்கமற்ற மனம் படைத்த நல்ல மனிதராக இருந்தார் என்பதற்காகவே தேர்ந்தெடுக்கப் பட்டார்.

எனது தந்தையார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளன்று ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்தார். அப்போது பள்ளி மாணவனாக இருந்தேன். எனது பள்ளிப் பாடங்களை உரக்கப் படித்துக் கொண்டு இருந்தபோது வாயிற்கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. அன்றைய நாட்களில் ராமேஸ்வரத்தில் நாங்கள் வீட்டுக் கதவுகளை மூடிவைப்பது கிடையாது.

கதவைத் தள்ளித் திறந்து கொண்டு ஒருவர் வீட்டிற்குள் நுழைந்தார். என்னிடம் தந்தையார் எங்கே என்று கேட்டார். மாலை நேரத் தொழுகைக்காக அவர் மசூதிக்குச் சென்றிருக்கிறார் என்று அவரிடம் சொன்னேன். எனது

தந்தையாரிடம் கொடுப்பதற்கு அவர் ஒரு பொருளைக் கொண்டு வந்திருப்பதாகவும், அதை அங்கே வைத்துவிட்டுப் போகலாமா என்றும் என்னிடம் வினவினார்.

பொருளைக் கட்டில் மீது வைத்து விட்டுப் போகுமாறு அவரிடம் கூறிவிட்டு நான் படிப்பைத் தொடர்ந்தேன். சற்று நேரத்தில் மசூதியிலிருந்து திரும்பி வந்த என் தந்தையார் பரிசுப் பொருட்களுடன் ஒரு வெள்ளித் தட்டும் கட்டில்மீது இருப்பதைப் பார்த்தார். அதை யார் கொண்டு வந்து கொடுத்தார்கள் என்று என்னிடம் கேட்டார். யாரோ ஒருவர் கொண்டு வந்து தந்து விட்டுப் போனதாக அவரிடம் தெரிவித்தேன்.

அந்தப் பரிசுப் பொட்டலத்தைத் தந்தையார் பிரித்துப் பார்த்தார். அதில் விலையுயர்ந்த துணிமணிகள், சில வெள்ளிக் கிண்ணங்கள், கொஞ்சம் பழங்கள் இனிப்பு வகைகள் போன்றவை இருந்தன. அவற்றைப் பார்த்ததும் என் தந்தையார் கடுங்கோபம் கொண்டார். நான் வீட்டின் கடைக்குட்டி என்பதால் என்னிடம் அவர் அதிகப் பாசம் காட்டுவது வழக்கம். நானும் அவர் மீது நிறைய அன்பு செலுத்துவேன். என்றாலும் அவர் இப்படிக் கோபப்பட்டு நான் இதுவரை பார்த்ததில்லை. அன்றுதான் நான் அவரிடம் பலமாக அடிவாங்கினேன்.

தனது கோபத்திற்கான காரணத்தைப் பின்னர் அவர் என்னிடம் கூறினார். இனிமேல் யாரிடமும் தனது அனுமதியின்றிப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக் கூடாது என்று எச்சரித்தார். குரானிலிருந்து ஒரு ஹதீஸை மேற்கோள் காட்டினார். ஒரு மனிதனை ஆண்டவர் பொறுப்பான பதவியில் உட்கார வைக்கும்போது அவனது தேவைகளையும் அவரே கவனித்துக் கொள்வார். அந்த மனிதன் அதை மறந்துவிட்டு ஏதாவது ஒன்றைத் தனதாக்கிக் கொள்ள முயன்றால் அது சட்டவிரோதமாகப் பெறும் வெகுமதியாகவே கருதப்படும்.'

https://t.me/EBOOKT

பரிசுகளை ஏற்றுக் கொள்வது நல்ல பழக்கமல்ல என்று அவர் கூறினார். பரிசு தருவது ஏதாவது ஒரு நோக்கத்தை உள்ளடக்கியதாகவே இருக்கும். எனவே அது ஆபத்தான விஷயம். பாம்பைத் தொட்டுப் பார்த்து அதனிடம் கொத்து வாங்கிக் கொள்வதற்குச் சமம் என்றார். அந்த அறிவுரை இந்த எண்பதாவது வயதிலும் மனதில் நிலைத்துத் தங்கியிருக்கிறது. அந்த நிகழ்ச்சி என் மனதில் ஆழமாகப் பதிந்து எனது மதிப்பீட்டு முறைகளை வடிவமைத்து விட்டது. யாராவது ஒருவர் பரிசுப் பொருளுடன் என்னிடம் வந்தால் என் உடலும் மனமும் இப்போதும் நடுங்க ஆரம்பித்து விடுகிறது.

நான் பின்னாட்களில் இந்துக்களின் அடிப்படைச் சித்தாந்த நூலான மனு ஸ்மிருதியைப் (Manu Smiriti) படித்தேன். அதில் ஒருவர் பரிசுப் பொருட்களை ஏற்றுக் கொள்ளும்போது அவரிடமுள்ள தெய்வீக ஒளி அணைந்து போவதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனித்தேன். எந்த ஒரு மனிதரும் பிறரிடமிருந்து வரும் பரிசுப் பொருட்களை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று மனு எச்சரிக்கிறார். காரணம் அதை ஏற்றுக் கொள்பவர் பரிசு கொடுத்தவருக்கு ஏதாவது சலுகை செய்ய வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார். அதனால் சட்டவிரோதமாகவோ, நீதிக்குப் புறம்பாகவோ ஏதாவது செய்தாக வேண்டியதாகி விடுகிறது.

போற்றி வளர்க்கப்பட்ட ஒரு மதிப்பீட்டு அமைப்பு

சில மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் தொண்ணூற்று ஐந்து வயதான என் மூத்த சகோதரர் ராமேஸ்வரத்தில் இருந்து என்னைத் தொலைபேசியில் அழைத்தார்.

அமெரிக்காவிலிருந்து அங்கே வந்துள்ள எனது இந்திய நண்பர்களில் ஒருவரின் வருகை பற்றி அவர் என்னிடம் கூறினார். எனது சகோதரரிடம் பேசிக்கொண்டிருந்த அந்த நண்பர் அந்த வீட்டைக் கட்டி எத்தனை வருடங்கள் ஆகின்றன என்று கேட்டிருக்கிறார்.

''இதை எனது தகப்பனார் நூறு வருடங்களுக்கு முன்பு கட்டினார்!'' என்று என் சகோதரர் பதில் அளித்திருக்கிறார். எனது இளைய சகோதரரும் அவரது பேரப் பிள்ளைகளும் அந்த பழைய வீட்டை இடித்து விட்டுப் புதுவீடு கட்ட விரும்பினார்கள்.

எனது நண்பர் வரலாற்றுச் சின்னமாக விளங்கும் அந்த வீடு இடிபடுவதை விரும்பவில்லை. ஒரு அறக்கட்டளை நிறுவி அந்த வீட்டை அருங்காட்சியகமாகவும், நூலகமாகவும் மாற்றிவிட எண்ணினார், எனது சகோதரருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் வேறு வசிப்பிடங்கள் ஏற்பாடு செய்யவும் திட்டமிட்டார்.

எனது சகோதரர் என்னை அழைத்து இந்த கருத்துக்கு உடன்பட இயலாது என்று தெரிவித்தார். 'நான் பிறந்து வளர்ந்து, தொண்ணூற்று ஐந்து ஆண்டுக் காலம் வாழ்ந்த அந்த வீட்டிலேயே தொடர்ந்து வசிக்க ஆசைப்படுகிறேன். எனது பிள்ளை குட்டிகள் சம்பாதித்த பணத்தில் அந்த இடத்தில் ஒரு புதுவீடு கட்டப்படுவதையும் நான் விரும்புகிறேன். வேறு வகையான மாற்று ஏற்பாடுகளுக்கு என்னால் உடன்பட இயலாது. உனது நண்பருக்கு நாசுக்காக நன்றி தெரிவித்து வழியனுப்பி வைத்துவிடு!' என்று சகோதரர் என்னிடம் கேட்டுக் கொண்டார்.

அந்த முதியவர் தனது சொந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் வாழ விரும்புகிறார். அது நல்லதாகவே இருந்தாலும் பிறர் உதவியை நாட இஷ்டப்படவில்லை என்ற விஷயம் என் மனதைத் தொட்டுவிட்டது. அது எனக்குக் கிடைத்த ஒரு பெரிய பாடம்!

103 ஆண்டுக் காலம் வாழ்ந்திருந்த எனது தந்தையார் விட்டுச் சென்ற பாரம்பரியத்தின் தொடர்ச்சியை எனது சகோதரரின் செயலில் நான் காண்கிறேன்.

ஹஜ் புனிதப் பயணம்

அது ஒரு பரபரப்பான நாள். நான் நிறையப் பேரைச் சந்திக்க வேண்டியிருந்தது. முடிவுகள் பல எடுக்க வேண்டியிருந்தன. கோப்புகளை மறு ஆய்வு செய்யும் வேலையிருந்தது.

அந்த நேரத்தில் எனது சகோதரரின் பேரனிடமிருந்து மக்காவிலிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. எனது வாழ்வின் மிகப்பெரிய திட்டங்களில் ஒன்றை அந்தப் பேரன் நடத்தி வைத்துக் கொண்டிருந்தார். எனது குடும்பத்தின் மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்களின் பிரதிநிதிகள் அந்தப் புனிதப் பயணத்தில் கலந்து கொண்டனர். தொண்ணூறு வயதான என் சகோதரர், அவரது மகள், அவருடைய பேரன் என்ற அந்த மூவர் குழு கடந்த 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஹஜ் பயணத்திற்காக சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

எனது சகோதரருக்கு வயதாகிக் கொண்டே செல்வதால் அந்தப் புனிதப் பயணம் பற்றிய எண்ணம் என்னிடம் பலமாக எழுந்தது. எனது சகோதரரிடம் இருந்த இறை நம்பிக்கையே அவரை இப்பயணத்திற்கு அனுப்புவதற்கு முக்கிய உந்து சக்தியாக அமைந்தது. சவூதி அரேபியாவில் இருந்த இந்திய தூதர் எனது குடும்பத்தினர் ஹஜ் யாத்திரைக்கு வந்திருப்பதைக் கேள்விப்பட்டு ராஷ்ட்ரபதி பவனில் இருந்த என்னிடம் தொலைபேசியில் பேசினார். அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

நான் அவரிடம் 'நான் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன், தூதுவர் அவர்களே! எனது சகோதரர் ஒரு சாதாரணப் பிரஜையாகச் சென்று தனது ஹஜ் கடமையைச் செய்ய விரும்புகிறார். எந்த அலுவலக ரீதியான உதவியையும் அவர் விரும்பவில்லை. இது அவரது தனிப்பட்ட விருப்பமாகும் என்றேன். ஹஜ் கமிட்டி தனது வழக்கமான நடை முறைப்படியே அவரைத் தேர்வு செய்து அனுப்புவதையே அவர் விரும்பினார்.

அவரது பேரன் தனிப்பட்ட முறையில் பொதுவான சட்ட விதிகளுக்கு உட்பட்டே அந்தப் பயணத்திற்கு விண்ணப்பித்தார். கடவுள் அருளால் தற்செயலாக அந்த விண்ணப்பம் தேர்வு செய்யப்பட்டது. பதினைந்து நாட்கள் பயணம் செய்து பல இடங்களைத் தரிசித்தார்கள்.

பல்வேறு ஹஜ் கடமைகளை நிறைவேற்றினார்கள்.

உடன் பயணம் செய்த மகள், பேரனிடம் அவருக்கு ஒத்தாசை செய்யும்படி நான் கேட்டுக் கொண்டிருந்தேன். என் சகோதரர் மனவுறுதியும் தாக்குப் பிடிக்கும் குணத்துடனும் நடந்து கொண்டு, எதிர்பாராத நிகழ்வுகளையும், துன்பங்களையும் தாங்கிக் கொண்டார். சூழ்நிலைக்கு ஏற்ப முடிவெடுக்கும் உரிமையைப் பேரனிடம் தந்துவிட்டு அந்த வழி காட்டல்களை எவ்வித ஆட்சேபமும் காட்டாது ஏற்றுக் கொண்டார்.

ஆனால் துரதிருஷ்டவசமாக வழியில் அவர் பேரனுக்கு கடுமையான காய்ச்சல் கண்டுவிட்டது. குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றும் நேரத்தில் முன்னின்று நடத்துவதுபோல் அந்த புனிதப் பயணப் பொறுப்பையும் அவர் ஏற்றார். தொழுகைக்கு மசூதிக்குச் செல்வது, உணவுத் தேவைகளை கவனித்துக் கொள்வது, மருத்துவரை வரவழைப்பது போன்ற பொறுப்புகளை நன்றாக நிர்வகித்தார்.

தனது படுக்கை அருகே மூன்று மணி நேரம் உட்கார்ந்து தொழுகை நடத்தியதாக அவரது பேரன் என்னிடம் கூறினார். பேரனின் காய்ச்சல் குணமானதும் அவர் வழக்கமான தொழுகை முறைக்கு மாறினார். அதையடுத்த சில நாட்களில் நடந்த சம்பவங்களையும் பேரன் என்னிடம் கூறினார். மினா நகரில் கூடாரங்களில் தங்கியிருந்துவிட்டு அரஃபாத் என்ற இடம் நோக்கிப் பயணப்பட்டார்கள். அந்த இடத்தில் ஐந்து மில்லியன் ஹஜ் பயணிகள் ஒன்று கூடுவார்கள். என் சகோதரர் கரம் குவித்து வான் நோக்கித் தொழுத காட்சியை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிந்தது.

ஒருநாள் பேரன் பெரிய மசூதியின் மேல் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார். தொழுகை முடித்துவிட்டு வரும் பக்தர்கள் முண்டியடித்து ஏறுவதால் விபத்துகள் ஏற்பட்டு விடலாம் என்று அங்கே இயங்கிய மின்சாரப் படிக்கட்டுகளை (Escalators) இயக்காமல் நிறுத்தி வைத்துவிட்டனர்.

மக்கள் நெருக்கியடித்துக் கொண்டு இறங்கியதால் படியில் கீழே வருவதும் எளிதாக இருக்கவில்லை. ஜனநெரிசலில் சிக்கிய பேரன் சுவரோடு சேர்த்து அழுத்தி நசுக்கப்பட்டார். அவரால் மூச்சுவிடவும் முடியவில்லை. திணறியபடியே போராடிப் பார்த்தார். சட்டென்று நெரிசலின் அழுத்தம் குறைவதைப் பேரன் உணர்ந்தார். தன்னைச் சுற்றி இடவசதி ஏற்பட்டதையும் கண்டார்.

அவர் துன்பப்படுவதைப் பார்த்த ஒரு உடல்வலு நிறைந்த ஆப்பிரிக்க ஹஜ்பயணி தனது பலத்தைப் பிரயோகித்து கூட்டத்தின் நசுக்கலிலிருந்து பேரனை விடுவித்தார். படிக்கட்டு வழியாக அவர்கள் தரை தளத்தை நெருங்கிய சமயத்தில் அந்த பயணி கூட்டத்தில் நகர்ந்து அப்பால் சென்றுவிட்டார். நன்றி சொல்லவும் வாய்ப்பு அமையவில்லை.

இரண்டாவது நிகழ்ச்சி பலமாக மனதைத் தொடுவதாக அமைந்தது. அரஃபாத்தில் தொழுகை முடிந்து பயணிகள் மினா நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஐந்து மில்லியன் பயணிகளும் 15 கி.மீட்டர் தூரம் பயணம் செய்து அன்றே மினா திரும்பியாக வேண்டும். அவர்கள் பயணம் செய்த வண்டியில் இருந்த குளிர்சாதனப் பெட்டி பழுதுபட்டதால் பாலைவனத்து வெப்பம் கடுமையாக வாட்டியது.

எனது சகோதரர் வழியில் எந்த உணவும் உண்ணாமல், தண்ணீரும் அருந்தாமல் பிரார்த்தனை செய்வதில் மூழ்கிப் போனார். அவர்கள் பயணம் செய்த வண்டி அரைமணிக்கு ஒரு தடவை வீதம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னே நகர்ந்து. ஏழு மணிநேரம் இப்படி ஊர்ந்து செல்வதிலேயே கரைந்து விட்டது. வண்டியிலிருந்து இறங்கி நடந்து சென்றால் சுமார் அரைமணி

நேரத்தில் நகரத்தை அடைந்து விடலாம் என்று வாகன ஓட்டுனர் கூறினார். எனது சகோதரர் அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டார்.

பேரனுக்கு அதில் சம்மதமில்லை என்றாலும் அவரைச் சக்கர நாற்காலியில் வைத்துத் தள்ளிக் கொண்டு செல்ல முடிவெடுத்தார். சக்கர நாற்காலியில் வைத்துத் தள்ளிச் சென்றபோது சாலையின் ஒரு இடத்தில் பாதையின் குறுக்கே ஒரு சிறிய பிளவு தென்பட்டது. எனது சகோதரர் நாற்காலியிலிருந்து இறங்கி நடந்து செல்லத் தயாரானார். பக்கத்திலிருந்த இரண்டு ஹஜ் பயணிகள் அதைப் பார்த்துவிட்டு என் சகோதரரை நாற்காலியிலிருந்து எழ வேண்டாம் என்று சைகை செய்தார்கள்.

அதற்கு பேரன் பதில் சொல்வதற்குள் அந்த இருவரும் சக்கர நாற்காலியோடு சேர்த்து என் சகோதரரை அலாக்காக தூக்கிச் சென்று பிளவின் மறுபுறம் வைத்துவிட்டார்கள். இந்த தருணத்திலும் அவர்கள் யாருடைய நன்றியையும் எதிர்பார்க்கவில்லை. முஸ்தாலிஃபா என்ற இடத்தில் அவர் திறந்த வெளியில் இரவைக் கழிக்க வேண்டியிருந்தது.

இரவு வேளையில் அந்த பாலைவனப் பகுதி கடுமையான குளிருடன் காணப்பட்டது. தரையில் பாயை விரித்து அதில் படுத்து எல்லோரும் உறங்கினார்கள். மெல்லிய ஆடைகளை அணிந்திருந்ததால் குளிரிலிருந்து அவை ஓரளவுதான் பாதுகாப்பளித்தன. மறுநாட் காலையில் அங்கேயிருந்த பொதுக் கழிப்பறையில் காலைக் கடன் கழிக்க நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தார்கள்.

அவசரம் காட்டிச் சண்டையிட்டுக் கொண்டிருந்த சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் பொறுமையுடன் காத்திருந்தார்கள். வரிசையில் பெண்மணி ஒருவர் ஒரு மணி நேரம் காத்திருந்தார் அப்போது இளம் பெண் ஒருத்தி அவரிடம் வந்து தன்னை உள்ளே செல்ல அனுமதிக்குமாறு வேண்டினாள். வரிசையில் நின்ற மற்றவர்கள் அந்த

பெண்ணின் விருப்பம்போல முடிவு செய்யச் சொல்லி விட்டார்கள். அவர் அந்த இளம் பெண்ணை உள்ளே செல்ல அனுமதித்து விட்டார்.

சற்று நேரத்தில் ஒரு வயதான பெண்மணி அவரிடம் வந்து தன்னையும் உள்ளே செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வெகுநேரம் வரிசையில் காத்திருந்த மற்றவர்கள் அந்த வயதான மாதை உள்ளே செல்ல அனுமதிக்க மறுத்தனர். ஆனால் வியப்பூட்டும் விதமாக அவருக்கும் அந்த பெண் உடனே அனுமதி தந்து உள்ளே அனுப்பி வைத்தார்கள்.

இதிலுள்ள முக்கியமான விஷயம் ஒருவருக்கொருவர் அறிமுகமற்றவர்கள். மொழியும் தெரியாது என்பதால் சைகை மூலமே தங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர் என்பதுதான் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம். சில சிறிய சமிக்ஞைகள் கூட நம் வாழ்வில் பெரிய மாறுதலை ஏற்படுத்துகின்றன என்பதை இந்த சம்பவங்கள் உணர்த்து கின்றன.

நமது சகமனிதர்களை நேசிக்கும் வாய்ப்பு கிடைக்கும்போது அது தடையற்ற வெள்ளமாய் பெருக்கெடுத்து ஓடிவந்து அனைத்து வித்தியாசங்களையும் அடித்துச் சென்று விடுகிறது என்ற செய்தியை எனது சகோதரரின் மகள் நசீமா, பேரன் குலாம் கே.மொய்தீன் ஆகியோரின் பேச்சிலிருந்து நான் தெரிந்து கொண்டேன்.

ஃபீல்டு மார்ஷல் மானெக்ஷா

2006ஆம் ஆண்டு நான் கோயம்புத்தூருக்கு விஜயம் செய்தபோது ஃபீல்டு மார்ஷல் ராஷ்ட்ரபதி பவனுடன் தொடர்பு கொண்டு என்னுடன் பேச விரும்பியிருக்கிறார். அந்த செய்தி எனக்குக் கிடைத்ததும் நான் வெலிங்டன் ராணுவ மருத்துவமனையில் இருந்த அவரைப் பார்க்க வேண்டும் என்ற என் விருப்பத்தை வெளியிட்டேன். அவருடன் எனக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பு பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன்.

1990 ஆம் ஆண்டு ஒரு நாள் நான் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் பயணம் செய்தபோது எனக்கு அடுத்த இருக்கையில் ஃபீல்டு மார்ஷல் SHFJ சாம் மானெக்ஷா அமர்ந்திருந்தார் நான் என்னை RM (ரக்ஷா மந்திரி, அதாவது பாதுகாப்பு அமைச்சர்) அவர்களின் விஞ்ஞான ஆலோசகர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

நான் அவ்வாறு கூறியதும் மானெக்ஷா என்னைப் பார்த்து, ''அவர் (மந்திரி) நல்ல மனிதரா?'' என்று கேட்டார். அடுத்ததாக என்னிடம் ''உங்கள் வயது என்ன?'' என்றார். நான் அறுபத்தொன்பது வயது என்று பதில் சொன்னேன். அதைக் கேட்ட அவர் ''நீங்கள் ஒரு பச்சா (Bachcha குழந்தை) என்றார்.

மருத்துவமனையில் அவர் இருந்த அறைக்கு நான் சென்றபோது அங்கிருந்த எல்லோரையும் அவர் வெளியே அனுப்பிவிட்டார். என்னை அவரது படுக்கை அருகே உட்காரச் சொல்லி என் கைகளைப் பற்றிக் கொண்டார். ''நான் இப்போது பதவியில் இல்லை. ஆனாலும் ஒரு ராணுவ வீரனை கௌரவப் படுத்திவிட்டீர்கள். எப்போர்ப்பட்ட ஜனாதிபதி நீங்கள்!'' என்றார்.

என்னைப் பார்த்ததில் அவர் பெருமகிழ்ச்சி கொண்டார். வயதாகிப் படுக்கையில் கிடந்தாலும் அவர் மனம் மட்டும் படைகளின் பலத்தை மேம்படுத்துவது பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. தொடர்ந்து படைகளின் பலத்தை அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும், அதற்குக் காரணம் பகைவர்களின் நடவடிக்கைகளும், தற்காப்பு தொழில் நுட்பங்களின் வளர்ச்சியுமே ஆகும் என்று கூறினார்.

அவர் என்னிடம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு கேள்வியைக் கேட்டார்: ''கலாம்! இன்னும் பத்தாண்டுகளில் இந்த ஆயுதங்கள் எல்லாம் அர்த்தமற்றவையாகி, மின்னணு மற்றும் கணினி சார்ந்த போர்முறை வந்துவிடுமா?''

ஃபீல்டு மார்ஷலின் இந்த கேள்வி என் மனதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. நான் ஒரு ஆன்மீகத் தலைவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது அணு ஆயுதங்களை உலகிலிருந்து அகற்ற வேண்டிய அவசியம் பற்றி விவாதித்தேன்.

''நான் உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமா?'' என்று ஃபீல்டு மார்ஷலிடம் கேட்டேன். அவர் அதற்கு ''எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஃபீல்டு மார்ஷல் அல்லது அதற்கு நிகரான பதவியில் இருப்பவர்களின் நிலை நாட்டின் சிறப்பம்சங்களில் ஒன்று என்பதுபோல் அமைய வேண்டும்'' என்றார். இந்த வார்த்தை என் மனதில் அப்படியே தங்கிவிட்டது.

நான் டெல்லி திரும்பியதும் வேறு சில காரியங்களுக்காகப் பிரதம மந்திரியிடம் சென்று பேசிக் கொண்டிருந்தேன். அப்போது ஃபீல்டு மார்ஷல் நாட்டிற்கு ஆற்றிய சேவையை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்றேன்.

அதே நாளில் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளும் விருந்து ஒன்றும் நடைபெற்றது. அங்கே நான் நாட்டின் ராணுவ தலைவரையும், விமானப் படைத் தலைவரையும் சந்தித்துப் பேசினேன். ஃபீல்டு மார்ஷல் மானெக்ஷாவுக்கும், ஏர் மார்ஷல் அர்ஜுன் சிங்கிற்கும் உரிய அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும் என்று அவர்களிடம் கூறினேன்.

நான் உடனே எனது செயலாளர் பி.எம். நாயரை அழைத்து இது பற்றி ஒரு குறிப்பு தயாரித்து பிரதம மந்திரியின் பார்வைக்கு அனுப்பி வைக்கும்படி சொன்னேன். என் கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. ஃபீல்டு மார்ஷல் நாட்டிற்கு ஆற்றிய சேவையை மனதில் கொண்டு அவரது சம்பள விகிதத்தை உயர்த்தி மறு சீரமைக்கச் சம்மதித்தது. இந்த

அங்கீகாரம் ஃபீல்டு மார்ஷலின் ஆயுட்காலத்திலேயே கிடைத்ததை எண்ணி நான் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்.

இணையற்ற குஷ்வந்த் சிங்

குஷ்வந்த் சிங்கை நான் சந்தித்தது ஒரு மறக்க முடியாத அனுபவம். அவர் தற்போது தனது தொண்ணூறுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் எழுதிய பல புத்தகங்களை நான் படித்திருக்கிறேன். நான் ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையில் அவர் எழுதும் கட்டுரைகளின் ரசிகன். அவரை நான் சந்திக்க விரும்பிய காரணம் என்ன என்று பலர் என்னிடம் கேட்கிறார்கள். நான் புத்தகங்களையும், அதை எழுதிய எழுத்தாளர்களையும் நேசிக்கிறேன். தனது தொண்ணூற்று ஐந்தாவது வயதிலும் அவர் தளர்ச்சியற்ற சிறந்த எழுத்தாளராக இருந்து வருகிறார்.

2007 ஆம் ஆண்டு தனது கட்டுரை ஒன்றில் என்னைப் பற்றி எழுதியிருந்தார். எனது கடவுள் நம்பிக்கை குறித்தும், அவர் அபிப்பிராயம் பற்றியும் குஷ்வந்த் சிங் எழுதிய விஷயங்களைச் சுருக்கமாகத் தந்திருக்கிறேன். அவை சுவாரஸ்யமாக இருப்பதாக நான் நம்புகிறேன்.

தனது ஐந்தாண்டுக் காலப் பதவியை முழுமையாக நிறைவு செய்துவிட்டு இந்தியாவின் பதினோராவது ஜனாதிபதியான அப்துல்கலாம் இன்னும் சில மாதங்களில் ஓய்வுபெற இருக்கிறார். அவர் ஜனாதிபதி என்ற உயர் பதவியை வகித்த மூன்றாவது முஸ்லீம் ஆவார். மதச்சார்பற்ற ஜனநாயகத்திற்கும், அண்டை நாடுகளுக்கும் அவர் ஒரு பாலமாக அமைந்திருக்கிறார்.

ஓய்வு பெற்ற பிறகு அவர் விஞ்ஞான ஆராய்ச்சி செய்யப் போவாரா மாணவர்களுக்குப் பாடம் போதிக்க ஏதாவது பல்கலைக் கழகத்திற்குச் செல்வாரா, அல்லது சந்நியாசியாகி விடுவாரா? என்ன செய்யப் போகிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

அவர் தனது எழுபதுகளில் இருந்து கொண்டிருக்கிறார். அவருடன் அரைமணி நேரம் தங்கியிருக்கும் வாய்ப்பை நான் பெற்றேன். எனது குடியிருப்புக்கு நேரில் வந்து என்னை கௌரவப்படுத்தினார். நாட்டின் உயரிய தலைவர் எழுத்தை நம்பி வாழும் ஒருவருக்கு மதிப்பளித்தது அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது.

எங்களிடையே கருத்து ஒற்றுமை மிகவும் குறைவு. அவர் தமிழர். எனக்கு தமிழில் வணக்கம், அய்யய்யோ என்ற இரண்டு வார்த்தைகள் மட்டும்தான் தெரியும். விஞ்ஞானியாக இருந்தாலும் கலாம் தீவிரமான கடவுள் நம்பிக்கை கொண்டவர். நான் நாஸ்தீகவாதி விஞ்ஞானமும், கடவுளும் இணைந்திருக்க முடியாது என்று நம்பும் ஆசாமி. ஒன்று காரண காரியங்களை அடிப்படையாகக் கொண்டது. மற்றது விசுவாசம் சார்ந்தது.

அவரது எழுத்துகளைப் படித்த பிறகு அவருடன் பேசிப் பழகிய பிறகு நான் அவரது கடவுள் நம்பிக்கை மகாத்மா காந்தியுடையது போலவே இருப்பதைக் கண்டேன். பாடுவின் கருத்துகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் தகுதியற்றவனாக நான் இருந்தாலும் என்னை ஒரு காந்தீயவாதி என்றே கூறிக் கொள்கிறேன். கடவுளுக்கும், விஞ்ஞானத்திற்கும் இடையே எந்த பிணக்கும் இருப்பதாக கலாம் நினைக்கவில்லை.

நான் அவரிடம், இறுதித் தீர்ப்பு நாள் (The Day of Judgement) என்று ஒன்று உண்டா, வாழ்வில் செய்த பாவபுண்ணியங்களுக்கு ஏற்ப அங்கே பரிசோ, தண்டனையோ கிடைக்கப் போகிறதா என்று கேட்டேன். அதற்கு அவர் சொர்க்கமும், நரகமும் மனதில்தான் இருக்கின்றன' என்று பட்டும் படாமலும் பதிலளித்தார்.

அப்படியானால் கடவுள் பற்றி கலாமின் அபிப்பிராயம் என்ன? அல்லா ஈஸ்வரனுக்கு எதிரியல்ல. குதா பகவானுக்கு விரோதியல்ல. இறைவனை மசூதியிலோ கோவிலிலோ தேடக்

கூடாது. உயிர்த்தியாகம் செய்யும் பக்தராக மாறி யாரும் வெவ்வேறுபட்ட தத்தம் மதம் சார்ந்த இறைவனுக்காகச் சண்டையிட்டுக் கொள்ளக்கூடாது. அவ்வாறு சண்டை போட்டு பிறர் ரத்தத்தைத் தரையில் விழச் செய்யும்போது கடவுளின் குரல் இடிமுழக்கம் போல் இவ்வாறு கேட்கிறது.

திடீரென்று மின்னலில் இருந்து
இடிமுழக்கம் போன்ற ஒரு குரல் கேட்டது.
எல்லோரும் கேளுங்கள்!
நான் உங்களுடையவன் அல்ல
அன்பே எனது லட்சியமாகும்
நீங்களோ வெறுப்பில் இருந்தபடியே
காலத்தைக் கழிக்கிறீர்கள்
எனது ஆனந்தத்தைக் கொன்று
வாழ்வைச் சிரமப்படுத்துகிறீர்கள்
நீங்கள் எல்லோரும் தெரிந்து கொள்ளுங்கள்
குதாவும் ராமனும் ஒருவரே!
அன்பில் அவர்கள் மலர்கிறார்கள்

எந்த ஆன்மீகவாதியும் கலாமின் கருத்தை எதிர்த்து வாதாட முடியாது. சிலர் அன்பே கடவுள் என்கிறார்கள். சிலர் உண்மையே இறைவன் என்கிறார்கள். ஆனால் கருணையே கலாமின் கடவுள் கொள்கையாக இருந்து வருகிறது.

நான் குஷ்வந்த் சிங்கை மேற்கோள் காட்டக் காரணம் உள்ளது. அவரைப் போன்ற ஒரு எழுத்தாளர் எனது எழுத்துகளைப் படித்து ஆராய்ந்து என்னுடைய சிந்தனை முறை, கடவுள் கொள்கை பற்றி கருத்தைக் கூறியது எனக்குத் தனிப்பட்ட முறையில் கிடைத்த பெரிய கௌரவமாகும். என்றே கருதுகிறேன்.

பிறருக்குக் கொடுப்பதன்மூலம் உங்களுக்கு வேண்டியதைப் பெறலாம்.

உங்களில் சிலர் செல்வம் படைத்தவர்களாக இருக்கும் பாக்கியம் செய்திருக்கலாம். இங்கே நான் ஒரு

பெருந்தகையாளரின் கதையைச் சொல்லவிருக்கிறேன். அவர் தாராளமாக அள்ளிக்கொடுத்து உலகை ஆனந்தப்படுத்தியவர்.

எனக்கு தனிப்பட்ட முறையில் ஒரு அழைப்பிதழ் வந்திருந்தது. 2007-ஆம் ஆண்டு சித்தகங்கா மடத்தில் நடைபெறவுள்ள ஸ்ரீஸ்ரீ சிவகுமார சுவாமிகள் அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டிருந்தார்கள். நான் அங்கே சென்றபோது அங்கே லட்சக்கணக்கான பக்தர்கள் கூடியிருந்தார்கள்.

மேடையில் பல அரசியல்வாதிகளும் ஆன்மீகத் தலைவர்களும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் பேசி முடித்ததும் சுவாமிகள் எழுந்து கையில் எந்த குறிப்பும் வைத்துக்கொள்ளாமல் தனது பக்தர்களுக்கு அற்புதமான அருளாசிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதைப் பார்த்து நான் திகைத்துப் போனேன்.

நூறு வயது நிறைவு பெற்ற அவர் நிமிர்ந்து நின்றபடி புன்னகையோடு சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர் இந்த ஆற்றலையும், ஆர்வத்தையும் எப்படித் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார் என்ற கேள்வியை என்னை நானே கேட்டுக் கொண்டேன்.

நூற்றுக்கணக்கான கல்வி நிலையங்கள், பல அனாதை விடுதிகள், மற்றும் பல்லாயிரம் பசித்த மக்களுக்குத் தினமும் உணவளித்தல் போன்ற தர்ம காரியங்களை மனமுவந்து செய்வதால்தான் அவர் நலமுடனிருக்கிறார் என்று நான் நினைத்துக்கொண்டேன். அவரது தளராத சேவையும், கல்வியறிவின்மையை அகற்ற அவர் மேற்கொள்ளும் முயற்சிகளும், நன்கு நடைபெறுவதற்காக அவர் அளித்த கொடைகள் அப்பகுதியில் பலரை நல்ல நிலைக்கு உயர்த்தியிருக்கிறது. அது என்னை எழுதத் தூண்டியது.

என்னால் என்ன கொடுக்க முடியும்?
ஓ, எனது சககுடிமக்களே!

கொடுப்பது மூலம் நீங்கள் ஆனந்தம் பெறலாம்
உடலும் மனமும் மகிழும்.
கொடுப்பதற்கு உங்களிடம் நிறைய உள்ளன
உங்களிடம் அறிவு இருந்தால்
பிறருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்
உங்களிடம் செல்வமிருந்தால்
ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்
மனதையும் இதயத்தையும் பயன்படுத்துங்கள்
துயரத்தின் வலியை அகற்றுங்கள்
கவலைப்படும் மனதிற்கு ஆனந்தம் தாருங்கள்
கொடுப்பது மூலம் நீங்கள் ஆனந்தம் பெறலாம்
இறைவன் உங்கள் செயல்கள் அனைத்தையும்
ஆசீர்வதிப்பார்!

பிரதம மந்திரிகளுடன் இணைந்து பணியாற்றினேன்:

நான் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பரிசோதனைக் கூடத்தின் இயக்குனராக, பாதுகாப்பு அமைச்சரின் அறிவியல் ஆலோசகராக, இந்திய ஜனாதிபதி மற்றும் அமைச்சகத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகராக இருந்தபோது பல பிரபலஸ்தர்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றேன்.

டாக்டர் சதீஷ்தவன், டாக்டர்.ராஜா ராமண்ணா, டாக்டர் வி.எஸ்.அருணாச்சலம், ஆர்.வெங்கட்ராமன், பி.வி.நரசிம்ம ராவ், ஹெச்.டி.தேவகௌடா, ஐ.கே.குஜ்ரால், அடல் பிகாரி வாஜ்பாய், மற்றும் டாக்டர் மன்மோகன்சிங் போன்ற இவர்களுடன் நான் இணைந்து பணியாற்றியது மிகவும் பயனுள்ளதாகவும், அழியாத அடையாளத்தை மனதில் பதியச் செய்ததாகவும் இருந்தது.

இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பின் தலைவராகவும், எனது மேலதிகாரியாகவும் இருந்த டாக்டர். சதீஷ் தவனிடமிருந்து நான் நிறையக் கற்றுக்கொண்டேன். சிக்கல்

நிறைந்த காரியங்களைச் செயல்படுத்த நேரும்போது பல இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அந்த இடையூறுகள் உனது தலைவனாக மாறி உன்னை அதிகாரம் செய்ய அனுமதித்துவிடாதே, நீ அவற்றின் எஜமானாக மாறி அவற்றை உன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு வெற்றியடை என்று சதீஷ் தவன் கூறுவார். சிக்கலான பணிகளில் ஈடுபடக்கூடிய ஒவவொருவருக்கும் இது அருமையான பாடமாகும்.

டாக்டர்.ராஜாராமண்ணாவும், டாக்டர். அருணாச்சலமும் பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரின் தனித்தன்மையைக் கண்டறிந்து அதை அங்கீகரித்து மதிப்பளிக்க வேண்டும் என்பார்கள். சிக்கலான பணிகளை யாரிடம் ஒப்படைக்கலாம் என்று அவர்களை இனம் கண்டறியக் கடுமையாக உழைக்க வேண்டும் என்று கூறுவார்கள்.

ஆர்.வெங்கட்ராமன் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது படைகளின் தேவை குறித்து நன்கு அறிந்திருந்தார். அந்த தொலைநோக்குப் பார்வை மூலம் பல்வேறு பிரிவுகள் கொண்ட படைகளின் சேவைகளை மேம்படுத்த என்னென்ன செய்யலாம் என்று முடிவெடுத்து அவற்றை நடைமுறைப்படுத் தினார். அவை இன்று பெரும் பயன் தந்துகொண்டிருக்கின்றன.

நரசிம்மராவ் அபாரமான அறிவு படைத்த மனிதர். நாட்டின் முன்னேற்றம் சார்ந்த எந்த ஒரு விஷயத்தையும் சட்டென்று புரிந்து கொண்டுவிடுவார். ஒருமுறை அவர் பாதுகாப்பு ஆலோசனைக் கமிட்டியின் தலைவராக இருந்தபோது, ராணுவ வினியோகப் படையில் (ASC) வினியோகம் மற்றும் போக்குவரத்துப் பிரிவின் டைரக்டர்-ஜெனரலாக இருந்தவர் பால் பண்ணைகளின் செயல்பாடு, அதை மேம்படுத்துவது குறித்து ஒரு அறிக்கை தாக்கல் செய்தார்.

அதில், பண்ணைகளில் எருமைகளுக்கு பதிலாக ஜெர்ஸி பசுக்களை வைத்துப் பராமரித்து பால் உற்பத்தியை அதிகரித் துள்ளதாக டைரக்டர் ஜெனரல் கூறியிருந்தார். உடனே ராவ், எருமைகள் நமது நாட்டின் சீதோஷ்ணத் தன்மைகளுக்கு ஒத்துவரக்கூடியவை, குறைந்த தீவனம்கொடுத்தால் போதும் அதிலிருந்து அதிகப் புரதமுள்ள பால் பெறலாம் என்றார். நாடு தனது பாரம்பரியச் செல்வத்தை இழக்கலாகாது என்று நினைவூட்டினார். எனவே அந்த திட்டத்தை மறுபரிசீலனை செய்து ராணுவ பால்பண்ணைகள் சீரமைக்கப்படவேண்டும் என்று உத்தரவிட்டார்.

இது போலவே மற்றொரு சமயம் 1995-வாக்கில் நான் நாட்டின் பாதுகாப்புப் படைகள் தன்னிறைவு பெற்றதாக அமைவதற்கு ஒரு திட்டம் தயாரித்து அவரிடம் கொடுத்தேன். அதில் நாங்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்று சதவீதத்துக்கும் குறைவான அளவே பாதுகாப்புச் செலவினங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தோம். இது போன்ற அளவுகோல்கள் வைத்துக்கொள்ளக்கூடாது என்று அவர் தெரிவித்தார். பலம் நிறைந்த பாதுகாப்புப் படையை உருவாக்க எது தேவையோ அதைச் செய்துவிடவேண்டும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவு அடிக்கடி மாறக்கூடியது. அதனால் நாம் அதற்கேற்ப செலவுகளைக் கூட்டிக்குறைத்துக் கொண்டிருக்க முடியாது என்றார்.

இன்னொரு சம்பவமும் எனக்கு நினைவிருக்கிறது. பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி அமைப்பின் மூலம் அக்னி ஏவுகணையுடன் சேர்ந்த தொடர்திட்டம் ஒன்றை நிறைவேற்ற வேண்டியிருந்தது. அதன் பிறகே ஏவுகணையை ராணுவ சேவையில் இணைக்க முடியும். என்ன தேவைப்படுகிறது என்பதைச் சட்டென்று புரிந்து கொண்ட நரசிம்மராவ் வெறும் ஒரு பக்கக் காகிதச் செயல்குறிப்பைப் பார்த்ததுமே 800 கோடி மதிப்பிலான அந்த திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கிவிட்டார்.

எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. தேவை அடிப்படையிலான ஒரு நிர்வாக முறையை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தினார். சரியான நேரத்தில் காரியத்தை முடித்து ஏவுகணையைப் படையில் இணைத்துகொள்ள வழி செய்தார்.

அதன் பிறகு நிதியமைச்சர் டாக்டர்.மன்மோகன்சிங் அந்த திட்டத்தை அங்கீகரித்தார். அவரிடம் முறையாக அனுமதி பெறுவதற்கு முன்பே திட்டத்தை பிரதம மந்திரி ஏற்றுக்கொண்டார். அப்புறம் அந்த கோப்பு, திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசுச் செயலாளர்களிடம் சென்றது. திட்டத்தைப் புரிந்துகொண்டு, அங்கீகரித்து மேம்படுத்துவதற்காக மேலிருந்து கீழ் நோக்கிய ஒரு அணுகுமுறைச் செயல்பாட்டுக்கு இது உதாரணமாகத் திகழ்கிறது.

2004-ஆம் ஆண்டு டாக்டர்.சிங்குடன் நெருக்கமாக இணைந்து செயல்படும் வாய்ப்பைப் பெற்றேன். அப்போது பிரதம மந்திரியாக இருந்த அவர் தனது பொருளாதார அறிவைப் பயன்படுத்தி உழைத்தார். நாடு தற்சமயம் ஒன்பது சதவீத வளர்ச்சி விகிதத்தை அதனால்தான் எட்டமுடிந்தது. அவர் பிரதம மந்திரியின் அலுவலகத்திற்குள் இதமான, மனிதாபிமானமான நடைமுறைகளைக் கொண்டு வந்தார்.

விரைவாக முடிவெடுக்கும் குணத்தை அடல் பிகாரி வாஜ்பாஜிடம் பார்த்தேன். 1998-ஆம் ஆண்டு அவர் பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்றவுடன் அணுகுண்டுச் சோதனை நடத்துவதை எனது முதல் பணியாக என்னிடம் ஒப்படைத்தார். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை அவர்தான் இறுதி முடிவெடுப்பார்.

நான் ஏற்கனவே சொன்னதுபோல, இந்தியா 2020-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சி பெற்ற நாடாக மாறிவிடும் என்று டெல்லி செங்கோட்டையின் கொத்தளத்திலிருந்து அறிவித்த முதல் மனிதர் இவர்தான். இதை 2002-ஆம் ஆண்டில்

அறிவித்தார். தொலைநோக்கு இந்தியா 2020 என்ற குறிக்கோளைத் தேசியத்திட்டமாக ஹெச்.டி.தேவகௌடா 1998-ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டார்.

> நல்ல மனிதர்களுடன் பழகும் அனுபவமும் ஒருவிதமான கல்விதான். வாழ்வின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மனிதர்களுடன் சேர்ந்து பழகும் வாய்ப்பை நானும் நிறையவே பெற்றேன்.

7

போட்டியிடும் தேசமாக முன்னேறுகிறது

தேசியப் பொருளாதார முன்னேற்றம் போட்டியிடுவதன் மூலம் அதிகரிக்கிறது. அறிவின் துணையோடு போட்டி உருவாகிறது. தொழில் நுட்பம், புதுமை படைத்தல் மூலம் அறிவு பலம் பெறுகிறது.

பெரும்பான்மையான இந்திய மக்கள் கிராமங்களில் வாழ்கிறார்கள். அந்த கிராமங்களில் வாழும் 750 மில்லியன் மக்களைத் தொழில்நுட்பத்தின் பலன்களைப் பயன்படுத்திச் செழிப்படையச் செய்வது எப்படி என்பதுதான் விஞ்ஞான சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு உள்ள நிஜமான சவாலாகும்.

நாட்டை முன்னேற வைக்கவேண்டும், முன்னேறிய தேசமாக மாற்றுவதற்கு அதுதான் வழி! எனது ஐம்பத்தைந்து வருடகால விஞ்ஞானத்தொழில்நுட்பத்துறை சார்ந்த பணிகளில் இருந்து நான் பெற்ற நம்பிக்கை அது. மூன்று பிரதானமான பிரிவுகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும். வடிவத்தில் சிறியதாகவும், ஆனால் சக்தி நிறைந்ததாகவும் இருக்கக்கூடிய இயந்திரங்களை உருவாக்கும் நானோ தொழில்நுட்பம், மின் நிர்வாகம், பயோடீசல் போன்றவையே அப்பிரிவுகளாகும்.

புதுமை படைப்பதற்கு ஏற்ற அனுசரணையான சூழ்நிலை அவசியம் தேவை. அந்த சூழ்நிலை உருவாகும் முதல் இடமாக

ராஷ்ட்ரபதி பவன் ஏன் இருக்கக்கூடாது என்று கேள்வி என்னுள் எழுந்தது. சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, புதுமையான கண்டுபிடிப்புகளில் ஈடுபடுவது போன்ற காரியங்களுக்குப் பலதரப்பட்ட வல்லுனர்களின் கூட்டுச் சிந்தனை தேவைப்படுகிறது. மாறுபட்ட அபிப்பிராயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து ஒன்றிணைத்து திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

இதன் அடிப்படையில் ராஷ்ட்ரபதி பவனிலும், செகந்தராபாத்திலுள்ள ராஷ்ட்ரபதி நிலையம் என்ற ஜனாதிபதியின் ஓய்வு இல்லத்திலும் மூன்று சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நானோ தொழில்நுட்பக் கருத்தரங்கு, மின்-நிர்வாகக் கருத்தரங்கு, பயோ டீசல் கருத்தரங்கு போன்றவைகளே அந்த முக்கிய நிகழ்ச்சிகள். தேசத்தின் எதிர்காலத்திற்கு இந்த கருத்தரங்குகள் மிகவும் அவசியமாக இருந்தன.

நான் பெங்களூரூவில் உள்ள உயர்நிலை விஞ்ஞான ஆய்வுகளுக்கான ஜவஹர்லால் நேரு மையத்தின் கௌரவத் தலைவர் பேராசிரியர் சி.என்.ஆர். ராவ் அவர்களுடன் நீண்ட விவாதங்கள் நடத்தினேன். இந்தியா, மற்றும் அயல்நாடுகளைச் சேர்ந்த நானோ தொழில்நுட்ப வல்லுனர்களிடமும் இது குறித்து பேசப்பட்டது. இத்துறையின் வளர்ச்சி, எதிர்கால ஆராய்ச்சிகள் எந்தத் திசையில் செல்லவேண்டும், அவை விவசாயம், மருத்துவம், விண்வெளி, எரிசக்தித் துறைகளுக்கு எவ்விதம் பயன்படும் என்று ஆலோசித்தோம். இந்த விவாதங்கள் எனக்கு ராஷ்ட்ரபதி பவனில் ஒரு முழுநாள் கருத்தரங்கை நடத்துவது அவசியம் என்பதை உணர்த்தின. ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிப்பதற்கு இந்த விவாதங்களும், பரிந்துரைகளும் வழிவகுத்துத் தந்தன. இந்த திட்டத்தின் மூலம் முக்கியமான பல கண்டுபிடிப்புகளும், மேம்பாடும் ஏற்பட்டன.

உதாரணமாக, பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் ஒரு எளிய வழிமுறையில் கார்பன் நானோ டியூப் என்ற வடிகட்டியைக் கண்டுபிடித்திருப்பதை அறிந்து பெரிதும் மகிழ்ந்தேன். தண்ணீரிலுள்ள மெல்லிய கரித்துகள்கள் முதல், பெட்ரோலியத்திலுள்ள அடர்த்தியான ஹைட்ரோ கார்பன் வரை அனைத்தையும் இந்த வடிகட்டி சுத்தம் செய்துவிடும் திறன் பெற்றிருந்தது.

டெல்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளும், தொழில்நுட்ப நிபுணர்களும், டாபர் என்ற தனியார்துறை நிறுவனமும் இணைந்து ஒரு மருந்து உட்செலுத்தும் அமைப்பை உருவாக்கினார்கள். அது புற்றுநோய் உயிரணுக்கள் மீது குறிபார்த்து மருந்தைச் செலுத்தும் திறன் பெற்றதாக அமைந்திருந்தது.

இந்தியா வளர்ச்சி பெற்ற நாடாக மாறவேண்டுமானால் சிறப்பானதும், பலன் அளிக்கக்கூடியதுமான ஒரு மின்-நிர்வாக முறை அவசியமாக உள்ளது. அத்துடன் அறிவு பெற்ற ஒரு சமுதாயமாகவும் நாம் உயர்வு பெற்றாக வேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு முறை மாநில, மாவட்ட கிராமப் பகுதிகள்வரை பரவ வேண்டும். அதற்காகத்திட்டமிடுவதற்கும் மேம்பாட்டுப் பணிகளை நடைமுறைப்படுத்தவும் மத்திய, மாநில அரசுகளுடன் தனியார் துறையும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்.

இதை மனதில் கொண்டு நாங்கள் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை அழைத்து மின்-நிர்வாகம் குறித்து கருத்தரங்குகள் நடத்தினோம். ராஷ்ட்ரபதி பவனிலும் மின்-நிர்வாக முறையைச் செயல்படுத்தினோம். நான் நீதித்துறை, கணக்குத் தணிக்கை முகமைகள் போன்ற பிரிவினருக்கு இது குறித்து சொற்பொழிவுகள் மூலம் விளக்கம் அளித்தேன்.

காமன்வெல்த் கூட்டத்திலும் இது பற்றி ஒரு அறிக்கை தாக்கல் செய்தோம். அது மிகுந்த பாராட்டைப் பெற்றது. மின்-நிர்வாகம் மற்றும் ஸ்மார்ட் கார்டுகள் எனப்படும் அடையாள அட்டைகளை எல்லா இந்தியக் குடிமக்களுக்கும் வழங்குவதன் மூலம் சிறப்பான சேவைகள் அளிக்க முடியும். அத்துடன் தீவிரவாதம், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டத்திற்கு நம்முடைய பங்களிப்பையும் வழங்க முடியும்.

தண்ணீர், எரிசக்தி என்ற இரண்டு துறைகளின் வளங்கள் குறைந்து போய் நாம் எதிர்காலத்தில் சிரமங்களுக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்று கருதுகிறேன். ஆளுநர்கள் மாநாடு ஒன்றில் இது குறித்துப் பேசப்பட்டது. நீர்வள அமைப்புகளின் நிர்வாகம், நீர் ஆதாரங்களைச் சேமித்தல், நாட்டிலுள்ள நதிகளை இணைத்தல் போன்ற விஷயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன.

நிலத்தடி எண்ணெய் வளத்தை மட்டும் நம்பியிருக்காமல் மாற்று வழிகளைக் காணவேண்டும் என்று நான் எரிசக்தித் தன்னிறைவு பற்றி அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன். தற்போதைய அவசரத்தேவையாக அது இருந்து வருகிறது. இத்துறையில் நாம் எடுக்க வேண்டிய முக்கிய புதிய முயற்சிகளில் ஒன்று, பயோடீசலாகும். அதற்கு முக்கியத்துவம் தந்து புதிய முயற்சிகள் எடுப்பது பற்றித் தீர்மானிக்கவும், ஒருங்கிணைந்து செயல்படவும் ராஷ்ட்ரபதி நிலையத்தில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் விவசாயிகளும் கலந்து கொண்டார்கள். இத்துறையில் அவர்கள் அனுபவம் பெற்றவர்கள் மட்டுமின்றி எரிசக்தியைப் பயன்படுத்தும் முக்கியமானவர்களாகவும் இருக்கிறார்கள். விவசாயத்திற்குத் தேவையான விதைகளைத் தேர்வு செய்வது அவற்றின் தரம், பயிர்களுக்கு நீர்பாய்ச்சுவதன் அவசியம் போன்ற அம்சங்களும் பயோடீசல் உற்பத்தியுடன்

பிரதான தொடர்புகொண்டுள்ளன. இவை குறித்து விவசாயப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்கள் உரையாற்றினார்கள்.

தரிசு நிலங்களை ஒதுக்கீடு செய்வதில் உள்ள பிரச்சினைகள் குறித்து அரசு அதிகாரிகள் தங்கள் கருத்துகளை எடுத்துரைத்தார்கள். போக்குவரத்து இயந்திரங்களை வடிவமைக்கும் வல்லுனர்கள் தங்கள் அபிப்பிராயங்களை முன் வைத்தனர். பயோடீசலையும், டீசலையும் கலந்து உபயோகிக்கும்போது வாகனங்களின் இயந்திரங்களில் எந்த மாறுதலும் செய்யத் தேவையில்லை. பயோடீசலின் அளவை அதிகரிக்கும் போதுதான் இயந்திரங்களின் வடிவமைப்பில் மாற்றங்கள் தேவைப்படும் என்றார்கள்.

வர்த்தகத் துறைப் பிரதிநிதிகள் இதற்கான முதலீட்டு வாய்ப்புகள், மற்றும் பாதகமான சில அம்சங்கள் குறித்தும் பேசினார்கள். பயோடீசல் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்த எனது கருத்தை நான் கூறினேன். மாநாட்டின் முடிவில் பயோடீசல் பயன்பாடு சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் அங்கிருந்த அனைவருக்கும் வினியோகிக்கப் பட்டன. பயோடீசல் கொள்கையில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டு இருப்பதை அறிந்து மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்த மூன்று மாநாடுகள் தவிர தொழில்நுட்ப மாநாடு ஒன்றும் ராஷ்ட்ரபதி பவனில் நடத்தப்பட்டது.

2006-ஆம் ஆண்டு 'இஸ்ரோ'வின் அப்போதைய தலைவராக இருந்தவர் என்னிடம் நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் கூறினார். அதில் நிலவை ஆராய்வதற்கு ராக்கெட் அனுப்பும் சந்திராயன் திட்டமும் அடக்கம். விண்வெளிக்கு மனிதர்களை அனுப்புவது, மற்ற கிரகங்களை ஆராய்வது போன்ற பணிகளுக்கான முதல் படிக்கட்டு இது என்று நான் உறுதியாக நம்பினேன்.

அந்த விண்வெளிக்கலம் சந்திரனைச் சுற்றி வலம் வரும். அங்கிருந்து அக்கோளில் அமைந்துள்ள இரசாயன, புவியியல்

மற்றும் கனிம வளங்களின் தன்மைகள் பற்றிய விஞ்ஞானத் தகவல்களை சமிக்ஞை வடிவில் பூமிக்கு அனுப்பும் என்று தெரிவித்தார். மேலும் அவர், இந்த பயணத்தின்போது பல்வேறு வகையான விஞ்ஞானக் கருவிகளும் அங்கே எடுத்துச் செல்லப்படும் என்றார். இது குறித்த நடவடிக்கைகளுக்கு இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் இஸ்ரோவிடம் உள்ளது என்றார்.

இந்த பயணத்தின்போது சந்திரனில் இருந்து நேரடியாக பூமிக்குத் தகவல் அனுப்பும் கருவி ஒன்றை எடுத்துச்செல்ல வேண்டும். அந்த அலைவரிசையின் வழியே கிடைக்கும் தகவல்கள் சந்திரனின் தன்மை குறித்து தெளிவான முடிவுக்கு வருவதற்கு உதவும் என்று நான் எடுத்துரைத்தேன். அந்தக் கருவியை இணைத்து அனுப்புவதாக அவர் உறுதியளித்தார். இது சந்திரனின் மேற்பரப்பை ஆராயும் ஒரு இயந்திரம் உருவாகுவதற்குக் காரணமாகிவிட்டது. சந்திராயன் பயணத்தில் அதுவும் ஒரு அங்கமாயிற்று. சந்திரனின் தரைப்பகுதியை ஆய்வு செய்யும் அந்த இயந்திரம் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 14-ம் தேதி திட்டமிட்டு வைத்திருந்த சரியான இடத்தில் நிலவில் தரை இறங்கியது. இந்த சிறப்பான சாதனையை நிகழ்த்திக் காட்டிய இஸ்ரோ குழுவினரை நான் மனதாரப் பாராட்டினேன்.

ராஷ்ட்ரபதி பவனில் எடுக்கப்பட்ட முன் முயற்சிகளின் காரணமாக இரண்டு சிறந்த தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டன. அந்த முயற்சிகளுக்கு நானும் பங்களிப்பு செய்திருக்கிறேன் என்பது எனக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது.

2011-ஆம் ஆண்டின் உலகின் புதிய கண்டுபிடிப்புகள் குறித்த அறிக்கையை நான் படித்துப்பார்த்தபோது அதில் இருந்த அட்டவணையில் ஸ்விட்சர்லாந்து முதலிடத்திலும், ஸ்வீடன் இரண்டாவது இடத்திலும், சிங்கப்பூர் மூன்றாம் இடத்திலும், ஹாங்காங் நான்காம் இடத்திலும் இருப்பதைப்

பார்த்தேன். அந்த அட்டவணையில் இந்தியா 62-வது இடத்தில் இருந்தது. போட்டிகளுக்கும் புதுமை அட்டவணைக்கும் எப்போதும் சம்பந்தம் இருந்துவருகிறது.

இந்தியா 62-வது இடத்தில் இருந்தபோது, 2010-11 ஆம் ஆண்டுகளில் நமது நாடு போட்டியிட்டு முன்னேறும் நாடுகளின் அட்டவணையில் 56-வது இடத்தில் இருந்துவந்தது. தனது 56-வது இடத்திலிருந்து இந்தியா முன்னேறிச் சென்று வளர்ந்த நாடுகளுக்குச் சமமான இடத்தைப் (Top-10) பெறவேண்டுமானால் நாம் சிறப்பான வடிவமைப்புத் திறன் பெற்றவர்களாக மாறவேண்டியது அவசியமாகும்.

நாட்டின் தற்போதைய வளர்ச்சிநிலை விஞ்ஞானத் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மூலமே ஏற்பட்டிருக்கிறது. வேறு எங்கோ கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்கள், பிறநாடுகளுடன் கூட்டாக இணைந்து கண்டுபிடித்தவைகளின் வாயிலாக நாம் வளர்ச்சி பெறுகிறோம். அவை பத்து முதல் பதினைந்து ஆண்டுகள் பழைமையான கண்டுபிடிப்புகள். விஞ்ஞானத்துறையின் நவீனமான கண்டுபிடிப்பு உத்திகளை முன்னேறிய நாடுகள் இந்தியாவுக்குத் தருவதில்லை. அந்த விஷயங்கள் நம் கைக்கு வந்து சேர பத்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். எனவே, அடிப்படை அறிவியல் துறையில் நாம் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகிறது. அப்போதுதான் உலகப் போட்டியில் நாம் விரும்பிய இடத்தை எட்டமுடியும்.

தனக்குத் தேவையான தொழில் நுட்பத்தை உருவாக்கிக் கொள்ள இந்தியா முயற்சி செய்த சம்பவத்தைக் கீழே தருகிறேன்.

நாங்கள் சமீபத்தில் புதிய ஒரு மைல்கல்லைக் கடந்தோம். 2012-ஆம் ஆண்டு ஏப்ரல் 19-ம் தேதி ஒடிசா கடற்பகுதியில் உள்ள வீவர்தீவு ராக்கெட் ஏவுதளத்தில் பரபரப்பு உச்சகட்டத்தை எட்டியிருந்தது.

ஐம்பது டன் எடையும், 17.5 மீட்டர் உயரமும் கொண்ட பிரும்மாண்டமான அக்னி V ஏவுகணை வானில் செலுத்து வதற்குத் தயாராகச் செங்குத்தாக நிறுத்தப்பட்டிருந்தது. ஏவுகணையைச் செலுத்துவதற்கு முன்பு நடக்கும் பரிசோதனைகள் துவங்கியிருந்தன. காலை 8.07 நிமிடத்திற்கு 'கவுண்ட் டவுன்' தொடங்கியது. அதன்பிறகு ராக்கெட்டின் முதல் கட்டப்பகுதி பற்றவைக்கப்பட்டதும் ஒரு பெரிய நெருப்புக் கோளம் எழுந்தது.

அக்னி V மெதுவாக மேலே எழுந்து ஏவுதளத்திலிருந்து கிளம்பியது. ஒலிபெருக்கி வாயிலாக விஞ்ஞானிகள் கருவிகளின் செயல்பாட்டைச் சோதித்துச் சொல்லிக் கொண்டேயிருந்தனர். அவர்களின் குரலில் அமைதியிருந்தது. ஆனால் பார்வையாளர்கள் பதட்டத்துடன் காணப் பட்டார்கள். 90வினாடிகளுக்குப் பிறகு ராக்கெட்டின் முதல் கட்டப் பகுதி எரிந்து விடுபட்டுக் கீழே விழுந்தது. நிர்ணயிக்கப் பட்ட வேகத்துடன் வானில் ஏவுகணை பயணித்தது.

அடுத்து ராக்கெட்டின் இரண்டாம் பகுதியும் எரிந்து விடுபட்டது. சில நிமிடங்களில் ஏவுகணை வானைத் தொட்டுவிட்டது. அதன் பிறகு அது தென்திசையில் 2000 கி.மீ. தூரம் சீறிக்கொண்டு பயணம் செய்து பூமத்திய ரேகையைத் தாண்டியது. தொடர்ந்து பிரயாணம் செய்து மேலும் 3,000 கி.மீட்டர் தூரத்தைக் கடந்து மகர ரேகையை (Tropic of capricorn) அடைந்தது.

ஏவுகணை அங்கிருந்து சரேலென்று கீழ் நோக்கித் திரும்பி ஆகாயவெளியிலிருந்து ஆப்பிரிக்காவின் தென்முனைக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் நடுவே பாய்ந்தது. ஏவுகணை வானில் ஏவப்பட்டது முதல் அது கீழ் நோக்கிப் பாய்ந்ததுவரையிலான செயல்கள் யாவும் 20 நிமிடத்தில் நடந்தேறின.

இந்தியக் கடற்படைக் கப்பல்கள் ஏவுகணையின் பயணப் பாதையைக் கண்காணித்து வந்தன. அது சென்று சேரவேண்டிய

இடம்வரை இக்கண்காணிப்பு நடந்தது. திட்டமிட்டபடி ஏவுகணை தனது இலக்கைத் துல்லியமாகத் தாக்கி வெற்றி பெற்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட தன்னியக்க ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்திற்காக (IGMDP) 1983-ஆம் ஆண்டு 400 கோடிரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நான்கு ஏவுகணைகள் தயாரித்து மேம்படுத்துவதற்கான தொகை அது. அந்த நான்கு ஏவுகணைத் திட்டங்களின் பெயர்களைப் பார்ப்போம்.

தரையிலிருந்து புறப்பட்டு தரையிலுள்ள மற்றொரு இலக்கைத் தாக்கும் ஏவுகணை (பிருத்வி).

தரையிலிருந்து புறப்பட்டு வான் இலக்கைத் தாக்கும் நடுத்தரத் தொலைவு ஏவுகணை (ஆகாஷ்)

தரையிலிருந்து கிளம்பி வேகமாகச் செயல்பட்டு குறுந்தொலைவு இலக்குகளைத் தாக்கும் ஏவுகணை (திரிசூல்)

ராணுவ டாங்க்குகளைத் தாக்கும் ஏவுகணை (நாக்)

இதுதவிர தொழில்நுட்பத் திறனை வெளிப்படுத்தும் ஏவுகணை (அக்னி) ஒன்றும் ஏவுவதற்காக திட்டம் இருந்தது. தொலைதூர இலக்குகளைத் தாக்கும் ஏவுகணை வானிலிருந்து பூமியின் காற்றுமண்டலப் பகுதிக்குள் நுழையும்போது ஏற்படும் மாறுதல்களைக் காணவும் இது உதவும். இத்தொழில் நுட்பம் 1989-ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒடிசா கடற்கரைப் பகுதியில் செயல்படுத்திப் பார்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அக்னி I,II,III மற்றும் IV ஆகியவை கடந்த இரண்டு பத்தாண்டுகளில் ஏவப்பட்டன. அவை தாக்குதலின் தூரத்தை அதிகரிக்க உதவின.

கடைசியாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் (DRDO) விஞ்ஞானிகளும், பொறியாளர்களும் அக்னி V ஏவுகணையை பரிசோதனை ரீதியில் பறக்கவைக்கத்

தேவையான வசதிகளைப் பெற்றனர். 5000 கி.மீ தூரம் சென்று தாக்கும் ஏவுகணையாக அது வடிவமைக்கப்பட்டிருந்தது.

இந்த ஏவுகணைகள் எல்லாம் ஏவுகணைத் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டு அதிகார அமைப்பின் (MTCR) கீழ் வருகின்றன. இதற்குத் தேவையான வேறு பல ஒப்புதல்களையும் அவர்களிடமிருந்து பெற்றாக வேண்டும். எனவே இந்த ஏவுகணைகளையோ தொழில்நுட்பங்களையோ பிறரிட மிருந்து விலைக்கு வாங்க இயலாது. முறையான திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிகள் மூலம்தான் இவற்றை உருவாக்கித் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டாக வேண்டும்.

எனவே இந்த ஏவுகணை சோதனையில் வெற்றிபெறுவது மிகவும் அவசியமாகிறது. சிக்கலான தொழில்நுட்பங்களில் நாம் சுயசார்பு பெற்று நாட்டை வலுவுள்ளதாக மாற்றும்போது தான் சுதந்திரமான முறையில் அயலுறவுக் கொள்கைகளை உருவாக்கிக்கொள்ள இயலும்.

அக்னி V ஏவப்பட்டது குறித்து எனது நண்பர் வி.கே.சரஸ்வத்தும் அவரது குழுவினரும் என்னிடம் சுருக்கமான முறையில் விபரங்களை எடுத்துரைத்தார்கள்.

கொஞ்சம் பழைய சம்பவங்களை நினைவுபடுத்த எனக்கு அனுமதியளியுங்கள். 1984,1991-ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற உரையாடல்களைக் குறிப்பிடப் போகிறேன். நான் ஹைதராபாத்தில் இருந்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பரிசோதனைக்கூடத்தின் இயக்குனராக அப்போது பணியாற்றினேன்.

ஒருங்கிணைக்கப்பட்ட தானியங்கி ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்திற்குப் பிரதம மந்திரி இந்திராகாந்தி 1983-ஆம் ஆண்டு தனது அமைச்சரவை மூலம் ஒப்புதல் அளித்தார். அத்திட்டம் பற்றி மேலாய்வு செய்வதற்காக அடுத்த ஆண்டு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பரிசோதனைக் கூடத்திற்கு வந்தார்.

திட்டம் எந்த அளவு முன்னேற்றம் கண்டிருக்கிறது என்ற விபரத்தை அவரிடம் கூறினோம். கருத்தரங்கு மண்டபத்தின் சுவரில் ஒரு உலகப்படம் தொங்கிக்கொண்டிருந்தது. திருமதி. இந்திராகாந்தி அதைப் பார்த்தார். திட்டத்தின் முன்னேற்றம் குறித்து நாங்கள் சொல்லிக்கொண்டிருந்ததை எல்லாம் நிறுத்தச் சொன்னார். எங்கள் கவனத்தை உலகப் படத்தின்மீது திருப்பினார்.

''கலாம்! இந்த உலகப்படத்தைப் பாருங்கள். இங்கே காட்டப்பட்டுள்ள இடைவெளிகளைக் கவனியுங்கள். நமது எந்த ஒரு அவசரத் தேவையையும் சமாளிக்கும் வகையில் நெடுந்தொலைவு பாய்ந்து சென்று தாக்கக்கூடிய ஏவுகணையை இந்த பரிசோதனைக் கூடம் எப்போது தயாரித்து ஏவப்போகிறது?'' என்று கேட்டார். (அவர் குறிப்பிட்டது இந்தியக் கடல் எல்லைக்கு அப்பால் 5000 மைல் தூரத்தில் இருந்த இடம் பற்றியதாகும்)

நமது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் விஞ்ஞானிகள் அரசியல் நிபுணத்துவம் பெற்ற அந்த அம்மையாரின் கனவை இன்று நிஜமாக்கிக் காட்டி விட்டார்கள். பிருத்வி வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப் பட்டதும் இந்திய ராணுவம் முக்கியமான ஒரு தனது தேவையை முன் வைத்தது. நீண்ட தொலைவு சென்று ஏவுகணை துல்லியமாகத் தாக்குதல் நடுத்தும் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள ஒரு பரிசோதனை நடத்திப் பார்க்க விரும்பியது. Circular Error Probability (CEP) என்ற அந்த பரிசோதனைக்கு பாலைவனப் பகுதியைத் தேர்வு செய்வது பாதுகாப்பானதாக இருக்காது. மேலும் அதில் புவியியல் சார்ந்த அரசியல் பிரச்சினைகளும் ஏற்படலாம் என்பதால் கிழக்குக் கடற்கரையில் இருந்த ஏதாவது ஒரு ஆளில்லாத தீவில் சோதனை நடத்த முடிவு செய்தோம்.

கடற்படையினர் வழங்கிய சமுத்திர வரைபடத்தைப் பார்வையிட்டபோது வங்காள விரிகுடாப் பகுதியில்

தம்ராவுக்கு அப்பால் (ஒடிசா கடற்கரையோரம்) சில தீவுகள் இருப்பதைக் கண்டோம். இலக்கிற்கான இடத்தைத் தேர்வு செய்ய ஏற்படுத்தப்பட்ட குழுவினர் டாக்டர்.எஸ்.கே.சால்வன், டாக்டர். வி.கே.சரஸ்வத் ஆகியோருடன் வாடகைப் படகில் கடலுக்குள் சென்றனர். தம்ராவிலிருந்து கிளம்பி தீவைத் தேடிக்கொண்டு பயணித்தார்கள்.

கடல் வரைபடத்தில் அந்த தீவுகள் லாங்வீலர், கோகனட் வீலர், ஸ்மால் வீலர் என்று குறிப்பிடப்பட்டிருந்தன. திசைகாட்டும் கருவியின் துணையோடு அவர்கள் பிரயாணம் நடைபெற்றது. ஆனால் எப்படியோ வழிதவறிவிட்டனர். அவர்களால் வீலர் தீவு இருக்குமிடத்தைக் கண்டறிய முடியவில்லை. அதிர்ஷ்டவசமாக அவ்வழியே சில மீன்பிடி படகுகள் சென்றன. அவர்களிடம் தீவுக்குச் செல்ல வழி கேட்டார்கள்.

மீனவர்களுக்கு வீலர் தீவு பற்றி எதுவும் தெரியவில்லை. ஆனால் சந்திரசூட் என்ற பெயரில் ஒரு தீவு சற்று தொலைவில் இருப்பதாகக் கூறினார்கள். தாங்கள் தேடும் தீவுகளில் ஒன்றாக அது இருக்கலாம் என்று குழுவினர் நினைத்தார்கள். மீனவர்கள் அந்த தீவுக்குச் செல்லும் திசையைக் காட்டினர். குழுவினர் அவ்வழியே சென்று சுந்திரசூட் தீவை அடைந்தனர். பின்னர் அதுதான் ஸ்மால் வீலர் என்ற தீவு என்பது ஊர்ஜிதமாயிற்று. ஏவுகணைச் சோதனை நடத்தத் தேவையான நீள அகத்துடன் அத்தீவு அமைந்திருந்தது.

அந்த தீவைக் கையப்படுத்த நாங்கள் ஒடிசா மாநிலத்தின் அதிகாரவர்க்கத்துடன் போராட வேண்டியிருந்தது. முதலமைச்சர் வாயிலாக அரசியல் தீர்வு காணவேண்டிய அவசியம் ஏற்பட்டது. சக்தி வாய்ந்த தேசியத் தலைவரான பிஜுபட்நாயக் அப்போது (1993) முதலமைச்சர் பொறுப்பில் இருந்துவந்தார். மாநிலத்தின் கட்டுப்பாட்டிலிருந்து தீவைத் தனியே பிரிக்கக்கூடாது என்பதற்கு முதலமைச்சரின்

அலுவலகம் பல காரணங்களை எடுத்துரைத்தது. ஆனாலும் எங்கள் வேண்டுகோளை எடுத்துரைக்க அவரைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கப்பட்டது.

நாங்கள் அவரது அலுவலகத்திற்குச் சென்றபோது தீவு சம்பந்தப்பட்ட கோப்பு அவர் மேஜை மீது இருந்தது. முதலமைச்சர் என்னிடம் 'கலாம்! நான் அந்த ஐந்து தீவுகளையும் சும்மாவே உங்களுக்கு (DRDO) தருவதென்று முடிவு செய்துவிட்டேன். நீங்கள் எனக்கு ஒரு உறுதிமொழி கொடுத்தால்தான் நான் அதற்கான ஒப்புதல் கோப்பில் கையொப்பமிடுவேன்'' என்று கூறிய முதலமைச்சர் எனது கையைப் பற்றிக்கொண்டு கேட்டார்.

''இன்னும் தொலைதூரத்திலிருந்து வரும் அச்சுறுத்தல் களையும் சமாளிக்கவல்ல ஒரு ஏவுகணையை நீங்கள் உருவாக்க வேண்டும்!''

''நிச்சயம் அதற்கான பணிகளை நாங்கள் செய்கிறோம், ஐயா!'' என்று நான் பதில் அளித்தேன். இந்த தகவலை நான் உடனே பாதுகாப்பு அமைச்சருக்குத் தெரிவித்தேன். முதலமைச்சர் கோப்பில் கையொப்பமிட்டதும் தீவு எங்களுக்குக் கிடைத்தது.

வாசகர்களே, இஸ்ரோ நிறுவனம் கடந்த 2012, ஏப்ரல் மாதம் 26-ம் தேதி இந்தியாவின் முதல் ரேடார் இமேஜ் செயற்கைக்கோளை (RISAI-I) ஏவியது உங்களுக்கு நினைவிருக்கலாம். அந்த செயற்கைக் கோளை துருவச் செயற்கைக்கோள் ஏவுவாகனம் (PSLV-C19) சுமந்து கொண்டு ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ்தவன் விண்வெளி மையத்திலிருந்து புறப்பட்டது. அந்த செயற்கைக்கோள் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டதும் அதனுடைய சூரிய ஒளித்தகடுகளும், சி-பாண்ட் சிந்தெடிக் அபர்ச்சர் ரேடார் ஆன்டெனா தகடுகளும் வெற்றிகரமாக துல்லியமாக விரிந்து கொண்டன.

தொடர்ந்து அந்த செயற்கைக்கோள் நான்கு சுற்றுப் பாதை நிலைகளைக் கடந்து, துருவச் சூரிய ஒருங்கிணைப்பு சுற்றுப்பாதையை அடைந்தது. தெளிவான படங்கள் கங்கோத்திரி மூலம் போபால், வடக்கு கர்நாடகப் பகுதிகளில் உள்ள தரை நிலையங்களுக்கு 2012-ஆம் ஆண்டு மே 1-ம் தேதி வந்து சேர்ந்தன.

மற்ற ஆப்டிகல் சென்சிங் செயற்கைக் கோள்களைப் போல் அல்லாது இந்த செயற்கைக்கோள் தனது சொந்த ரேடார் அதிர்வலைகளைத் தானே உருவாக்கிக்கொண்டு பூமியின் மேற்பரப்பைப் படம் எடுக்கிறது. சூரியஒளி இல்லா விட்டாலும், வானில் மேகமூட்டம் சூழ்ந்திருந்தாலும் தடையின்றிப் படம் எடுக்க முடியும். சீதோஷ்ண நிலை, சூரியஒளி போன்றவை ஒத்துழைக்காத நேரத்திலும் படம் பிடிப்பது சாத்தியமாகிறது. RISAT-I செயற்கைக்கோள் பல்வேறு விதங்களிலும் படம் பிடிக்கவல்லது.

1 முதல் 50 மீட்டர் அகலமுள்ள இடம் தொடங்கி, 10 முதல் 233 கி.மீ அகலமுள்ள நிலப்பரப்பு வரை அது தெளிவாகப் படம் பிடித்துக் காட்டிவிடும். கரீஃப் பருவ நெல் விவசாய சாகுபடி நிலங்களின் வரைபடங்கள், நிலங்களை ஏக்கர் வாரியாக வகைப்படுத்தி அளவீடு செய்தல், பேரிடர் மேலாண்மையின் ஒரு பகுதியாக வெள்ளம் பாதித்த, புயல் தாக்கிய பகுதிகளை ஆராய்தல் போன்ற எண்ணற்ற காரியங்களுக்கு RISAT-I செயற்கைக் கோள் பயன்படும்.

இவை விண்வெளித் துறையில் நமது செயல்பாடுகள், நம்பிக்கையுடன் நடைபோடும் விதத்தைக் காட்டும் ஒரு சிறிய துணுக்குகளே ஆகும். விரிவாகச் சொல்ல வேண்டிய அளவுக்கு பல வெற்றிகளை நாம் சாதித்திருக்கிறோம். உதாரணம் காட்ட வேண்டுமானால் கடற்படையின் லேசுரகப் போர் விமானத்தின் சோதனையோட்டம் பற்றிக் கூறலாம்.

மேகமூட்டம் சூழ்ந்த நாளில் பெங்களூரு தளத்தில் அது நிகழ்த்தப்பட்டது. லேசுரகப் போர் விமானம் (Light Combat Aircraft (LCA) தனது கன்னிப் பயணத்தின் மூலம் நான்காம் தலைமுறையைச் சேர்ந்த நவீன Carrier-borne fly-by-wire 'skitake off but arrested recovery' (stober) விமானங்களைத் தயாரிக்கும், வடிவமைக்கும், உருவாக்கும் நாடுகளின் வரிசையில் ஒன்றாக இந்தியாவும் இடம் பெற்றுவிட்டது.

கடற்படையின் இந்த மாறுபட்ட புதிய விமானம், பல்பயன்பாட்டு ஆற்றல் அளிக்கும் புதிய முயற்சியாகும். இந்திய ராணுவக் கடற்படையின் விமானப் பிரிவு 21-ம் நூற்றாண்டின் புதிய போர்முறைகளில் ஈடுபடும் வல்லமை பெற்றுவிட்டதை இது காட்டுகிறது. புதிய வடிவமைப்பில் இருந்த சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெற்றது மூலமே இந்த பலன்கள் கிடைத்தன.

தகவல் தொழில்நுட்பம், செய்திப் பரிமாற்றத் தொழில் நுட்பம் போன்றவை குறுகிப்போய், செய்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்று மாறிவிட்டது. தகவல் தொழில் நுட்பமானது உயிரித் தொழில் நுட்பத்துடன் (Biotechnology) ஒன்றிணைக்கப்பட்டு பயோஇன்ஃபார்மேடிக்ஸ் என்று மாறிவிட்டது. அதுபோலவே ஒளிப்படத்துறையானது ஆய்வுக்கூடத்தின் துணையோடு மரபு சார்ந்த மின்னணு, நுட்பமின்னணுகளுடன் சேர்ந்து வாடிக்கையாளர்களின் உபயோகப்பொருட்களில் இடம் பெற்று விரைவுத் தேர்வுக்கு வாய்ப்பளித்துள்ளது. நெகிழ்ச்சித்தன்மையுள்ள, உடையாத டிஸ்பிளேக்களில் மெல்லிய ஒளி ஊடுருவும் பாலிமர் படத்தகடுகள் பயன்படுத்தப்பட்டு, அவை பொழுதுபோக்கு மற்றும் ஊடகக் கருவிகளின் நவீன அடையாளமாக மாறிவிட்டன. இப்போது அங்கே நானோ தொழில்நுட்பம் வந்து சேர்ந்துள்ளது. அது எதிர்காலத்தில் மைக்ரோ எலெக்ட்ரானிக்ஸை ஒதுக்கித் தள்ளிவிட்டு மருத்துவம்,

மின்னணு, மெட்டீரியல் சயின்ஸ் துறைகளில் பலவகைகளிலும் நிறையப் பயன்படுத்தப்பட வாய்ப்பு அமைந்துள்ளது.

நானோ தொழில்நுட்பமும், தகவல் தொடர்புத் தொழில் நுட்பமும் இணையும்போது சிலிகான் எலெக்ட்ரானிக்ஸ், போட்டோனிக்ஸ் போன்றவை பிறக்கின்றன. இதன் மூலம் பல்வேறு உபயோகப்பொருட்களில் பெரிய மாற்றங்கள் ஏற்படவிருக்கின்றன. இந்த மாற்றங்களுடன் உயிரித் தொழில் நுட்பம் சேரும்போது இன்டெலிஜென்ஸ் பயோசயின்ஸ் உருவாகும். அப்போது மனித சமுதாயம் நோயற்றதாகவும், நெடுங்காலம் உயிர்வாழும் திறனுடனும் சிறந்த ஆற்றல் களுடனும் திகழும்.

விஞ்ஞானத் துறையில் ஏற்படும் மாற்றங்கள் ஒன்றுக் கொன்று உதவி செய்து கொள்கின்றன. அதற்கு ஒரு உதாரணம் தருகிறேன். நான் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்குச் சென்றபோது புகழ்பெற்ற பேராசிரியர்களின் ஆராய்ச்சிக் கூடங்களுக்குச் சென்றேன். ஹார்வர்ட் ஸ்கூலின் பொறியியல், பயன்பாட்டு அறிவியல் துறைகளில் தேர்ச்சி பெற்ற இவர்களில் ஒருவரான பேராசிரியர். ஹாங்கன் பார்க் என்பவர் காண்பித்ததை நினைத்துப் பார்க்கிறேன்.

அவர் கண்டுபிடித்த நானோ ஊசிகள் மனித உடலிலுள்ள குறிப்பிட்ட ஒரு உயிரணுவை குறிவைத்து இயங்கி அதில் மருந்தைச் செலுத்திவிடுகின்றன. உயிரி அறிவியல் துறையை எவ்வாறு நானோ துகள் அறிவியல் (Nanoparticle science) வடிவமைக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதன் பிறகுதான் பேராசிரியர் வினோத் மனோகரனைச் சந்தித்தேன். இதற்கு மாறுபட்ட முறையில் உயிரி அறிவியல் எவ்வாறு நானோ அறிவியலை வடிவமைக்கிறது என்பதைக் காட்டினார்.

ஒரு DNA பொருளை ஓர் குறிப்பிட்ட துகளின்மீது அணுநிலையில் செயல்படுத்தினால் அது தனது முந்தைய

குணாதியசங்களின்படி செயல்புரிந்து தானே ஒருங்கிணைப்பு செய்து கொள்ளும். பொருட்கள் தன்னைத்தானே வடிவமைப்பு செய்துகொள்ளவும், வெகுதூரத்தில் விண் வெளியில் மனிதர்களின் தலையீடு இல்லாமல் குடியிருப்பு களை உருவாக்கவும் டாக்டர் கே.எரிக் டிரெக்ஸர் கனவு கண்டதை நிஜமாக்கும் முயற்சிக்கு இது பாதையாக அமைகிறது. ஒரு சிறிய கட்டிடத்திற்குள் இரண்டு வெவ்வேறு துறைகள் ஒன்று சேர்வதை நான் அங்கே கண்டேன்.

விஞ்ஞானத் துறைகள் ஒன்றுக்கொன்று உதவிக்கொள்ளும் செயலானது நமது எதிர்காலத்திற்கும், தொழில்துறைத் தேவைகளுக்கும் ஈடுகொடுக்கத் தயாராக இருப்பதைக் காட்டுகிறது. பல்வேறு தொழில்நுட்பத்துறைகளின் இடையே இருக்கும் தடைகளை அகற்றி ஆராய்ச்சிகளுக்கு வழியமைக்க வேண்டியது அவசியமாகும்.

கடைசியாக உலக அளவில், ஒரு நாடு தொழில்நுட்பத் துறையில் முதன்மை பெற்று அதைத் தக்கவைத்துக் கொண்டாக வேண்டும். முன்னேற்றத்தை நோக்கிச் செல்வதற்குத் தேவையான முக்கியமான அம்சமாக அது இருந்து வருகிறது. 21-ம் நூற்றாண்டின் அறிவு சார்ந்த சமூகத்தின் நான்காவது பரிமாணமாக அது அமைகிறது. அதில் விஞ்ஞானம், தொழில் நுட்பத் துறை, சுற்றுச்சூழல் போன்றவை ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். எனவே, புதுஉலக வடிவம் என்பது உயிரி-நானோ-தகவல் தொழில்நுட்பம்-சுற்றுச்சூழல் போன்ற துறைகளின் சேர்க்கை நான்காவது பரிமாணமாக மாறுகிறது.

நீங்கள் செய்யப்போகும் எந்தக் காரியத்திற்காக இந்த நாடு உங்களை நினைவில் கொண்டிருக்கும் என்று நினைக்கிறீர்கள்? அதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அது சமூகத்திற்கு நீங்கள் கொடுத்த சிறந்த பங்களிப்பாக இருக்கலாம், அல்லது ஒரு கண்டுபிடிப்பாக இருக்கலாம்; சிலருக்கு உத்வேகம்

தந்து ஊக்கப்படுத்தியிருக்கலாம்; அல்லது ஒரு சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தி உங்களை நினைவில் கொள்ளும்படி ஏதாவது செய்திருக்கலாம். அது பற்றி நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

8

மெழுகுவர்த்தியும் விட்டில் பூச்சிகளும்!

விளக்குகள் வித்தியாசப்படலாம்
ஆனால் ஒளி ஒன்றுதான்.
உலக இன்பங்களின் பொருட்டு
புறஉலகம் நோக்கிச் சென்று விடுகிறீர்கள்.
ஆனாலும் நீங்கள் என் அந்தராத்மாவில்
நிலைத்துத் தங்கியிருக்கவே செய்கிறீர்கள்.

1999-ஆம் ஆண்டு ஜனவரி 11-ம் தேதி ஆகாயமிதவைக் கண்காணிப்பு மேடை விபத்துக்குள்ளானது என் மனதை நொறுங்கிப் போக வைத்துவிட்டது. அது விஞ்ஞான முயற்சிப் பரிசோதனைகளின் வித்தியாசமான இன்னொரு முகத்தை எனக்கு உணர்த்தியது.

நானும் எனது நண்பர் பேராசிரியர் அருண் திவாரியும் இது பற்றிப் பேசிக்கொண்டது இப்பரிசோதனை திட்டமிட்டபடி வெற்றி பெறாது போனது குறித்த என் உணர்வுகளை வெளிப் படுத்துவதாக அமைந்திருந்தது. மேலும் அது திட்டத்தில் இணைந்து பணிபுரிந்தவர்களுக்கான புகழ்மாலையாகவும் இருந்தது.

அருண்திவாரி (AT) : *பிரச்சினைகளும், தீவிரமான சம்பவங்களும் நிகழும்போது வாழ்க்கை குறித்த சிக்கல்கள் பொதுவாக தலைதூக்குகின்றன. சுயபரிசோதனை செய்து*

கொள்ளும்போது இது எழலாம். ஆணவத்தின் கட்டமைப்பை ஊடுருவிக்கொண்டு மனம் உள்ளே செல்லக் கற்றுக்கொள்ளும் போது பிரச்சினைகள் எழுகின்றன. ஃபிரான்ஸ் காஃப்கா இக்கருத்தை மையமாக வைத்துத் தனது புகழ்பெற்ற 'Metamorphosis' என்ற படைப்பை உருவாக்கியிருக்கிறார்.

அப்துல்கலாம்: *என்னால் அதை புரிந்துகொள்ள முடிகிறது. முதல் முறையாக SLV-3 பறக்க வைக்கப்பட்டபோது ஏற்பட்ட தோல்விகளும், அக்னி ஏவுகணையை முதல்முறையாகப் பறக்கவைக்க முயன்றபோது ஏற்பட்ட இடையூறுகளும் என்னைப் பற்றி நான் அர்த்தபூர்வமாக அறிந்துகொள்ள உதவின. ஆனால் 1999 ஆம் ஆண்டு அரக்கோணத்தில் நடந்த விபத்து என்னை அரண்டுபோகச் செய்துவிட்டது. எனது ஆணவத்திற்கும் அது அடியாக அமைந்தது.*

அருண்திவாரி : *அது பற்றி நீங்கள் விவாதித்ததேயில்லை. கடல் போன்று விரிந்த உங்கள் பணிச்சுமையின் உள்ளே ஆழ்ந்து துயரங்களை என்னால் மட்டுமே கண்டுகொள்ள முடிகிறது. அதை என்னுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறீர்களா?*

அப்துல்கலாம்: *எனது எண்ணங்களைப் பரிமாறிக் கொள்வது என்பதைவிட இந்த விஞ்ஞான முயற்சியில் தங்கள் உயிரை அர்ப்பணித்துக்கொண்ட எட்டு இளைஞர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கவே விரும்புகிறேன். முகமறியாத அந்தக் கதாநாயகர்களை இந்த நாடு புரிந்துகொள்ளவேண்டும். அவர்களது குடும்பத்தின் வேதனையை நாம் பகிர்ந்து கொள்ளவேண்டும்.*

அருண்திவாரி : *1999-ஆம் ஆண்டு நடந்த ஆகாயமிதவைக் கண்காணிப்பு மேடை பற்றித்தானே ஐயா சொல்ல வருகிறீர்கள்?*

அப்துல் கலாம்: *ஆமாம். அந்த மேடை அரக்கோணம் அருகே அடர்ந்த காட்டுப் பகுதியில் விபத்துக்குள்ளாயிற்று.*

அருண்திவாரி : கே.ராம்சந்த்திடம் இது பற்றி நான் ஒருமுறை பேசியிருக்கிறேன். அதில் அவர் சிஸ்டம் என்ஜினியராக இருந்தவர். அந்த கண்காணிப்பு மேடையை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட ஆவ்ரோ விமானம் இரண்டு மணிவாக்கில் புறப்பட்டது. சென்னைக் கடற்கரைப்பகுதியை நோக்கி 10,000 அடி உயரத்தில் பறந்தது.

அரக்கோணம்-சென்னை கடற்கரைக்கு இடையே உள்ள பகுதியில் ரேடார் சோதனைகள் நடத்தப்பட்டன. இந்த சோதனைப் பயணத்தின் இலக்காக இருந்தது AN-32 என்ற ஒரு விமானமாகும். ஆவ்ரோ விமானம் புறப்படுவதற்குப் பதினைந்து நிமிடம் முன்னதாக அது கிளம்பியிருந்தது. கடல் மற்றும் நிலப்பகுதிகளின் திட்டுக்கள் மீது ரேடார் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

பயணக்குழுவில் இருந்தவர்கள் (உயர்சக்தி அலைவரிசை மூலம்) ரேடாரின் செயல்பாடு மிகவும் நன்றாக இருப்பதாகத் தெரிவித்தனர். சுமார் ஒன்றரை மணிநேரச் சோதனை ஓட்டத்திற்குப் பிறகு இலக்காக வைக்கப்பட்ட விமானம் 4 மணிக்கு அரக்கோணத்தில் தரையிறங்கியது. அதைத் தொடர்ந்து கண்காணிப்பு மேடையை ஏற்றியிருந்த விமானம் சென்னையிலிருந்து அரக்கோணம் நோக்கிக் கிளம்பியது. விமானதளத்தை அடைந்து 10,000 அடி உயரத்திலிருந்து 5,000 அடிக்குத் தாழ்ந்து பறந்தது. விமான தளத்திலிருந்து ஐந்து கடல் மைல்களுக்கு 3000-5000 அடிக்கு இடைப்பட்ட உயரத்தில் பறக்கும்போது ரோடோடோம் செயலிழந்து விமானம் விபத்துக்குள்ளாயிற்று. அதிலிருந்த எட்டுப்பேர் மரணமடைந்தார்கள்.

அப்துல் கலாம்: விபத்து நடந்த செய்தி என்னிடம் தெரிவிக்கப்பட்ட சமயம் நான் பாதுகாப்பு ஆராய்ச்சிக் கவுன்சிலின் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டிருந்தேன். அது சவுத்பிளாக்கிலுள்ள எனது அலுவலகத்தில் நடந்து

கொண்டிருந்தது. பாசத்திற்குரியவர்களை இழந்து நிற்கும் அக்குடும்பத்தினருக்கு ஆறுதல் சொல்ல நான் பெங்களூருவுக்கு விரைந்தேன். ஏர்-சீஃப் மார்ஷல் ஏ.ஒய்.டிப்னிஸ்ஸும் அப்போது அங்கிருந்தார்.

கணவனை இழந்த இளம் மனைவிகளையும் அதிர்ச்சியில் உறைந்து கிடந்த பெற்றோர்களையும் பார்த்துப் பேசுவது கஷ்டமான ஒன்றாகவே எனக்கு இருந்தது. ஒரு இளம் பெண் சிசு ஒன்றை என் மடியில் போட்டுவிட்டு, ''இதைப் பராமரிக்க இனி யார் இருந்து உதவப் போகிறார்கள்?'' என்றாள். இன்னொரு பெண் என்னைப் பார்த்து ''எங்களுக்கு இப்படி ஒரு துயரத்தை ஏன் கொடுத்தீர்கள் கலாம்?'' என்று கேட்டுவிட்டு அழுதாள்.

அருண்திவாரி : உயிரிழந்த அதிகாரிகளின் பட்டியலை ராம்சந்த் என்னிடம் கொடுத்தார். ஸ்குவாட்ரன் லீடர் பி.வெங்கட்ராமன் விமானத்தை ஓட்டிச் சென்றார். பி.இளங்கோ இன்ஸ்ட்ருமெண்டேஷன் என்ஜினியராக இருந்தார். ரேடார் சிஸ்டம் என்ஜினியராக கே.பி.ஷாஜூ பொறுப்பு வகித்தார். ஏர்போர்ன் சிஸ்டம் மையத்திலிருந்து இவர்கள் வந்திருந்தனர். டி.நரசிம்மசாமி, ரேடார் பிராசசிங் விஞ்ஞானி, ஐ.ஜெயக்குமார் சிக்னல் பிராசசிங் விஞ்ஞானி என்ற இவர்கள் இருவரும் மின்னணு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பிலிருந்து வந்திருந்தனர். ஸ்குவார்டன் லீடர் என்.வி.சேஷூ, ஆர்.பட்நாகர், எஸ்.ரவி போன்ற மற்றவர்கள் விமானப்படை அதிகாரிகளாவர்.

அப்துல்கலாம் : உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உதவி செய்ய நிர்வாகம் சவப்பெட்டிகள் தயாரித்து சமுதாயக் கூடத்தில் வைத்துக்கொண்டு காத்திருந்தது.

அருண்திவாரி : அடக்கடவுளே!

அப்துல் கலாம் : இறுதி ஊர்வலத்தின்போது நான் ஆழ்ந்த துயரத்தில் சிக்கிக்கிடந்ததால், என்னால் ஒன்றிரண்டு வார்த்தைகள்தான் பேசமுடிந்தது.

அருண்திவாரி : உள்நாட்டுப் போரில் தனது மகன்களையும் பறிகொடுத்த தாய் ஒருத்திக்கு ஆபிரகாம் லிங்கன் எழுதிய கடிதம் இப்போது என் நினைவுக்கு வருகிறது.

மகன்களை இழந்த துயரத்தில் உள்ள உங்களுக்கு ஆறுதலளிக்க நான் சொல்லும் எந்த ஒரு வார்த்தையும் இந்த நேரத்தில் பலமற்றதாகவும், பயனற்றதாகவுமே இருக்கும். தேசத்தின் குடியரசு அமைப்பைப் காப்பாற்றப் போராடி அவர்கள் உயிர் துறந்தார்கள் என்று நன்றி கூறுவதன் மூலம் உங்கள் துயரத்தை என்னால் குறைத்துவிட முடியாது.

மக்களை இழந்து தவிக்கும் உங்கள் மனத்துயரைப் பரமபிதா மட்டுமே தணிக்க முடியும். உங்கள் அன்புக்கினியவர்களின் நினைவுகளில் மனம் மகிழ்ந்திருக்க வைக்க அவரால்தான் இயலும். விலைமதிப்பு மிகுந்த ஒரு பலிபீடத்தின் மீதுதான் சுதந்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்று நீங்கள் பெருமிதம் கொள்ளலாம்.

பரிசோதனைக் கூடங்களிலும், களப்பணிகளிலும் இறங்கி உழைப்பவர்கள் அடையும் துயரங்களையும், வலிகளையும் அரசியலிலும் அரசு விழா மற்றும் சீர் முறைகளில் ஈடுபட்டுள்ள ஒரு சிலர் மட்டுமே அறிவார்கள்.

ஆகாய மிதவைக் கண்காணிப்பு மேடை விழுந்து நொறுங்கியது என் வாழ்வில் நடந்த பெரிய ஒரு சோகச் சம்பவமாகும். அதைப்பற்றி நான் எவ்வளவு வருத்தம் கொண்டேன் என்பதை இந்த உரையாடலில் இருந்து அறிந்து கொள்ளலாம். சிக்கலான திட்டங்கள் பற்றிப் புரிந்துகொள்வதற்கு ஏற்ற நீண்ட கடினமான பயணமாகவும் இருந்து அது உதவியது. அது போன்ற தோல்விகள் நம்மை மனஉறுதியுள்ளவர்களாகவும் மாற்றுகின்றன.

9

எனது குஜராத் பயணம்

தேவதை சுதந்திரம் நிறைந்தது
அது அறிவாற்றல் பெற்றதாக இருப்பதே அதற்குக் காரணம்.
தனது அறியாமையால் விலங்கு
சுதந்திரமாக அலைந்து திரிகிறது.
இந்த இரண்டுக்கும்
இடைப்பட்ட நிலையில் இருந்து கொண்டு
மனிதன் போராடுகிறான்

-ரூமி

நாட்டிலுள்ள வறுமையும், படிப்பறிவற்ற நிலையும் அகற்றப்படவேண்டும். முன்னேற்றத்தின் முக்கியத்தூண்களாக இவை இருப்பதாக நான் நம்புகிறேன். அத்துடன், பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழாத ஒரு சமுதாயத்தை நாம் உருவாக்க வேண்டும். தான் ஆதரவற்ற நிலையில் இருப்பதாக யாரும் கவலைப்படுவதற்கு இடம் தரக்கூடாது.

2002-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நான் குஜராத் சென்றபோது இவ்வகையான எண்ணங்களே என் மனதில் பிரதானமாக எழுந்து வலம் வந்தன. நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் இதற்கான முயற்சிகளில் அதிக கவனம் செலுத்தினேன்.

சில மாதங்களுக்கு முன்புதான் அந்த மாநிலம் கலவரத்தால் பெரிதும் பாதிப்படைந்திருந்தது. கலவரத்தின் தாக்கம்

பல்லாயிரம் பேரின் வாழ்வைப் பாழ்பட்டுப்போக வைத்து விட்டது. அது உணர்ச்சிபூர்வமாகவும், கவனத்துடனும் செயல்படுத்தப்பட வேண்டிய பணியாகும். காரணம், ஒரு மாறுபட்ட அரசியல் துடிப்புக் கலந்த சூழல் அங்கே காணப்பட்டது.

நிஜமாக என்ன நடந்தது என்று கண்டறிய நான் அங்கே பயணம் செய்யவில்லை. அதை நான் முன்பே தீர்மானித்து வைத்துக்கொண்டுவிட்டேன். நிலைமையைச் சீரமைக்க என்ன செய்ய வேண்டும் என்பதில்தான் கவனம் செலுத்தவேண்டும். என்ன நடந்தது என்பது விவாதத்திற்குரிய விஷயமாக நீதிமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் பேசப்பட்டுவிட்டது. இன்றுவரை அந்த சர்ச்சை தீர்ந்தபாடில்லை.

இம்மாதிரியான கலவர பூமியில் எந்த ஒரு ஜனாதிபதியும் இதுவரை சுற்றுப்பயணம் செய்ததில்லை. அந்த மாநிலத்திற்கு நான் செல்லவேண்டிய அவசரம் என்ன என்று பலர் என்னிடம் வினவினர். அமைச்சகம், நிர்வாக அதிகார மட்டங்களில் உள்ளவர்கள் இத்தருணத்தில் நான் அங்கே செல்வது சரியல்ல என்று கூறினார்கள். அரசியலே அதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்றாக இருந்தது. ஆனாலும் நான் போவதென்று தீர்மானித்து விட்டேன். ஜனாதிபதி பதவியேற்ற பிறகு எனது முதல் குஜராத் பயணத்திற்கான ஏற்பாடுகளை ராஷ்ட்ரபதி பவன் முழுவீச்சில் மேற்கொண்டது.

பிரதமமந்திரி அடல் பிகாரி வாஜ்பாய் என்னிடம் ஒரே ஒரு கேள்வி மட்டும்தான் கேட்டார்:

''சூழ்நிலை இப்படியிருக்கும்போது குஜராத்திற்குள் செல்வது அவசியம் என்று நினைக்கிறீர்களா?''

நான் பிரதமமந்திரியிடம், ''அதை எனது முக்கியக் கடமையாகக் கருதுகிறேன். மக்களின் துன்பங்களைத் துடைக்க நான் ஏதாவது ஒரு வகையில் பயன்பட்டாக வேண்டும். மேலும் நிவாரணப் பணிகளையும் துரிதப்படுத்த வேண்டும்.

மக்களின் மனங்களை ஒன்றிணைக்க வேண்டும் என்பதே என் பயணத்தின் நோக்கமாகும். இதை எனது பதவியேற்பு விழாவிலேயே வலியுறுத்திப் பேசியிருக்கிறேன்'' என்று பதில் கூறினேன்.

எனக்கு எதிர்ப்புகள் பலதிசைகளில் இருந்தும் கிளம்பின. அந்த மாநிலத்தின் முதலமைச்சர் எனது வருகையைப் புறக்கணிக்க நினைத்திருக்கலாம். எனக்கு உற்சாகமற்ற வரவேற்பு அளிக்கப்பட்டது. பல இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. ஆனால் நான் காந்திநகர் சென்று இறங்கியபோது பெரிய வியப்பு அங்கே காத்திருந்தது. மாநிலத்தின் முதலமைச்சர் மட்டுமின்றி அவரது அமைச்சரவைச் சகாக்களும், பெருந்திரளான பொதுமக்களும் விமான நிலையத்தில் குழுமியிருந்தார்கள்.

நான் பனிரெண்டு பகுதிகள், மூன்று நிவாரணமுகாம்கள், அதிகம் இழப்புகள் நிகழ்ந்ததாகக் கருதப்பட்ட ஒன்பது இடங்கள் போன்றவற்றை பார்வையிட்டேன். நான் அப்பகுதிகளைப் பார்க்கச் சென்றபோது முதலமைச்சர் நரேந்திர மோடி என்னுடன் வந்தார். இது ஒருவகையில் எனக்கு உதவிகரமாக அமைந்தது.

நான் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் அளித்த மனுக்களையும், புகார்களையும் பெற்றுக்கொண்டேன். முதலமைச்சர் என்னுடன் இருந்ததால் உடனடியாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அவரிடம் எடுத்துரைக்க முடிந்தது. நான் ஒரு நிவாரண முகாமுக்குச் சென்றபோது நடந்த ஒன்று நினைவுக்கு வருகிறது. முகாமிலிருந்த ஆறு வயதுச் சிறுவன் என்னுடைய இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு, ''ராஷ்ட்ரபதிஜி! என்னுடைய தாயும், தகப்பனும் எனக்கு வேண்டும்'' என்று கேட்டான். நான் பேச்சிழந்து நின்று விட்டேன்.

உடனே மாவட்ட ஆட்சித்தலைவருடன் அவசரமாக ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்தேன். அந்தச் சிறுவனுக்குத்

தேவையான வசதிகள் செய்து கொடுத்து, அவன் கல்வி கற்கவும், உதவி புரிய அரசு தயாராக இருப்பதாக முதலமைச்சர் தெரிவித்தார். நான் அஹமதாபாத்திலும், காந்தி நகரிலும் தங்கியிருந்தபோது சமூகத்தின் பல்வேறு பிரிவைச் சேர்ந்த மக்கள் என்னிடம் பேசவிரும்பினார்கள். தங்கள் பிரச்சினைகள் கண்ணோட்டங்களைத் தனிப்பட்ட முறையில் என்னுடன் பகிர்ந்து கொண்டனர்.

ஒரு சந்திப்புக் கூட்டத்தில் அஹமதாபாத் நகரில் 2000 பொதுமக்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு விட்டனர். உரையாடல் குஜராத்தி மொழியில் நடந்தது. எனது நண்பர்களில் ஒருவர் மொழிபெயர்ப்பாளராக இருந்து உதவினார். என்னிடம் சுமார் ஐம்பது கேள்விகள் கேட்கப்பட்டன. 150 மனுக்கள் என்னிடம் தரப்பட்டன.

நான் இரண்டு இடங்களை அஹமதாபாத்தில் பார்வை யிட்டேன். அவை கலவரத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட இடங்கள் என்பதால் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தன. அக்ஷர்தம் என்ற இடத்துக்கு என்னை அழைத்து வரவேற்றார், பிரமுக் சுவாமிஜி மகராஜ். நான் மனித மனங்களுக்கு இடையே ஒற்றுமையுணர்வு ஏற்படவேண்டியதன் அவசியத்தை அவரிடம் எடுத்துக்கூறினேன். மகாத்மா காந்தி, சர்தார் வல்லபாய் பட்டேல், விக்ரம் சாராபாய் போன்ற தலைவர்கள் குஜராத்திலும் உருவாக அது வழிவகுக்கும் என்றேன்.

நான் சபர்மதி ஆசிரமத்துக்கும் சென்று அங்குள்ள ஆசிரமவாசிகள் பலரைச் சந்தித்துப் பேசினேன். அவர்கள் இயந்திரத்தனமாக பஜனைகள் பாடிக்கொண்டிருந்ததால் முகங்களில் பயம் பெரிதும் படர்ந்து கிடப்பதைக் கண்டேன். இதே உணர்வு நிலை அக்ஷர்த்தத்தில் காணப்பட்டதை கவனித்தேன். இது எதனால் ஏற்பட்டது என்று வியப்படைந்தேன்.

அந்த இரண்டு நிறுவன அமைப்புகளும் தெய்வீகச் சூழலில் அமைந்தவை. அன்பு செலுத்துதல், சகமனிதர்களை மதித்துப்

போற்றுதல் போன்றவற்றை உயிர்நாடியாகக் கொண்டவை. சமூகத்தில் அமைதி, ஆனந்தம், மேம்பாடு போன்றவை உருவாக வேண்டும் என்று அந்த நிறுவனங்கள் பாடுபடு கின்றன. எனவே இதுபோன்ற கலவரச் சூழ்நிலைகளை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

உயர்ந்த பாரம்பரியமும், மேன்மையான கலாச்சாரமும் நிறைந்த நமது நாட்டில் பிறந்த பல சான்றோர்கள் உலகுக்கே முன்னோடிகளாக இருந்து வழிகாட்டியிருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட ஒரு நாட்டில் இனப்போராட்டங்களும், அதனால் விளையும் துயரங்களும் ஒழித்துக் கட்டப்பட வேண்டும். அது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்கக்கூடாது.

எனது இந்தப் பயணத்தின் போது ஒரு விஷயம் என் மனதில் பதிந்து போய்விட்டது. நிறைய மக்களை மேம்படுத்தி வளர்ச்சியை அதிகரிக்க வழிவகை செய்யவேண்டும். வளர்ச்சி ஒன்றுதான் நமது குறிக்கோள் என்று இருந்துவிடலாமா? எந்த ஒரு குடிமகனும் தனக்குப் பிடித்த மதநம்பிக்கையைப் பின்பற்றி மகிழ்ச்சியுடன் வாழ நினைப்பது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். மனிதர்களின் ஒற்றுமை உணர்வைக் குலைத்து ஆபத்தை ஏற்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது. மனித மனங்களுக்கு இடையிலான ஒற்றுமைதான் நமது நாட்டின் உயிர்மூச்சாக இருந்து வருகிறது. இதுவே நமது நாட்டிற்கு நிஜமான தனித்துவத்தைத் தருகிறது.

அப்படியானால் நீதி என்றால் என்ன? ஜனநாயகம் என்றால் என்ன? ஒவ்வொரு குடிமகனும் கண்ணியத்துடன் நாட்டில் வாழும் உரிமை பெற்றிருக்கிறான். அவன் எந்த ஒரு பதவியைப் பெறவும் ஆசைப்படலாம். நியாயமான, நல்ல வழிகளில் அதற்கான வாய்ப்புகளை அவன் அடைய முயற்சிக்கலாம். அவ்விதமாக அவன் கௌரவமும், பதவியும் பெறுவதையே நாம் ஜனநாயகம் என்று குறிப்பிடுகிறோம்.

வாழ்வை எது நிறைவடையச் செய்கிறதோ, அர்த்தமுள்ளதாக மாற்றுகிறதோ அதுவே நிஜமான

குடியரசாகும். பிற மனிதர்களின் வாழ்க்கை முறைகள், சமுதாய நம்பிக்கைகளைப் பொறுமையுடன் அங்கீகரிப்பதே குடியரசின் ஜீவனாக இருக்கிறது.

மனித மனங்களை ஒன்றிணைக்க நாம் எல்லோரும் பாடுபட வேண்டியது அவசியம் என்று நான் கூறுகிறேன். மற்றவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ளும் சகிப்புத்தன்மை குறைந்துகொண்டு போவது, பிறருடைய வாழ்க்கை முறை, மதாச்சாரங்களை கண்டனம் செய்யும் குணம் அதிகரித்திருப்பது இந்த வித்தியாசங்களைச் சட்டவிரோதமான முறையில் வன்முறை மூலம் வெளிப்படுத்துவது போன்ற செயல்களை எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாது.

தனிமனித உரிமைகளை மீட்டெடுக்க நாம் எல்லோரும் முனைந்து பாடுபடவேண்டும். நமது நாகரிகப் பாரம்பரியத்திற்கும் தேசத்தின் ஆன்மாவுக்கும் அதுவே பலமான அடித்தளமாக அமையும் என்று நான் நம்புகிறேன். எனது இரண்டு நாள் பயணம் முடிந்த பிறகு ஊடகங்கள் என்னிடமிருந்து தகவலை எதிர்பார்த்தன. அதற்காக பத்திரிகையாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கே ஒரு அறிக்கை வாயிலாக எனது எண்ணங்களை வெளிப்படுத்தினேன். இனக்கலவரம் போன்ற சண்டைகளை முழுதாக அகற்றிவிட ஒரு தீவிரமான இயக்கம் தொடங்கி, மக்கள் மனங்களை ஒன்றுபடுத்த வேண்டும் என்று அதில் தெரிவித்திருந்தேன்.

ஒவ்வொரு தனிமனிதருக்கும் அவரது மதம், மொழி, கலாச்சார நம்பிக்கைகளைக் கடைப்பிடிக்க உரிமை இருக்கிறது. அதற்கு இடையூறு செய்யும் எந்தக் காரியத்தையும் நாம் செய்யக்கூடாது.

10

எனது தாயகத்து அயலுறவுகள்

நான் உலகக் குடிமகன்
ஒவ்வொரு குடிமகனும் எனது உறவினன்

காலக்கெடுவுடன் அமைந்த தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் என்னிடம் கைநிறைய இருந்ததால் நான் அதிகமாக வெளிநாட்டுப் பயணங்கள் செல்ல முடிந்ததில்லை.

நாட்டின் முதல் குடிமகனாக இருந்த நான் பல தலைவர்களை இந்தியாவில் வரவேற்க வேண்டும். வாக்குறுதி தந்தபடி அலுவலகரீதியாக அயல்நாட்டுப் பயணங்கள் மேற் கொண்டு நமது கௌரவத்தை நிலை நிறுத்தவேண்டும் எப்போ தெல்லாம் வெளிநாட்டுத் தூதுக்குழுவினர் வருகிறார்களோ அச்சமயங்களில் ஆர்வத்துடிப்புள்ள ராஷ்ட்ரபதி பவனக்குழு பாடுபட்டு உழைக்கும். உபசரணை மழையில் அவர்களை நனைக்கும். இந்தியாவின் சாதனைகளை அவர்களுக்கு எடுத்துரைக்கும்.

நான் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளும்போது இந்தியாவின் தகுதிச் சிறப்பை அவர்களிடம் எப்படி எடுத்து விளக்கலாம், அயல்நாட்டில் பயன்பாட்டில் இருக்கும் விஷயங்களைக் கற்றுக்கொண்டு நாம் எவ்வாறு பயன் பெறலாம் என்ற எண்ணமே எனக்கு மேலோங்கி நிற்கும். இதை அடிப்படையாகக் கொண்டே உலக அறிவு மேடை (world knowledge platform) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

பிரபலமானவர்கள், துறை வல்லுனர்கள் போன்றவர்களிடம் கலந்தலோசித்து இதை உருவாக்கினோம்.

உலகச் சுற்றுச்சூழல் மாசுபட்டு வருவது குறித்து எங்கள் கருத்தை அங்கே பகிர்ந்துகொண்டோம். எரிசக்தியில் தன்னிறைவு பெறுவது பற்றி விவாதித்தோம். இந்தியாவுக்கு வந்த விருந்தினர்களுக்கு நமது தேசம் தகவல் தொழில்நுட்பம், மின்-நிர்வாகம், மருந்துப்பொருட்கள் தயாரிப்பு போன்ற துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி எடுத்துரைத்தோம்.

ஒவ்வொரு முறையும் நடைபெறும் சந்திப்பு அல்லது பயணத்தின் போதும் இரு நாடுகளுக்கு இடையே அல்லது பல நாடுகளுடன் பரஸ்பர உறவு பலம் பெற்று, முன்னேற்றத் திட்டங்கள் பிறக்க வழியேற்படுவது கண்டு நான் மகிழ்ச்சி யுற்றேன். எனது ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணமும் ஒரு குறிப்பிட்ட வகையில் முக்கியத்துவம் பெற்றதாகவே அமைந்திருந்தது.

சூடான் பயணமானது அந்த நாட்டின் தென்பகுதியிலிருந்து தலைநகர் கார்டூம் வரையிலும் எண்ணெய் குழாய் பாதை அமைப்பது பற்றிய விவாதத்தை மையமாகக் கொண்டிருந்தது. ஒரு பில்லியன் டாலர்கள் செலவு பிடிக்கும் அந்த பெரிய திட்டத்திற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு கிடைத்தது. இன்று சூடானிலிருந்து இந்தியாவுக்கு எண்ணெய் கிடைக்கிறது.

எனது உக்ரெய்ன் பயணம் ஒரு தீவிரமான திட்டம் சம்பந்தப்பட்டது. விண்வெளித்துறை சார்ந்த ஒத்துழைப்பில் முன்னற்றங்கள் அப்போது ஏற்பட்டன. எனது பயணத்தின் ஒரு சிலவற்றை மட்டுமே இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறேன். நான் 2004-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தென்னாப்பிரிக்கா சென்றேன். அந்த நாட்டின் ஜனாதிபதி தாபோ மெபீகி ஜோஹனஸ்பர்கில் ஐம்பத்து மூன்று ஆப்பிரிக்க நாடுகள் கலந்து கொள்ளும் ஒருங்கிணைந்த ஆப்பிரிக்கப் பாராளுமன்றத்தில் நான் உரையாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். நானும் எனது குழுவினரும் சொற்பொழிவைத் தயாரிக்கத் தொடங்கினோம். நம்மிடம் உள்ள சிறப்பான விஷயங்களில் எதைக் கொடுத்து ஆப்பிரிக்க நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே நட்பை வலுப்படுத்துவது என்று யோசித்துப் பார்த்தோம். ஒருங்கிணைந்த ஆப்பிரிக்க மின்-நிர்வாகம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்க முடிவு செய்தோம். அதன் மூலம் கல்வி, ஆரோக்கிய நலவாழ்வு, மின் நிர்வாகச் சேவைகள் போன்றவற்றை பனிரெண்டு பல்கலைக்கழகங்கள், பதினேழு சிறப்பு மருத்துவமனைகளிடமிருந்து பெற முடியும். இந்தியாவும் ஆப்பிரிக்காவும் அவற்றை பரிமாறிக்கொள்ள முடியும். அத்துடன் ஒருங்கிணைந்த ஆப்பிரிக்க நாடுகளின் அனைத்து ஜனாதிபதிகளும் ஒருவருடன் ஒருவர் மின்நிர்வாக வசதியைப் பயன்படுத்தித் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு தங்கள் கருத்துகளை எளிதாகப் பகிர்ந்துகொள்ள முடியும்.

மின்-நிர்வாக அமைப்பை உருவாக்க எவ்வளவு செலவு பிடிக்கும் என்று நிபுணர்கள் முதல்கட்ட மதிப்பீடு செய்து பார்த்தனர். ஐம்பதிலிருந்து நூறு மில்லியன் டாலர்கள்வரை நிதி தேவைப்படும் என்று தெரியவந்தது. இந்த திட்டத்தை ஒருங்கிணைந்த ஆப்பிரிக்கப் பாராளுமன்றத்தில் அறிவிப்பதற்கு முன்பு நான் பிரதமர் மன்மோகன் சிங்குடன் கலந்து ஆலோசித்தேன். ஆப்பிரிக்க நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த இது ஒரு பயனுள்ள கருவியாக இருக்கும் என்று அவர் என்னிடம் கூறினார்.

2009-ஆம் ஆண்டு பிப்ரவரி 26-ம் தேதி ஒருங்கிணைந்த ஆப்பிரிக்க மின்-நிர்வாகத்திட்டம் முறைப்படி துவக்கிவைக்கப் பட்டது. இன்று அது குறிப்பிட்டுச் சொல்லும்படியான பல சாதனைகளைச் செய்துள்ளது. சர்வதேச சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றும் ஒரு நற்செயலின் அடையாளமாக அந்த மின்-நிர்வாகத்திட்டம் விளங்கி வருகிறது.

ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் தலைவர் ஜோசப் போரல் ஃபான்டெல்ஸ் என்னை ராஷ்டரபதி பவனில் சந்தித்துப் பேசினார். அந்த சந்திப்பு 2006-ஆம் ஆண்டு நடந்ததென்று எனக்கு ஞாபகம். எனக்குப் பிடித்தமான ஒரு விஷயம் பற்றி அவர் என்னிடம் வெகுநேரம் பேசினார். அறிவார்ந்த குடிமக்களை உருவாக்குவது பற்றிய எனது கருத்துகளை அவர் என்னுடைய இணையதளத்தில் படித்திருக்கிறார். அது குறித்து நிறையக் கேள்விகளை என்னிடம் முன் வைத்தார். அவை சிந்தனாபூர்வமான, ஆழமான, பயனுள்ள கேள்விகளாக இருந்தன.

எங்களின் கலந்துரையாடல் முடிந்த பிறகு என்னை ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் உரையாற்ற வருமாறு அழைப்பு விடுத்தார். ஐரோப்பிய யூனியனின் இருபத்தேழு நாடுகளைச் சேர்ந்த 750 உறுப்பினர்கள் அந்த பாராளுமன்றத்தில் அங்கம் வகித்து வந்தனர். ஐரோப்பிய யூனியனால் நேரடியாகத் தேர்வு செய்யப்படும் ஒரே அமைப்பு இந்த பாராளுமன்றம் மட்டும்தான் என்பது சிறப்பான விஷயமாகும்.

அவரது பதவிப் பொறுப்பு 2006-ஆம் ஆண்டு டிசம்பருடன் முடிவடைய இருந்தது. எனவே அதற்குள் நான் அவர்கள் பாராளுமன்றத்தில் உரையாற்ற வந்துவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ஆனால் அவ்வாறு செய்ய என்னால் இயலாது போயிற்று. நான் 2007-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ம் தேதிதான் அந்த பாராளுமன்றத்தில் உரையாற்ற முடிந்தது. அப்போது ஃபாண்டல்ஸின் பதவிக்காலம் முடிந்து ஹான்ஸ் கெர்ட் பாட்டரிங் என்பவர் புதிய தலைவராக வந்திருந்தார்.

அந்த சொற்பொழிவு முக்கியமான ஒன்று என்பதால் நான் எனது பயணத்திற்கு முன்பு கவனத்துடன் திட்டங்கள் தயாரித்தேன். எனது நண்பர்கள், அறிவுஜீவிகள், அரசியல் தலைவர்கள், விஞ்ஞானிகள், இளைய சமுதாயத்தினர்

போன்றவர்களுடன் அறிவுபூர்வமான முறையில் கலந்துரையாடல்கள் நடத்தினேன். தாய் மண்ணிலிருந்து ஒரு செய்தி என்ற தலைப்பில் ஒரு கவிதையும் எழுதி வைத்துக்கொண்டேன்.

அந்த கவிதை எவ்வாறு முன்பு ஐரோப்பிய நாடுகள் ஒன்றுடன் ஒன்று மூர்க்கத்தனத்துடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தன என்பதை சுட்டிக்காட்டியது. பின்னர் அவை மனம் திருந்தி ஒருங்கிணைந்த ஐரோப்பிய யூனியனாக மாறித் தனது உறுப்பு நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, செல்வச் செழிப்பு, அமைதி, மகிழ்ச்சி போன்ற விஷயங்களுக்காக வெற்றிகரமாகப் பாடுபட்டு வருவதையும் எடுத்துரைத்தது. பிராந்திய ஒத்துழைப்பிற்கான முன்னோடி வழிகாட்டி முயற்சியாகவும் அச்செயல் அமைந்திருந்தது.

ஏப்ரல் மாதம் 25-ம் தேதி காலை வேளையில் நான் ஐரோப்பியப் பாராளுமன்றம் சென்றேன். தலைவரும், அவரது சகாக்களும் என்னை அன்புடன் வரவேற்றனர். ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 780 பிரதிநிதிகளும் அங்கே வந்து விழாவில் கலந்து கொண்டிருப்பது கண்டு நான் மனம் மகிழ்ந்து போனேன். பார்வையாளர்கள் இருக்கைகளும் நிரம்பி வழிந்தன.

'தேசங்கள் ஒன்றுபடும்போது கிடைக்கும் சக்தி' என்பது எனது சொற்பொழிவின் தலைப்பாக இருந்தது. மனித இனத்தின் கலாச்சார நாகரிக அமைப்புகள் ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொள்வதற்கு மாறாக ஒன்றிணைந்து சங்கமிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினேன். இந்திய வரலாற்று நிகழ்வுகளை ஆதாரம் காட்டி அவை எடுத்துரைக்கப்பட்டிருந்தன.

அறிவுபூர்வமான ஜனங்கள் நிறைந்த குடிமக்கள் அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதே சொற்பொழிவின் பிரதான அம்சமாக இருந்தது. அதற்கு மூன்று விஷயங்கள் தேவைப்படுகின்றன. மதிப்பீட்டு அடிப்படையிலான கல்வி

முறை, ஆன்மீகத்தை நோக்கிச் செல்லும் மதவழிபாட்டு முறை; தேசத்தை வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் சமூக மாற்றங்கள் என்பதே அந்த மூன்று விஷயங்களாகும்.

இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் எரிசக்தி ஆற்றலில் தன்னிறைவு பெறவேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசினேன். அதைச் செயல்படுத்துவதற்கான திட்டம் பற்றியும் கோடிட்டுக் காட்டினேன். எனது சொற்பொழிவின் இடையே அவ்வப்போது மகிழ்ச்சி ஆரவாரங்கள் எழுந்தன. சொற்பொழிவின் இறுதியில் எனது கவிதையை அங்கே வாசித்தேன்.

தாய் மண்ணிலிருந்து ஒரு செய்தி

அழகிய சூழ்நிலை
அழகான மனங்களை உருவாக்குகிறது
அழகிய மனங்கள்

புதுமையையும், படைப்பாற்றலையும் உருவாக்குகின்றன
அதன் பயனாகவே
புதிய நிலப்பகுதிகளையும், சமுத்திரங்களையும்
கண்டறிந்த மனிதர்கள் உருவாயினர்
பெரிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை
ஏற்படுத்திய மனங்கள் தோன்றின
எல்லா பகுதிகளிலும் அப்படிப்பட்டவர்கள் தோன்றினார்கள்

புதிய கண்டுபிடிப்புகளுக்கு
வழி பிறந்தது
யாரும் அறிந்திராத கண்டமும், நிலப்பரப்பும்
கண்டறியப்பட்டன
சென்றறியாப் பாதைகளினூடே
பயணங்கள் நடந்தன
புதுப்பாதைகள் உருப்பெற்றன

நல்ல மனங்களில்
கெட்ட எண்ணங்களும் தோன்றின

வெறுப்பு, யுத்தம் போன்றவற்றுக்கான
வித்துகள் உருவாயின

பலநூறு வருட காலம்
யுத்தமும், ரத்தம் சிந்துதலும் நிகழ்ந்தன.

லட்சக்கணக்கான எனதருமைக் குழந்தைகள்
நிலத்திலும் நீரிலும் மடிந்தன
தேசங்கள் பல கண்ணீர் சிந்தின
ஏராளமானோர் துன்ப சாகரத்தில் ஆழ்ந்தனர்

அதன் பின்னர் கடைசியாக
ஐரோப்பிய யூனியன் என்ற
அமைப்பு தலையெடுத்தது
மனிதர்களின் அறிவாற்றலை
தனக்கோ அல்லது பிறருக்கு எதிராகவோ
உபயோகிப்பதில்லை என்று
உறுதிமொழி எடுத்துக்கொண்டது

அவர்களின் எண்ணங்கள் ஒன்றுபட்டதும்
செயல்களில் வேகம் பிறந்தது
ஐரோப்பாவை வளமாகவும், அமைதியாகவும்
வாழந்திடச் செய்வதற்கென்று
ஐரோப்பிய யூனியன் தோன்றியது

அந்த சந்தோஷச் செய்தி
எல்லா மக்கள் மனதையும் பற்றிக்கொண்டது
ஓ, ஐரோப்பிய யூனியனே,
உனது குறிக்கோளை வழிநடத்து!
நாம் சுவாசிக்கும் காற்றைப் போல
அதை எங்கும் பரவிடச் செய்திடு!

நான் அந்த கவிதையைப் படித்து முடித்ததும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் காட்டிய உற்சாகமான வரவேற்பு என் மனதைத் தொட்டுவிட்டது. அவர்கள் எல்லோரும் எழுந்து நின்று எனக்கு மரியாதை செலுத்தியது எனது தேசத்திற்குக் கிடைத்த கௌரவமாகும். பதிலுக்கு நான் இந்தியாவின் ஒரு

கோடி மக்களுடைய வாழ்த்தை ஐரோப்பிய யூனியனின் மக்களுக்குத் தெரிவித்தேன்.

எனது உரை முடிந்த பிறகு பேசிய தலைவர் பாட்டரிங், ''திருவாளர் அப்துல் கலாம் அவர்களே! மிக முக்கியத்துவம் பெற்றதும், மனதைத் தொடும் விதமாகவும் அமைந்திருந்த உங்கள் சொற்பொழிவுக்கு ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் சார்பில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல் நிபுணர், விஞ்ஞானி, கவிஞர் என்று பலதரப்பட்ட திறமைகள் கொண்ட ஒருவரிடமிருந்து இது போன்ற ஒரு வித்தியாசமான உரையை நாங்கள் இதுவரை கேட்டதில்லை. மிகவும் சிறப்பான முறையில் சொற்பொழிவு அமைந்திருந்தது. பெருமை நிறைந்த இந்திய தேசத்திற்கு எங்கள் நல்வாழ்த் துக்கள். இந்தியாவுக்கும், ஐரோப்பிய யூனியனுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கான நல்வாழ்த்துக்கள். திருவாளர் ஜனாதிபதிக்கும் நல்வாழ்த்துக்கள்!

எனது சொற்பொழிவு முடிந்த பிறகு பல உறுப்பினர்கள் சொற்பொழிவின் அம்சங்கள் குறித்து என்னுடன் கலந்துரை யாட விரும்பினார்கள். மனிதர்களுக்கு மதிப்பளித்துப் போற்றும் ஒரு சிறந்த நாடு இந்தியா என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர். உலக மக்களின் மனங்களை ஒன்றிணைக்க வேண்டும் என்ற எனது கருத்தை வலியுறுத்தும் சிறந்த சொற்பொழிவுகளில் ஒன்றாக ஐரோப்பியப் பாராளு மன்றச் சொற்பொழிவு அமைந்திருந்தாக நான் நம்பினேன். எனது சொற்பொழிவைப் பலநாட்டுப் பத்திரிகைகள் வெளியிட்டன. எண்ணற்ற இணைய தளங்கள் மூலம் அது உலகளாவிய வாசகர்களைச் சென்றடைந்தது. புகழ்பெற்ற இணையமான You Tube-லும் வெளியாயிற்று.

நான் இந்தியாவுக்குத் திரும்பியதும் நமது பாராளு மன்றத்தில் பேசினேன். எரிசக்தித் தன்னிறைவு, உலக அறிவு மேடை போன்ற பல திட்டங்களில் ஐரோப்பியப் பாராளு மன்றத்திற்கு விருப்பம் இருப்பதை எடுத்துக்கூறினேன்.

இந்தியா தேவையான முன்முயற்சிகள் எடுப்பதற்கு இது உதவிகரமாக இருந்தது.

நான் கிரீஸ் நாட்டிற்குச் சென்றபோது தத்துவஞானி சாக்ரட்டீஸ் சிறை வைக்கப்பட்டிருந்த குகைக்கு ஒரு சிறப்புப் பயணம் மேற்கொண்டேன். அது மலைப்பகுதியில் பயணம் செய்யச் சிரமமான இடத்தில் அமைந்திருப்பதால் மக்கள் குறைவாகவே செல்கிறார்கள்.

எனது வேண்டுகோளுக்கு இணங்க அப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. எனது கையில் தரப்பட்ட ஒரு நடுங்கும் விளக்கின் வெளிச்சத்தில் சில நிமிடங்கள் அங்கே தங்கியிருந்தேன். அந்த ஐந்து நிமிடநேரமும் நான் தனித்திருந்தேன். எனக்கு அப்போது தியானிக்கும் மனோநிலை இருந்தது.

உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்களில் ஒருவரான சாக்ரட்டீஸ் ஏன் விஷம் அருந்தி உயிரைப் போக்கிக்கொள்ளச் சம்மதித்தார் என்று நான் வியந்து போனேன். அவர் உபதேசித்த கருத்துகள் அவர் உயிரை விடவும் உயர்ந்தவை என்பது என் நினைவுக்கு வந்தது. காரண காரியங்களை ஆராயந்தறியும் ஒரு பாரம்பரிய ஒளியை அவர் அங்கே இந்த உலகிற்காக விட்டுச் சென்றுள்ளார். அதை அந்த இருட்டுக் குகையில் இருந்தபடியே எவரொருவரும் உணரமுடியும்.

2005-ஆம் ஆண்டு நான் சுவிட்ஸர்லாந்துக்குச் சென்றேன். நான் அங்கே சென்று இறங்கியபோது எனக்கு ஒரு வியப்பு காத்திருந்தது. எனது வருகையைக் கொண்டாடும் விதமாக அடுத்த நாளான மே 26-ஐ விஞ்ஞான நாளாகக் கொண்டாட இருப்பதாக என்னை வரவேற்ற துணை ஜனாதிபதி கூறினார். ஸ்விஸ் அரசு மேற்கொண்ட எதிர்பாராத ஒரு செய்கையாக இது அமைந்திருந்தது.

நான் ஜனாதிபதியைச் சந்தித்தபோது அதற்காக அவரிடம் நன்றி தெரிவித்துக்கொண்டேன். அவர் என்னுடைய Ignited

Minds மற்றும் India 2000 என்ற இரண்டு புத்தகங்களைப் படித்ததாகச் சொன்னார். அவை அவர் மனதுக்குப் பிடித்துப் போய்விட்டன. நான் பாதுகாப்பு அறிவியல் மற்றும் விண்வெளித் துறைக்குச் செய்துள்ள பணிகளைப் பற்றித் தனது மந்திரிசபைச் சகாக்களிடம் அவர் எடுத்துரைத்திருக்கிறார். எனவே மந்திரி சபை ஸ்விஸ் நாட்டுக்கு நான் வருகை தருவதையொட்டி அந்த நாளை விஞ்ஞான தினமாகக் கொண்டாட முடிவு செய்தது.

நான் அங்கேயிருந்த ஆராய்ச்சிக் கூடங்களைப் பார்வையிடும் வாய்ப்பைப் பெற்றேன். அங்கு பணியாற்றிய ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், கல்வியாளர்களுடன் கலந்துரையாடினேன். நான் ஸ்விஸ் கூட்டிணைவரசிலுள்ள ஜூரிச் தொழில்நுட்ப நிலையத்திற்கும் (Swiss Federal Institute of Technology, Zurich) சென்றேன். ஜெர்மனியிலிருந்து வந்த விஞ்ஞானி ஐன்ஸ்டீன் முதலில் இங்குதான் கல்வி பயின்றார்.

நான் அங்கிருந்த போஸ்-ஐன்ஸ்டீன் பரிசோதனைக் கூடத்தையும் பார்வையிட்டேன். அங்கே ஆறு விஞ்ஞானிகள் போஸ்-ஐன்ஸ்டீன் ஆய்வுகளில் கிடைக்கும் பலன்கள் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தனர். நான் அங்கே பணியாற்றிய ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் 'தொழில்நுட்பமும் தேசிய வளர்ச்சியும்' என்ற தலைப்பில் உரையாற்றும் வாய்ப்பினையும் பெற்றேன்.

எனது சொற்பொழிவில் சர்.சி.வி.ராமன் மாணவர்களுக்குச் சொன்ன நல்ல அறிவுரைகளையும் எடுத்துரைத்தேன்.

''வெற்றி பெற வேண்டும் என்ற ஊக்கம் நமக்கு அவசியமாகும். அந்த ஊக்கம் நம்மைச் சரியான இடத்திற்கு கொண்டு சென்று சேர்க்கும். அந்த ஊக்கமானது நாம் பெருமைமிக்க ஒரு பாரம்பரியத்தின் வழி வந்தவர்கள் என்ற அங்கீகாரத்தை உருவாக்கித்தரும். பூமியில் நமக்குச் சரியான இடத்தையும், பதவியையும் உருவாக்கித் தந்திடும். தடைப்படுத்த முடியாத அந்த ஊக்கம் நம்மிடம்

தோன்றிவிட்டால், நமது சரியான தலைவிதியை நிர்ணயித்துச் சாதனை புரிவதை எதுவும் தடுத்து நிறுத்திவிடமுடியாது!''

2004-ஆம் ஆண்டு நான் நெல்சன் மண்டேலாவைச் சந்தித்ததைச் சொல்லாமல் விட்டுவிட முடியாது. அந்த மாமனிதரிடமிருந்து ஒருவர் இரண்டு சிறந்த பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். தடைப்படுத்த முடியாத ஊக்கம், மன்னிக்கும் மனம் என்பனவே அந்த பாடங்களாகும்.

டேபிள் மவுண்டன் என்ற மலை கேப்டவுனுக்குப் புகழ் சேர்க்கிறது. அம்மலையில் மூன்று சிகரங்கள் உள்ளன. மேஜைச்சிகரம் (Table Peak), சாத்தான் சிகரம் (Devil Peak) பொய்ச் சிகரம் (Fake Peak) என்று அவை பெயரிடப்பட்டிருந்தன. நாள் முழுவதும் அவை அழகாகக் காட்சியளித்தன. சில சமயங்களில் கருத்த மேகங்களும், வெண்மையான மேகங்களும் மலையுச்சியைத் தடவிச் சென்றன.

நாங்கள் ராபென் தீவுக்கு ஹெலிகாப்டர் மூலம் கேப் டவுனிலிருந்து சென்றோம். நாங்கள் அந்தத் தீவை அடைந்ததும் அகமது காத்ராடா என்ற தென்னாப்பிரிக்க நாட்டவர் எங்களை வரவேற்றார். அவர் மண்டேலாவுடன் சிறையிலிருந்தவர். மண்டேலா சிறை வைக்கப்பட்டிருந்த சிறிய அறையைப் பார்த்து நான் திகைத்துப் போனேன். அவர் ஆறடி உயரம் கொண்டவர். அந்த சிறைக்குள் அவரைப் போட்டு மூடிவைத்திருந்திருக்கிறார்கள்.

மக்கள் போராட்டத்திற்காக தண்டிக்கப்பட்டு 26 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவித்திருக்கிறார். அவரது வாழ்வின் பெரும்பகுதி இந்த தீவில் கழிந்து விட்டது. கொளுத்தும் வெய்யில் நேரத்தில் பக்கத்திலுள்ள மலைக்கு அவரை அழைத்துச் சென்று கல்லுடைக்கும் பணியில் ஈடுபடுத்தினார்கள். கண் பார்வை பாதிக்கப்பட்ட நிலையிலும் அந்தச் சித்திரவதையை அவர் தாங்கிக்கொண்டார். ஆனாலும் சளைக்காத மன உறுதியுடன் அவர் செயல்பட்டார். சிறைக்

காவலர்கள் உறங்கச் சென்ற பின்னர் அந்தச் சிறிய அறையில் அவர் தனது புகழ்பெற்ற 'Long walk to freedom என்ற' புத்தகத்தை எழுதினார்.

ஜோஹனஸ்பர்க்கில் இருக்கும் அவரது இல்லத்தில் அவரைச் சந்தித்துப் பேசியது ஒரு அற்புதமான அனுபவமாகும். நான் அவருடன் கை குலுக்கியபோது நான் ஒரு மாமனிதனைத் தொடுகிறேன் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அவர் எழுந்து நின்று தனது கைத்தடியை அப்பால் வைத்தபோது நான் அவருக்கு ஆதரவுக் கரம் தந்தேன். நாம் கற்றுக்கொள்ள ஒரு பெரிய பாடம் அவரிடம் இருக்கிறது. நமது குறள்களில் ஒன்றிலும் அது சொல்லப்பட்டிருக்கிறது.'' யாராவது ஒருவர் உங்களுக்குத் தீமை செய்தால், பதிலுக்கு நன்மை செய்வதே அவருக்கு நீங்கள் அளிக்கும் சிறந்த தண்டனையாகும்.''

ரயில்களுடனான எனது உறவை நினைத்துப் பார்க்கும் போது எனது குழந்தைப் பருவத்துநாட்கள் நினைவுக்கு வருகின்றன. ரயில் ஜன்னல் வழியே வீசப்படும் செய்தித்தாள் கட்டை எடுத்துச்சென்று ராமேஸ்வரம் நகரில் விநியோகம் செய்வேன். உங்கள் நாட்டைப் பார்க்கவும், அதன் நறுமணத்தை நுகரவும் ரயில் பயணங்கள் சிறந்த வழியாக உங்களுக்கு அமைந்திருக்கின்றன.

சில நேரங்களில் பனிமூட்டம் சூழ்ந்து கொள்ளும்போது நிலப்பகுதிகள் மீது ஒரு நெருக்கம் ஏற்பட்டு, விளை நிலங்களையும், கிராமங்களையும் அருகிலிருந்து பார்க்க முடிகிறது. ஒருவர் தனது ரயில் பயண நேரத்தில் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அதற்குத் தீர்வும் கண்டறிய அவகாசம் பெறலாம் ஆகமொத்தம் ரயில் பயணம் ஒரு சுகமான அனுபவம். எனவே நான் ஜனாதிபதிக்கான ரயில் வசதியைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர முடிவு செய்தேன்.

பிரஸிடென்டல் சலூனில் இரண்டு பெட்டிகள் இருக்கும். ஜனாதிபதிக்காக அவை ஒதுக்கப்பட்டிருக்கும் அந்த

பெட்டிகளில் உணவருந்தும் இடமானது பார்வையாளர் சந்திக்கும் அறையாகவும் பயன்படும் வகையில் அமைந் திருக்கும். அதனுடன் தலைவரின் படுக்கையறையும் இணைந் திருக்கும். ஒரு சமையல் அறையும், தலைவரின் செயலாளர் களுக்கான அறையும் அமைந்திருக்கும். அதில் அவரது பணியாளர்களும், ரயிலில் உடன் வரும் ரயில்வே பணியாளரும் தங்க முடியும். மற்றொரு பகுதி வரவேற்பறை யாகவும், கலந்துரையாடும் அறையாகவும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அமைந்திருக்கும்.

அந்த ரயில் பெட்டிகளில் ஆடம்பரமான தேக்கு மரத்திலான மேஜை நாற்காலிகள் பட்டுத் திரைச்சீலைகள், இருக்கை உறைகள் போன்றவை அமைந்திருக்கும். இதுபோன்ற 'கோச்'கள் 1960-ஆம் ஆண்டுகளிலும் 1970-ன் தொடக்கத்திலும் பயன்பாட்டில் இருந்து வந்தன. ஜனாதிபதி தனது குழுவினருடன் புதுடெல்லியை விட்டு புறப்பட்டுச் சென்றால் இந்த வண்டிகளையே பயன்படுத்துவது வழக்கமாக இருந்துவந்தது. இதைக் கடைசியாக 1977-ல் பயன்படுத்திய ஜனாதிபதி ஜனாதிபதி நீலம் சஞ்சீவ ரெட்டியாவார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவை அதன் பின்னர் பயன்படுத்தப்படாமல் இருந்து வந்தாலும், பராமரிப்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வந்திருந்தன. 26 ஆண்டுகளுக்குப் பிறகு 2003-ஆம் ஆண்டு மே மாதம் 23-ம் தேதி நான் அந்த ரயில் பெட்டிகளை மீண்டும் பயன்படுத்தினேன். ஹர்னாத் என்ற இடத்திலிருந்து பாட்னா வரையிலான 60 கி.மீ தூரப் பயணத்தை அதில் நான் மேற்கொண்டேன்.

அந்தப் பெட்டிகள் புதுப்பிக்கப்பட்டன. நவீன செயற்கைக் கோள் தொலைத்தொடர்புச் சாதன வசதிகளை அதில் பொருத்தச் செய்தேன். மேலும் பல நவீனக் கருவிகளையும் பொருத்தி முடிந்தவரை மும்மடங்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவும் முயன்றேன்.

கூடுதலாக இரண்டு ரயில் பயணங்களையும் அந்த வண்டிகளில் மேற்கொண்டேன். ஒன்று, சண்டிகாரிலிருந்து டெல்லிக்கான பயணம். அது 2004-ஆம் ஆண்டு நடைபெற்றது. அடுத்தது, டெல்லியிலிருந்து 2006-ஆம் ஆண்டு டேராடூனுக்குச் சென்றேன். விமானப் பயணம் மேற்கொள்ள பருவநிலை சாதகமாக இல்லாது போனதால் இப்பயணங்கள் அவசிய மாயின. அத்துடன் அந்த பயணநேரத்தில் பலவிஷயங்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கவும் வாய்ப்புகள் கிட்டின.

ஹர்னாத்திலிருந்து பாட்னா சென்ற அந்த பயணத்தை பல விஷயங்களுக்கும் நான் பயன்படுத்திக் கொண்டேன். ஹர்னாத்தில் புதிய ரயில்வே பணிமனைக்கு அடிக்கல் நாட்டினேன். அப்போது ரயில்வே அமைச்சராக இருந்த நிதிஷ்குமார் தனது சொந்த மாநிலத்தில் ஒரு பெரிய ரயில்வே வளாகம் அமைக்கப்படுவது கண்டு மிகவும் மகிழ்ந்து போனார். எல்லோர் முகங்களிலும் புன்னகை தென்பட்டது.

நான் அந்த விழாவில் பேசும்போது நாளந்தா என்ற புகழ்பெற்ற கல்விக் கேந்திரம் இருந்த இடத்திலிருந்து இப்போதுதான் புறப்பட்டு வந்ததாகக் கூறினேன். பீகார் அந்த சிறந்த பல்கலைக்கழகத்திற்குப் புத்துயிரூட்டிப் புதிய பாடத்திட்டங்களை உருவாக்கி, அதில் உலக சமாதானத்தை வலுப்படுத்துதல் என்ற அம்சத்தையும் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

அந்த ரயில்பயணம் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. பீகார் மாநிலத்திருந்த பதினைந்து துணைவேந்தர்களுக்கு அழைப்பு விடுத்து அவர்களுடன் ரயில் பயணம் செய்தேன். அந்த மாநிலப் பல்கலைக்கழகங்களின் பிரச்சினைகள் குறித்து அவர்களுடன் ஒருமணி நேரம் விவாதித்தேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கு நேரடியாக உதவக்கூடிய பாடத்திட்டங்களைக் கல்லூரிகளில் உருவாக்க வேண்டும் என்றும் நான் வற்புறுத்தினேன்.

பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளைப் பாதிக்கும் விஷயங்களைக் களைந்து தீர்வு காண்பதிலும், அவற்றை தேசத்தின் மற்ற பல்கலைக்கழகங்களிலும் பின்பற்றச் செய்வதிலும் பீகார் மாநில ஆளுநர் மிகுந்த ஆர்வம் காட்டினார். காலக்கெடுவுடன் அமைந்த ஆய்வுமுறை என்ற குறிக்கோளை அவர்கள் செயல்படுத்திவிட்டதை நான் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அறிந்துகொண்டேன்.

அந்த ரயில் பயணம் குறித்து ஒரு இனிய அனுபவத்தை அடிக்குறிப்பாகச் சொல்லவேண்டியிருக்கிறது. பாட்னா ரயில் நிலையத்தில் நான் ராஷ்ட்ரிய ஜனதா தளத்தலைவர் லாலு பிரசாத் யாதவையும், (ஐக்கிய) ஜனதா தளத்தலைவர் நிதிஷ் குமாரையும் சந்தித்தேன். இருவரும் என்னை வரவேற்க ரயில் நிலையத்திற்கு வந்திருந்தாலும், ஒருவரை ஒருவர் பார்க்காது வெவ்வேறு திசையில் திரும்பி நின்று கொண்டிருந்தார்கள்.

ரயிலில் இருந்து கீழே இறங்கிய நான் அந்த இரண்டு அரசியல் எதிரிகளின் கைகளை பிடித்து ஒன்றாக இணைத்துக் கைகுலுக்கிக் கொள்ள வைத்தேன். அதைப் பார்த்த மக்கள் கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

2004-ஆம் ஆண்டு ஜனவரி 25-ம் தேதி நான் சண்டிகார் சென்று குழந்தைகள் விஞ்ஞான மாநாட்டைத் துவக்கி வைத்தேன். அத்துடன் விஞ்ஞானிகள் மத்தியிலும் உரையாற்றினேன். மறுநாள் 6-ம் தேதி எனக்கு முக்கியமான பணி ஒன்று இருந்தது. அதற்காக நான் டெல்லி திரும்பியாக வேண்டும். அதிகாலை நேரத்துப் பனிமூட்டம் காரணமாக விமானப் போக்குவரத்து தடைபட்டதும் நான் ரயிலில் பயணம் செய்து சரியான நேரத்துக்கு டெல்லி வந்து சேர்ந்துவிட்டேன். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வந்திருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளைக் காட்சிக்கு வைத்திருந்தனர். அந்த விஞ்ஞான மாநாட்டைத் தொடக்கி வைத்தது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தந்தது.

2006-ஆம் ஆண்டு நான் மூன்றாவது முறை ரயிலில் பயணித்தேன். டேராடூன் ராணுவ அகாடமியில் நடைபெற்ற வீரர்களின் அணிவகுப்பில் கலந்துகொண்டு ராணுவ மரியாதையை ஏற்றுக்கொண்டேன். அது குளிர்காலம். பனிமூட்டம் காரணமாக எதையும் தெளிவாகப் பார்க்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. விமானத்தில் பயணம் செய்து குறிப்பிட்ட நேரத்திற்குள் அங்கே விழாவில் கலந்துகொள்வது என்பது நிச்சயமில்லாத ஒன்றாக இருந்தது. இரவு நேரத்திலும் பனிமூட்டம் அகலவில்லை. ரயில் சஃப்தர்ஜங் ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டு எங்கும் நிற்காமல் நேராக டேராடூனை அடைந்தது. ஆயினும் ரயில்வே துறை வழியில் நிறையச் சோதனைச் சாவடிகள் அமைத்துப் பயணத்தின் பத்திரத்துக்கு வழி செய்தது.

ராணுவ அகாடமியில் பயிற்சி முடித்துப் பட்டம் பெறும் அதிகாரிகளைப் பார்ப்பது மனதுக்கு சந்தோஷம் தருவதாக இருந்தது. பட்டம் பெற்ற பல அதிகாரிகள் என்னிடம், தாங்கள் எப்படிப்பட்ட இந்திய அமைப்பைச் சார்ந்திருக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டனர். நான் பாகிஸ்தானின் எல்லையை ஒட்டி அமைந்திருந்த வடபகுதி ராணுவப் பிரிவுகளைப் பார்த்துவிட்டு வந்தபோது எனக்கு ஏற்பட்ட உணர்வுகளை அவர்களுக்குப் பதிலாகத் தந்தேன்.

எனது பயணத்தை எல்லைக்கு அப்பாலிருந்த பாகிஸ்தானிய ராணுவ அதிகாரிகள் கவனத்துடன் நோட்டம் பார்த்தார்கள். அங்கு நான் வெவ்வேறு படைப்பிரிவுகளைச் சேர்ந்த இருநூறு வீரர்களின் நடுவே உரையாற்றினேன். உரை முடிந்து விருந்துக்குப் போவதற்கு முன்னர் அந்த இளம் அதிகாரிகளைப் பார்த்து நான் இவ்வாறு கேட்டேன்.

"அன்பான இளம் அதிகாரிகளே!

நீங்கள் முப்பது வருட காலம் ராணுவத்தில் சேவை செய்யும் வாய்ப்பு உங்கள் எதிரே காத்திருக்கிறது. அதிகாரி என்ற

முறையில் எதை உங்களது சிறப்பான குறிக்கோளாக வைத்துக்கொண்டு பணிபுரியப் போகிறீர்கள் என்று என்னிடம் சொல்லுங்கள்" என்று கேட்டேன்.

மூத்த அதிகாரிகள் பலரும் அமைதியாக இருந்தபோது இளம் அதிகாரிகள் சிலர் தங்கள் கைகளை உயர்த்திக் காட்டினார்கள். அவர்களில் ஒருவரை நான் தேர்ந்தெடுந்தேன். எனக்கு வணக்கம் செலுத்திய பிறகு அந்த இளம் அதிகாரி. "சார்! எனக்கு ஒரு கனவு இருக்கிறது. மற்றவர்கள் கைப்பற்றிய எனது தாயக பூமியை எல்லாம் மீட்டெடுக்க வேண்டும்."

அதைக் கேட்டதும் கூட்டமே சிலிர்த்து எழுந்தது. அந்த இளம் அதிகாரியைப் பார்த்து எல்லோரும் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். நான் இந்த பதிலை பட்டம் பெற்ற ராணுவ அதிகாரிகளிடம் கூறியபோது அங்கும் அதே வகையில் மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்தது. "நாங்களும் அப்படியே செய்கிறோம், சார்!" என்று கூறினார்கள். இக்காரணங்களால் தான் அந்த ரயில் பயணங்கள் என் மனதில் இன்னும் நிலைத்து நிற்கின்றன.

> சூடான் நகரில் பார்த்த ஒரு காட்சிதான் இதுவரை நான் கண்டவற்றிலேயே அழகானதாகும். நீல நைல் நதியும், வெள்ளை நைல் நதியும் ஒன்றாகச் சங்கமித்துப் புதிய ஒரு நதியாக அங்கே புதிய நிறத்தில் உருமாற்றம் பெறுவதைக் கண்டேன். மக்களுடன் கலந்து பழகும்போது நம்மை மாற்றிக்கொள்ளமலேயே நாம் புதிய மாற்றம் பெற முடியும்.

11

இந்தியாவின் இதயத்துக்கு இளமையூட்டல்

கிராம இயக்கம் என்பது ஒரு ஆரோக்கியமான முயற்சியாகும். கிராம மக்களுடன் தொடர்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். கிராம சேவையில் ஆர்வமுள்ள மனிதர்களைக் கண்டறிய வேண்டும். சேவைப் பணியின் முன்னுதாரணங் களாக அவர்களை மாற்றிக் காட்டவேண்டும்.

–மகாத்மா காந்தி

இந்தியா கிராமங்களில் வாழ்கிறது. தேசத்தின் கலாச்சாரம், பாரம்பரியம், சம்பிரதாயங்கள், வாழ்க்கைத் தத்துவங்கள் போன்றவை எல்லாம் அங்கிருந்துதான் வெளிப்படுகின்றன. நான் கிராமத்தில்தான் பிறந்து வளர்ந்தேன். கிராம வாழ்க்கையின் லயத்தை என்னால் புரிந்துகொள்ள முடியும்.

சமீப காலமாக கிராமத்திலிருந்து மக்கள் நகரம் நோக்கிப் படையெடுப்பது மிகவும் அதிகரித்துப் போய்விட்டது. பணம் சம்பாதித்துப் பசியைத் தணித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக வரும் இவர்கள் நகரத்தின் குப்பங்களில் நெருக்கியடித்துக்கொண்டு சிரமத்துடன் காலம் தள்ளுகிறார்கள்.

சொத்து சுகங்கள், ஆசாபாசங்கள் அவர்களிடமிருந்து பிடுங்கி எறியப்பட்டுவிட்டன. கிராமங்களை மேம்படுத்

தினால் தான் அவர்கள் அங்கேயே தங்களுக்குத் தேவையான பணத்தைச் சம்பாதிக்க இயலும். அவ்வாறான வசதிகளை கிராமங்களில் ஏற்படுத்தும்போது இந்தியாவின் முகமே மாறிப் போய்விடும் என்று நான் நம்புகிறேன்.

வறுமையின் வசப்பட்ட ஏழைகள் நகரங்களை நோக்கிச் செல்லும் துன்பப் பயணம் இதன் மூலம் நின்று போகும். இந்த எண்ணத்தின் அடிப்படையில் உருவானதுதான், நகரத்து வசதிகளை கிராமப் பகுதிகளுக்கும் வழங்குதல். (Providing urban Amenities to Rural Areas-PURA) என்ற திட்டமாகும்.

எந்த ஒரு மாநிலம் முன்னேற வேண்டுமானாலும் முதலில் அங்குள்ள கிராமங்கள் முன்னேற்றம் பெறவேண்டியது அவசியம். நான் நேரடி அனுபவம் பெறுவதற்காக 2002-ஆம் ஆண்டு போபாலிலுள்ள ஒரு கிராமத்துக்கும் செல்ல முடிவு செய்தேன். தோர்னி என்ற ஊரைத் தேர்வு செய்தோம். அங்கே மின்சார வசதியோ, சரியான போக்குவரத்துச் சாலைகளோ எதுவும் கிடையாது.

நான் அங்கே செல்ல இருப்பதைச் சொன்னதும் மாநில நிர்வாகம் வேகமாகக் காரியத்தில் இறங்கியது. முதல் முறையாகப் பல கிலோமீட்டர் தூரத்திற்கு எல்லா பருவ காலங்களிலும் தாக்குப் பிடிக்கும் வகையிலான சாலை அமைக்கப்பட்டது. ஜெட் வேகத்தில் மின்சார வசதியும் அங்கே போய் சேர்ந்துவிட்டது.

எனது பயணத்தின்போது அந்த கிராம மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் எனக்குப் பலவற்றையும் காட்டினார்கள். நீர்ப்பிடிப்புப் பகுதிகளை முறையாக நிர்வாகிக்கக் கற்றுக் கொண்டது, உயிரியல் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவது போன்றவற்றைச் செய்து காட்டினார்கள். தோர்னி கிராமத்தில் நடத்தப்பட்ட சாதனைகளை மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யுமாறு நான் மாவட்ட அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டேன். அந்த அனுபவங்கள் மூலம் பலன் பெற முடியுமென்று கூறினேன்.

அது மட்டுமல்லாது பல கிராமங்களை ஒன்று சேர்த்து ஒரு தொகுப்பை உருவாக்க வேண்டும். இப்படிப்பட்ட தொகுப்புகளுடன் கிராமங்கள் இணைக்கப்பட வேண்டும் என்று நான் மாநில அரசிடம் வேண்டுகோள் விடுத்தேன். சாலை வசதி, போக்குவரத்து வசதி போன்ற ஸ்தூலமான தொடர்புகள் மட்டும் போதாது. மக்களின் சுகாதார நலன்,கல்வி நிறுவனங்கள், எளிதில் கெட்டுப்போகக் கூடிய பழங்கள் காய்கறிகள் போன்றவற்றைச் சேமித்து வைக்க குளிர்பதன வசதிகள், உணவு பதப்படுத்தும் தொழில் அல்லது அதுபோன்ற தொழிற்சாலைகள் கிராமத் தொகுப்பில் உருவாக்கப்படுதல் வேண்டும். அவை அப்பகுதியில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும்.

ஆனால் இன்றைய நாட்களில் உணவுப் பொருட்கள், மரத்தினால் செய்யப்படும் பொருட்கள் சார்ந்த தொழில்கள் மட்டுமே வேகமாக விரிவடைந்து வருகின்றன. விதவிதமான பொருட்கள் தயாராகின்றன. அவற்றுக்கு நல்ல கிராக்கியும் இருந்து வருகிறது. அத்துடன் நான் செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்தி மத்தியப் பிரதேசகிராமத்திலுள்ள அனைத்து நீர்வள ஆதாரங்களையும் பதிவு செய்ய வேண்டும் என்று முதலமைச்சரிடமும், மாவட்ட அதிகாரிகளிடமும் கூறினேன். குளங்களைத் தூர்வாரி மழைநீர் சென்று தேங்கவும், தேங்கிய நீர் பாசனத்துக்கு பயன்பட வாய்க்கால் வசதியும் ஏற்படுத்த வேண்டும்.

தோர்னி கிராமத்து இளைஞர்கள் அக்கிராமத்தில் இருந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்ந்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். மாநில அரசு அதற்கு ஒப்புதல் தந்தது. நான் தோர்னி கிராமத்தைப் பார்வை யிட்டதன் மூலம் நகரம் கிராமம் இரண்டுக்கும் இடையே உள்ள இடைவெளிக்கு நடுவே பாலம் போடுவதற்கான தொடர்புகள் உட்பட பல்வேறு வளர்ச்சிகளின் பரிமாணங்களைக் களத்தில் இறங்கிக் கண்டறிய முடிந்தது.

நான் ராமேஸ்வரத்தில் பிறந்து வளர்ந்தவன். அங்கே கிடைத்த அனுபவங்களின் வெளிப்பாடாகப் பல திட்டங்கள் என்னிடம் உருப்பெற்றன. கிராம மக்கள் தங்கள் சம்பாதிக்கும் திறனைப் போதுமான அளவு மேம்படுத்திக்கொள்ள என்ன செய்யலாம் என்று அவை வழிகாட்டின.

எனது தொழில் நிமித்தம் நான் பெருநகரங்களில் தங்கியிருக்க வேண்டியிருந்தது. ஆனாலும் தொலை தூரத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்று வரவேண்டிய வாய்ப்புகள் கிடைக்கவும் செய்தன. இந்தியா 2000 என்ற திட்டத்தை நாங்கள் உருவாக்கியபோது அதன் முக்கியமான அம்சங்களில் நாட்டிலுள்ள ஆறு லட்சம் கிராமங்களை மேம்படுத்துவதும் ஒன்றாக அமைந்திருந்தது.

எனது நண்பர் பேராசிரியர் பி.வி. இந்திரேசன் PURA திட்டத்துடன் என்னை அணுகியபோது அது என் உணர்வுகளைத் தூண்டிவிட்டது. நான் விரிவாக அதுபற்றி அவருடன் விவாதித்தேன். இதே விதமான ஆர்வம் கொண்ட பல்வேறு வல்லுனர்களிடமும் கலந்துரையாடினேன்.

எனக்கு மத்திய பிரதேச சித்திரகூடத்தின் PURA திட்டத்தைச் சேர்ந்த நானாஜி தேஷ்முக், தமிழ்நாடு, வல்லத்தைச் சேர்ந்த பெரியார் PURA திட்டத்தினர், மகாராஷ்ட்ராவைச் சேர்ந்த லோனி PURA திட்டத்தினர் போன்றவர்களுடன் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. மகாராஷ்ட்ரா வாரணா PURA திட்டமும் அதில் ஒன்றாகும். இந்த கிராமவளர்ச்சி அனுபவங்கள் நாடு தழுவிய திட்டமாக PURA வை மாற்றுவதற்கு ஏற்ற வடிவத்தைத் தந்தன.

திட்டத்தின் தலைவர் என்ற முறையில் நகரங்களை விடவும் அதிகமாக கிராமப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டேன். அந்த பயணங்கள் PURA வின் சிக்கல்களை அகற்றித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வசதியாக இருந்தது. நாங்கள் நகர மக்களுடன் பேசினோம். அவர்கள் சுற்றுச்சூழலில் மாசு

அதிகரித்து வருதல், அவசர கதியிலான வாழ்க்கை முறை, ஜன நெரிசல் போன்ற பல சிக்கல்கள் பற்றிக் கூறினார்கள். ஆனாலும் தங்கள் கிராமத்துக்குத் திரும்பிச் செல்ல அவர்கள் முயலவில்லை.

கிராமத்து மக்கள் தங்கள் சுற்றுச்சூழலை மிகவும் விரும்பினாலும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளும் ஆசையில் நகரங்களை நோக்கி வருகிறார்கள். எனவே அதற்குத்தீர்வு காண கிராமத்து மனிதர்கள் குறிப்பாக இளைஞர்கள் தங்கள் வருமானத்தை கிராமத்திலேயே பெருக்கிக் கொண்டுவிட வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரவேண்டாமா?

நகரத்து மக்களின் மனதைக் கவரும் வகையில் கிராமங்களை ஈர்ப்பு நிறைந்த இடங்களாக மாற்ற முடியும். அமைதியாக வியாபாரம் பேசவும், விடுமுறையை அனுபவிக்கவும் மட்டுமின்றி, அங்கே அவர்கள் வந்து குடியேறுமாறு செய்யவும் இயலும். இம்மாதிரியான எண்ணங்கள்தான் PURA திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்தன.

கிராம வளர்ச்சிப் பணிகளில் அரசும், தனியார் துறையும், பொதுத்துறை நிறுவனங்களும் பங்கு கொள்கின்றன. அவை கல்வி நிறுவனம் அல்லது மருத்துவ சேவை மையங்களைக் கிராமங்களில் நடத்துவதை இதற்கு உதாரணம் காட்டலாம். அதுதவிர, தனிப்பட்ட முறையில் சாலைகள் அமைத்துக் கொடுத்தல், வீடுகள் கட்டிக் கொடுத்தல், தகவல் தொடர்பு வசதிகளை ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு ஏற்படுத்தித் தருதல் போன்றவையும் அளிக்கப்படுகின்றன.

பெருமழை பெய்யும்போது மழை நீர் நீரோடைகளாக ஓடுகின்றன. பிறகு மழை நின்றதும் அவை வரண்டு போகின்றன. காரணம் அந்த நீரைச் சேமித்து வைக்க முறையான குளம், குட்டைகள் ஏற்படுத்தப்படவில்லை. கடந்த சில பத்தாண்டுகளாக இதற்கான முயற்சிகள் முனைப்புடன்

நடைபெற்று வருவதைக் காண்கிறோம். முதல் முறையாக PURA ஒருங்கிணைந்த, நீடித்த பலன் தரும் முன்னேற்றத் திட்டத்தை உருவாக்கியது.

கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதுடன் ஆரோக்கியமான பழக்க வழக்கங்கள், சமூக நலன் வசதிகள், கல்வி, பணித்திறன் மேம்பாடு, மின்சார, சாலை வசதிகள், பொருட்களைச் சந்தைப்படுத்தும் வாய்ப்புகள் போன்றவற்றை உருவாக்கித் தந்தது. இந்த நேரத்தில் நமக்குத் தேவைப்படுவது நீடித்த பலன் தரும் அமைப்புகளை உருவாக்குவதேயாகும். அவை சக்தியாளர்களாக மாறி, சிறப்பான வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

வளர்ச்சியடைந்த இந்தியா உருவாக வேண்டுமானால் கிராமங்கள் முன்னேற வேண்டும் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். கிராமங்கள் முன்னேறுவது என்றால் என்ன? அதன் அர்த்தம் இதுதான்:

1. கிராமங்களுக்கு நல்ல சாலை வசதிகள் அளிக்கப்பட வேண்டும். தேவையான இடங்களில் ரயில்வே வசதியும் செய்து தரப்பட வேண்டும். உள்ளூர் மக்கள் பயன்பெறும் வகையில் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் போன்ற வசதிகள் செய்துதரப்பட வேண்டும். அத்துடன் அங்கு வரும் வெளியூர்க்காரர்களுக்கும் தங்குமிடம் போன்ற வசதிகள் அளிக்கப்படுதல் வேண்டும். இவற்றை நாம் ஸ்தூல வடிவத் தொடர்புகள் என்று கூறலாம்.
2. அறிவுசார்ந்த யுகத்தில் நுழைந்துள்ள நாம் பாராம்பரியம் நிறைந்த நமது அறிவார்ந்த விஷயங்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டும். நவீன தொழில்நுட்பக் கருவிகள், பயிற்சி மற்றும் ஆய்வுப் பணிகளின் துணையுடன் அவற்றை மேலும் வளப்படுத்த வேண்டும். சிறந்த ஆசிரியர்கள் எங்கே இருந்தாலும் அவர்களிடமிருந்து தரமான கல்வியைக் கிராமங்கள் பெற்றாக வேண்டும். சிறந்த மருத்துவ சிகிச்சைகள் கிடைக்க வேண்டும். விவசாயம் மீன்பிடித் தொழில்,தோட்டக்கலைப் பயிர்கள் உணவுப்பொருட்கள்

பதப்படுத்தல் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சி குறித்த தகவல்கள் கிடைக்க வேண்டும். இவற்றின் மூலம் அவர்கள் மின்னணுத் தொடர்புகள் பெறவேண்டும்.

3. ஸ்தூல வடிவிலான தொடர்புகளும், மின்னணுத் தொடர்பு களும் கிடைத்த பின்னர் அறிவுத் தொடர்பு கிடைக்க வழி செய்ய வேண்டும். அதன் மூலம் அவர்கள் தங்கள் உற்பத்தித் திறனை அதிகரித்துக்கொள்ளலாம். பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளைக் கண்டறியலாம். தரமேம்பாடு பற்றிய விழிப்புணர்வு பெறலாம். தொழிலாளர்களுடன் நல்லுறவு வைத்துப் பராமரிக்கலாம். சிறந்த கருவிகளின் உதவியை நாடலாம். ஒளிவு மறைவற்ற தன்மையுடன் பணியாற்றலாம். வாழ்க்கை முறையை வளப்படுத்திக்கொண்டு ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிக்கலாம். எனவே இதை நாம் அறிவுத் தொடர்பு என்று பெயரிடலாம்.
4. இந்த மூன்று விதமான தொடர்புகளும் கிராமங்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் தங்களின் சம்பாதிக்கும் திறனை அதிகரித்துக்கொள்ள முடியும். PURA -வை லட்சியத் திட்டமாக எடுத்துச் செயல்படுத்தும்போது நாம் கிராமங்களை நன்கு மேம்படுத்த முடியும். செழிப்பான அறிவு மையங்களாக மாற்ற இயலும். கிராம மக்கள் தொழில் முனைவோர்களாக மாறுவதைக் காணவும் முடியும்.

பெரியார் PURA திட்டமானது வல்லத்தில் உள்ள பெரியார் மணியம்மை பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரியால் முன்னெடுத்து நடத்தப்பட்டது. நான் அதை 2003-ஆம் ஆண்டு டிசம்பர் 20-ஆம் தேதி துவக்கி வைத்தேன். அதன் பிறகு 2006-ஆம் ஆண்டு டிசம்பர் 24-ம் தேதி மறுமுறை அங்கு விஜயம் செய்தேன்.

இந்த PURA திட்டத்தில் அறுபத்தைந்து கிராமங்கள் ஒரு தொகுப்பாக உருவாக்கப்பட்டிருந்தன. 2003-ஆம் ஆண்டில் அதன் மக்கள் தொகை ஒரு லட்சத்திற்கும் அதிகமாக இருந்தது. அங்கே மூன்று விதமான இணைப்புகளும் உருவாக்கப்பட்டு பொருளாதார இணைப்புக்கு வழியமைக்கப்பட்டிருந்தன.

நான் ஒவ்வொரு முறை சென்றபோதும் உள்ளூர் மக்களின் ஆர்வம் என்னை வியப்படையச்செய்தது. கிராமத் தொகுப்பின் முன்னேற்றத்திற்கு மக்களும், இளைஞர்களும் ஊக்கத்துடன் உழைத்தார்கள். இளைஞர்கள் தங்கள் கிராம முன்னேற்றத் திட்டங்களையும், சுயதிறனாற்றலையும் வெளிப்படுத்தினார்கள்.

ஊக்கம் தரும் இந்த முயற்சிகள் வாயிலாகப் பெரிய அளவில் வேலை வாய்ப்புகள் ஏற்பட்டன. அங்கிருந்த 1800 சுய உதவிக் குழுக்களின் ஆதரவுடன் பல தொழில் முனைவோர் உருவாயினர். நீர் நிர்வாகத்திட்டங்களின் பயனாக இருநூறு ஏக்கர் தரிசு நிலம் விளைநிலமாக மாற்றப்பட்டது.

பெரியார் மணியம்மை கல்லூரியானது பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமாகும். PURA -திட்டத்திற்கு அது தனது மாணவர்களையும், ஆசிரியப் பெருமக்களையும் தந்து உதவியது. உள்ளூர் மக்களின் திறமைகளை வளர்க்கவும், புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்தவும் அவர்கள் கை கொடுத்தனர்.

அது மட்டுமின்றி ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு திட்டம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார்கள். நாற்பத்தைந்து கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு அங்கே பலவிதப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அவற்றுக்கு நாடு முழுவதும் பெரிய வரவேற்புக் கிடைத்தது.

அந்தக் கல்வி நிறுவனம் கிராமத்தின் அடிமட்ட நிலையிலிருந்து நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்ததால், அந்த அறுபத்து ஐந்து கிராமங்களும் வேகமாக வளர்ச்சி பெற்றன. அங்கே வசித்த மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டது.

நானாஜி தேஷ்முக்கும், அவரது குழுவினரும் தீன்தயாள் ஆராய்ச்சி நிலையத்தை (DRI) சேர்ந்தவர்கள். மத்தியப் பிரதேசத்தில் சித்திரகூடத்தில் இவர்கள் PURA திட்டத்தைத்

துவக்கினார்கள். அந்த நிலையம் கிராமத்தை மேம்படுத்தவும், வளர்ச்சியுற வைக்கவும் தேவையான முன்னோடித் திட்டத்தை உருவாக்கியது. அது இந்தியாவுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.

அரசியல் சக்தியைக் காட்டிலும் மக்கள் சக்தியே மிகவும் பிரதானமானது என்பதை அந்த நிலையம் உணர்ந்து வைத்திருந்தது. ஒன்று, அடக்கிவைத்துச் சோர்வடையச் செய்கிறது. மற்றொன்று, புத்திக்கூர்மையுடன் நிர்வாகம் செய்கிறது.

இளைய சமுதாயத்தினரிடம் தன்னிறைவு மற்றும் சிறப்பான செயல்திறன் பற்றிய உணர்வைத் தூண்டியெழுப்பும் போது தான் நாட்டை வளர்ச்சியடையச் செய்து செழுமைப்படுத்த முடியும். இந்த விதிமுறையைப் பயன்படுத்தி தீன்தயாள் ஆராய்ச்சி நிலையம் (DRI) ஐந்து கிராமங்களை இணைத்து ஒரு தொகுப்பாக்கியது. இவ்வாறு நூறு தொகுப்புகளின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

அவர்கள் பதினாறு தொகுப்புகளில் உள்ள எண்பது கிராமங்களை ஏற்கனவே வளர்ச்சியடையச் செய்திருக் கிறார்கள். அந்த மக்கள் தொகை ஐம்பதாயிரமாகும். பாட்னி என்ற கிராமத்தில் DRI நிரந்தரமான வளர்ச்சியை ஏற்படுத்திக் காட்டியது. உள்நாட்டைச் சேர்ந்த பாரம்பரியத் தொழில்நுட்பம், அறிவாற்றல் மற்றும் உள்ளூர் திறமைகளை மட்டும் பயன்படுத்தி இது சாதித்துக் காட்டப்பட்டது. நேரடியாகக் களத்தில் இறங்கிய அந்த நிறுவனம் பல ஆய்வுகளை மேற்கொண்டது. கிராமங்கள் தன்னிறைவு பெறுவதற்கு ஏற்ற ஒரு முன்னோடித் திட்டத்தை வடிவமைத்தது.

ஜனங்களைத் தகுதியுள்ளவர்களாக மாற்றுதல், ஊக்கம் அளித்தல், விவசாயப் பயிற்சிகள் தருதல், அறிவியலின் சிறப்பை கிராம மக்களின் மனதில் பதியச் செய்தல். சுத்தம் சுகாதார

மேம்பாடு, நூறு சதவீதம் மக்களைக் கல்வியறிவு பெற்றவர்களாக மாற்றும் முயற்சி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் ஒட்டுதல் நிறைந்த, சச்சரவற்ற சமுதாயத்தை உருவாக்கவும் நிறுவனம் பாடுபட்டது. இதன் காரணமாக சித்திரகூடத்தைச் சுற்றி அமைந்திருந்த எண்பது கிராமங்கள் வம்பு வழக்குகளுக்காக நீதிமன்றம் செல்லாத வசிப்பிடங்களாக மாறின.

இந்த வித்தியாசமான நடைமுறையை அந்த மக்கள் தாங்களே மனம் விரும்பி ஏற்றுக்கொண்டனர். அதற்கான காரணத்தை நானாஜி தேஷ்முக் கூறினார். மக்கள் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் முன்னேறுவதற்கு நேரம் கிடைக்காது என்றார். அவர்கள் தங்களை முன்னேற்றிக் கொள்வதுடன் சமுதாய வளர்ச்சிக்கும் துணை நிற்க இயலும்.

இந்திய கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கேற்ற ஒரு முன்னு தாரணமான ஒருங்கிணைப்புத் திட்டமாக சித்திரகூடத் திட்டம் எனக்குத் தென்பட்டது. குடும்ப உறவுகளுடன் கூடிய ஒரு சமூக அமைப்பு, இந்தியக் கலாச்சாரம் குறித்த பெருமிதம், இந்திய ஞானத்துடன் நவீனக் கல்விமுறை இணைதல், சமூக இறுக்கங்களிலிருந்து விடுபடுதல், எல்லோருக்கும்- குறிப்பாகப் பெண்களுக்கு பொருளாதாரச் சுதந்திரம் கிடைத்தல், எல்லோரும் ஆரோக்கிய நலன் பெறுதல், தூய்மை பேணுதல், சுற்றுச்சூழல் மீது அக்கறை காட்டுதல், சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் செல்வவளம் ஏற்றத்தாழ்வின்றி வழங்கப் படுதல் போன்றவை சீராக நடைபெறுவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது.

இந்தக் கருத்து எனக்குத் திருப்தியளிப்பதாக அமைந்திருக்கக் கண்டேன். இந்தியாவின் முன்னேற்றம் என்பது பொருளாதார முன்னேற்றம் மட்டுமல்லாது கலை, இலக்கியம், மனிதாபி மானம், உயர்ந்த சிந்தனைகள் போன்றவைகளும் அதனுடன் இணைந்து மேன்மையுற வேண்டும். எல்லாவற்றிற்கும்

மேலாக, ஐந்தாயிரம் ஆண்டுப் பாரம்பரியம் கொண்ட நமது கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

PURA திட்டத்தைப் புரிந்துகொண்டதன் அடையாளமாக ஒரு வரவேற்பு இயக்கம் நடத்தப்பட்டது. பிறகு அதை நாட்டின் பல பகுதிகளில் இருந்த பொது தனியார்துறைப் பங்களிப்புடன் செயல்படுத்தும் பணிகள் துவங்கின. எனக்கு பலமான சமிக்ஞைகள் கிடைத்திருக்கின்றன. எதிர்காலத்தில் நாட்டில் சுமார் 7000 PURA திட்டங்கள் செயல்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.

நிஜமான இந்தியா கிராமங்களிலேயே வாழ்வதாக காந்திஜி கூறினார். நிறைய மக்கள்தொகை கொண்ட நமது இந்திய தேசம் உலக நற்பணிகளுக் கான தனது பங்களிப்பை நிச்சயம் வழங்கும்.

12

தோட்டத்தினுள்ளே...

தியாகம், சாதனை,
வெற்றி தோல்வி குறித்த
வருத்தம், சந்தோஷம் போன்றவற்றிற்குத்
தடைபோடும் எந்தச் சுவரையும் நான் எழுப்பவில்லை.
திறந்த வெளிகளில் நான்
மலர்களை மட்டுமே வளர்க்கிறேன்
நதிகளிலும், குளங்களிலும்
அல்லிகளைப் படரவிடுகிறேன்.

1997-ஆம் ஆண்டு நான் பாரதரத்னா விருது பெற்றபோது சித்ரா நாராயணன் (ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனின் மகள்) என்னையும், எனது சகோதரர் மற்றும் பேரன்மார்களை அழைத்துச் சென்று மொகல் தோட்டத்தைச் சுற்றிக் காட்டினார்.

அது மனதிற்கு மகிழ்ச்சி தரும் அனுபவமாக அமைந்திருந்தது. அந்தத் தோட்டத்தின் எழிலைப் பௌர்ணமி நிலவொளியில் பார்த்தால் இன்னும் அற்புதமாக இருக்கும் என்ற எனது விருப்பத்தை அவரிடம் கூறினேன். நான் சொன்னது ஜனாதிபதி மற்றும் அவரது மனைவி உமா நாராயணன் செவிகளிலும் விழுந்து விட்டது. அதன் பிறகு நான் எப்போதெல்லாம் அங்கே நடக்கும் அரசு விருந்துகளில் கலந்துகொள்கிறேனோ, அன்று ஜனாதிபதியும், அவர் மனைவியும் என்னை ராஷ்ட்ரபதி பவனில் இரவு தங்கியிருக்குமாறு கூறிவிடுவார்கள். அறுபது பௌர்ணமிகளை

நான் அந்த ராஷ்ட்ரபதி பவனில் தங்கியிருந்து அனுபவிக்கப் போகிறேன் என்று எனக்கு அப்போது தெரியாது.

நான் அங்கே தங்கியிருந்தபோது மொகல் தோட்டம் எனக்குப் பரிசோதனை மேடையாகப் பயன்பட்டது. அது எனக்கும், இயற்கைக்கும், மக்களுக்கும் இடையிலான ஒரு பலமான தொடர்பு ஊடகமாக நின்று செயல்பட்டது. வாழ்வின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களை அங்கே நான் சந்தித்துப் பேசினேன். மூலிகைகள் பற்றிய விஷயங்களில் நிபுணத்துவம் பெற்ற நபர்களும் அதில் அடக்கம். அதற்காக அங்கே ஒரு மூலிகைப் பண்ணையே அமைக்கப்பட்டிருந்தது. அவ்வப்போது அங்கே வந்து சேரும் பறவைகளும், மிருகங்களும் எனது தோழர்களாயினர். அதன் அமைதியும், இதமான சுற்றுச்சுழலும், அழகான மரக்கூட்டங்களும் மனதுக்கு நிம்மதி தந்தன.

அங்கே வருகை தரும் அரசு உயரதிகாரி அல்லது மாநிலத் தலைவர்களுடன் நான் பேசிக்கொண்டே தோட்டத்தில் நடப்பேன். 2007-ஆம் ஆண்டு 'சார்க்' மாநாட்டுத் தலைவர்களுடன் அவ்வாறு பேசிக்கொண்டே நடந்தது ஒரு மறக்கமுடியாத அனுபவம். பாகிஸ்தான் பிரதமமந்திரி ஷாகத் அஜீஸ் சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது. இருதரப்பு உறவுகள் குறித்த சந்திப்பை இந்த மொகல் தோட்டத்தில் நடத்தினால், இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள வேற்றுமை உணர்வுகள் கரைந்து மறைந்துவிடும் என்றார்.

ஒருமணி நேரம் இந்த தோட்டத்தில் தேனீர் விருந்து நடத்துவதற்குப் பதிலாக நமது பிராந்தியத்தின் முன்னேற்றம் குறித்து ஒரு விவாதத்தை இந்த அழகிய புல்வெளியில் நடத்துவதற்கு நான் ஏற்பாடு செய்யவேண்டும் என்று இலங்கைப் பிரதம மந்திரி கேட்டுக்கொண்டார்.

நான் அந்த தோட்டத்தில் இரண்டு குடில்களை அமைத்தேன். அதன் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் விதமாக அவை வடிவமைக்கப்பட்டன. இயற்கையாகக் கிடைக்கும்

பொருட்களைக் கொண்டு அக்குடில்கள் உருவாக்கப்பட்டன. ஒரு குடில் திரிபுராவைச் சேர்ந்த கைவினைஞர்களால் அமைக்கப்பட்டு, அதற்கு சிந்தனைக் குடில் என்று பெயரிடப்பட்டது.

எனது நெருங்கிய நண்பர்கள் பலரை அங்கே அழைத்துச் சென்று வாராந்தர விடுமுறைகளில் விவாதங்கள் நடத்துவேன். Indomitable spirit என்ற எனது புத்தகத்தின் பெரும்பகுதி இங்கேதான் எழுதி முடிக்கப்பட்டது. இரண்டாவது குடிலின் பெயர் தெய்வீகக் குடில். அதைச்சுற்றி பதினாறு மரங்கள் சூழ்ந்திருந்தன முப்பத்து நான்கு வகையான மூலிகைள் அடங்கிய ஒரு மூலிகைத் தோட்டம், இன்னிசைப் பூங்கா, உயிரியல் பூங்கா போன்றவையும் அதையொட்டி அமைந்திருந்தன.

நான் எழுதிய மிக முக்கியமான புத்தகங்களில் ஒன்றான Guiding soul ஐ எழுதுவதற்குத் தேவையான விஷயங்கள் இங்கே எனது நண்பர் பேராசிரியர் அருண் திவாரியுடன் அமர்ந்து உரையாடிய போதுதான் கிடைத்தன. மனித வாழ்வின் நோக்கம் பற்றி புத்தகம் ஆய்வு செய்கிறது.

ஏதாவது ஒரு சிக்கலான தேசியப் பிரச்சினைகளுக்கு முடிவு எடுக்க வேண்டியிருந்தால், அந்த குடிலில் இரண்டு மணிநேரம் அமர்ந்து யோசனைகள் மேற்கொள்வேன். நான் எழுதிய பல கவிதைகளுக்கான உந்துசந்தி அந்த குடிலில் நான் இருந்த சமயங்களில்தான் கிடைத்தது.

அந்த ராஷ்ட்ரபதி பவன் தோட்டம் 340 ஏக்கர் பரப்பில் விரிந்து கிடக்கிறது. மொகல் தோட்டத்தின் பரப்பளவு பதினைந்து ஏக்கர்கள். மூன்று வகையான வடிவங்களில் அந்த தோட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. செவ்வகம், நீள்சதுரம், வட்ட வடிவங்கள் என்று அவை அமைந்திருந்தன.

செவ்வக வடிவமான பிரதான மொகல்தோட்டத்தில் நான்கு நீரோடும் வாய்க்கால்கள், ஆறு நீரூற்றுக்கள், எழுபது

சதுரமீட்டர் பரப்புள்ள புல்வெளியும். அமைக்கப்பட்டுள்ளன (வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளும், குடியரசு, சுதந்திரதின விழாக்களும் இங்குதான் கொண்டாடப்படுகின்றன) குடைபிடிக்கும் 144 மரங்கள், அழகான ரோஜாக்கள், விதவிதமான வடிவங்களில் புல்வெளிகளும் அழகு செய்கின்றன.

இந்த தோட்டம் இரண்டாவது நீள்வடிவத் தோட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நீண்ட தோட்டத்தில் ஐம்பது மீட்டர் நீளமுள்ள மத்திய நடைபாதை உள்ளது. அதன் மத்தியில் உயரமான தூண்களுடன் அமைந்த கொடிமண்டபம் (Pergola) பலவிதமான பூங்கொடிகள் படர்ந்து கம்பீரமாக நிற்கிறது. பாதையின் இருமருங்கிலும் ரோஜாக்களும், சீனத்து ஆரஞ்சு மரவரிசையும் காணப்படுகின்றன.

நீண்ட தோட்டம் மேற்கிலுள்ள மூன்றாவது தோட்டத்துடன் இணைகிறது. பூஞ்செடிகள் வரிசையும், மத்தியில் ஒரு நீரூற்றும் அங்கே உள்ளன. வட்டமான நடை பாதையுடன் உள்ளதான அது வட்டத்தோட்டம் என்று அழைக்கப்படுகிறது. மலர்கள் பூத்துக் குலுங்கும்போது அந்த தோட்டம் கம்பீரமான அழகுடன் காட்சி தரும். இந்த புல்வெளியில்தான் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் டபிள்யூ. புஷ் அவரது மனைவி லாரா மற்றும் உடன் வந்திருந்தவர்களுக்கு விருந்து அளிக்கப்பட்டது.

அந்த வெற்றிகரமான விருந்தில் புகழ்பெற்ற கலைஞர்களும், அறிவுஜீவிகளும், முக்கியமான பெரிய மனிதர்களும் கலந்து கொண்டது ராஷ்ட்ரபதி பவன் விழாவின் சிறப்பு அம்சமாக அமைந்திருந்தது. அந்த விழாவை ஜனாதிபதி தம்பதியினர் மனதாரப் பாராட்டினார்கள். மொகல் தோட்டத்தில் இந்த மூன்று பகுதிகளும், மற்றுமுள்ள பிற தோட்டப் பகுதிகளும் பிப்ரவரி மத்தியிலிருந்து மார்ச் இரண்டாவது வாரம்வரை அழகின் உச்சத்தில் மிளிரும்.

வியப்பூட்டும் குளிர்கால அழகுக்காட்சிகளாக ரோஜாக்களும், பூங்கொடி வகைகளும், புதர்களும், பூமரங்களும், வருடத்துக்கு ஒரு முறை பூக்கும் மலரச்செடிகளும் பூத்துத் தலையசைக்கும். டாக்டர். பிரம்மசிங் என்பவர் தோட்டக் கலைத்துறையைச் சேர்ந்தவர். சிறப்பு பணிப்பொறுப்பேற்று அங்கே கடமையாற்றினார். அங்குள்ள மலர் வகைகளை வகைப்படுத்தி குறிப்பெடுத்து வைப்பதில் ஆனந்தம் கொண்டார். மலர்களை Acroclinium, Antirrhinum, Brachycome, Begonia, Calendula, Campanula, Candyturf,Carnation, Chrysanthemum, Celosia, China aster, Cineraria, Calliopsis, Cosmos, Clarkia, Cornflower, Daisy, Delphinium, Dianthus, Dahlia என்ற பெயர்கள் அகரவரிசையில் தொகுக்கப்பட்டிருக்கும்.

தோட்டத்தின் அழகு ஆயிரக்கணக்கான மக்களைக் கவர்ந்திழுக்கிறது. எவ்வித நுழைவுக் கட்டணமும் இல்லாமல் மக்கள் அங்கே சென்று காட்சிகளை ரசித்து மகிழலாம். அது மட்டுமின்றி விவசாயிகள், ராணுவப் பணியாளர்கள், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கென்று சிறப்பு விழா நாட்களும் நடத்தப்படும். டாக்டர். பிரம்ம சிங் ராஷ்டரபதி பவனிலுள்ள மரங்கள் பற்றி அழகான படங்களுடன் கூடிய ஒரு புத்தகத்தையும் தொகுத்துள்ளார்.

2002-ஆம் ஆண்டு நான் ராஷ்ட்ரபதி பவன் தோட்டத்தின் அழகை மேலும் எவ்வாறு அதிகரிக்கலாம், புல்பரப்பை எவ்வாறு விஸ்தரிக்கலாம் என்பது பற்றி யோசித்தேன். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பில் (DRDO) நான் பணியாற்றிய சமயத்தில், உயரமான மலைப்பகுதிகளில் விவசாயம், மற்றும் காய்கறி உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது, வரட்சியான சமநிலப் பாறைப் பகுதிகளில் மலர் வகைகள் பயிரிடுவது குறித்தெல்லாம் அனுபவம் பெற்றிருந்தது இப்போது கை கொடுத்தது.

நான் DRDO -வில் இருந்த விவசாய விஞ்ஞானிகளுடன் கலந்து பேசினேன். அத்துடன் இந்திய விவசாய ஆராய்ச்சி சபை (Indian council of Agricultural Research) அத்துடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபை (Council of Scintific and Industrial Research) போன்ற அமைப்புகளுடனும் கலந்துரை யாடினேன். டாக்டர்.பிரம்ம சிங்கும் எனக்கு உதவி செய்தார். எங்கள் முயற்சிக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அங்கே பனிரெண்டு புதிய தோட்டங்கள் உருப்பெற்றன.

பார்வையற்றவர்கள் தொட்டு உணரக்கூடிய வகையிலான தோட்டங்கள் (Tactile gardens) இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் ஒரு சிலவே உள்ளன. விஞ்ஞானம் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின், தேசியத் தாவரவியல் ஆராய்ச்சி நிலையம் (The National Botonical Research Institute- (NBRI) லக்னோவில் உள்ளது. அங்கே பார்வையற்றவர்களுக்கான ஒரு தோட்டம் இருக்கிறது. 2004-ஆம் ஆண்டு ராஷ்ட்ரபதி-பவனில் பார்வையற்றவர்களுக்கான தோட்டம் நிறுவப்பட்ட போது அவர்களின் அனுபவம் பயன்படுத்திக் கொள்ளப் பட்டது.

அதை நீள்வட்ட வடிவத்தில் அமைத்து நீரூற்று ஒன்றும் உருவாக்கப்பட்டது. கற்சுவர் அமைந்த பாதையும் இருந்தது. மணமுள்ள அறுபத்து நான்கு வகையான செடிகள் பாதையின் இரு மருங்கிலும் நிரம்பப் பயிரிடப்பட்டிருந்தன. அத்துடன் மூலிகைகள், நறுமணத் தாவரங்கள், பழச்செடிகள், அலங்கார மலர்கள் போன்றவையும் வளர்க்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு மலர்ப் பாத்தியின் அருகிலும் ஒரு பெயர்ப் பலகை வைக்கப்பட்டது. அதில் அந்த தாவரத்தின் பெயர் பிரெய்லி முறையில் ஆங்கிலத்திலும், இந்தியிலும் பார்வையற்றவர்கள் தொட்டுணர்ந்து படித்தறியும் வகையில் எழுதப்பட்டிருந்தன. பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் அந்தத் தோட்டத்திற்கு வந்து சுற்றிப் பார்த்துவிட்டு ஆனந்தம்

அடைந்தனர். அவர்களின் மகிழ்ச்சியை அவர்களது முகங்களில் உணர்ந்து கொள்ள முடிந்தது. ஒவ்வொரு ஆண்டும் பார்வையற்றவர்களுக்காக அந்த தோட்டம் திறந்துவிடப்படும் சமயங்களில் எல்லாம் நான் அவர்களுடன் சேர்ந்து தோட்டத்தில் வலம் வருவேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை நாளில் நான் டாக்டர்.பிரம்ம சிங்குடனும் எனது நண்பர் டாக்டர். ஒய்.எஸ்.ராஜனுடனும் தெய்வீகக் குடிலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த போதுதான் இன்னிசைத் தோட்டம் (Mucical Garden) ஏற்படுத்தும் திட்டம் பிறந்தது.

அங்கிருந்த வாழைத்தோப்பு, உயிரியல் பூங்கா, மூலிகைத் தோட்டம் ஆகியவற்றின் பின்னணியில் அது அமைய வேண்டும் என்று முடிவு செய்தோம். இசை நீரூற்றுகள் (Mucical Fountain) அமைக்கும் பணிகள் 2006-ஆம் ஆண்டு துவங்கின.

அந்த நீரூற்றுகளை அமைக்கப் பல்வேறு வகையான தொழில் நுட்பங்கள் ஒன்றிணைக்கப்பட்டன. டிஜிட்டல் மின்னணு வியல், மின்காந்தவியல், நீரியக்கவியல் (Hydrodynamics), நிலை நீரியல் (Hydrostatics) மற்றும் மனிதர்களின் கற்பனைப் படைப்பாற்றல் போன்ற பலவற்றைப் பயன்படுத்தினோம்.

அங்கே சாதுர்யமான முறையில் ஒளி விளக்குகள் வெளிச் சத்தை வாரியிறைத்தன. முன்பதிவு செய்து வைக்கப்பட்டிருந்த சாஸ்திரிய சங்கீத இசைகளுக்கு ஏற்ப அந்த நீரூற்றுக்கள் காற்றிலே மேலே எழுந்தும் தாழ்ந்தும் நடனமிட்டகாட்சி பிரமிப்பூட்டுவதாக அமைந்திருந்தது. நேரடியாக இசைக் கருவிகளை வாசித்தாலும் அதற்கேற்ப நீரூற்றுக்கள் எழுந்து தாழ்ந்து நடனமாடின.

பௌர்ணமி நிலவொளியில் அந்த இரட்டை நீரூற்றுக்களைப் பார்க்கும்போது அவை தூய்மை, செய்நேர்த்தி, பெருமிதம் போன்றவற்றைக் கம்பீரமாக வெளிப்படுத்துவதை உணரலாம். ராஷ்ட்ரபதி பவனத்தின்மீது அமைந்துள்ள

அரைக்கோள் வடிவம் பின்னணியாக அமைந்திருக்க, அந்த நீரூற்றுக்கள் தேசத்தின் பெருமைக்கும், சுய கௌரவத்திற்கும் அடையாளச் சின்னங்களாகத் திகழ்வதைக் காணலாம்.

பண்டிட் சிவகுமார் சர்மா 500 பேர் அடங்கிய குழுவினர் மத்தியில் ஒரு பௌர்ணமி வேளையில் சிதார் இசைத்தது இன்னிசைத் தோட்டத்தின் மறக்கமுடியாத தருணங்களில் ஒன்றாகும்.

ராஷ்ட்ரபதி பவனில் உள்ள உயிரியல் பூங்கா வருடக் கணக்கில் விரிவடைந்து கொண்டே சென்றது. பலவிதமான பறவைகளும், மிருகங்களும் அதில் சேர்க்கப்பட்டன. நீர்வீழ்ச்சி, கற்பாறைகள், மீன் குளம், முயல் கூடுகள், வாத்துக்கூடுகள், நோயுற்ற மிருகங்களுக்கான தனியிடம், பறவைகள் தங்குவதற்கான இடவசதி போன்றவை உருவாயின.

இயற்கைப் படைப்புகளைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும் என்பதற்காக மட்டுமின்றி, அது அமைதியும், நிம்மதியும் தரும் இடமாகவும் இருந்ததாலும் அந்த உயிரியல் பூங்கா உருவாக்கப்படுவது அவசியமாயிற்று. காலைநேரம் நடைப்பயிற்சி செய்யும் நான் ஒருநாள் காலை எனது நண்பர் டாக்டர்.சுதிருடன் நடந்து கொண்டிருந்தபோது கைவிடப்பட்ட மான்குட்டி ஒன்றைக் கண்டோம் பிறக்கும் போதே அதன் இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டிருந்ததால் அது எழுந்து நிற்க இயலாது போயிருந்தது.

டாக்டர். சுதிர் அந்த குட்டிக்கு மருத்துவ சிகிச்சையளித்தார். தாயையும், குட்டியையும் ஒன்று சேர்க்க நாங்கள் பெருமுயற்சி செய்தோம். அது வெற்றி பெறவில்லை. நான் தினமும் பால் புட்டி மூலம் அந்த குட்டிக்குப் பாலூட்டினேன். ஒரு வார காலத்தில் அது எழுந்து நடக்கலாயிற்று. எங்களைக் கண்டதும் அருகில் வரவும் செய்தது. பாலுக்காக என்னிடம் ஓடிவரலாயிற்று. சில வாரங்களுக்கு பின்னர் மான் கூட்டம்

அந்த குட்டியைத் தங்களுடன் சேர்த்துக்கொண்டன. என் மனம் பெரிதும் உவகை கொண்டது.

ராஷ்ட்ரபதி பவனில் நான் தங்கியிருந்த காலத்தில் அங்கிருந்த மொகல் தோட்டமும், மற்ற தோட்டங்களும் மகிழ்ச்சி தந்தன. அதன் காரணமாக, நான் எங்கே வெளியிடங்களுக்குச் சென்றாலும் விரைவில் ராஷ்ட்ரபதி பவனுக்குத் திரும்பிவிட வேண்டுமென்று விரும்புவேன். அந்த சுகானுபவத்தை நான் மற்றவர்களுடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினேன். அதற்கு உதாரணமாக, பல புகழ்பெற்ற கலைஞர்களின் நிகழ்ச்சிகளை அந்த தோட்டத்தில் நடத்தினேன். இயற்கையை ரசிக்க எனக்கு வாய்ப்பளித்த இறைவனுக்கு நான் தலைவணங்குகிறேன்.

13

சர்ச்சைக்குரிய முடிவுகள்!

மனச்சாட்சியே உயிரின் ஒளியாகும்!

நான் ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் எனது எண்ணங்களும், செயலும் வேறுபட்டதாக இல்லை. பதவிக்கு முன்பும், பின்பும் நான் எப்படி நடந்துகொண்டேனோ, அவ்வாறேதான் பதவிக்காலத்திலும் நடந்துகொண்டேன். நான் அதே மனிதனாகவே இருந்தேன். காரியங்கள் மாறுபாடின்றித் தொடர்ந்து நடந்தன.

மூன்று சமயங்களில் எனது தனிப்பட்ட எண்ணங்கள் தாக்கம் பெறும்வகையில் சம்பவங்கள் எதிர்ப்பட்டன. ஆனாலும் தர்க்க நீதியாகக் காரண காரியங்களை ஆராய்ந்து செயலில் இறங்கினேன். முதல் சம்பவம் பீகார் சட்டசபையைக் கலைப்பது பற்றியதாகும். இது குறித்து நான் பல தடவை விவாதித்திருக்கிறேன். மற்றொரு முறையும் பேசி முடிவெடுக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன்.

தகவல் தொழில்நுட்பத்துறையில் எனது பதவிக்காலத்தில் நிறைய முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தன. மின்னணு முறையில் ராஷ்ட்ரபதிபவன் முழுமையாக ஒருங்கிணைக்கப் பட்டிருந்தது. நான் எங்கிருந்தாலும், உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் தகவல் தளத்தில் மூலம் கோப்புகளைப் படித்துப் பார்க்க முடியும். கலந்துரையாடல் நடத்தவும் இயலும். உடனடித் தொடர்புக்கு மின்னஞ்சல்கள் உதவின.

இவ்வகையில் பிரதம மந்திரி மன்மோகன் சிங் என்னை அழைத்து பீகார் சட்டசபையைக் கலைத்துவிட அமைச்சரவை பரிந்துரை அளித்திருப்பதாகக் கூறினார். ஆளுநரின் விருப்பப்படி இம்முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார். அதைக் கேட்டு நான் வியப்படைந்தேன். கடந்த ஆறு மாதங்களாக அந்த சட்டசபை செயல்படாத நிலையில் இருந்து வந்தது.

நான் பிரதம மந்திரியிடம் இந்த திடீர் மாற்றம் ஏற்படக் காரணம் என்ன என்று கேட்டேன். சற்று நேரத்தில் பதிலளிப்பதாக அவர் என்னிடம் தெரிவித்தார். மறுபடியும் அவரது தொலைபேசி அழைப்பு மாஸ்கோ நேரப்படி அதிகாலை 1 மணிக்கு வந்தது. நான் பிரதம மந்திரியுடன் பலவற்றையும் விவாதித்தேன். நிறையக் கேள்விகளை எழுப்பினேன்.

நான் இந்தியா வந்தாலும் அதனால் பெரிய பயன் ஏற்படாது. அமைச்சரவை தீர்மானமாக முடிவெடுத்துவிட்டது என்று என்னை அவர் சமாதானப்படுத்தினார். எனவே சட்டசபைக் கலைப்புக்கு நான் ஒப்புதல் தெரிவித்துவிட்டேன்.

விஷயம் நீதிமன்றத்துக்குச் சென்றது. பதிலில் டெக்னிக்கல் விஷயங்கள் தூக்கலாக அமைந்திருந்தன. 'இந்திய ஜனாதிபதி அவர்களுக்கு பீகார் ஆளுநர் இரண்டு அறிக்கைகள் அனுப் பினார். ஒன்று, 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 7-ம் தேதியிட்டது. அடுத்தது, 2005-ம் ஆண்டு மே 21-ம் தேதியிட்டது.

இந்த அறிக்கைகளின் அடிப்படையில் 2005-ஆம் ஆண்டு மே 23-ம் தேதி, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 174, பிரிவு 2-ன் துணைப்பிரிவு b-யின்படி பீகார் மாநிலத்தின் சட்டசபை கலைக்கப்பட்டது....'

இது குறித்து உச்ச நீதிமன்றம் விவாதித்தது. விவாதத்தில் பலவிதமான அபிப்பிராயங்கள் வெளிப்பட்டன. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில், 2005-ஆம் ஆண்டு மே 23-ம் தேதி

வெளியிடப்பட்ட அறிவிப்பு மூலம் அது ஒரு வித்தியாசமான வழக்காக உருவெடுத்திருப்பதாகக் கூறியது. இதற்கு முன்பு விசாரணைக்கு வந்த ஆட்சிக் கலைப்பு வழக்குகள் எல்லாம் சட்டசபையின் நம்பிக்கையை இழந்து போனதால் கலைக்கப்பட்டதாகவே இருந்தன.

இந்த வழக்கு முற்றிலும் புதுமையாக உள்ளது. சட்டசபை முதல் முறையாகக் கூடுவதற்கு முன்னரே அது கலைக்கப்பட உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 'சட்டவிரோதமான முறையில் நடந்து சட்டசபையில் பெரும்பான்மையை நிலைநாட்டி ஆட்சியமைக்க முயல்கிறார்கள் என்றும், இவ்விதமான முயற்சிகள் தொடருமானால் அரசியலமைப்பு முறைக்கே அது குந்தகம் விளைவிப்பதாக மாறிவிடும் என்று வாதத்தில் கூறப்பட்டிருந்ததாக உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

மேலும் உச்ச நீதிமன்றம் 4 கேள்விகளையும் முன் வைத்தது.

1. சட்டசபை முதல் தடவை கூடாத நிலையிலேயே அரசியலமைப்புச் சட்டம் 174(2) (b) யின் கீழ் அரசைக் கலைத்து விடுவது அனுமதிக்கத்தக்க ஒன்றுதானா?
2. 2005-ஆம் ஆண்டு மே மாதம் 23-ம் தேதி வெளியிடப்பட்ட பீகார் சட்டமன்றக் கலைப்பு அறிவிப்பு சட்ட விரோதமானதும், அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானதுமான ஒன்றா?
3. முன்னர் கேட்ட கேள்விக்கு கிடைக்கும் விடை 'ஆம்' என்று இருக்குமானால், 2005-ஆம் ஆண்டு மார்ச் 7, அல்லது 2005 ஆம் ஆண்டு மார்ச் 4-ம் தேதி நிலையை அப்படியே கடைப்பிடிக்க வேண்டியது அவசியமா?
4. ஆளுநருக்கு அதிகாரம் வழங்கிய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 361-ன் நிலை என்ன?

உச்ச நீதிமன்றம் இந்த விஷயத்தை விவாதித்தபோது பல கண்ணோட்டங்கள் வெளிப்பட்டன. இதில் நான் முடிவெடுத்த முறைபற்றிச் சரியானபடி நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்கப்படவில்லை என்று பிரதமமந்திரியிடம் கூறினேன். நான் இதை அவரிடம் இரண்டு முறை கூறினேன்.

ஒரு தடவை நேரிலும், மறுதடவை தொலைபேசி வழியாகவும் தெரிவித்தேன். அவர் இது பற்றி வழக்கறிஞர்களிடம் எடுத்துக் கூறியதாகச் சொன்னார்.

ஜனாதிபதி பல்வேறு தகவல்களின் அடிப்படையிலும், மாஸ்கோவில் இருந்தபடியே மேற்கொண்ட செயல்களின் அடிப்படையிலும் முன்னர் நடைபெற்றிருந்த விவாதங்களை வைத்தும் தான் பீகார் சட்டப்பேரவையைக் கலைக்க உத்தரவிட்டார் என்று வழக்கறிஞர்கள் நீதிமன்றத்துக்கு விளக்கம் அளித்தனர்.

வழக்கறிஞர்கள் எனது கருத்தை நான் எதிர்பார்த்த அளவு சரியானபடி எடுத்துரைக்கவில்லை என்று எனக்குப்பட்டது. உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எனக்கு எதிராக இருந்தது. நீதிபதிகள் உயர்வானவர்கள். காரியத்தைக் கடமைப் பொறுப்புடன் ஆளுநர் நிறைவேற்றியிருக்க வேண்டும் என்று கருத்து வெளியிட்டிருந்தனர். அரசும் கவனத்துடன் செயல்பட்டிருக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டியிருந்தனர்.

எப்படியிருந்த போதிலும் ஜனாதிபதி என்ற முறையில், அமைச்சரவை எனது பொறுப்புகளில் ஒன்று என்பதால் அதற்கான பலனை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தேன். நீதிமன்றத் தீர்ப்பு பற்றி அறிந்ததும் நான் எனது பணிவிலகல் கடிதத்தை எழுதிக் கையொப்பமிட்டு உதவி ஜனாதிபதி பைரன்சிங் ஷெகாவத்துக்கு அனுப்புவதற்குத் தயாராக வைத்துக்கொண்டேன். அவர் அரசியல் அனுபவம் வாய்ந்த ஒரு மனிதராக விளங்கினார்.

நான் அவரிடம் நேரடியாகப் பேசிக் கலந்த பின்பு எனது பணி விலகல் கடிதத்தை அவரிடம் தந்துவிட முடிவு செய்தேன். ஆனால் அவர் வெளியூர் சென்றிருந்தார். அந்த நேரத்தில் வேறு சில விஷயங்கள் பேசுவதற்காக பிரதமமந்திரி என்னைச் சந்திக்க விரும்பினார். பிற்பகல் வேளையில் நாங்கள் சந்தித்தோம்.

நாங்கள் பேசவேண்டிய விஷயங்களைப் பேசிய பிறகு நான் எனது ஜனாதிபதி பதவியை விட்டு விலகிவிட இருப்பதாக கூறி அந்த கடிதத்தை அவரிடம் காட்டினேன். உதவி ஜனாதிபதியின் வருகைக்காகக் காத்திருப்பதாகக் கூறினேன். அதைக் கேட்டதும் பிரதம மந்திரி திடுக்கிட்டுப் போனார். அது ஒரு தர்மசங்கடமான தருணம் என்பதால், அதைப்பற்றி நான் விவரிக்கப் போவதில்லை.

இந்த சிக்கலான சமயத்தில் நான் பதவியை விட்டு விலகக்கூடாது என்று என்னிடம் வேண்டுகோள் விடுத்தார். நான் பதவி விலகுவதன் காரணமாக ஏற்படும் பரபரப்பின் விளைவாக ஆட்சி கவிழ்ந்து போகவும் கூடும் என்றார். இனி நான் ஆலோசனை கேட்க பாக்கி இருப்பது என் மனசாட்சியிடம் மட்டும்தான்!

மனசாட்சிதான் ஆன்மாவின் ஒளியாக இருக்கிறது. அது இதயத்திற்குள் இருந்து ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. அன்றைய இரவில் நான் உறங்கவேயில்லை. எனது மனச்சாட்சி முக்கியமா அல்லது தேசத்தின் நலன் முக்கியமா என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். மறுநாள் காலையில் எழுந்து எனது அதிகாலைத் தொழுகையை (Namaz) வழக்கம்போல் செய்து முடித்தேன். எனது பதவி விலகல் கருத்தை மாற்றிக் கொண்டேன். அரசாங்கத்திற்கு சிரமம் அளிக்க நான் விரும்பவில்லை. எந்த கட்சி பதவியில் இருந்தால் எனக்கென்ன என்று பொறுப்பின்றிக் காரியம் செய்யலாகாது என்பதற்காக இவ்வாறு நடந்துகொண்டேன்.

நாட்டில் ஒரு சிலர் மட்டும் மின் நிர்வாகத்தைப் பயன் படுத்துகிறார்கள். உலக வரம்புகளைக் கடந்த ஒரு கருவியாக அதை நான் கருதுகிறேன். அதை நான் இந்தியாவில் இருந்த போதும், அயல்நாடுகளில் இருந்தபோதும் தாராளமாகப் பயன்படுத்திக்கொண்டேன். காகிதக் கோப்புகளை மட்டுமே நகர்த்திக்கொண்டு இருப்பவர்களுக்கு மின்-நிர்வாகத்தின் சக்தியைப் புரிந்துகொள்வது சிரமமான ஒரு காரியமாக

இருக்கும். பீகார் சட்டப் பேரவையைக் கலைத்த விஷயத்தில் (அது செயல்படாத நிலையில் இருந்தது) எனது மனச்சாட்சிப்படியே நடந்துகொண்டேன். அந்த சமயத்தில் நான் எங்கே இருந்தேன் என்பது பெரிய ஒரு விஷயமேயல்ல.

எந்த ஒரு மனிதரும் பிறர் அளிக்கும் அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று மனு எச்சரிக்கை செய்கிறார். அன்பளிப்பு பெறுபவர், கொடுத்தவருக்கு சலுகை காட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார். இதனால் தவறுகள் நடைபெற வாய்ப்பு இருப்பதாக மனு கூறுகிறார்.

பாராளுமன்றத்தின் (தகுதி நீக்கத்தடை) சட்டம் 1959, அரசின் கீழ் உள்ள சில ஆதாயம் தரும் பதவிகளில் இருப்பவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டாலோ, அல்லது பதவியமர்த்தப்பட்டாலோ முந்தைய பதவிக்கு அவர்கள் தகுதியற்றவர்களாகக் கருத இயலாது என்று கூறுகிறது. அதற்கான விரிவான நிபந்தனைகளையும் சட்டம் எடுத்துக் கூறுகிறது.

2006-ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தங்கள் சகாக்களில் சிலர் ஆதாயம் தரும் பதவிகள் வகிப்பதாகப் புகார் செய்தனர். அதன் மீது நான் நடவடிக்கை மேற்கொண்டேன். அந்தப் புகார்களைத் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு அனுப்பினேன். முறைப்படி அந்தப் புகார்களை ஆராய்ந்து பார்த்துத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினேன்.

மேலும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி. ஜெயா பச்சன், திருமதி.சோனியா காந்தி ஆகியோர் மீதும் புகார்கள் கூறப்பட்டன. ஜனாதிபதி இது போன்ற ஒரு நடவடிக்கையை எதற்காகத் துவக்கி வைத்தார் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கேட்டனர். ஆதாயம் தரும் பதவிகளுக்கான சட்ட முன் வரைவு பாராளுமன்றத்திலிருந்து எனது ஒப்புதலுக்காக வந்தது.

நான் அதை ஆராய்ந்து பார்த்தபோது அதில் பல முரண்பாடுகள் இருப்பதைக் கண்டேன். அந்த ஆதாயம் தரும் பதவி முன் வரைவானது, எது ஆதாயம் தரும் பதவி என்ற கேள்விக்கு முறையான பதில் தருவதாக அமைந்திருக்கவில்லை என்பதைப் பார்த்தேன். அதற்குப் பதிலாக தற்போது ஆதாயம் தரும் பதவியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவும் செய்திருந்தது.

நான் முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதிகள் மூவருடன் கலந்து பேசினேன். சட்ட முன்வரைவிலுள்ள முரண்பாடுகள் குறித்து விவாதித்தேன். மூன்று நீதிபதிகளுடனும், எனது குழுவினருடனும் கலந்து ஆலோசித்த பின்னர் கடிதம் ஒன்று தயாரித்தேன்.

குறிப்பிட்ட பதவி ஒன்றுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமானால் அதற்கான மதிப்பீட்டு அளவு கோல்கள் தெளிவாக எடுத்துக்காட்டப்படவேண்டும். அவை நியாயமானதாகவும், தகுதியுடனும் அமைந்திருக்க வேண்டும். அது ஒளிவு மறைவற்றதாகவும், தெளிவுடனும் உருவாக்கப்பட்டு மற்ற மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களிலும் அச்சட்டம் செல்லுபடியாகும் வகையிலும் அமைந்திருக்க வேண்டும் என்று நான் ஆலோசனை கூறினேன்.

சில பதவிகளுக்கு விலக்குப் பெறுவதாக இருந்தால் புதிய சட்டம் ஒன்றை இயற்றி அதன் மூலம் பலன் பெறலாம் என்றும் ஒரு கருத்தை வெளியிட்டிருந்தேன். அவர்கள் எனது கருத்து நியாயமானது என்று கூறினார்கள். ஆதாயம் தரும் பதவி குறித்த சட்ட விதிமுறைகளுக்குள் அப்பதவி அடங்குகிறதா இல்லையா என்பதற்குத் தெளிவான வழிகாட்டு நெறிமுறைகள் தேவைப்படுகின்றன என்றனர்.

எனது கடிதம் இந்த ஆதாயம் தரும் பதவிகளுக்கான முன்வரைவு அமைச்சரவையின் பார்வைக்குச் செல்ல வேண்டும் என்கிறதா, அல்லது பாராளுமன்றத்திற்கு செல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிறதா என்ற புதிய கேள்வியை

எழுப்பியது. அரசியலமைப்புச் சட்டத்தை ஆராய்ந்து பார்த்த பிறகு நான் சட்டம் 111-ன் படி அது பாராளுமன்றத்தின் மறுதீர்மானத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்று கண்டறிந்தேன்.

ஆதாயம் தரும் பதவிகள் குறித்த சட்ட முன்வரைவு அமைச்சரவை மூலம் என் ஒப்புதலுக்கு அனுப்பப்படவில்லை. அதற்கு மாறாகப் பாராளுமன்றம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. எனவே அதை நான் லோக் சபா, ராஜ்ய சபாவின் செக்ரட்டரி ஜெனரலுக்கு அனுப்பினேன். பாராளுமன்றத்து இரு சபைகளிலும் அதை மறுபரிசீலனை செய்யச் சொன்னேன். இந்தியாவின் பாராளுமன்றம் அல்லது ராஷ்ட்ரபதி பவனத்தின் வரலாற்றில் ஒரு சட்டமுன்வரைவு மறுபரிசீலனைக்காகத் திருப்பியனுப்பப்படுவது இதுவே முதல் முறையாகும்.

சட்டமுன்வரைவை நான் பாராளுமன்றத்தில் மறுபரிசீலனை செய்யுமாறு எழுதிய கடிதம் மறுநாள் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் பிரதான செய்தியாக இடம் பெற்றுவிட்டது. தீவிரமான விவாதத்திற்குரிய விஷயமாக அது மாறியது. கட்சிக் கண்ணோட்டத்துடன் பார்க்காமல் நியாயமாக நடந்து முன் வரைவில் கையொப்பமிடவேண்டும் என்று பலமான வற்புறுத்தல்கள் எனக்கு ஏற்பட்டன.

மனு ஸ்மிருதியில் சொல்லப்பட்டுள்ள ஆதாயம் அல்லது அன்பளிப்பின் அர்த்தத்தை நான் உணர்ந்திருந்தேன். ''அன்பளிப்புகள் பெற்றுக்கொள்ளும்போது ஒருவருடைய தெய்வீக ஒளி அணைந்து போய்விடுகிறது'' என்கிறது மனு ஸ்மிருதி. புனித குரானின் ஹதித் ''இறைவன் ஒருவரை ஒரு பதவியில் அமர்த்தும்போது அவருடைய தேவைகளை இறைவனே கவனித்துக் கொள்கிறார், இதைத் தாண்டி அந்த மனிதர் ஏதாவது செய்ய முற்பட்டால் அது சட்டவிரோதமான முறையில் பெறும் ஆதாயமாகவே கருதப்படும்'' என்று கூறுகிறது.

இதுவே நான் ஆதாயம் தரும் பதவி குறித்த சட்ட முன்வரைவைத் திருப்பியனுப்பக் காரணமாக இருந்தது. அது மறுபரிசீலனைக்குப் பிறகு எனது ஒப்புதலுக்கு வந்தது. என்னைச் சந்தித்த பிரதம மந்திரி வியப்புக் காட்டினார். ஒப்புதல் தந்த வரைவுகளை நான் மறுநாளே அனுப்பி வைத்து விடுவது வழக்கம்.

வாரங்கள் கடந்து கொண்டேயிருந்தன எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையே என்று அவர் வியந்து போனார். பாராளுமன்றம் சில காரியங்களைச் செய்து முடிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அது பற்றிய எந்த தகவலும் என் காதில் விழவில்லை. ஆதாயம் தரும் பதவி குறித்த எனது கருத்துகளைப் பரிசீலனை செய்ய பாராளுமன்ற இணைக்குழு ஒன்றை அமைக்கப் பாராளுமன்றம் முடிவு செய்துவிட்டதாகப் பிரதம மந்திரி என்னிடம் கூறினார்.

காரியங்கள் தாமதப்படுவது குறித்து விமர்சனங்கள் கிளம்பின. நான் அந்தச் சட்டமுன்வரைவுக்கு ஒப்புதல் தருவதற்கு முன்பு அதன் குறைந்தபட்சத் தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும் என்பதில் தெளிவாக இருந்தேன். இந்த சட்டமுன் வரைவு பற்றி பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும் என்னைச் சந்தித்து விட்டுச் சென்றனர்.

நான் வடகிழக்குப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தேன். டெல்லிக்குத் திரும்பும் வழியில் கோஹிமாவிலிருந்து, கௌஹாத்திக்கு விமானத்தில் போய் கொண்டிருந்த போது எனக்கு ஒரு செய்தி கிடைத்தது. பாராளுமன்ற இணைக்குழு அமைப்பதற்கான அனுமதியைப் பாராளுமன்றம் அளித்துவிட்டதாக அறிந்தேன்.

பாராளுமன்றத்தின் இச்செயல் குறித்து நான் உறுதி செய்து கொண்ட பிறகு அந்த ஆதாயம் தரும் பதவி பற்றிய சட்டமுன்வரைவில் ஒப்புதல் கையொப்பமிட்டேன். சில மாதங்களுக்குப் பிறகு பாராளுமன்ற இணைக்குழு (Joint

Parlimentary Committee-JPC) தனது அறிக்கையைப் பாராளுமன்றத்திடம் அளித்தது. அதை பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது. அது முழுமையான அறிக்கையாக இல்லை. நான் சொன்ன கருத்துகள் அதில் குறிப்பிடப்படவில்லை.

இது போன்ற விஷயங்களில் பாராளுமன்றம் கவனத்துடன் செயல்படவேண்டும். இல்லாது போனால் தேசத்தின் உயரிய ஒரு அமைப்பு தவறான காரியங்களில் இறங்க வழியேற்பட்டு விடும். அரசாங்கத்தின் உயர் பொறுப்பில் இருப்பவர்கள் தேசத்தின் தன்மையை வேறுவிதமாக மாற்றிவிட இது வழிவகுத்துவிடும்.

ஆதாயம் தரும் பதவிகள் குறித்த சட்டமுன்வரைவு விஷயத்தில் பாராளுமன்றத்தின் நிலை என்ன என்பது நிரூபணமாகிவிட்டது. அதன் செயல்பாடுகளில் நடுநிலைத் தன்மை போதுமான அளவு இல்லை என்று விவாதிக்காமல் விஷயங்களைக் கூடுதல் கவனம் எடுத்துக்கொண்டு மறு ஆய்வு செய்யவேண்டும். இவ்வாறான செயல்கள் தவறான காரியங்களுக்கு அங்கீகாரம் தரும் ஒரு ஆரம்பமாக மாறிவிடக்கூடும். அவை தேசத்தின் தரத்தில் அனுசரிப்புகள் செய்துகொண்டு நீக்குப் போக்குடன் நடந்து கொள்ளும்படி செய்துவிடும்.

சமீபத்தில் ஊழலுக்கு எதிரான இரண்டு இயக்கங்கள் நடந்ததை நாம் பார்த்தோம். அவை மேலும் பலருக்கு ஊக்கம் தரலாம். நமது குடியரசு தேசத்தில் இதுபோன்ற இயக்கங்கள் ஏன் தலைதூக்குகின்றன என்ற கேள்வியை நான் எனக்குள்ளேயே கேட்டுக்கொண்டேன். பாராளுமன்றம் தனது நிலையைச் சரியாகப் பேணாமல் போவதே இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

எனவே நான் இதற்கு என்ன ஆலோசனை தருகிறேன் என்றால், நமது பாராளுமன்றம் ஊழல் விஷயங்கள் குறித்து குறைந்தபட்சம் இரண்டு வார காலமாவது விவாதங்கள் நடத்தவேண்டும். வெளிநடப்புகள் செய்யாமல் எல்லோரும்

கலந்து பேசி காலக்கெடுவுடன் கூடிய பொருள் நிரல் (Agenda) ஒன்றைத் தயாரிக்க வேண்டும். பொதுவாழ்வில் இருந்து இந்த ஊழல் என்ற சாத்தனை அழித்தொழிக்க மார்க்கம் கண்டறிய வேண்டும்.

அதன் ஒரு பகுதியாகப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தை விதிமுறைத் தொகுப்பு (conduct of code) ஒன்றையும் உருவாக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் தங்கள் கடமையில் தவறும்போது அவர்களைத் தேர்ந்தெடுத்த பொது ஜனங்கள் ஏமாற்றமடைவதுடன் அவர்களுடன் பலவிதங்களிலும் இணக்கமற்றுப் போகிறார்கள்.

பாராளுமன்றத்தின் துணையோடு தாங்கள் என்ன விதமான காரியங்கள் செய்து ஊழலைக் குறைக்கவோ அல்லது அகற்றவோ முயற்சி எடுத்தோம் என்று ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்கள் செயல்பாடுகளைத் தொகுத்து வைக்க வேண்டும். பாராளுமன்றத்தின் இரு அவைகளும் தீர்மானமாக முடிவெடுத்துக் காரியத்தில் இறங்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. ஊழலை ஒழித்துக்கட்டவும், அயல்நாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள பணத்தைக் கைப்பற்றவும் காலக்கெடுவுடன் கூடிய திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்திற்கிணங்க ஊழலை அகற்றுவதற்கு ஏற்ற ஒரு தீர்வினைக் கண்டறிய வேண்டும்.

சரியான நேரங்களில் பாராளுமன்றம் இவ்வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது பாராளுமன்றம்மீது மக்கள் நம்பிக்கை வைக்கத் தொடங்குவார்கள். இது சமூகத்தில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும். நாம் முன்னேறிய நாடாக மாறுவதற்கு இவை ஆதாரமாக அமைந்து வேகம் தந்து ஊக்கமளிக்கும்.

மேல் முறையீடுகள் செய்து களைத்துப் போன மரணதண்டனைக் குற்றவாளிக்கு நீதிமன்றம் வழங்கிய தண்டனையை ஊர்ஜிதம் செய்வதுதான் எனது ஜனாதிபதி

பதவிக்காலத்துப் பணிகளிலேயே மிகவும் கஷ்டமான ஒன்றாக எனக்கு இருந்து வந்தது.

கணிசமான எண்ணிக்கையில் வழக்குகள் பல வருடங்களாக ராஷ்ட்ரபதி பவனில் தேங்கிக் கிடக்கின்றன. எந்த ஒரு ஜனாதிபதியும் மகிழ்ச்சி கொண்டுவிட முடியாத பணி இதுவேயாகும். நான் இந்த வழக்குகளை எல்லாம் சாதாரணக் குடிமகனின் கண்ணோட்டத்துடன் பார்த்து ஆய்வு செய்ய விரும்பினேன்.

குற்றம் நடந்த முறை, அதன் தீவிரம், மரண தண்டனை விதிக்கப்பட்டவரின் குடும்ப மற்றும் பொருளாதாரச் சூழ்நிலைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அந்த ஆய்வு எனக்கு அதிர்ச்சியளித்தது. தேங்கிக்கிடந்த பெரும் பாலான வழக்குகள் சமூகப் பொருளாதார விஷயங்களில் ஒரே விதமாக அமைந்திருந்தன. சிறிதளவே பகையுணர்வு கொண்டிருந்த மனிதரை நாம் தண்டித்திருக்கிறோம். குற்றம் இழைக்க வேண்டும் என்ற நேரடியான நோக்கம் அவருக்கு இருக்கவில்லை என்று என் மனதிற்குப்பட்டது.

ஆனாலும் ஒரு வழக்கில், கட்டிடத்தின் மின்தூக்கியை (Lift) இயக்கும் அந்த மனிதர் பெண்ணொருத்தியைக் கற்பழித்துக் கொலை செய்திருப்பதைக் கண்டேன். சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் குற்றம் நிரூபணமாகியிருந்ததால், அவருக்கு வழங்கப்பட்டிருந்த மரணதண்டனையை நான் ஊர்ஜிதம் செய்தேன்.

மரணதண்டனை வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரிக்கப் படும்போது சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகள் உஷார்படுத்தப் படவேண்டும். குற்றம் சாட்டப்பட்டவரின் குடும்பம் மற்றும் அவரது ஜீவனோபாய வழிமுறைகள் குறித்து ரகசியப்புலனாய்வு செய்யுமாறு நீதிமன்றங்கள் வலியுறுத்த வேண்டும். இந்த வகையான ஆய்வு மூலம் அவர் நிஜமாகவே

எப்படிப்பட்ட மனிதர், எந்த சூழ்நிலையில் இந்த குற்றத்தைச் செய்தார் என்று கண்டறிய இயலும்.

நாம் அனைவருமே இறைவனின் படைப்பு. செயற்கையான முறையில் சிருஷ்டிக்கப்பட்ட சாட்சியங்களை வைத்து ஒரு உயிரைக் கொல்வதற்கு எந்த ஒரு சமூக அமைப்பிற்கோ, அல்லது தனிமனிதருக்கோ உரிமை இல்லை என்று நான் கருதுகிறேன்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பிறகும் நாட்டின் பிரதம மந்திரியைப் பதவியில் அமர்த்தும் பொறுப்பு ஜனாதிபதி யினுடையதாகும். பதவியில் இருப்பவரை மாற்ற வேண்டியிருந்தாலும் புதியவரையும் ஜனாதிபதியே பதவியில் அமர்த்தவேண்டும்.

அந்த தருணங்களில் குறிப்பிட்ட அக்கட்சிக்கோ அல்லது கூட்டணிக்கோ ஸ்திரமான அரசை அமைக்குமளவுக்கு உறுப்பினர்கள், பலம் இருக்கிறதா என்று கண்டறிந்து உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதும் ஜனாதிபதியின் பொறுப்பாகும்.

ஸ்திரமான ஆட்சியமைக்கத் தேவையான உறுப்பினர்கள் இல்லாத நிலை ஏற்படும்போது, தேர்தலில் போட்டியிட்ட ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் அரசமைக்க உரிமை கோரினால், அப்போது விஷயம் சிக்கலானதாக மாறிவிடும். இந்த வகையில் 2004-ஆம் ஆண்டு நடந்த தேர்தல் ஒரு சுவாரஸ்மான நிகழ்வாகும்.

தேர்தல் நடந்து முடிந்து அறிப்புகள் வெளியாயின. எந்த ஒரு கட்சியும் ஆட்சியமைக்கத் தேவையான பெரும்பான்மை பெற்றிருக்கவில்லை. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் நிறையப்பேர் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார்கள். மூன்று நாட்கள் கடந்துவிட்டன. எந்த ஒரு கட்சியோ அல்லது கூட்டணியோ அரசு அமைக்க உரிமை கோரவில்லை. இது எனது பணி சம்பந்தப்பட்ட ஒன்று என்பதால், தாமதத்திற்கு

என்ன காரணம் என்று எனது செயலாளர்களிடம் கேட்டேன். ஒரு பெரிய கட்சியின் தலைவருக்கு அவசரமாக கடிதம் (அது காங்கிரஸ் கட்சியாக அமைந்திருந்தது) எழுதினேன். ஆட்சியமைக்க உரிமை கோர முன்வருமாறு கூறினேன்.

மே மாதம் 18-ம் தேதி சோனியா காந்தி மதியம் 2.15 க்கு என்னைச் சந்திக்க வரவிருப்பதாகத் தெரிவித்தார்கள். சொன்னபடியே அவர் வந்தார். அவர் மட்டும் வராமல் தன்னுடன் டாக்டர் மன்மோகன் சிங்கையும் அழைத்து வந்திருந்தார். என்னுடன் கலந்துரையாடினார்.

தன்னிடம் போதுமான உறுப்பினர் பலம் இருப்பதாகவும், ஆனால் கட்சியைச் சேர்ந்தவர்கள் கையொப்பமிட்ட ஒப்புதல் கடிதத்தை எடுத்து வரவில்லை என்றும் என்னிடம் கூறினார். அதை 19-ம் தேதி கொண்டு வருவதாகச் சொன்னார். இன்று பிற்பகலிலேயே அதை செய்துவிடலாமே ஏன் தள்ளிப் போடுகிறீர்கள் என்று அவரிடம் கேட்டேன். அவர் புறப்பட்டுப் போய்விட்டார். இரவு 8.15 மணிக்கு என்னைச் சந்திக்க வரவிருப்பதாகப் பின்னர் எனக்குத் தகவல் கிடைத்தது.

இவ்வாறு செய்திப் பரிமாற்றம் நடந்து கொண்டிருந்தபோது எனக்கு நிறைய மின்னஞ்சல்களும், கடிதங்களும் வந்தது. பல்வேறு அமைப்புகள், கட்சிகள், மற்றும் தனிப்பட்டவர்களிட மிருந்தும் வந்திருந்த அந்த கடிதங்கள் திருமதி.சோனியா காந்தியை நமது நாட்டின் பிரதம மந்திரியாகப் பதவி வகிக்க அனுமதிக்கக்கூடாது என்று வற்புறுத்தின.

நான் அந்த கடிதங்களைப் பல்வேறு நிறுவனங்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்காக அனுப்பி வைத்தேன். அதில் எந்த குறிப்பும் எழுதியனுப்பவில்லை. அந்த சமயத்தில் பல கட்சித்தலைவர்கள் என்னைச் சந்தித்தார்கள். நான் எந்த வற்புறுத்தலுக்கும் அடிபணிந்துவிடக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள். திருமதி.சோனியா காந்தியை பிரதம மந்திரியாக நியமிக்கக்கூடாது என்று அவர்கள் கூறியது அரசியல்

சாசனப்படி ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. அவர் ஏதாவது வேண்டுகோள் விடுத்தால் அதற்கு இணங்குவது தவிர வேறு வழியில்லை.

சந்திப்புக்கு ஒதுக்கப்பட்ட நேரமான இரவு 8.15 மணிக்கு ராஷ்ட்ரபதி பவனுக்கு டாக்டர். மன்மோகன் சிங்குடன் சோனியா காந்தி வந்தார். சம்பிரதாயமான நல விசாரிப்பு களுக்குப் பிறகு அவர் பல கட்சிகள் அளித்த ஆதரவுக் கடிதங்களைக் காட்டினார். அது வரவேற்கக்கூடிய ஒன்று என்று நான் பதிலளித்தேன். நீங்கள் விரும்பும் நேரத்தில் பதவியேற்பு விழா நடத்திவைக்க ராஷ்ட்ரபதி பவன் தயாராக இருக்கிறது என்று தெரிவித்தேன்.

அதற்கு அவர், டாக்டர்.மன்மோகன் சிங்கை பிரதம மந்திரி பதவிக்கு முன்மொழிவதாகச் சொன்னார். அவர் 1991-ஆம் ஆண்டின் பொருளாதரச் சீர்திருத்தங்கள் நடத்திய சிற்பி என்றும், காங்கிரஸ் கட்சியின் நம்பகமான தளபதிகளில் ஒருவர் என்றும், மாசுமறுவற்ற பண்பின் பிரதிபிம்பம் என்றும், பிரமத மந்திரி பதவிக்குத் தகுதியானவர் என்றும் கூறினார்.

அது எனக்கு வியப்பளித்தது. ராஷ்ட்ரபதி பவன் செயலாளர்கள் மன்மோகன் சிங்கைப் பிரதம மந்திரியாக நியமித்து வேறு ஒரு கடிதம் தயாரிக்க வேண்டி வந்தது. பிறகு அவரை விரைவில் அரசு அமைக்கும்படியும் கேட்டுக் கொண்டார்கள். கடைசியாக மே 22-ம் தேதி டாக்டர் மன்மோகன் சிங்கிற்கும் அவருடன் சேர்ந்த அறுபத்தேழு அமைச்சர்களுக்கும் அழகிய அசோகா ஹாலில் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

ஒரு முக்கியமான செயலைச் செய்து முடித்துவிட்ட நிம்மதியுடன் நான் பெருமூச்சு விட்டேன். ஆனாலும் மூன்று நாட்களாக எந்த ஒரு கட்சியும் ஆட்சியமைக்க ஏன் உரிமைகோரி என்னிடம் வரவில்லை என்பதில் வியப்படைந்தேன்.

நான் எனது பதவிக்காலத்தில் பல கடினமான முடிவுகள் எடுக்க வேண்டியிருந்தது. அரசியலமைப்பு மற்றும் சட்ட வல்லுனர்களின் கருத்தைக் கேட்ட பிறகு ஒரு தலைச்சார்பான அபிப்பிராயம் இல்லாத படி மனதை வைத்துக்கொண்டு முடிவெடுத்தேன். நமது அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கவும், பராமரித்துப் போஷிக்கவும், அதைத் தூய்மையுடன் வலுவுள்ளதாக வைத்திருக்க முயற்சி செய்வதுமே இந்த அனைத்து முடிவுகளின் அடிப்படை நோக்கமாகும்.

14

ஜனாதிபதி பதவிக்குப் பின்னர்

மலரைப் பாருங்கள்!
எவ்வளவு இயல்பாக அது
சுகந்தத்தையும் தேனையும் தருகிறது
தனது பணி முடிந்ததும்
அமைதியாக வாடி உதிர்ந்துவிடுகிறது

-பகவத் கீதை

நான் எனது பதவிக் காலத்தில் சுறுசுறுப்பாகச் செயல் பட்டேன். முதல் வருடத்தில் இந்த அழகிய தேசத்தின் சகல பகுதிகளையும் பார்க்க விரும்பினேன். அனைத்து மாநிலங்களுக்கும் சென்று அங்கேயுள்ள மக்கள் வாழ்க்கை முறைகளை நேரடியாக அறிந்து கொள்ளத் தீர்மானித்தேன். அவர்களின் சூழ்நிலை, பிரச்சினைகள், எந்த அளவுக்கு அவர்கள் மகிழ்வுடன் இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்வதே எனது குறிக்கோளாக இருந்தது.

கேரளாவின் கடற்கரைக்கு அப்பால் உள்ள லட்சத்தீவுகள் என்ற தீவுப்பகுதிக்கு மட்டும் செல்லவில்லை என்பதில் எனக்கு சிறிது வருத்தமுண்டு. மற்ற அனைத்துப் பகுதிகளுக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் சென்றிருக்கிறேன். ஒவ்வொரு பிராந்தியமும் தனக்கே உரித்தான சிறப்பம்சங் களைக் கொண்டிருந்தது. எளிமையும், சினேகபாவமும் அடிநாதமாக இருந்து பாரம்பரிய இந்தியத் தன்மையை வெளிப்படுத்தின.

எனது இந்தப் பயணத்தை மற்றவர்கள் எந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தார்கள் என்பது ஒரு சுவையான விஷயம். 'அவுட்லுக்' பத்திரிகையில் வெளியான ஒரு செய்தியை இங்கே தருகிறேன்.

''கலாம் ஒரு பயணம் போகின்ற ஜனாதிபதி. தான் பதவியேற்ற பத்து மாதகாலத்தில் 21 மாநிலங்களை ஏற்கனவே சுற்றிப் பார்த்துவிட்டார். பெரும்பாலான மற்ற ஜனாதிபதிகள் ஐந்து ஆண்டுக்காலத்தில் மேற்கொண்ட பயணங்களை விட இது அதிகமானதாகும்.

இந்தச் சூறாவளி சுற்றுப்பயணத்தில் பதினைந்துக்கும் மேற் பட்ட நிகழ்ச்சிகளை அதில் சேர்த்திருக்கிறார். நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நள்ளிரவு வேளைகளிலும் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று சேரும்வகையில் அவரது ஓய்வில்லாத பயணத்திட்டம் அமைந்திருக்கிறது...''

எனது பதவிக் காலத்தின் இறுதியில் இரண்டு விஷயங்களில் எனக்கு மனத்திருப்தி உண்டாயிற்று. மாணவர்கள் மத்தியில் ஒருவித ஏக்கமும், மனச்சோர்வும் காணப்படுவதை நான் கண்டேன். அவர்களுக்குத் தன்னம்பிக்கையூட்டி மகிழ்ச்சி யளிக்க விரும்பினேன். இந்தியா முன்னேறிக் கொண்டிருப் பதால் இளைஞர்கள் தங்களது எதிர்காலம் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று அவர்களிடம் கூறினேன்.

இந்தியா வளர்ச்சியடையும். அதனுடன் சேர்ந்து நீங்களும் வளர்ச்சி பெறுவீர்கள் என்றேன். சமீப காலங்களில் வளர்ச்சி சதவீதம் அதிகரித்து வருகிறது. எனது பதவிக்காலம் முடியும் போது இளைஞர்களின் மனநிலை மாறியிருந்தது. வளர்ச்சி பெற்ற இந்திய நாட்டில் வாழ அவர்கள் விரும்பினார்கள். அதற்காக உழைக்க நாமும் தயாராக இருக்கிறோம்.

எனது ஜனாதிபதிப் பொறுப்புகளுக்கு மத்தியில் இதற்கெல்லாம் எப்படி நேரம் ஒதுக்க முடிகிறது என்று மக்கள் வியப்படைகிறார்கள். நான் ஜனாதிபதி பதவிக்கு வருவதற்கு

முன்பும் எழுத்துப் பணி, கற்பித்தல், தேசிய, சர்வதேசப் பள்ளி மற்றும் பல்கலைக்கழக இளைஞர்களுக்கு உத்வேகம் அளித்தல் போன்ற பணிகளைச் செய்துவந்தேன். மாநாடுகள், கருத்தரங்குகளில் கலந்து கொண்டேன். இது போன்ற காரியங்களை எனது வழக்கமான ஒன்றாக்கிக் கொள்ள விரும்பினேன்.

எனக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகம், ஹைதராபாத்திலுள்ள இந்தியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (IIIT) பட்னாகரில் உள்ள ஜி.பி.பந்த் விவசாய மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம், IIM அஹமதாபாத், IIM இந்தூர், IIM கோரக்பூர், பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் (BHU) மற்றும் பல இடங்களிலிருந்து மாணவர்களுக்கு கல்வி கற்றுத்தர அழைப்புகள் வந்தன.

2007 ஆம் ஆண்டு ஜூலை 26 முதல் இன்றுவரை அதை நான் மனக்கண் முன்பு கொண்டு வந்து நிறுத்தி எனது வாழ்க்கைப் பயணத்தை மேலும் வளப்படுத்திக் கொள்கிறேன். எனது கற்பித்தல் மற்றும் ஆய்வுப் பணிகள் தற்போது பந்த் பல்கலைக் கழகத்தில் வரையறுக்கப்பட்டு விட்டன. இந்தியாவின் இரண்டாவது பசுமைப் புரட்சிக்கு மாணவர்கள் எந்த வகையில் தொழில்நுட்ப ரீதியில் அடிப்படைச் சக்தியாக இருந்து உதவுவார்கள் என்று கண்டறிவதுதான் எனது ஆய்வின் குறிக்கோளாகும்.

பந்த் பல்கலைக்கழகம் இந்தியாவின் முதல் விவசாயப் பல்கலைக் கழகமாகும். அது மிகப்பெரிய வளாகத்துடன் பரிசோதனைகள் செய்வதற்கு வசதியாக நிறைய நிலப்பகுதிகளையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

கோரக்பூரில் உள்ள இந்தியாவின் முதல் IIT -யில் நான் சிறப்புப் பேராசிரியராக இருந்து தலைமைக் குணம் மற்றும் சமூக மறுமலர்ச்சி பற்றிக் கற்பித்தேன்.

ஹைதராபாத்திலுள்ள IIIT -யில் நான் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார்ந்த உருவாக்கங்கள் பற்றிக் கற்பித்தேன். தொலைநோக்கு இந்தியா 2020 உருவாக அவை அவசியமானவைகளாகும். பனாரஸ் மற்றும் அண்ணா பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில்நுட்பப் பாடங்கள் கற்பித்தேன். கிராமப் பொருளாதாரம் மறுமலர்ச்சி பெறுவதற்கு அதன் தவிர்க்க இயலாத பரிமாணம் பற்றியும் விளக்கினேன்.

அஹமதாபாத் IIM மற்றும் அமெரிக்காவின் லெக்சிங்டன் நகர காட்டன் வர்த்தகப் பொருளாதாரக் கல்லூரிகளிலும் ஒரு ஒருங்கிணைந்த கல்வித்திட்டம் உருவாக்கப்பட்டது. தேசிய, சர்வதேசப் பொருளாதார வளர்ச்சி நிலைகளின்போது எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் குறித்து பிசினஸ் பட்டதாரிகளுக்குக் கற்பிக்கப்பட்டன.

அந்த மாணவர்கள் பயிற்சித்திட்டத்தில் இல்லாத பல யோசனைகளை என்னிடம் எடுத்துரைத்தனர். இந்தியா 2020ன் வெற்றித் தூண்களை வடிவமைத்து நடைமுறைப் படுத்த அவை அவசியமாக இருந்தன. உதாரணம் காட்ட வேண்டுமானால், பொதுத்துறை மற்றும் தனியார் துறைக் கூட்டு முயற்சியில் PURA திட்டத்தை அவர்கள் செயல்படுத்த முயன்றதைக் கூறலாம்.

வெளிநாடுகளில் இருந்து எனக்கு நிறைய அழைப்புகள் வந்தன. நான் பதவியிலிருந்து விலகிய பின்னர் இன்று வரையிலும் பல்வேறு கல்வி, அரசியல், மற்றும் தொழில்துறை அமைப்புகள் எனக்குச் சிறப்பு அழைப்புகள் அனுப்புகின்றன. நான் அவற்றில் கலந்துகொண்டு உரையாற்றுகிறேன். அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தோனேஷியா, நெதர்லாந்து, கொரியக் குடியரசு, இஸ்ரேல், கனடா ஃபின்லாந்து, நேபாளம், அயர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்டுகள், தைவான், ரஷ்யா ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்று விழாக்களில் கலந்து கொண்டேன்.

அந்தப் பயணங்களின்போது நான் அங்குள்ள பல்கலைக்கழகங்கள், ஆய்வுக் கூடங்களைச் சென்று பார்த்தேன். தொழில்துறை, இளைஞர் மாநாடுகளில் கலந்து கொண்டேன். இந்திய முன்னேற்றம் குறித்த எனது கருத்துகளை அவர்களுடன் பகிர்ந்து கொண்டேன். மற்ற நாடுகளுடன் கூட்டாளிகளாகச் சேர்ந்து செயல்படுதல், அறிவுபூர்வமான கல்விமுறை போன்றவை பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வளவு அவசியம் என்பதையும் எடுத்துரைத்தேன்.

இதுவரை நான் 1200 விழாக்களில் கலந்துகொண்டு பதினைந்து மில்லியன் குறிப்பாக இளைஞர்களைச் சந்தித்துள்ளேன். இளைஞர்களின் கனவுகளைப் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். அவர்கள் எப்படி வித்தியாசப்பட்டு நிற்க விரும்புகிறார்கள், முன்னேற்றம் என்ற குறிக்கோளின் மீது அவர்களுக்கு உள்ள வேகம், ஆர்வம், அதற்காக அவர்கள் சவால்களை எதிர்கொண்டு போராடத் தயாராக இருப்பது பற்றியெல்லாம் கலந்துரையாடல்கள் மூலம் தெரிந்து கொண்டேன். அந்த முயற்சி இப்போது உலகத் தொலைநோக்கு 2030 என்ற திட்டமாக உருவெடுத்திருக்கிறது.

இந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் எனது வாழ்க்கைக்குப் புதிய பாதைகளைக் காட்டின. அவை ஏற்படுத்திய வாழ்க்கைப் போக்கின் மாற்றங்களில் இருந்து நான் என்ன கற்றுக் கொண்டேன் என்று சுயபரிசோதனை செய்து பார்த்துக் கொண்டேன். ஒவ்வொரு சம்பவத்தின் போதும் முடிவெடுப்பது சிக்கலான விஷயமாகவே இருந்தது. சம்பவங்களும் வெவ்வேறு விதமாகவே அமைந்திருந்தன. புதிய சவால்கள் எனக்கு உத்வேகம் தந்தன. முடிவு எடுப்பதற்கு அவை அடிப்படைகளாக அமைந்தன. இவ்வாறுதான் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மாறியது.

ஒருவர் செய்து முடிக்கவேண்டிய அனைத்து காரியங்களுக்கும் நேரம் கிடைப்பது மிகவும் சிரமமாகும். எனது

பணிகளுக்கான அட்டவணை தனது இஷ்டம் போல் உருப்பெற்றுவிடுகிறது. முன்பைவிட அது இப்போது வேகம் பெற்றுப்பெரிதாக மாறிவிடுகிறது. அதில் இன்னும் கொஞ்சம் இடவசதி செய்துகொள்ள முடியுமா என்று நான் யோசிப்பதுண்டு.

எனது பயணத்திட்டங்களை வகுப்பவரும், நிகழ்ச்சிநிரல்கள் தயாரிப்பவருமான ஆர்.கே.பிரசாத் சிலநாட்களுக்கு முன்பு கலகலப்பாகப் பேசி என்னைச் சிரிக்க வைத்தார். திங்கட்கிழமை எனக்கு மொராதாபாத்திலும், ராம்பூரிலும் நிகழ்ச்சிகள் இருந்தன. இரவு டெல்லி திரும்புவதற்குள் நான்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாக வேண்டும். புதன்கிழமை ஒருங்கிணைந்த ஆப்பிரிக்க மின் தொடர்பு பற்றிப் பேசவேண்டும். அதன் பிறகு கௌஹாத்தி செல்லவேண்டும். வெள்ளி இரவு டெல்லி திரும்பி, அன்றே லக்னோவுக்குப் பறந்து, மறுநாள் சனிக்கிழமை காலையில் ஒரு தனிப்பட்ட கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

மே மாதத்திற்கான எனது நிகழ்ச்சி நிரல், கீழே தரப்பட்டிருக்கிறது. எனது தினசரி சந்திப்புகள் சில இதில் தவிர்க்கப்பட்டுள்ளன.

மே 2012 நிகழ்ச்சி நிரல்

மே 1 செவ்வாய்

- ★ பெகாரோ செல்லுதல் : பொகாரோ எஃகு ஆலையைப் பார்வையிட்டு அதன் பொறியாளர்கள் மற்றும் சின்மயா வித்யாலயாய பள்ளி மாணவர்களிடையே சொற்பொழிவாற்றுதல்.
- ★ ராஞ்சி சென்று 'நான் எதை அளிக்க இயலும்' நிகழ்ச்சியின் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுதல்.

மே 5-6, சனிக்கிழமை

- ★ சென்னை, திருச்சி, காரைக்குடி பயணங்கள்.

மே 7, திங்கள்

★ சட்டிஸ்காரிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் 30 பேர், மற்றும் ஆசிரியர்களைச் சந்தித்தல்.

மே 9, புதன்கிழமை

★ மதுராவில் சான்ஸ்கிருதி குழுவின் நிலையங்களைப் பார்வையிட்டு 'நான் எதை அளிக்க இயலும்' நிகழ்ச்சி விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுதல்.

★ பிருந்தாவனத்திலுள்ள விதவைகளுக்கான பகல் பாவா ஆசிரமத்தைப் பார்வையிடுதல்.

மே 11, வெள்ளிக்கிழமை

★ விஞ்ஞானத் தொழில் நுட்பத்துறையின் 'தொழில்நுட்பதினம்' கொண்டாட்டத்தைத் துவக்கி வைத்தல்.

மே 12, சனிக்கிழமை

★ உத்திரப்பிரதேச மாநிலம் ஆஜாம்கார் சென்று அங்குள்ள வேதாந்த மருத்துமனையைப் பார்வையிடல். ஆஜாம்கார் பள்ளி மாணவர்கள் மத்தியில் உரையாற்றுதல்.

மே 15, செவ்வாய்

★ தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2012 விழாவைத் துவக்கி வைத்தல்.

மே 17,18 வியாழன், வெள்ளி

★ CMR தொழில்நுட்ப நிலையத்தின் பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொள்ளுதல்.

★ மைசூரிலுள்ள பாதுகாப்புத்துறை உணவு ஆய்வுக்கூடத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுதல்.

★ அகில இந்திய பேச்சு மற்றும் காதொலி நிலையத்தைப் பார்வையிடுதல்.

★ JSS பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றுதல்.

மே 21, திங்கள்

★ மொராதாபாதிலிலுள்ள மகாவீர் தீர்த்தங்கர் பல்கலைக் கழகத்தின் முதலாமாண்டு பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொள்ளுதல்.

★ ராம்பூர் நகருக்குச் செல்லுதல். ராம்பூர் மாவட்டப் பள்ளி மாணவர்கள் மத்தியில் உரையாற்றுதல்.

★ C.L குப்தா கண் மருத்துவ நிலையத்துக்குச் சென்று அங்குள்ள மருத்துவர்கள்/பணியாளர்கள் மத்தியில் உரையாற்றுதல்.

★ மொராதாபாத் தொழில்நுட்ப நிறுவனத்துக்குச் சென்று அங்கு மாணவர்கள் மத்தியில் உரையாற்றுதல்.

மே 23, புதன்கிழமை

★ ஒருங்கிணைந்த ஆப்பிரிக்க மின்-தொடரிணைப்பு குறித்து ஆப்பிரிக்க நாடுகளுக்கான சொற்பொழிவு.

மே 24, வியாழன்

★ கௌஹாத்தி பயணம். கௌஹாத்தி IIT யில் வருடாந்திர பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்துதல்.

மே 26, சனிக்கிழமை

★ ஹிந்துஸ்தான் டைம்ஸ்-உத்தரபிரதேச ஹிந்துஸ்தான் வளர்ச்சி சபையின் தனிப்பட்ட கூட்டம் ஒன்றில் உரையாற்றுதல்.

நிகழ்ச்சிகள் வெவ்வேறு வகையானவைகளாக இருப்பதை யாரும் கண்டுணர முடியும். ஒவ்வொரு சொற்பொழிவும் வித்தியாசமான கருப்பொருளைக் கொண்டிருப்பதால், அந்த சொற்பொழிவுகளைத் தயாரிக்கவும் நிறைய சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

மே 26-ம் தேதி லக்னோவில் நடைபெற்ற தனிப்பட்ட சந்திப்புக் கூட்டம் உத்தரப்பிரதேச மாநிலத்தின் வளர்ச்சியை வேகப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

வழக்கம் போல அதற்கென நேரம் எடுத்துக்கொண்டு எனது உரையைத் தயார் செய்தேன். நான் கூறிய கருத்துகளை அங்கிருந்த நிபுணர்களும், முதலமைச்சர் அகிலேஷ் யாதவ்

அவர்களும் ஏற்றுக்கொண்டது கண்டு மகிழ்ச்சியுற்றேன். 38 வயதில் முதலமைச்சர் பெறுப்பேற்ற அவர்தான் நாட்டில் இளம் வயதில் முதலமைச்சரானவர்.

தேசத்தின் இரண்டாவது பெரிய பொருளாதார அமைப்பாக உத்தரப்பிரதேசம் விளங்குகிறது. அங்கே இயற்கை வளங்களும், மனித வளமும் நிறைந்திருக்கிறது. 100 மில்லியன் இளைஞர்களில் ஐந்துக்கு ஒருவர் இந்த மாநிலத்தவர். 2016ஆம் ஆண்டில் உலக அளவில் உருவாகும் ஒவ்வொரு 100 தனித் திறன் வாய்ந்த பணிகளில் 8 பணிகள் இந்த மாநிலத்திலிருந்து நேரடியாக உருவானவைகளாக இருக்கும் என்று நிபுணத்துவம் வாய்ந்த எனது நண்பர் ஒருவர் கூறினார்.

உத்தரப்பிரதேசத்தின் பொருளாதாரம் பற்றிய எனது ஆய்வின்படி 73 சதவீத மக்கள் விவசாயம், மற்றும் அது சார்ந்த பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். மாநிலத்தின் வருமானத்தில் 46 சதவீதம் விவசாயத்திலிருந்து வருகிறது. 11வது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி அந்த மாநிலத்தின் மொத்த உற்பத்தி (Gross State Domestic Product -GSDP) 7.3 சதவீதமாகும். நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 6.1 சதவீதத்தை மாநிலம் தாண்டிச் சாதனை புரிந்துள்ளது.

அந்த மாநிலத்தில் 2.3 மில்லியன் சிறுதொழில் அமைப்புகள் செயல்படுகின்றன. தற்போதைய கணக்குப்படி 2.5 மில்லியன் இளைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களில் 0.9 சதவீதம் பேர் 35 வயதைத் தாண்டியவர்கள். இந்த விஷயங்களை எல்லாம் மனதில் கொண்டு எனது திட்டம் தனிநபர் வருமானத்தை உயர்த்துவது பற்றியதாக அமைந்தது.

தற்போதைய வருட வருமானம் ரூ.26,051 என்று இருப்பதை வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் 1 லட்சமாக மாற்ற வேண்டும். 100 சதவீதம் கல்வியறிவு பெற்றவர்களாக மாநில மக்கள் மாறவேண்டும். சிசு மரணச்சதவீதம் பத்து சதவீதத்திற்கும் கீழே குறையவேண்டும்.

மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, காசநோய், தொழுநோய் போன்றவை முற்றிலும் ஒழித்து அகற்றப்பட வேண்டும்.

அந்த மாநிலத்தின் 200 மில்லியன் மக்கள் மேன்மையடைய இந்த இலக்குகளை எவ்வாறு நிறைவேற்றலாம் என்று விளக்கிப் பேசினேன். உத்தரப்பிரதேசப் பணித்திறன் வரைபடம் ஒன்று தயாரிக்கப்படவேண்டும் என்பது எனது யோசனைகளில் ஒன்றாகும். மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட மக்களிடமும் என்னென்ன வகையான திறமைகள் உள்ளன என்று வரைபடம் தயாரிக்கவேண்டும்.

ஒவ்வொரு பகுதியிலும் பிரதானமாக உள்ள கலை, இசை, கைத்தொழில், வேளாண் உற்பத்தி,சமையற்கலை, போன்ற பல்வேறு திறமைகளை வகைப்படுத்தி, அவற்றை மேம்படுத்து வதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். அது தவிர வேறு சில சிறப்பான விஷயங்களும் எனது பேச்சில் இடம் பெற்றிருந்தன. நாடு முழுவதும் விரைவாக வளர்ச்சியடைவதற்கான திட்டங்களைச் செயல் படுத்தி ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் கூறினேன்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கையெழுத்தான 123 ஒப்பந்தம், இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தப்படி இந்தியா தனது அணுசக்திப் பணிகளை ராணுவம் சார்ந்தது, மக்கள் நலன் சார்ந்தது என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்தது. மக்கள் நலன் சார்ந்த பணிகளை சர்வதேச அணுசக்தி முகாமையின் (International Atomic Energy Agency-IAEA) பாதுகாப்பு விதிமுறைகளின் கீழ் கொண்டு வருவதற்கும் ஒப்புக் கொண்டது.

அதன் பிரதிபலனாக, இந்தியாவின் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு அமெரிக்கா தனது முழுமையான ஒத்துழைப்பை அளிக்க முன் வந்தது. நீண்ட விவாதங்களுக்குப் பிறகு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம்

ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவதற்கு முன்பு 2008-ஆம் ஆண்டு ஜூலை 22-ம் தேதி நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்தது.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், இந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் இடதுசாரிக் கட்சிகள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு வெளியிலிருந்து ஆதரவு தருவதாகக் கூறின. ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும் கட்சிகளில் ஒன்றாக அவை இருக்க விரும்பவில்லை. சமாஜ்வாதி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ் அவரது ஆதரவாளரான அமர்சிங்கும் அந்த ஒப்பந்தம் குறித்து வேறுபட்ட அபிப்பிராயங்கள் வைத்திருந்தனர். தங்கள் ஆதரவைத் தொடர்ந்து அளிப்பதா வேண்டாமா என்பதில் மாறுபட்டு நின்றனர்.

அந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கு அனுகூலமானதா அல்லது மேற்கு நாடுகளின்-குறிப்பாக அமெரிக்காவின் வியாபார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதா என்று புரியாமல் தடுமாறினார்கள். இது பற்றித் தெளிவுபடுத்திக்கொள்ள முலாயம்சிங் யாதவும், அமர்சிங்கும் 10, ராஜாஜி மார்க்கிலுள்ள எனது இல்லத்திற்கு வந்தனர். இந்தியா கையெழுத்திடவுள்ள அந்த ஒப்பந்தத்தின் சாதக பாதகங் களைப் பற்றி என்னுடன் விவாதித்தார்கள்.

நீண்ட கால அடிப்படையில் பார்க்கும்போது இந்தியா தோரியம் எரிபொருளைப் பயன்படுத்தும் அணுஉலைத் தொழில்நுட்பத்தில் தன்னிறைவு பெற்றுவிடும். அது நமக்கு அபரிமிதமான மின்னாற்றலைத் தந்து வளர்ச்சிக்கு உதவும். தற்போது நமக்கு ஏற்பட்டுள்ள யுரேனியம் பற்றாக்குறையை ஈடுசெய்ய இந்த ஒப்பந்தம் உதவும் என்றேன்.

2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜப்பானிலுள்ள ஃபுகுஷிமா பகுதியை சுனாமி தாக்கிய சம்பவத்திற்குப் பிறகு அணுமின்சார நிலையங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்தன. தமிழ்நாட்டில் கூடங்குளத்திலுள்ள அனுமின்நிலைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அவற்றில் முக்கியமான ஒன்றாகும்.

அணுமின்நிலையம் கட்டப்படுவதற்கு எதிராக உள்ளூர் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அவர்களுக்கு தேசிய, சர்வதேச அளவிலான அரசுத்துறை சாராத நிறுவனங்கள் ஆதரவு அளிக்கின்றன. அவர்கள் அணுஉலையின் கட்டுமான பணி நிறுத்தப்படவேண்டும் என்கிறார்கள். பொறியாளர்கள் பணியாற்றுவதற்கு இடம் தராமல் தடைகள் ஏற்படுத்து கிறார்கள். சம்பவங்களின் தீவிரத்தைக் கவனித்த நான் இந்தியாவிலுள்ள உலைகளின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து விரிவாக ஆய்வுகள் நடத்தினேன். அவை செயல்படுவதற்கேற்ற நல்ல நிலையில் இருப்பதைக் கண்டு ஆங்கில மொழியில் ஒரு கட்டுரை எழுதினேன். பிராந்தியப் பத்திரிகைகள் இந்தியாவின் வளர்ச்சிக்கு இந்த தொழில்நுட்பம் எவ்வளவு அவசியம் என்று விளக்கிச் செய்திகள் வெளியிட்டன.

அதைத் தொடர்ந்து நான் எனது குழுவுடன் கூடங்குளம் சென்று 2000MW திறன்கொண்ட மூன்றாம் தலைமுறை உலையைப் பார்வையிட்டேன். அணுஉலையின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்துத் தெரிந்துகொள்ள விரும்பினேன். ஃபுகுஷிமா சம்பவத்திற்குப் பிறகு மக்கள் பேசிக்கொள்ளும் விஷயங்கள் பெரிதுபடுத்திப் பேசும் தகவல்கள் குறித்து ஆராய நினைத்தேன்.

நான் நாள் முழுவதும் அங்கே தங்கியிருந்து நிபுணர்களையும், விஞ்ஞானிகளையும், உள்ளூர் மக்களையும் சந்தித்துப் பேசினேன். அந்த ஆலையில் அமைக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்து நேரடியாகப் பார்த்துத் தெரிந்துகொண்டேன். ஆலையில் நவீன தொழில்நுட்ப வசதிகள் செய்யப்பட்டு பாதுகாப்புக்கு வழி வகுக்கப்பட்டிருப்பது கண்டு நிம்மதியடைந்தேன்.

அணுமின் உலையில் நான்கு முக்கிய பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன. கட்டமைப்பு ஒருங்கிணைப்புப் பாதுகாப்பு; வெப்ப நீரியல் பாதுகாப்பு, (Thermal Hydrolic Safety); கதிரியக்கப்

பாதுகாப்பு நியூட்ரானிக் பாதுகாப்பு (Neutronic safety, இது மற்ற நான்கு பாதுகாப்புத் தேவைகளையும் நிறைவு செய்கிறது.

நான் அந்த அணுமின் நிலையம் உள்ள கிராமப் பகுதியில் ஒரு சிறப்பு PURA திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று ஆலோசனை கூறினேன். அதன் மூலம் கல்வி, தொழிற்பயிற்சி வசதிகள், வேலை வாய்ப்பு போன்றவற்றை உள்ளூர் மக்கள் பெறமுடியும். இந்த திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்பட அரசு ஆதரவு அளித்தது கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன்.

மின்உற்பத்தி நிலையத்திலிருந்து கிடைக்கும் லாபத்தில் இரண்டு சதவீதத்தை சமூக நலத்திடங்களுக்கு ஒதுக்குவதாக அரசு அறிவித்தது. அதன் மூலம் கூடங்குளம் பகுதியில் உள்ள கிராமங்கள் வளர்ச்சி பெற்று மக்களின் வாழ்க்கை முறை மேம்பாடு அடையும். நாட்டின் எரிசக்தித் தேவைக்கான தன்னிறைவுத் திட்டத்தில் இந்த மின்நிலையத்தின் இயக்கமும் ஒரு அங்கமாக உள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுக்காலமானது பல லட்சம் குழந்தைகளைச் சந்திப்பதற்கான வாய்ப்பை எனக்கு வழங்கியது. பல்வேறு கல்வி, ஆராய்ச்சிப் பணிகளை நான் இந்திய மற்றும் வெளிநாடுகளில் மேற்கொண்டேன். பெரும் எண்ணிக்கையிலான நிர்வாகவியல் மாணவர்களுக்கு சமூகவியல் மாற்றங்களைக் கற்பிக்கும் ஆசிரியனாக இருந்தேன். தேசியப் பிரச்சினைகளில் எனது கருத்துகளை அளித்துப் பங்களிப்புச் செய்தேன். அனைத்திற்கும் மேலாக, எட்டுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் உயிர் பாதுகாப்பு அமைப்பை (Life Saving System) காயம்பட்டவர்களுக்கான அவசர சிகிச்சை நிர்வாகத்திட்டம் (Emergency Trauma Management Programme) மூலம் அறிமுகப்படுத்தினேன்.

முடிவுரை

பாராளுமன்ற உறுப்பினர்களே!
இந்தியத் தாயின் சிற்பிகளே!
எங்களை வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்
எங்கள் வாழ்வை வளப்படுத்துங்கள்
உங்களது உண்மையான உழைப்பே
எங்களது வழிகாட்டி விளக்குகளாக அமைகின்றன
நீங்கள் கடுமையாக உழைத்தால்
நாங்கள் எல்லோரும் வளம் பெறுவோம்.

2007 ஆம் ஆண்டு எனது பதவிக்காலம் முடிந்தபோது பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் சொற்பொழிவு ஆற்றினேன். அவற்றில் பொருத்தமான சிலவற்றை முந்தைய பக்கங்களில் கூறியிருக்கிறேன். மனதில் கொள்ளவேண்டிய அம்சங்கள் பல அதில் இருக்கின்றன.

வாய்மையின் மீது கொண்ட நம்பிக்கையின் விளைவாக இந்தியாவின் குடியரசுச் சுதந்திரம் பிறந்தது ஒரு விந்தை அனுபவமாகும். 1951-ஆம் ஆண்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை கிடைத்தது. உலகில் வேறு எங்கும் அது போன்ற ஒரு நிகழ்வு அதுவரை நடந்ததில்லை. லட்சக்கணக்கான படிப்பறிவற்ற, சொத்து சுகமற்ற ஏழைகள் ஒரே நாளில் குடியுரிமை அடைந்தனர். அது அமைதியும், உறுதியும் நிறைந்த ஒரு சமூகப் புரட்சியை ஆரம்பித்து வைக்கும் தொடக்கமாக இருந்தது.

அரசியலமைப்புச் சட்டப்படியான அனைத்து உரிமைகளும் எல்லோருக்கும் கிடைக்கும் என்பது உத்தரவாதமாயிற்று.

தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு தலையெடுத்தது தேசத்தின் பாதுகாப்பு, பொதுநலன், அந்நிய ஆதிக்கத்தில் பலநூற்றாண்டுகளாக நசுங்கிக் கிடந்த மக்களுக்கு முன் எப்போதும் கிடைத்திராத செழுமை வந்து சேரும் என்ற நம்பிக்கையும் உருப்பெற்றிருந்தது.

பொருளாதாரச் செயல்பாடுகள் வாயிலாகக் குறிப்பிடத்தக்க ஆதாயங்களை நாம் அடைந்திருக்கிறோம். கடந்த காலத்து வரலாற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் சமீபத்திய வளர்ச்சி சிறப்பானதாகவே உள்ளது. நமது வெற்றிகள் சமூகச் சூழ்நிலைகளுடன் கலந்து நிற்கின்றன. மனிதர்களின் முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்தே அவை அமைந்திருக்கின்றன. நிர்வாகக் குறிகாட்டிகள் இன்னும் நீண்டதூரம் பயணிக்கவேண்டியிருப்பதை உணர்த்துகின்றன.

மக்கள் மேம்பாட்டிற்காகப் போராடும் தேசியக் குறிக்கோள் ஆர்வம் கொண்ட தலைவர்களும், புதிய குறிக்கோள் இலக்குகளும் தேவையாக இருக்கின்றன. அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, உலக நலனுக்காகப் போராடி வருகிறோம். பாராளுமன்றம் இந்தியாவின் முன்னோடி அமைப்புகளில் ஒன்று என்பதில் ஐயமில்லை. பிரதிநிதித்துவக் குடியரசின் அங்கமாக அது விளங்குகிறது.

பாராளுமன்ற ஜனநாயகம் என்பது ஒரு நிர்வாகச் செயல் முறையாகும். அது இந்திய சமூகத்தின் பழங்கால ஆதிக்கக் கட்டமைப்பைத் தளர்த்துவதற்கு உறுதிபூண்டுள்ள ஒரு தேசிய அரசியல் அமைப்பாகும். தன்னிச்சையாக இயங்கும் ஸ்தாபனநீதியான செயல்பாடுகள் நிலைபெறவும், ஜனநாயகப் பங்களிப்புக்கான வாய்ப்புகள் விரிவடையவும் அது வழி செய்கிறது. இருபத்தோராம் நூற்றாண்டின் இந்த துவக்க காலத்தில் நாம் வாழ்கிறோம். 1951 ல் பாராளுமன்றம் உருவாக்கப்பட்டது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தற்சமயம் பாராளுமன்றமானது பெரும் சவால்களை

எதிர்கொள்ள வேண்டியுள்ளதோ என்று ஐயம் கொள்ள வேண்டியிருக்கிறது. சமூக மேம்பாடு, நிர்வாகத் துறைகளில் இந்த இடர்ப்பாடு எதிர்ப்படுவதாகத் தெரிகிறது.

நன்கு ஆலோசித்துக் காரியமாற்றுதல், சட்டங்களை இயற்றுதல், குறிக்கோள் நிறைந்த தலைவர்களை அரசுக்கும், நாட்டுக்கும் வழங்குதல் போன்ற காரியங்கள் நடை பெறுவதற்கு உதவும் நிர்வாகரீதியிலான ஒரு கருவியாகப் பாராளுமன்றம் இருக்கிறது என்பது வெளிப்படையாக நமக்குத் தெரிகிறது. பாராளுமன்றம் என்ற அமைப்பு தன்னிச்சையாக இயங்குவதற்கு மாறாக, அரசியல் கட்சிகளின் பல்வேறு செயல்பாடுகள், அவற்றின் திறனாற்றல், கணக்கீடுகள் போன்றவற்றைப் பெரிதும் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

நமது தேசம்-பாராளுமன்றம் உட்பட எதிர்கொள்ள வேண்டியுள்ள சவால்களைப் பற்றி நான் உங்களுடன் கருத்துப் பகிர்வு செய்துகொள்ள இதுவே முக்கியமான காரணமாகும். இந்தியாவை 2020-ஆம் ஆண்டிற்குள் வளர்ந்த நாடாக மாற்றிவிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இந்திய நிர்வாகவியல் அமைப்பின் உள்ளும், புறமும் திருத்த முடியாத அளவுக்கு வேகமான மாற்றங்கள் பெற்றுவிட்டது வெளிப்படையான விஷயமென்று ஒரு பொதுக்கருத்தும், பாராட்டும் நிலவி வருகிறது. கடந்த இரண்டு பத்தாண்டுகளில் இது நடந்திருப்பதாகக் கருதப்படுகிறது. தேசத்தின் இறையாண்மை, ஒற்றுமை, பொருளாதார வளர்ச்சி போன்ற வற்றிற்கு எதிரான விஷயங்கள் களையப்படவேண்டும். பொருளாதார வளர்ச்சி வேகத்தினால் ஏற்பட்ட புறச்சூழல் மாறுபாடுகளையும் முரண்பாடற்ற வகையில் பேச்சு வார்த்தைகள் மூலம் வேகமாகக் களைந்திட வேண்டும்.

காலத்தின் பாதையில் பயணிக்கும் தருணத்தில் சமூக அமைப்புகளில் வேகமான வளர்ச்சியும், சிக்கல்களும் ஏற்படும்போது அவை சீரழிவுக்கு ஆட்பட்டு மோசமான

நிலையை அடையக்கூடும். இந்தியாவின் நிர்வாக அமைப்பு சிரமமான காலகட்டத்தில் உள்ளது. இச்சிரமச்சூழல் மாற்றமும், புதுப்பித்தலும் நடக்கவேண்டிய தருணம் என்பதை உணர்த்தும் எக்காள ஒலி (Clariancall) என்று கூறலாம்.

திறமை படைத்த தலைவர்கள் இந்தியாவுக்கு வாய்த்திருக் கிறார்கள். அரசாங்கம் மற்றும் பாராளுமன்றத்தை வழிநடத்தும் திறமையும், லட்சிய நோக்கும் கொண்ட வர்களாக அவர்கள் இருக்கிறார்கள். சுதந்திரத்திற்குப் பிறகு பொருளாதாரம், சமுகம், அரசியல் போன்ற பல்வேறு பிரிவுகளிலும் தேசம் சாதனை படைத்திருக்கிறது என்று நாம் பெருமிதம் கொள்ள முடியும். உலகின் பொருளாதார ஆதிக்கம் பெற்ற நாடாக இந்தியா 2050 ஆம் ஆண்டிற்குள் உயர்ந்து விடும் என்பது என் கணிப்பாகும். ஜனநாயகமோ அல்லது பொருளாதாரமோ புத்துயிர் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. சுதந்திரத்திற்கு நாம் கொடுத்த விலை பற்றிய எண்ணம் எப்போதும் நம்மிடம் இருக்க வேண்டும்.

ஜனநாயகச் செயல்பாடுகள் மேலோட்டமாக திருப்திகர மாக இருந்தாலும்,அவசியப்பட்ட தருணங்களில் உறைந்து நின்று விடக் கூடாது என்பது மிகவும் முக்கியமாகும். கடந்த காலத்து சாதனைகளை மட்டும் நினைத்துக்கொண்டு ஓய்ந்து கிடந்துவிடக் கூடாது. சமீபத்திய முன்னேற்றங்களை உதாசீனம் செய்யக் கூடாது. அவை மாற்றங்களுக்கான அழைப்புகளாகும். அப்பாதையில் நாம் தேசத்தையும், சமூகத்தையும் வழி நடத்திச் செல்லவேண்டும். தாராளமய மாக்கலுக்குப் பிறகு பொருளாதாரம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. ஆக்கபூர்வமான வளர்ச்சி அலைகள் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு அப்பால் பெருமளவு வீசுகின்றன. நமது பொதுத்துறை அமைப்புகளுக்குப் புத்துயிர் தந்து புதிய வாழ்க்கைப்பாதையில் அவற்றை வழிநடத்திச் செல்வதுதான் இப்போது நமக்கு எதிரே உள்ள மிகப்பெரிய சவாலாகும்.

அரசு, மற்றும் பொதுத்துறைகளின் பணித்திறன், லாபங்கள், பொதுச்சேமிப்பு போன்றவற்றை மட்டும் கவனத்தில் கொள்ளாமல், ஆதாரப் பொதுச்சேவைப் பிரிவுகளான கல்வி, சுகாதாரம், குடிநீர் மற்றும் போக்குவரத்து வசதிகள் போன்றவை குறிப்பிடத்தக்க அளவு மேம்படுவதற்கு இலக்கு நிர்ணயித்துக்கொண்டு பாடுபட வேண்டும். சிறந்த கல்வியாளர்கள் பலர் பாராளுமன்றத்தின் செயல்பாடுகள் பற்றி ஆய்வு செய்திருக்கிறார்கள். அமைப்புரீதியிலான பல்வேறு சவால்களை இந்தியப் பாராளுமன்றம் எதிர்கொள்ள வேண்டியிருப்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள். நான் அவற்றை மறு ஆய்வு செய்து பார்த்தேன். அதிலிலுள்ள சில முக்கியமான கருத்துகள், மதிப்பீடுகளுக்காக நான் குரல் கொடுக்கவும் செய்தேன்.

பாராளுமன்றத்தின் செயல்திறனை மேம்படுத்த வேண்டிய தருணம் வந்துவிட்டதாக நாடு முழுவதும் ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளது. அமைப்பு ரீதியிலான அதன் பொறுப்புகளை அதிகரிக்கவும், கண்காணிப்புப் பணிகளைச் செம்மைப் படுத்தவும் வேண்டியிருக்கிறது. அரசுக்கு உள்ள கடமைப் பொறுப்பை உறுதிப்படுத்தப் பாராளுமன்றம் அதன் அவை நிகழ்ச்சிகளை முறைப்படுத்துதல், அதிகார வரம்புகளைக் கண்காணித்தல், கமிட்டி அமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற காரியங்களைச் செய்து முடிக்கப் பல கருவிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்குக் கருவியாகப் பயன்படக் கூடிய அமைப்புகளைப் பெருமளவு சீரமைத்துப் புத்துயிரூட்ட வேண்டியிருக்கிறது.

இந்தியப் பொருளாதாரம் உலகமயமாக்கல் மூலம் பலம் பெற்றுள்ளது. நாடு செழிப்படைந்துள்ளது. ஆனால் பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிப்பதில் இரண்டு அம்சங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படுவது அவசியமாக உள்ளது. நமது பெரும்பாலான பொருளாதாரம் சார்ந்த முடிவுகள் எடுக்கும் விஷயத்தில் சர்வதேச உடன்படிக்கைகள்

ஆதிக்கம் செய்கின்றன. உடன்படிக்கைகளைக் கடந்து செல்லக்கூடிய அதிகாரம் படைத்த முறையான அமைப்பு இல்லாதுள்ள உலகின் ஒருசில பாராளுமன்றங்களில் இந்தியாவும் ஒன்றாகும். எனவே வெளிநாடுகளுடன் செய்யப் படும் உடன்படிக்கைகள், ஒப்பந்தங்களை மேற்பார்வை யிடவும், அதற்கான சட்டங்களை வகுக்கவும் பாராளு மன்றத்திற்கு அதிகாரம் தரப்படவேண்டியது அவசியமாகும்.

உலகிலுள்ள மற்ற நாடுகளைப் போலவே இந்தியாவும் தனது ஒழுங்குமுறை விதிக்கட்டமைப்புகளை மறுசீரமைப்பு செய்திருக்கிறது. அதில், மக்களால் தேர்வு செய்யப்படாத சில அமைப்புகளிடம் கூடுதல் அதிகாரங்கள் இருக்கின்றன. இந்த வழிமுறை கடந்த காலங்களில், குறிப்பாகச் சுதந்திரத்திற்குப் பிறகு செயல்பாட்டுக்கு வந்தது. இந்த அமைப்புகள் ஒளிமறைவற்ற தன்மையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் செயல்படுவது அவசியமாகும்.

எனவே பாராளுமன்றத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்டு விரைந்து செயல்பட வேண்டுமானால் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குக் கூடுதல் அதிகாரங்கள் தரப்படல் வேண்டும். தலைமைப்பீடப் பொறுப்பு மேலும் பலப்படுத்தப் பட வேண்டும். அவசரச் சட்டங்கள் பிறப்பிப்பது குறைக்கப்படவேண்டும். அந்த அவசர விதிமுறைகளைச் சட்டங்களுக்கு மாற்றாகப் பயன்படுத்திப் பொருளாதார நலிவை அலட்சியம் செய்யும் குணம் குறைய வேண்டும்.

பொருளாதாரம் சார்ந்த கொள்கை முடிவுகள் எடுக்கும்போது பாராளுமன்றம் அதைக் கவனத்துடன் ஆய்வு செய்வது அவசியமான ஒன்றாகிவிட்டது. அதில் அதிக அக்கறை செலுத்தியாக வேண்டியிருக்கிறது. குறைந்த வயதுள்ள மற்றும் புதிய உறுப்பினர்களுக்கு இவ்விஷயங்களில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

பாராளுமன்ற ஜனநாயகம் அதில் கலந்து கொள்வோர் துடிப்புடன் செயல்படும்போது தான் செழுமை பெறுகிறது.

நமது முதல் லோக்சபா அமைக்கப்பட்டபோது அதில் ஐந்து கட்சிகள்தான் இருந்தன. இன்றைய 14-வது லோக்சபாவில் ஐம்பது கட்சிகள் உள்ளன. பாராளுமன்றத்தில் நிறையக் கட்சிகள் இருப்பது ஒரு சாதகமான அம்சமாக மாற்றிக்கொள்ளப்பட வேண்டும். அந்தக் கட்சிகள் நன்கு செயல்படுவதன் மூலம் கட்சிக்கும் பாராளுமன்றத்திற்கும் பலன் கிடைக்க வேண்டும். ஒன்றுபட்டுப் பணியாற்றுவதற்கு எதிரான தடைகள் இதன் மூலம் அகற்றப்படல் வேண்டும்.

கட்சிகள் நன்கு பணியாற்றும்போது, நவீன சட்டங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் கரங்களில் சுமத்தும் சிக்கலான தேவைகள், உறுப்பினர்களின் திறனாற்றல் சட்டங்களைச் சார்ந்து நிற்கவேண்டிய கட்டாயம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடைவெளி விரைவில் குறைந்து போய்விடும்.

பாராளுமன்றத்தில் சிறப்பாகப் பணியாற்றிய உறுப்பினர் களுக்கு அங்கீகாரமும், கட்சி ரீதியான பரிசுகளும் அவர்களது தொகுதிகளில் வழங்கப்படவேண்டும். இக்காரியங்களை அவரது கட்சிகள் மற்றும் கூட்டணிகள் செய்யவேண்டும். பாராளுமன்றத்தில் சிறப்பாகப் பணிபுரிய இவை ஊக்கமளிக்கும். சுதந்திரம் பெற்ற ஆரம்ப நாட்களில் இருந்தது போலவே மீண்டும் இப்போது நிதி நிர்வாகம் பற்றி குரல் எழுப்புதல் நடக்க ஆரம்பித்திருக்கிறது. பொருளாதாரம், சமூகக் கொள்கைகள் போன்ற பல அம்சங்களில் இந்தியா உலகப் பொருளாதாரத்துடன் தன்னை ஒருங்கிணைத்துக் கொண்டுள்ளது.

பாராளுமன்றத்தின் குரலைப் பலப்படுத்த வேண்டும் என்பது குறித்து மதிப்பீடுகள் செய்தபோது தடுக்க முடியாத தடை அம்சங்கள் எதுவும் தென்படவில்லை. முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய தொலைநோக்குச் சிந்தனையுள்ள தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களை இது விஷயத்தில் ஊக்கப்படுத்த வேண்டும். தோள்கொடுத்துத் துணை நிற்க

வேண்டும். சவால்களை எதிர்கொண்டு பொறுப்பேற்று அதற்கான கடமையுணர்வுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் பணிபுரிந்து நல்ல நிர்வாகத்தை அளிக்க உதவவேண்டும்.

பாராளுமன்றத்தின் செயல்பாடுகள் பற்றி பல ஆண்டுகள் ஆய்வு செய்த பல முக்கியப் பிரமுகர்கள் நிறையக் கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு மேம்பாட்டிற்குத் தேவையான முயற்சிகள் செய்ய வேண்டும்.

1. அரசியல் சமநிலை

a) ஒரு கூட்டாட்சி அரசை ஒரு சிறிய கட்சி கவிழ்த்துவிடப் போவதாக மிரட்டும்போது குறிப்பிட்ட கட்சியிலிருந்து சில உறுப்பினர்கள் விலகுவது தடைசெய்யப்பட வேண்டும். ஒரு சிறிய கட்சி (லோக்சபாவில் 10-15 சதவீதத்திற்கும் குறைவான உறுப்பினர்கள் கொண்டது) முதலில் ஒரு கூட்டணியில் சேர்வதற்கு முடிவு செய்துவிட்டு, அதன் பிறகு விலக நினைத்தால் அக்கட்சி தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

b) கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒரு குறிப்பிட்ட கட்சியின் கீழ் பாராளுமன்ற நோக்கங்களுக்காகச் செயல்பட வேண்டும்.

c) அமைச்சகங்கள் வருடாந்திர இலக்குகளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட இலக்குகள் குறித்த செயல்பாடுகளுக்கு அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

d) 25 சதவீதத்துக்கும் அதிகமான அமைச்சரவை உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு வெளியே இருந்து ஆதரவு தர விரும்பினாலும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றுள்ள அவர்களை அரசு அமைக்க அனுமதிக்கும் அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் ஒன்றை உருவாக்கி வெளியிட வேண்டும்.

e) தேர்தல் செலவினங்களுக்காக பொதுநிதியிலிருந்து பணம் தரும் முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

f) பட்டியலிடப்பட்ட பணிகள் நிறைவு பெறாதவரையில் அவை வாரத்திற்கு இரண்டு தடவைக்கு மேல் ஒத்திவைக்க அனுமதிக்கக் கூடாது என்று சட்டம் கொண்டுவர வேண்டும்.

g) மசோதா போன்றவற்றை நிறைவேற்ற குரல் வாக்கெடுப்பு முறை நடைமுறைப்படுத்தலாகாது. ஓட்டு எண்ணிக்கை முறை கட்டாயம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

h) சபை நடவடிக்கைகளுக்கு அடிக்கடி இடையூறு செய்யும் உறுப்பினர்களை வெளியேற்றவோ அல்லது தற்காலிக நீக்கம் செய்யவோ சபாநாயகர்/தலைவர் உரிமை ஆணை பெற்றிருக்க வேண்டும்.

2. நிர்வாகச் சமநிலை

a) **ஒருமுகப்படுத்துதல் :** உள்நாட்டுப் பாதுகாப்பு விஷயத்தில் அதிகாரங்கள் மாநிலங்களிலிருந்து மத்திய அரசுக்கு மாற்றப்பட வேண்டும்.

b) **பரவலாக்கல் :** பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்கள், அதிகாரங்கள் போன்றவை மத்தியிலிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்பவேண்டும்.

c) அங்கீகரிக்கப்பட்ட வறுமை ஒழிப்புப் பணிகள் மற்றும் அது சார்ந்த பணிகளுக்கான அதிகாரம் மாற்றம் செய்யப்பட வேண்டுமானால் அதற்கு ஒரு மத்திய குழுவை நியமிக்க வேண்டும்.

d) UPSC போன்று பல சிறப்பு அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். சட்டவரம்புக்கு உட்பட்ட அமைப்புகள், தன்னாட்சி அமைப்புகள், பொதுத்துறை அமைப்புகள், வங்கிகள், நிதித்துறை, கல்வித்துறை, கலாச்சார அமைப்புகள் போன்றவற்றிற்கான பணி நியமனங்கள் செய்யும்போது இந்த சிறப்பு அமைப்புகள் மூலம் செயல்படுத்த வேண்டும்.

e) தனியார் துறையின் வளர்ச்சி ஒட்டுமொத்த அளவில் பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ளதால், அரசுத்துறையின் அமைப்புகளில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.

f) அமைச்சர்களின் பொதுச் சேவை அமைப்புகள் மூலம் சிறந்த சேவையளிக்கும் பொறுப்பை அதிகரிக்க அமைப்பு ரீதியிலான புதிய ஊக்குவிப்புகள் தேவைப்படுகின்றன.

g) ஒப்புக்கொள்ளப்பட்ட வருடாந்திர இலக்குகள் விஷயத்தில் எட்டிய நிஜமான சாதனைகளைப் பற்றிய அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது திட்டக்கமிஷன் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும்.

h) குறைந்தபட்சம் அமைச்சரவை நிலையிலாவது ஊழல்களைச் சகித்துக்கொள்ளும் அளவுகளுக்கு ஒரு வரையறை போடப்பட வேண்டும்.

i) கடைசியாக, நீதித்துறைச் சமநிலையைப் பொறுத்தவரையில் சட்ட அமைப்புச் சீர்திருத்தங்கள் செய்யப்படுவதை நீண்ட காலம் தள்ளிப்போடக்கூடாது.

நான் ஏற்கனவே சொன்னது போல, பல கட்சிக் கூட்டணி மூலம் ஒரு அரசு அமையும்போது இந்தியாவின் ஜனநாயக அமைப்புக்காக உழைக்க வேண்டிய சூழ்நிலை வந்துவிடுகிறது. அதனால் பாராளுமன்றச் செயல்பாட்டின் பங்களிப்பு விகிதாச்சாரம் குறைந்துவிடுகிறது. பாராளுமன்றத்தின் கம்பீரமான ஒரு பங்களிப்பை அதிகரிக்க வேண்டியது அவசிய மாகும். அதன் மூலம் பாராளுமன்றச் செயல்பாடுகளின் நன்னடத்தை அதிகரிக்கும்படியாக நிர்வாகிக்க இயலும். பாராளுமன்றம் தனது மேற்பார்வைப் பணிகள் மூலம் பெரும் பொறுப்புகளுக்குத் தோள் கொடுக்க இயலும்.

பாராளுமன்ற அமைப்பு நிலையான உறுதியுடன் அரசியலமைப்புச் சட்டத்தின் உயர்ந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற இது போன்ற சீர்திருத்தங்கள் அவசியமாகும். சர்வதேசத் தீவிரவாதம், நாட்டில் சட்டத்திற்குப் புறம்பாக நடக்கும் காரியங்களால் உள்நாட்டுப் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்ற அவசியத்தையும் மேற்கண்ட காரியங்கள் குறைத்துவிடுகின்றன. தற்சமயம் பொருளாதார வளர்ச்சி மேம்பட்டிருக்கிறது நிர்வாகத்தில் அமைச்சர்களின் பங்களிப்பு கூடியிருக்கிறது. தவிர்க்க இயலாதபடி அவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயல்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

வர்த்தகம் மற்றும் வடிவமைத்தல் காரியங்களில் ஈடுபடும்போது அவர்களிடமுள்ள பரந்துபட்ட பகுத்தறிவுத் திறனைத் திசைமாற்றிப் பொதுநிதியைத் தவறாகப் பயன்படுத்திவிடாமலிருக்க கவனம் மேற்கொள்ளப்பட வேண்டும். நிர்வாக அமைப்புக்கு புதுவடிவம் தந்தாக வேண்டும். உயர்மட்ட அரசியல் அலுவலகங்களின் தேவைகள், வினியோகம் இவற்றுக்கு இடையே பொருத்தமற்ற நிலை இருக்கலாகாது. அது பற்றாக்குறையை அதிகரிக்க வழி செய்துவிடும்.

சமூகப் பொருளாதார இலக்குகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் போன்ற காரியங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய பங்காற்ற ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். இதன் மூலம் பலதரப்பட்ட தளங்களில் இருந்து பாராளுமன்றத் தலைவர்கள் வெளிப்பட முடியும். ஒரு சிலர் மட்டுமே அதிகார ஆதாயங்களை அனுபவித்துக்கொண்டு 'தன்னாட்சி' செய்யும் நிலை இதனால் குறையும்.

இது நம்பிக்கை தரும் தலைவர்கள் தோன்றுவதற்கான சூழ்நிலை ஏற்படவும் வழிவகுக்கும். இதன் மூலம் கிரிமினல் குற்றங்கள், சட்டவிரோதமான காரியங்களில் ஈடுபட்டிருந்த மனிதர்கள் அரசியலுக்குள் நுழைவதைத் தடைப்படுத்தவும் முடியும். பல்வேறு அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பைத் தோற்றுவிக்கும் பணியில் பாராளுமன்ற உறுப்பினர்களை ஈடுபடுத்த வேண்டும். அது சிறப்பான சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியளிக்கும்.

பல்வேறு அமைப்புகளும், அரசும் எதிரெதிர் கருத்துகளுடன் இருந்துகொண்டு பணியாற்ற முடியாது. கொள்கை மற்றும் அபிப்பிராய பேதங்கள் சரியான நேரத்தில் தீர்க்கப்படவேண்டும். திட்டப்பணிகள், முடிவெடுத்தல் போன்ற காரியங்களை உயர் மட்டத்தில் உள்ளவர்கள்

தீர்மானிக்கலாகாது. அதிகாரமளிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது திணறும்போது காபினெட் கமிட்டி, மந்திரிகளின் குழு போன்றவை ஒன்றுகூடிப் பேசி முடிவெடுக்க வேண்டும்.

பல்வேறு அமைப்புகளுக்கான தேர்தல்கள் நாடு தழுவிய முறையிலும்,மாநில வாரியாகவும், அமைப்புகளுக்குள் விரிவான வகையிலும் மேற்கொள்ளப்படவேண்டும். அவர்களின் பதவிக்காலம் குறுகிய காலத்துக்கானதாக இருக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களின் வலுவூட்டப் பட்ட பணித்திறன் நிர்வாக அமைப்பு நன்கு செயல்பட உதவி புரியும். நாடு அடிக்கடி நிர்வாக இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது.

நாம் அறிவாற்றல் நிறைந்த, ஒன்றுபட்ட நல்லிணக்கமான, செழிப்பான தேசத்தவராக இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தொலைநோக்குப் பார்வை பெற்றுத் திகழ வேண்டும். நல்ல தலைமைத்துவம் கொண்ட தலைவர்கள் உருவாகும் வண்ணம் பாராளுமன்றம் புத்துயிர் பெற்று எழ வேண்டும். அந்நியர் எல்லைப் பகுதியில் அத்துமீறல், படையெடுத்து உள்ளே நுழைதல் போன்றவை நடக்க முடியாத பாதுகாப்பான தேசமாகவும் நமது நாடு திகழ வேண்டும்.

2020-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வலிமையான, செழிப்பான வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற குறிக்கோளை மனதில் வைத்துக்கொண்டு பாராளுமன்றம் செயல்பட வேண்டும். இந்தியா 2020 என்ற குறிக்கோளை நிஜமாக்குவதற்கான சவால்களை எதிர்கொள்ளும் நேரத்தில் நிர்வாகம், சட்டச் செயல்பாடுகளில் புதுமைகள் புகுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படலாம்.

21-ம் நூற்றாண்டுக்கு ஏற்ற வகையில் நிர்வாக அமைப்பு, சட்டச் செயல்பாடுகள் இருக்கின்றனவா என்று மறு ஆய்வு

செய்யும்போது, தொழில்நுட்பப் புரட்சியால் விளைந்துள்ள பலன்கள், தேசிய, சர்வதேசத் தொடர்புகள், உலகமயமாக்கல், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் தொழில் போட்டிகள் போன்ற அம்சங்களையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த பரிந்துரைகளின்மீது விவாதங்கள் நடத்தவேண்டும். நமது அரசியலமைப்புச் சட்டம் முதல் தடவையாக உருப்பெற்றபோது நடந்ததுபோல ஒற்றுமையாகவும், நல்லிணக்கத்துடனும், தேசத்தின் நலனை மனதில் கொண்ட தலைவர்களுடன் இணைந்தும் காரியங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

பாராளுமன்றத்தின் 21-ம் நூற்றாண்டுக்கான இந்தியத் தொலைநோக்கானது உலகம் தழுவிய, நீண்ட கால அடிப்படையிலான திட்டமாக இருக்க வேண்டும். நடைமுறைப்படுத்துவதற்கான யுக்திகள் செயல்களுக்குப் பலமளிப்பதாக இருக்க வேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட உள்கட்டமைப்புகள் மற்றும் செயல் திட்டங்கள் இந்தியாவை 2020-க்குள் வளர்ச்சி பெறச் செய்வதற்கு அவசியம் தேவைப் படுகின்றன. தேசிய செழுமைக் குறியீட்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு நாம் செயல்பட வேண்டும். 2030-ஆம் ஆண்டிற்குள் எரிசக்தியில் தன்னிறைவு பெற்றுவிட வேண்டும்.

பாராளுமன்றத்தின் இந்த சிறந்த குறிக்கோள் மற்றும் அதனுடைய நடைமுறைப்படுத்தும் பணிகள் எல்லாம் கோடிக்கணக்கான நமது மக்களின் உதடுகளில் சந்தோஷப் புன்னகையை உருவாக்கும். ஒற்றுமையுடனும், நல்லிணக்கத் துடனும் தேசிய நலனுக்காகப் பாடுபட வேண்டிய முக்கியமான நேரம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அது நமது பாராளுமன்ற உறுப்பினர்களின் முக்கியமான பணி என்ற எனது கருத்தை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

ஊழல் ஒழிப்பு, நிர்வாக மேம்பாடு போன்ற பல விஷயங்கள் குறித்த தேசிய விழிப்புணர்வைப் பார்க்கும்போது, நமது பாராளுமன்றம் அவசரமாகவும், அறிவுபூர்வமாகவும் செயல்பட வேண்டிய அவசியம் உணரப்படுகிறது.

பின்னுரை

அணு ஆயுதத் துறையில் நான் செய்திருந்த பணிகள் சான்றோர்களின் கருத்துக்கள், கொள்கைகள், பண்புகளுக்கு எதிரானவை என்ற எண்ணம் என் மனதில் இருந்து கொண்டிருந்தது. ஆச்சார்யா மகாபிரக்யா என்ற துறவியைச் சந்திக்கும்வரை அந்த எண்ணம் மாறவில்லை. அவர் ஞானத்தின் ஊற்றுக்கண்.

அவருடன் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு ஆத்மாவையும் அவர் தூய்மைப்படுத்திவிடுவார். 1999-ஆம் ஆண்டு அக்டோபர் மாத நள்ளிரவில் ஆச்சார்யா தனது துறவிகளுடன் சேர்ந்து தேசம் மற்றும் நாட்டு மக்களின் நலனுக்காக மூன்று தடவைகள் பிரார்த்தனை நடத்தினார். அதன் பிறகு என்னைப் பார்த்துப் பேசினார். அப்போது அவர் சொன்ன சொற்கள் இன்றும் என் மனதில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

''கலாம்! நீங்களும் உங்கள் குழுவினரும் செய்த பணிகளுக்காக கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார். அவர் உங்களுக்காக ஒரு பெரிய குறிக்கோளை வைத்திருக்கிறார். அதனால்தான் இப்போது நீங்கள் என்னுடன் வந்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நமது தேசம் இன்று அணு ஆயுத வல்லமை பெற்ற நாடாக மாறிவிட்டதை நான் அறிவேன். ஆனால் நீங்களும், உங்கள் குழுவினரும் செய்து முடித்த காரியங்களை விட உங்களது குறிக்கோள் மிகவும் பெரியதாகும். சொல்லப்போனால், மனிதர்கள் இதுவரை செய்து முடித்துள்ள காரியங்கள் அனைத்தையும் விடப் பெரியதாகும்.

அணு ஆயுதங்கள் எண்ணிக்கை நுற்றுக்கணக்கில் ஆயிரக் கணக்கில் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. என்னிடம் உள்ள தெய்வீக ஆசீர்வாதங்களை உங்களுக்கு அளிக்கிறேன். இந்த அணு ஆயுதங்கள் எல்லாம் பயனற்று, முக்கியத்துவம் இழந்து, அரசியல் சார்ந்த தொடர்புகளில் இருந்து விடுபட்டு போகவும், அமைதி திகழும் ஒரு சமூகத்தை உருவாக்கவும் நீங்கள் பாடுபட வேண்டும்!

ஆச்சார்யாஜி தனது அருளுரையை நிறைவு செய்தபோது மண்டபத்தில் அமைதி நிலவியது. இந்த அருளுரையில் இயற்கைச் சக்திகள் எல்லாம் ஒன்று கலந்து விட்டதுபோல் எனக்குத் தோன்றியது. வாழ்வில் முதல் முறையாக எனக்கு உடல் சிலிர்த்தது. அன்றிலிருந்து ஆச்சார்யாஜியின் ஆசீர்வாதச் செய்தியே எனது வாழ்வின் வழிகாட்டியாக மாறிவிட்டது. அதைச் செயல்படுத்திக் காட்டுவதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டேன். அது என் வாழ்க்கைக்குப் புது அர்த்தம் தந்திருக்கிறது.

இளம் பெண் ஒருத்தி உதவி கேட்டு எழுதிய கடிதத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் கூறப்பட்டிருந்த சம்பவம் வியப்பும், மகிழ்வும் தரும் புதிய திருப்பத்தை அடைந்தது.

நிதிநிறுவன உரிமையாளர் ஒருவரை அப்பெண்ணுக்கு உதவக்கூடிய நபராக நாங்கள் தேர்வு செய்திருந்தோம். அவர் அந்தக் குடும்பத்துடன் தொடர்கொண்டார். அவர்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணச் சேர்ந்து உழைத்தார். அவளுக்குத் திருமணம் நடந்து பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்ந்தன. அப்பெண்ணின் ஒரு சில கனவுகளை யாவது நிறைவு செய்யும் வகையில் எங்கள் செயல்கள் உதவிகரமாக அமைந்திருந்தன என்று அறிந்து நாங்கள் மகிழ்ச்சி கொண்டோம்.

பின்னிணைப்பு 1

நேர்காணல்

2006 ஆம் ஆண்டு நான் பல்வேறு மாநிலங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்துவிட்டு மிஜோராம் சென்றிருந்தபோது NeTV சார்பில் மனோரஞ்சன் சிங் என்னுடன் நேர்காணல் நடத்தினார். பல்வேறு விஷயங்கள் குறித்த விளக்கங்கள், செயல்பாடுகள் பற்றி நான் தெரிவித்த கருத்துகள் அடங்கிய நேர்காணலை இப்போது பகிர்ந்து கொள்கிறேன்.

1. மாநிலங்களின் வளர்ச்சிக்காக நீங்கள் உருவாக்கிய விரிவான திட்டங்களை அந்தந்த மாநில அரசுகள் அப்படியே செயல் படுத்துகின்றனவா என்பதையும் கண்காணிக்கிறீர்களா? அதற்கென ஏதேனும் கண்காணிப்பு அமைப்பு உள்ளதா?

மாநிலங்களை நான் சுற்றிப் பார்த்தபோது,கிடைத்த அனுபவங்கள், மாநில அரசு, திட்டக் கமிஷன், மத்திய அமைச்சகங்கள் போன்றவை அளித்த தகவல்கள், மற்றும் சுதந்ததிரமான மதிப்பீடுகள் அடிப்படையில் பயணப் பாதை வரைபடத்தை உருவாக்கித் தந்திருக்கிறேன். எனது குழு பல நாட்கள் கண் விழித்திருந்து இந்தத் திட்டங்களை உருவாக்கியது. அரசியல் கட்சிகளை விட மாநிலத்தின் முன்னேற்றமே பிரதான விஷயம் என்று நான் வலியுறுத்தியுள்ளேன்.

மேலும் திட்டத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர்களுக்கு விவாதங்களில் கலந்து கொள்ளவும் அனுமதி தந்தேன். நான்

திட்டத்தை அளித்த பிறகு பல மாநிலங்களின் சட்டமன்றங்கள் அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுபற்றி முழு மூச்சுடன் விவாதங்கள் நடத்தின. பின்னர் நான் அந்த மாநிலங்களுக்குச் சென்ற சமயங்களில் அங்குள்ள பல்கலைக்கழகங்கள், வர்த்தகக் கழகங்கள், வியாபார மற்றும் சேவை அமைப்புகளில் உரையாற்றினேன். மாநிலத்தின் திட்டங்களுக்கும், அமைப்புகளுக்கும் இடையே அமைக்கப்பட்டுள்ள தொடர்புகள் பற்றியும் விளக்கினேன்.

உதாரணமாக கர்நாடகா, மத்தியப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்கள் திட்டங்களுடன் கூடிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டன. இப்போது திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைகள் நடந்து வருகின்றன. கேரளாவில் ஊடகங்கள் முனைப்புடன் செயல்பட்டு அரசுடனும் அறிவுஜீவிகள், பொதுநலன் விரும்பிகள் பலருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தின. காரியங்களை நடைமுறைப்படுத்த ஒரு செயல்திட்டத்தையும் அவை அரசிடம் அளித்தன. இவ்வகையில் ஊடகமும் மாநில அரசுடன் இணைந்த ஒரு பங்குதாரராக மாறிவிட்டது.

வடகிழக்கு மாநிலங்களில் சிக்கிம், மிஜோராம், அருணாச்சல் பிரதேசம், மேகாலயா போன்றவற்றின் வளர்ச்சிக்கான திட்டங்களை வழங்கினேன். இந்த மாநிலங்கள் நீர்மின்சக்தி, நீர்வள அமைப்புகளை இணைத்தல், விவசாய உற்பத்திப் பொருட்கள் சேதப்படுவதைத் தவிர்த்தல் போன்ற விஷயங்களில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

2. உங்கள் பயணப் பாதை வரைபடம் நாட்டின் ஆண்டு வளர்ச்சி, மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களுடன் சேர்ந்துள்ளதா? அவை இரண்டுக்கும் இடையே ஏதேனும் அபிப்பிராய பேதம் காணப்படுகிறதா?

நாங்கள் பயணப்பாதை வரைபடம் தயாரித்தபோது அமைச்சகங்கள், மாநில அரசுகள் மற்றும் திட்டக் கமிஷனிடம்

இருந்தும் விரிவான தகவல்கள் கேட்டுப்பெற்றோம். திட்டக்கமிஷனின் எட்டு அம்சத் திட்டத்தின் அடிப்படையில் நாங்கள் எங்களது முன்னேற்றக் குறிகாட்டிகளை உருவாக்கினோம். குறிகாட்டிகளின் வழியலகுகள் (Parameters) மேம்படுத்தப்பட வேண்டும் என்பது எங்களது குறிக்கோளாக இருந்தது. இலக்குகளை எட்டுவதற்கேற்ற வகையில் அனைத்து வளர்ச்சிப் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்று விரும்பினோம்.

நாங்கள் தயாரித்த திட்டங்கள் மாநிலங்களின் சிறப்பம்சங்களை அடிப்படையாகக் கொண்டு உருவானவை. அவற்றைத் திட்டக் கமிஷன் எங்களுக்கு வழங்கி உதவியது. 2015-ஆண்டுக்குள் மாநிலங்களை வளர்ச்சியுறச் செய்துவிட வேண்டும் என்ற நீண்ட காலத்திட்டத்தின் அடிப்படையில் செயல்பட்டோம். இவ்வாறு வளர்ச்சியுறும் மாநிலங்கள் ஒன்று சேர்ந்து 2020-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை முன்னேற்றம் பெற்ற நாடாக மாற்றியமைத்துவிடும்.

3. உங்களது பரந்துபட்ட அறிவாற்றல், தொலை நோக்குணர்வு, விஞ்ஞானத் தொழில்நுட்பப் பயன் பாடுகளில் உங்களுக்குள்ள அனுபவம் போன்றவை இந்தப் பயணப்பாதை வரைபடத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்துள்ளன. ஆனால் உங்களது இந்த தகுதிகள் எல்லாம் இப்பதவிக்குப் போட்டியிடப் போகும் நபர்களுக்குச் சவாலான ஒன்றாக இருக்க வில்லையே?

எந்த ஒரு நல்ல அமைப்பும் அதிலிருப்பவர்களை நம்பிக் கிடப்பதில்லை. அது தன்னைத் தற்காத்துக்கொள்ளும் திறன் படைத்திருக்கிறது. மக்களிடம் பொருளாதார முன்னேற்றம் பற்றிய பொதுவான விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதைக் கடந்த நான்கு ஆண்டு அனுபவத்தில் தெரிந்துகொண்டேன். அதில் நல்ல வெற்றிகளும் கிடைத்திருக்கின்றன. அதன்

காரணமாகவே நிறைய மாநிலச் சட்டமன்றங்கள் பொருளாதாரத் திட்டங்கள் பற்றிப் பேசுவதற்கு எனக்கு வாய்பளித்ததாக நான் கருதுகிறேன்.

நான் ஓரிரண்டு சட்ட மன்றங்களில் இதை ஆரம்பித்ததும், மற்ற மாநில சட்டமன்றங்களும் எனக்கு அழைப்பு அனுப்ப ஆரம்பித்தன. இந்திய மக்களும், இந்திய அரசியல் அமைப்பும் குறிக்கோளுடன் கூடிய தேச முன்னேற்றத்திற்கான வளர்ச்சித் திட்டங்களின் மீது நம்பிக்கை வைக்கத் தொடங்கி விட்டதை என்னால் கண்டுணர முடிகிறது. அதற்கு சிறந்த குறிக் கோளுடன் கூடிய செயல்திட்டமும், பயணப்பாதையும் தேவைப்படுகின்றன.

மாநிலங்களுக்கான திட்டங்களை உருவாக்கி அளிக்கும் போது அதற்கான ஆவணங்களையும் தயாரிக்கக்கூடிய தொழில்முறை வல்லுனர்கள் ஜனாதிபதியின் அலுவலகத்தில் இருக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும். ஜனாதிபதி அலுவலகம் தொடங்கியுள்ள புதிய முயற்சி என்று நீங்கள் சரியாகவே கூறியிருக்கிறீர்கள். இது சிறந்த பயனுள்ள தேசியத் திட்டமாகும். குடிமக்களின் தேவைகளுடன் ஜனாதிபதி எப்போதும் தொடர்பு வைத்துக்கொள்ள இது வாய்ப்பையும் ஏற்படுத்தித்தருகிறது.

4. அரசியலமைப்புச் சட்டம் ஜனாதிபதியின் அதிகாரங்கள், அரசாங்கத்தின் பொறுப்புகள் போன்றவற்றை வரையறைசெய்து வைத்திருந்தாலும், கடந்த நான்கு ஆண்டுகளில் பல இடங்களில் அவை ஒன்றின்மீது ஒன்று ஆதிக்கம் செய்ய முனைந்ததும், சச்சரவுகள் தோன்றியதும், பிரதமமந்திரிக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான உறவில் தெளிவற்ற நிலை ஏற்பட்டது ஏன்?

நிர்வாக அமைப்பு மிகவும் நன்றாகவும், நீக்குப்போக்குக் கொண்டதாகவும் அமைந்திருக்கிறது. சேர்ந்து

பணிபுரிவதற்கான வாய்ப்பை அது நிறையவே வழங்கியுள்ளது. எந்த ஒரு தனி மனிதனையும் விட தேசம் பிரதானமானது என்ற கருத்துடன் காரியங்களைச் செயல்படுத்தும்போது உறவுச்சிக்கல்கள் எதுவும் ஏற்படாது. ஜனாதிபதியும், பிரதமமந்திரியும் ஒன்றிணைந்து பணியாற்றியதை நடந்து முடிந்த இரண்டு ஆளுநர்களின் மாநாடுகள் தெளிவாக உணர்த்துகின்றன.

5. ஆதாயம் தரும் பதவிகள் குறித்த சட்ட விஷயத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது வெளிப்படையாகவே தெரிந்தது. நீங்கள் நிராகரித்த சட்ட முன்வரைவு மீண்டும் உங்களிடமே திருப்பியனுப்பட்டது. உங்கள் சரியான தீர்ப்பைக் கருத்தில் கொள்ளாமல் அதில் கையெழுத்திடு மாறு உங்களை வற்புறுத்தியபோது மனநிலை எப்படியிருந்தது?

ஆதாயம் தரும் பதவிகள் பற்றிய சட்டத்துடன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் தெளிவானவை. நாங்கள் எடுத்த முடிவு அரசியலமைப்புச் சட்டத்தினால் எழுத்துபூர்வமாகவும், மனோதர்மப்படியும் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகும். அடுத்த கட்ட நடவடிக்கையாக இருசபைகளும் பாராளுமன்ற துணைக்குழு ஒன்றை அமைக்க முடிவு எடுத்த விஷயத்திலும் மக்களின் பொது அபிப்பிராயமும், அரசியல்வாதிகளின் கருத்தும் எங்களைப் பழிவாங்கும் விதமாகவே இருந்தன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதாயம் தரும் பதவிகள் குறித்துத் தெளிவான வழிகாட்டி நெறிமுறைகளைப் பாராளுமன்றத் துணைக்குழு உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்த பின்புதான் நான் அந்தச் சட்டவரைவில் கையொப்பமிட்டேன்.

6. உங்களுக்குப் பிடித்தமான துறை விஞ்ஞானமும், தொழில்நுட்பமுமாகும். விஞ்ஞான ஆய்வுகளில் இளைஞர்கள் இறங்கி வாய்ப்புகளைத் தேடிக்கொள்ள

வேண்டும் என்று உத்வேகமூட்டுவதே உங்கள் பிரச்சாரப் பணியாக உள்ளது. அதற்காக அரசு என்ன விதமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

a) ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி முறைகளை முழுமையாகக் காலத்துக்கேற்ற முறையில் சீரமைப்புச் செய்து, மாணவர்கள் மத்தியில் படைப்பாற்றல் உருவாகும் வகையில் அவற்றை மேம்படுத்த வேண்டும். பாராளுமன்றம் நிறை வேற்றிய கல்வி உரிமை முன் வரைவு (Bill) குறித்த விவாதங்கள் மாநில சட்டசபைகளில் நடந்து கொண்டிருக் கின்றன. அந்தக் கல்வி உரிமைச் சட்டம் மூலம் நாட்டிலுள்ள 6 வயது முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கட்டாயமாக்கப்படுவதுடன், அது இலவசமாகவும் கிடைக்க வழி பிறக்கும்.

b) ஆரம்பக் கல்வி முறையில் பெரிய அளவில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும். ஆரம்பக் கல்வி குறித்த நிபுணர்குழு படைப்பாற்றல் உள்ள பாடத்திட்டம், படைப்பாற்றல் வகுப்பறை போன்றவற்றை உருவாக்க வேண்டும். அத்துடன் படைப்பாற்றல் திறன் படைத்த பயிற்சிபெற்ற ஆசிரியர் களையும் பணியில் அமர்த்தவேண்டும்.

c) 2020-ல் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற குறிக்கோளை நிறைவேற்ற விஞ்ஞானத்தையும், தொழில்நுட்பத்தையும் பயன்படுத்த வேண்டும்.

d) பல்கலைக்கழகப் பாடத்திட்டமானது ஆராய்ச்சி, தகவல்கள் தேடியடையும் திறன், படைப்பாற்றல், புதுமை படைத்தல், உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், தொழில்முனைவுத்திறன், இளைஞர்களை நேர்மையான தலைவர்களாக உருவாக்குதல் போன்ற விஷயங்களைப் போதிக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும். இது இந்தியா 2020 என்ற குறிக்கோளை அடைய அவர்களின் பங்களிப்பை வழங்க உதவிகரமாக அமையும்.

e) விஞ்ஞானத் துறையில் ஆராய்ச்சிகள் செய்வதையே தங்கள் முழுநேரத் தொழிலாகக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு

ஆண்டும் 1000 இளம் மாணவர்களுக்கு அதற்கான சிறப்பு வழிவகைகள் உருவாக்கித் தரவேண்டும். அவர்களுக்கு விஞ்ஞானப் பிரிவில் வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

7. மருத்துவம், பொறியியல், நிர்வாகவியல் பாடங்கள் கற்றுக் கொடுக்கும் கல்லூரிகளில் மாணவர்களின் விண்ணப்பங்கள் குவிகின்றன. அடிப்படை விஞ்ஞானப் பாடங்கள் போதிக்கும் பல கல்லூரிகளில் மாணவர்களே இல்லை. அடிப்படை விஞ்ஞானப் படிப்பு மற்றும் ஆராய்ச்சிகளில் சேர்வதை ஊக்கப்படுத்தும் வகையில் கொள்கை மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமா?

அரசாங்கம் விஞ்ஞானம், ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான நிறுவனத்தை இரண்டு மாநிலங்களில் ஆரம்பித்திருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். உலக மனித வளப்பிரிவு ஒன்றை உருவாக்கி உழைக்க வேண்டும். அது இளைஞர்களுக்கும் விஞ்ஞான உயர் கல்வி, தொழில்நுட்பம், ஆராய்ச்சிப்பணிகளில் உள்ளவர்களுக்கும் உலகளாவிய வேலை தேடும் போட்டிகளில் ஈடுகொடுக்க உதவி செய்யவேண்டும். உயர்கல்வி கற்றுப் பயன்பெறும் மாணவர்கள் எண்ணிக்கை தற்போது 10 சதவீதமாக இருப்பது 2050-ஆம் ஆண்டிற்குள் 30 சதவீதமாக மாறும். மீதமுள்ள 70 சதவீதம் பேர் உயர் பணித்திறன் பெற்றவர்களாக மாறி தொழில்துறை, சேவைப் பிரிவுகள், விவசாயம் போன்றவற்றில் ஈடுபடுவார்கள்.

8. IISC யில் நூறு கோடி ரூபாய் அரசு முதலீடு செய்வது என்ற பெருமைப்படத்தக்க விஷயம் மூலம் உலகத்தரத்திலான ஆராய்ச்சி வளர்ச்சி வசதிகள் கிடைக்கும் என்கிறார்கள். ஆனால் கல்விநிறுவனங்கள் அதில் சொற்ப அளவிலேயே சாதிக்க முடியும் என்று பல விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். MIT யும் ஸ்டான் ஃபோர்டும் தேவைக்கும் பல மடங்கு அதிகமாகவே

ஆதாரவளங்கள் பெற்றுள்ளன. ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்த மாணவர்கள் மேற்கொண்டு அத்துறைகளில் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதில்லை என்று IISC கூறுகிறது.

இது அரசின் முதல்கட்ட முயற்சிகளில் ஒன்றாகும். வேறு பல பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிலும் இதுபோன்ற திட்டங்களை அரசு துவங்க இருக்கிறது. கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி பல்வேறு தளங்களில் இருந்தும் கிடைக்கும். நிறைய இளைஞர்கள் விஞ்ஞான ஆய்வுப் பணிகளில் இறங்குவார்கள் என்பதை விஞ்ஞானத்துறை சார்ந்தவன் என்ற முறையில் உறுதியாகக் கூறுகிறேன்.

9. இந்தியா நானோ தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம், கார்பன் காம்போசிட், உலோகவியல் போன்ற துறைகளில் உலகத்தரமான நவீன ஆய்வுக் கண்டுபிடிப்புகள் செய்திருக்கிறது. ஆனால் கடந்த அறுபது ஆண்டுகளாக இந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்ட எந்த ஆய்வுக்கும் நமக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை. நாம் நிஜமாகவே உலகத்தரமுள்ள ஆய்வுகள் செய்கிறோமா அல்லது வேறு காரணங்களுக்காக நமக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையா? உங்கள் கருத்து என்ன?

பெரும்பாலான நோபல் பரிசுகள் அடிப்படை ஆய்வுகளுக்காகவே கொடுக்கப்படுகின்றன. தற்போது அடிப்படை ஆய்வுகளுக்காக நிறையப்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளில் விரிவான ஆய்வுகள் நடந்து வருகின்றன. மாணவர்களிடம் படைப்பாற்றலை அதிகரிக்கச்செய்து, அவர்களை விஞ்ஞான ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட வைக்க வேண்டும். அவர்கள் கவனம் பல திசைகளில் சிதறுவதைத் தடுத்து குறிப்பிட்ட ஒன்றின் மீது பாய்ச்சுமாறு செய்யவேண்டும். நானோ தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம், தகவல்தொழில்நுட்பம் போன்ற வற்றைப் பயன்படுத்தும் துறைகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அறிவுரை கூற விரும்புகிறேன்.

இந்தியாவுக்குச் சாதிக்க நிறைய வாய்ப்புகள் உள்ளன. பல்கலைக்கழகங்களும், உயர் தொழில்நுட்ப நிறுவனங்களும் சிறப்புத் துறைகளில் ஆய்வு வசதியும், அதற்கான நிதி வசதிகளும் பெறுவதற்கு ஆவன செய்யவேண்டும். பல்கலைக்கழகத்தில் நிறைய ஆராய்ச்சிப் பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் இருந்தால் அங்கே ஆய்வு மாணவர்கள் அதிகமாக வருவார்கள் அதன் மூலம் புதிய ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளும், தொழில்நுட்ப மேம்பாடும் ஏற்படும். இந்த ஆய்வுகளில் சில பரிசு பெறவும் வழிவகுக்கலாம். ஆராய்ச்சிக்கு உகந்த சூழல் ஏற்படுவதற்கு விஞ்ஞான தாராளமனோபாவம் எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றிய ஒரு அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

விஞ்ஞான தாராளமனோபாவம்: புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானியும், இந்தியாவின் முதல் பசுமைப்புரட்சியின் பங்குதாரரும், நோபல் பரிசு பெற்றவருமான பேராசிரியர். நார்மன் ஈஃபோர்லாக் அவர்களுக்கு புதுடெல்லி விஞ்ஞான் பவனில் 2005-ஆம் ஆண்டு மார்ச் 15-ம் தேதி எம்.எஸ். சுவாமிநாதன் விருது வழங்கப்பட்டது. 91 வயதான அவரை அங்கிருந்த எல்லோரும் பாராட்டு மழையில் நனைத்தார்கள்.

அவர் பேசவேண்டிய தருணம் வந்ததும் எழுந்து நின்றார். இந்தியாவின் விவசாய விஞ்ஞானம், மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடு பற்றிப் புகழ்ந்து பாராட்டினார். அரசியல் முன்னோடி சி.சுப்பிரமணியம் மற்றும் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் போன்றவர்கள் இந்தியாவின் முதல் பசுமைப்புரட்சிக்கு ஆதாரமாக இருந்தார்கள் என்று கூறினார். மேலும் அவர் டாக்டர். வர்கீஸ் குரியனை இந்தியாவின் வெண்மைப்புரட்சிக்குக் காரணகர்த்தா என்று புகழ்ந்தார். அதன் பிறகு ஒரு ஆச்சரியம் வெளிப்பட்டது.

விழாவில் கலந்து கொண்டவர்களின் கூட்டத்தில் மூன்று, ஐந்து, எட்டாவது வரிசைகளில் விஞ்ஞானிகள்

உட்கார்ந்திருந்தனர். அவர்கள் பக்கம் ஃபோர்லாக் திரும்பிப் பார்த்தார். கோதுமைக்கான சிறப்பு விஞ்ஞானி டாக்டர். ராஜாராம், மக்காச்சோளச் சிறப்பு விஞ்ஞானி டாக்டர். எஸ்.கே.வசேல், விதைகளுக்கான சிறப்பு விஞ்ஞானி டாக்டர் பி.ஆர்.பர்வேல் ஆகியோரை அவர் சுட்டிக்காட்டினார். இவர்கள் எல்லோரும் இந்திய, மற்றும் ஆசிய விவசாய விஞ்ஞான வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்தவர்கள் என்றார்.

அவர்களை விழாவில் இருந்தவர்களுக்கு அறிமுகம் செய்தபோது எல்லோரும் எழுந்து நின்று மரியாதை அளித்தனர். இதுபோன்ற ஒரு காட்சியை நான் நாட்டில் முன்னெப்போதும் கண்டதில்லை. டாக்டர்.நார்மன் ஃபோர்லாகின் இந்த செயலையே நான் விஞ்ஞான தாராள மனோபாவம் என்று குறிப்பிட்டேன்.

நண்பர்களே! நீங்கள் வாழ்வில் பெரிய சாதனைகள் நிகழ்த்த விரும்பினால், உங்களுக்கு விஞ்ஞான தாராளமனோபாவம் இருக்க வேண்டும். உயர்ந்த மனங்களும், சிறந்த இதயங்களும் ஒன்று கலந்து விடுகின்றன என்பது எனது அனுபவமாகும். இந்த விஞ்ஞான தாராளமனோபாவம் விஞ்ஞான சமூகத்தினரை ஊக்குவித்து குழுவின் வேகத்தை வளரச் செய்யும். பல்வேறு துறைகளில் புதுமைகளும், கண்டுபிடிப்புகளும் உருவாக வழி வகுக்கும்.

10. பல்வேறு நட்பு நாடுகளுக்கு ஜனாதிபதி பயணம் செல்வது ஏதாவது பலமான காரணங்களின் அடிப்படையிலா அல்லது சாதாரண சம்பிரதாயத்தை ஒட்டியா?

எதை இந்தியா சாதிக்க வேண்டும் என்று கருதுகிறதோ அதை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே இந்தப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நான் பதினான்கு நாடுகளுக்குச் சென்று அவற்றின் தேசியப் பேரவைகளிலும், பாராளு

மன்றங்களிலும் உரையாற்றியிருக்கிறேன். இந்த பயணங்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ளவும், பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்பு விஷயங்களில் புதிய பாதைகள் ஏற்படவும் காரணமாக அமைந்தன. பயணத்தின் மூலம் இரண்டு நாடுகளுக்கும் நீண்ட காலப் பயன்கள் கிடைத்தன.

உதாரணமாக நான் ஒருங்கிணைந்த ஆப்பிரிக்கப் பாராளு மன்றத்தில் உரையாற்றியதைச் சொல்லலாம். அப்போது நான் ஒருங்கிணைந்த ஆப்பிரிக்க மின்-தொடரிணைப்புப் பணிகளை 50 மில்லியன் டாலர்கள் ஆரம்ப செலவு மதிப்பீட்டில் தொடங்கி வைத்தேன். அந்த திட்டப்பணிகள் சிறப்பான முறையில் வளர்ச்சியடைந்து வருகின்றன. அதன் மூலம் இந்தியாவுக்கும், ஆப்பிரிக்க யூனியனுக்கும் இடையில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மேம்பட்டு இருநாடுகளும் பயன் பெறுகின்றன என்று அறியும்போது நீங்கள் நிச்சயம் மகிழ்ச்சி கொள்வீர்கள். இது ஒரு பெரிய சாதனை என்று நான் கருதுகிறேன்.

நான் சூடானுக்குப் பயணம் செய்தபோது ONGC குழாய் திட்டத்திற்கான வாய்ப்புகள் தென்பட்டன. இன்று அந்த திட்டம் ONGC விதேஷ் நிறுவனம் மூலம் நிறைவேற்றப்பட்டு இரண்டு நாடுகளும் பலன் பெறுகின்றன.

நமது நாட்டை முன் மாதிரியாகக் கொண்டு பிலிப்பைன்ஸும் காட்டாமணக்கு பயிரிட முன் வந்தது. அவர்களது திட்டங்களில் பணியாற்ற இந்திய நிபுணர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள்., அது மட்டுமின்றி இந்தியாவுக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையே மருந்துப் பொருள் உற்பத்தித் துறையில் ஒத்துழைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் மூலம் இருநாட்டு மக்களுக்கும் கட்டுப்படியான விலையில் மருந்துகள் பெறுகிறார்கள். NASSCOM அமைப்பு உருவாக்கப்பட்டு பிலிப்பைன்ஸில் IT, ITES, BPO சேவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நல்லெண்ண அடிப்படையில் தான்சானியாவைச் சேர்ந்த இதய நோயாளிகள், குறிப்பாக குழந்தைகள் பலருக்கு, மருத்துவ சேவை அளிக்க ஒப்புக்கொண்டோம். அவர்கள் அனைவரும் இந்தியா அழைத்து வரப்பட்டனர். சிகிச்சை அளித்து அவர்கள் நாட்டிற்குத் திருப்பி அனுப்பி வைத்தோம் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன். பல தான்சானிய டாக்டர்களுக்கு இதயநோய் சிகிச்சைக்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

சிங்கப்பூர், கொரியா போன்ற நாடுகளுக்கு நான் சென்றபோது நான் உலக அறிவு மேடை என்ற அமைப்பை உருவாக்குவது பற்றிப் பேசினேன். அதில் பங்கு கொள்ளும் நாடுகளின் பனிரெண்டு துறைகளில் தேவைகள், அதிநவீன பொருட்கள் தயாரிப்பு, வடிவமைப்பு, மேம்பாடு போன்றவற்றை மனதில் கொண்டு திட்டங்கள் வகுக்கப்படும் என்றேன். இவ்வாறு தயாரிக்கப்படும் பொருட்களை சர்வதேச சந்தைகளில் விற்க முடியும். அந்த நாடுகள் உலக அறிவு மேடைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது பற்றித் தீவிரமாக யோசித்து வருகின்றன.

11. நீங்கள் உங்கள் பதவிக்காலத்தின் பெரும்பகுதியை நிறைவு செய்துவிட்டீர்கள். நீங்கள் துவக்கி வைத்த திட்டங்களில் PURA போல, உங்களுக்கு மிகவும் திருப்தி அளித்தவை பற்றிக் குறிப்பிட முடியுமா?

எனக்குத் திருப்தியளிக்கும் வகையில் அமைந்த திட்டங்கள் சிலவற்றை இப்போது தெரிவிக்கிறேன்.

கிராம முன்னேற்றம் : கிராம வளர்ச்சி அமைச்சகம் நாடு முழுவதும் 33 PURA திட்டத் தொகுப்புகளை உருவாக்க முடிவு செய்தது. தனியார் கல்வி நிறுவனங்களும், சமூக சேவை அமைப்புகளும் PURA திட்டத்தை கிராமத்தொகுப்புகளுக்கு எடுத்துச் சென்றன.

எரிசக்தி : பயோடீசல் தயாரிப்புக்காக ஐந்து மாநிலங்கள் காட்டாமணக்கு பயிரிடும் பணியில் இறங்கின. எரிசக்திக் கொள்கை ஒன்று அறிவிக்கப்பட்டது.

அறிவுத்தொகுப்பு : தேசிய அறிவுக் குழு (NKC) நாடெங்கும் உள்ள சுமார் 5000 கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளை 100 Mbps இணைப்பு மூலம் ஒன்று சேர்க்கத் திட்டமிட்டுள்ளது.

வெர்ச்சுவல் பல்கலைக்கழகம் : 150 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மூன்று பல்கலைக்கழகங்கள் வெர்ச்சுவல் பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளன. வெர்ச்சுவல் வகுப்பறைகளில் இருந்த மாணவர்களுடன் பேசினேன். பல்கலைக்கழகத்தைத் தொடக்கி வைத்தேன்.

கிராம அறிவு மையம் : 1 லட்சம் மக்கள் சேவை மையங்கள் தகவல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் மூலம் தொடங்கி வைக்கப்பட்டன. மதிப்புக்கூட்டுச் சேவைகள் கிராம மக்களுக்கு அளிக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

மின் நிர்வாகம் :

G2G மற்றும் G2C அமைப்புகளுக்கு இடையே மின் நிர்வாகத் தொகுப்பை அமைத்தல், தேசிய அடையாள அட்டை வழங்குதல் போன்ற பணிகளின் துவக்கம் நல்ல வரவேற்பு பெற்றன. G2C மின் நிர்வாகத்திற்கான 23,000 கோடி ரூபாய்கள் ஒதுக்குவதாக அரசு அறிவித்தது. அதைக்கொண்டு SWAN (State Wide Area Network) அமைப்பு உருவாக்கப்படும்.

12. உங்கள் ஜனாதிபதி பதவிக்காலம் முடிந்த பிறகு உங்கள் அறிவு, ஆற்றல், அர்ப்பணிப்புணர்வு போன்ற வற்றை உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு திட்டத்தில் செலுத்துவீர்களா? ஆராய்ச்சி மாணவர்களுக்குப் போதிப்பது, ஆய்வுகளுக்கு வழி காட்டுவது போன்ற

வற்றை விரும்புகிறீர்களா? அண்ணா பல்கலைக்கழகத்தில் நீங்கள் பணியாற்றியது பற்றிக் கூறமுடியுமா?

2020-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றிவிட வேண்டும் என்ற எனது குறிக்கோளுக்காக நான் தொடர்ந்து உழைப்பேன். கல்வி கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளையும் மேற்கொள்வேன். மாணவர்கள் மற்றும் இளைஞர்களுடனான எனது உறவு எப்போதும் நீடித்திருக்கும்.

நாட்டின் வடகிழக்குப் பகுதிகளுக்காக வருடம் தோறும் ஒரு குறிப்பிட்ட காலத்தை ஒதுக்கி உழைக்க விரும்புகிறேன். வளர்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதில் கவனம் செலுத்தவேண்டும். காலக்கெடுவுடன் அமைந்த திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அங்கே உள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைவதுடன், அப்பகுதி இளைஞர்களுக்கு சிறப்பான வேலை வாய்ப்புகள் கிடைக்கவும் வழி பிறக்கும்.

13, உயர்ந்த பதவி வகித்த உங்களது நாட்களில் நீங்கள் சந்தித்த மிகப்பெரிய ஏமாற்றம் என்று எதைக் குறிப்பிட விரும்புகிறீர்கள்?

தேசத்தின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்று உறுதியான நம்பிக்கையுடன் இருக்கிறேன். வளர்ச்சியின் ஏறுமுகம் பற்றி மட்டுமே நான் யோசிக்கிறேன். தேசத்திலுள்ள அனைத்து நலன் விரும்பிகளும் ஒருங்கிணைந்து இளைஞர்களின் திறனை மேம்படுத்த வேண்டும். அதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டால் இந்தியா 2020 என்ற குறிக்கோளை மிக விரைவில் எட்டிவிடமுடியும். நம்மைவிட இந்த நாடு உயர்ந்தது என்ற எண்ணத்துடன் எல்லோரும் பாடுபட முன்வரவேண்டும். நாட்டிலுள்ள 540 மில்லியன் இளைஞர்கள் மீது நான் நிறையவே நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

14. நீங்கள் வடகிழக்கு மாநிலங்களுக்குப் பயணம் செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கான பயண பாதை வரைபடம் தயாரித்து அளித்திருக்கிறீர்கள். மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கலகக்காரர்கள் தலை தூக்கியுள்ள சூழ்நிலையில் உங்கள் ஆலோசனைகள் போதுமானவைகளாக இருக்காது என்று யோசித்த துண்டா? கலகச்சூழ்நிலை முதலீடுகள் உள்ளே வருவதைத் தடுத்துவிடுகிறது. அந்த முதலீட்டுப் பற்றாக்குறை இளைஞர்களுக்கு அதிருப்தியைத் தருகிறது. அது கலகக்காரர்களுக்குத் தீனியாக மாறுகிறது. முன்னேற்றம் தடைப்படுகிறது. அல்லலுறும் வடகிழக்கு மக்களின் துயரம் தீரும் என்று நம்புகிறீர்களா?

வடகிழக்கு மாநிலங்கள் நமக்கு நிறைய வாய்ப்புகளையும், சவால்களையும் சேர்த்தே வழங்கியுள்ளன. கலகம் இளைஞர்களின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல என்பதை மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கண்டறிந்துள்ளேன். முனைப்பான வளர்ச்சி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் முன்னேற்றத்திற்கு எதிராக வரும் எந்த சவால்களையும் எதிர்கொள்ளவும் தியாகங்கள் செய்யவும் மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

எனவே, இளைஞர்களுக்கு வாழ்வுக்கு வலுவூட்டும் முன்னேற்றத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துங்கள் என்று நான் மத்திய மாநில அரசுகளுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கலகக்காரர்கள், தீவிரவாதிகள், வன்முறையாளர்கள் பற்றியெல்லாம் கவலைப்படாமல் இளைஞர்களின் திறமை, அறிவாற்றலுக்கேற்ற வகையில் வேலை வாய்ப்புகள் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

15. நாட்டின் கிழக்குப் பகுதிகளிலிருந்து வடகிழக்குப் பகுதிகளுக்கு வியாபாரம், தகவல் தொடர்பு, சாலை மற்றும் ரயில் பாதைத் தொடர்புகளைத் திறந்து வைப்பது பற்றி உங்கள் கருத்து என்ன? இது அவர்களின்

பொருளாதாரத்தில் தாக்கம் ஏற்படுத்தி பணி மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குமா?

பொருளாதார முன்னேற்றத்திற்கு இது அவசியமான ஒன்றாகும். அரசியல் அமைப்புகள் விரைவில் முயன்று இத்தகைய வியாபார, தகவல் தொடர்பு, ரயில் மற்றும் சாலை வசதிகளை உருவாக்கித்தரவேண்டும். நான் அந்த மாநிலத்தின் எல்லைப்புற வர்த்தகம் குறித்து மத்திய மாநில அரசுகளுடன் விவாதித்திருக்கிறேன். அவை இளைஞர்களின் வேலை வாய்ப்புகள் அதிகரிக்க உதவி செய்யும்.

16. மரபு சார்ந்த வளங்கள் ராஷ்ட்ரபதி பவனில் பயன்படுத்துவதற்குப் பதிலாக மரபு சாரா வளங்களைப் பயன்படுத்தி அதை ஒரு முன்னுதாரணமான அலுவலகமாக மாற்றப் போவதாகக் கூறினீர்கள். அதைச் செயல்படுத்தும் திட்டம் உள்ளதா?

சூரிய சக்தி அமைப்புகள் கிலோவாட் திறன் அளவில்தான் நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ராஷ்டரபதி பவனில் 5 மெகாவாட் திறன் கொண்ட சூரிய சக்தி அமைப்பை நிறுவத் திட்டமிட்டுள்ளோம். மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி வளங்களின் அமைச்சகங்கள் ஆர்வத்துடன் செயல்பட்டு அந்த அமைப்பை நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளன.

17. மின்தேவை அதிகரித்துள்ள இந்த சூழ்நிலையில் நீங்கள் சூரியசக்தி, காற்றாலை மின்சக்தி, கடல் அலைகளிலிருந்து மின்னாற்றல் பெறுதல் (Tidal energy) ஆகியவற்றில் எதை முக்கியமாக மேம்படுத்த வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

எனது சொற்பொழிவுகளைக் கவனித்திருந்தால் நான் சூரியசக்தித் துறையில் ஆய்வுகள் செய்யப்படவேண்டும் என்று கூறுவதை அறிந்திருப்பீர்கள். கார்பன் நானோடியூப் (CNT) இணைந்த போட்டோவோல்டிக் செல்களின்

செயல்பாடுகளின் அடிப்படையில் அமைந்த சூரியசக்தி அமைப்பை மேம்படுத்த வேண்டும். தோரியம் எரிபொருளைப் பயன்படுத்தி அணுமின்சாரம் தயாரிக்கும் திட்டங்களும் தேவை என்று நான் கூறிவருகிறேன். போக்குவரத்துத் துறையில் பயோடீசலைப் பயன்படுத்தவேண்டும். அதைத் தயாரிக்க உதவும் காட்டாமணக்கை அதிகமான பரப்பளவில் பயிரிடும் பண்ணைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த துறைகளில் எல்லாம் நமது விஞ்ஞானிகள் பணிபுரிந்து ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

வடகிழக்குப் பகுதிகளுக்கு நான் மூன்று தடவை பயணம் மேற்கொண்டதில் அப்பகுதியின் தாவரங்கள், உயிரினங்களைப் பாதுகாப்பதன் அவசியம், தோட்டக்கலையின் சிறப்புத் தயாரிப்புகள், உணவு பதப்படுத்துதல், ஆடை தயாரிப்பு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துவது பற்றி யோசித்தேன். அந்த மாநிலத்து இளைஞர்கள் நிச்சயம் வாழ்வில் வெற்றி பெற்றுவிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. முழுமையான வளர்ச்சித்திட்டங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

மேலும் அப்பகுதிகளுக்கு தகவல் தொடர்பு போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை அதிகரிக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் வெளியுலகுடன் நிரந்தரத்தொடர்பு வைத்துகொள்ள முடியும். அது மாநிலங்கள் வளர்ச்சியடையத் துணை செய்யும்.

பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம்

நான் பதவியிலிருந்து விலகுவதற்கு முன்பு நிகழ்த்திய சொற்பொழிவில் பாராளுமன்றத்தைப் பலப்படுத்துவதற்கான ஒரு விரிவான திட்டத்தை வெளியிட்டேன். ஒவ்வொரு நீண்டகால குறிக்கோள்/இலக்குகள் பற்றியும் அதில் எதிர்ப்படுவதாக நான் கண்டறிந்த சவால்கள் பற்றியும் குறிப்பிட்டேன்.

திட்டங்களைப் பாராளுமன்றமும், அரசும் இணைந்து செயல்படுத்த வேண்டும் என்றேன். பல்வேறு அமைச்சகங்கள், அரசுத்துறைகள், நிறுவனங்கள் மட்டுமின்றி, தேவைப்பட்டால் தனியார் மற்றும் பொதுத்துறையுடனும் சேர்ந்து பணியாற்ற வேண்டும். அதன் வாயிலாகத் தடைகளைக் கடந்து முன்னேற வேண்டும். காலக்கெடுவுடன் கூடிய, ஆதார வளங்களின் துணையுடன் செயல்படுவதையே நான் பணிகளை நடைமுறைப்படுத்தும் திட்டம் என்று குறிப்பிடுகிறேன்.

திறமையான பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலிருந்து ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்த நல்ல தலைவர்கள் தோன்றுவார்கள் என்று நான் நம்பிக்கை தெரிவித்தேன். அனைத்து உறுப்பினர்களும் கட்சி சார்புக்கு அப்பாற்பட்டு திட்டப் பணிகளின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு திட்டத்துக்கு ஒருவரை உரிமையாளராக்குவதன் மூலம் அவரது கடமைப் பொறுப்புணர்ச்சி அதிகரிக்கும்.

திட்ட நிர்வாகத்திற்கான நிறுவனக் கட்டமைப்பு

உயர்நிலைப் பிரிவுகளில் முன்னுதாரணமாக விளங்கும் திட்ட நிர்வாக அமைப்பாக உயர வேண்டும் என்றால், தேர்ந் தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் திட்டங்களை ஒருங்கிணைக்கும்போது, பணியுடன் சம்பந்தப்பட்ட நிர்வாகத்துறையின் பொறுப்பாளராக உள்ள அமைச்சர் அதன் நிர்வாகத் தலைவராக அமர்த்தப்பட வேண்டும். தடைகளைத் தாண்டி முன்னேறிச்சென்று பணியாற்ற அது வசதியாக அமையும்.

காபினெட் அமைச்சர் தேவையான அமைச்சகம்/அரசுத் துறையின் ஆதாரவான ஒத்துழைப்பைத் 'திட்ட நிர்வாகிக்கு' அளித்து உதவவேண்டும். அதன் பிறகு அவர் தனது வருடாந்திரத் திட்டம் பொருட்செலவினங்களுக்கு பாராளுமன்றத்தின் துணையைச் சார்ந்திருக்க வேண்டும்.

இந்தியா 2020-க்கான பல்நோக்குத் திட்டத்திற்கான ஆதாரக் கட்டமைப்புக் கொள்கை வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.

பணிகளை நிறைவேற்றும் நிர்வாக அமைப்புக்கு 15 முதல் 25 சதவீதம் தொகை ஒதுக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட துறை அல்லது அமைச்சகத்திற்கான வருடாந்திர ஒதுக்கீட்டிலிருந்து இத்தொகை திட்டங்கள் வாரியாகப் பிரித்து அளிக்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட அமைச்சகத்தின் கீழுள்ள அந்த திட்டத்தின் பொறுப்பு ஒரு சிறப்புச் செயலாளர்/இயக்குனர் அந்தஸ்தில்

உள்ளவர் வசம் ஒப்படைக்கப்படவேண்டும். திட்ட அமைச்சருக்கு இப்போது பல இணைச் செயலாளர்கள்/ இயக்குனர்கள் அடங்கிய ஒரு குழு உருவாகியிருக்கும். பல்வேறு அமைச்சகங்களைச் சேர்ந்த இவர்களை ஒன்று படுத்தித் திட்ட இலக்குகளை எட்டவைக்க முடியும்.

பணியை நடைமுறைப்படுத்தும் நிர்வாக அமைப்பிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் காபினெட் அமைச்சருக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாகிறார்கள். ஆனால், அவர்கள் திட்ட நிர்வாகியுடன் இணைந்து செயல்பட வேண்டிய கடமையுள்ளவர்களாகவும் உள்ளனர்.

இந்த நிர்வாக வடிவமைப்புப் பணியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரிவான முறையில் பங்கு கொள்வதற்கு நிறுவன விதிமுறைகளும், கடமைப் பொறுப்புகளும் கீழ்கண்ட வகையில் அமைந்திருக்க வேண்டும்.

a) திட்ட நிர்வாகிகள் மாநில அமைச்சர்களாகவோ அல்லது பாராளுமன்றத்தைச் சேர்ந்தவர்களாகவோ, ஆளும் கட்சியல்லாத வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் கூட இருக்கலாம்.

b) குறிப்பிட்ட திட்டங்கள் நிகழ்ச்சிகள் குறிக்கோளுக்கான ஆதார வளம் மற்றும் அதிகாரங்கள் காபினெட் அமைச்சரிடமிருந்து திட்ட அமைச்சருக்கு நேரடியாக வழங்கப்பட வேண்டும்.

c) குறிப்பிட்ட திட்டங்களுக்கான இடைமட்ட ஒருங்கிணைப்பு (Horizontal Integaration) திட்ட அமைச்சர்களின் துறைகள் வழியாக திட்டநிர்வாகக் குழுவிடம் சென்று சேரவேண்டும்.

d) திட்டக் கமிஷனும், ஒவ்வொரு அமைச்சகமும்/ துறைகளும் இந்தியா 2020 என்ற தொலைநோக்குத் திட்டக்குழு ஒன்றை அமைத்து, முழுமையான திட்டங்களை உருவாக்கவும், ஆதார வளங்களை ஒதுக்கீடு செய்யவும் துணை நிற்க வேண்டும்.

e) குறிக்கோள் 2020 என்ற ஒரு விரிவான திட்டத்தை நமது திட்டக்கமிஷன் உருவாக்க வேண்டும். ஒவ்வொரு அமைச்சகம் மற்றும் பணித்திட்டக் குழுவுடன் சேர்ந்து கவனத்துடன் உருவாக்க வேண்டும்.

f) பணிதொடங்கியது முதல் நிறைவு பெறுவது வரையிலும் திட்டங்களுக்குத் தேவையான ஆதார வளங்கள் அளிக்கப்பட வேண்டும். திட்டப் பணிகளின் ஆயுட்காலம் பாராளுமன்றம், அரசின் ஆயுட்காலத்திற்கு அப்பாலும் நீட்டிக்கப்பட வேண்டும்.

g) விரிவான முறையில் மின்-நிர்வாக இணைப்புகள் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

h) திட்ட அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்கும், காபினெட் அமைச்சருக்கும் நேரடியான கடமைப் பொறுப்புடையவர் களாக இருக்கவேண்டும்.

i) காபினெட் அமைச்சர்கள் நேரடியாக அமைச்சரவைக்கும் அமைச்சரவையானது பாராளுமன்றத்திற்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

j) இந்தியா 2020 என்னும் திட்ட வடிவமைப்பில் பணித்திட்ட நிர்வாகிகள் பெரும் எண்ணிக்கையில் பங்குகொள்ள வேண்டும். அவ்வாறு செய்வது பாராளுமன்றத்தின் பங்களிப்பையும் கடமைப் பொறுப்பையும் அதிகரிக்கும். சிறப்புத் திட்டங்களுக்கான உயர் பொதுப் பதவிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

மக்களாட்சி அமைக்கப்படுவதற்கு ஜனநாயக முறையிலான அமைப்புகள் நிறுவப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால் அவை வெறுமனே இயந்திரத்தனமான வளர்ச்சியை மட்டுமே கவனத்தில் கொண்டிருக்கலாகாது. சமூக மதிப்பீடுகள், மக்களின் திறமையான பங்களிப்பு போன்றவற்றைச் சார்ந்தே அவற்றின் வெற்றிகள் அமைகின்றன. அரசுக் கட்டமைப்பின் கடமைப் பொறுப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். நிர்வாக அமைப்பில் முறையான மாற்றங்கள் செய்வது பற்றி தேசிய அளவில் விவாதங்கள் நடத்தவேண்டிய நேரம் வந்துவிட்டது.

ஏ.பி.ஜே.அப்துல்கலாமின் பொன்மொழிகள்

நாம் கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட ஒரு நாட்டுக்குச் சமமாக சிந்தித்துச் செயல்பட வேண்டும். லட்சக் கணக்கான மக்களைக் கொண்ட ஒரு நாட்டுக்குச் சமமாக அல்ல. கனவு காணுங்கள், கனவு காணுங்கள், கனவு காணுங்கள்.

★ ★ ★

நீங்கள் பேசும்போது உண்மையைப் பேசுங்கள்; நீங்கள் வாக்குறுதி அளிக்கும்போது, அதை நிறைவேற்றுங்கள்; நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்பட்ட உங்கள் பொறுப்பை நிறைவேற்றுங்கள்... வன்முறையையும், சட்ட விரோதமான மற்றும் சில செயல்களையும் ஏற்றுக் கொள்ள மறுத்து விடுங்கள்.

★ ★ ★

ஒரு நாடு நேர்மையின்மையிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் அழகான மனங்களை உடைய நாடாக மாற வேண்டுமானால், ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தக் கூடிய மூன்று முக்கியமான சமுதாய அங்கத்தினர்கள் இருக்கின்றனர் என்று நான் உறுதியாக உணர்கிறேன். அவர்கள் தந்தை, தாய் மற்றும் ஆசிரியர்.

★ ★ ★

மொழி மனங்களை ஒன்றிணைக்கிறது
மொழி சமுதாயங்களை ஒன்றிணைக்கிறது
மொழி மதங்களை ஒன்றிணைக்கிறது
மொழி நாட்டை ஒற்றுமைப்படுத்துகிறது.

★ ★ ★

உழைப்புக்கு ஈடிணை எதுவுமே கிடையாது. இதில் எந்த மாயமும் இல்லை. மந்திரமும் இல்லை.

★ ★ ★

என் இலட்சியம்
நான் பிறந்தேன் அரும் பெரும் சக்தியுடன்
நான் பிறந்தேன் நற்பண்புகளுடன்
நான் பிறந்தேன் கனவுடன், வளர்ந்தேன் நல்ல
எண்ணங்களுடன்
நான் பிறந்தேன் உயர் எண்ணங்களை
செயல்படுத்த
நான் பிறந்தேன் ஆராய்ச்சி உள்ளத்துடன்
நான் பிறந்தேன் ஆகாய உச்சியில் பறக்க
நான் பூமியில் ஒருபோதும் தவழமாட்டேன்
தவழ மாட்டேன், ஆகாய உச்சிதான் என்
இலட்சியம்,
பறப்பேன், பறப்பேன், பறப்பேன்
வாழ்வில் பறந்து கொண்டே இருப்பேன்.

★ ★ ★

திருவள்ளுவரின் வாக்குப்படி, சொற்களில் பயனுடைய சொற்களை மட்டுமே சொல்ல வேண்டும். பயன் இல்லாதவை களாகிய சொற்கைளைச் சொல்லவே கூடாது. எனவே, பயனில்லாச் சொற்களைப் பேசுவதில் எனக்கு உடன்பாடில்லை.

★ ★ ★

கல்வி நிறுவனங்கள் மாணவ- மாணவியரின் ஆராயும் மற்றும் சிந்திக்கும் திறனை வளர்க்க வேண்டும். அவ்வாறு வளர்த்தால், அது மாணவர்களின் படைப்புத் திறனையும், ஆக்கபூர்வமான உற்பத்தித் திறனையும் வளர்க்கும். இந்தத் திறமை பெற்ற மாணவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் தன்னிச்சையாகக் கற்கும் திறனை அடைவர்.

★ ★ ★